டத்துமோகமூழ்ந்தசையாதுவிழுந்தான்பின்புபிதாமகன் சிரங்களிற்குட்டினார் அதினுதிரத்தம்பெருகச்சேவிக்கின்றவனைப்போலக் குப்புறவிழுந்தான் - பின்புகலைமகள் நாசியினையுங் குயங்களையுங்கொய்து பக்கங்களிற் சூழவிருந்த தேவமாதர்சாடும்போது கரங்களிழந்தும் பாதங்களற்றுஞ் சிரங்களுடைந்தும் மார்பகங்கள் பிளந்தும் யிவ்வாறு அலைந்துமாண்டனர்போக மற்றவரோடிப் பலதிசையினுமொளித்தார்கள் சந்திரனையுதைத்துத்தள்ளிப் பாதத்தினாற் றேய்த்துஞ் சூரியனைப்பல்லுதிர தாடையினறைந்துஞ் சனியைக்கண்ணைப்பிடுங்கியும்அதைக்கண்டோடுகின்ற எமனைச்சிரமுற்றுவிழவாளினாற்றறித்துங் குயிலாசப்பறந்த இந்திரனைத்தெண்டித்தும் அக்கினிதேவன்கரங்களைமுறித்து நாவுகளைக்கொய்தும் அவன்தேவி மூக்கினைக்கிள்ளியெறிந்தும் நிருதியைத் தண்டினால் மாய்த்தும் உருத்திரகணங்கள் பயந்து பாதகமலங்களின் விழுந்துதுதிக்கக் கருணைசெய்து ஓடிப்போகும்படிக்கு விழியினாற் குறித்தும் வருணனை எழுவாயுதத்தின் மாய்த்தும் வாயுவைவாளிற்கண்டித்துங் குபேரனைச் சூலத்தினாற்கொன்றும் நடுநடுங்கிப்போற்றுகின்ற ஈசானமூர்த்தியைவைதுயிகழ்ந்து உருத்திராக்கலத்திருக்ககட்டளையிட்டும் இயாகதேவதை மான்வடிவுகொண்டு பறக்கக்கண்டு ஒருபாணத்தினால் வாட்டியும் பயந்தோடுகிற எச்சனாகிய யாககுருவைக் கண்டித்தும் அதிகவுக்கிரத்துடன் மேலிட்டுவருவதைத் தக்கன்கண்டுவாடி யிவ்வேள்வி யிப்படிக்கழிய நான்காண்பதோ ஆதியிற்பிதாவாகிய பிரமன் சொற்படிக்கு அரியதவங்களைச்செய்து யித்திருவைப்பெற்றேன் இதனைக் கடாட்சித்த கர்த்தனை நினையாமலும் போற்றாமலும் மகதயிஸ்வரியத்தினுழ்த்து மயங்கிமருகனென்றும் மற்றையரினொருவனென்றுங் கருதிமதியாது மிகவும் யிகழ்ந்தேன் முற்காலத்திற் றந்தைநடாத்தியமகத்தில் அவிகொடாமற்றடுத்தேன் - இவ்வேள்வியினைத் துடங்குமுன்னிலையிற் றந்தையைப் போலப் பரிவாய்ப்படித்துப்படித்துப் பலவிதத்திற்போதித்த ததீசிவாக்கியங்களை யோசித்தறியாமற் றடுத்ததுமல்லாமல் அவரையுந்தூறினேன் - வலியவந்த பராசத்தியைப் பெண்ணென்றெண்ணிச்சிறுமைநோகப்பேசித்துரத்தியதன்றியும் பரமசிவத்தைப் பலபலநிந்தைகளைப்பேசி யிகழ்ந்தேன் - இப்படிக்கு நேருமென்பதைச் சற்றுமெண்ணினவனல்ல அவையனைத்தும் நிற்க யிவ்வீரன்வந்து அவியினைத்தாருமென்று கேட்டபோதாவது சம்மதித்துக் கொடுத்து அனுப்பாமற்போனேன்வேதங்களுக்குமுடிலையும் யெதிரில்நின்று பரத்துவ நிச்சயங்களைத்தெருட்டிய வாக்கியங்களைச்சற்றும் நினைத்துப்பாராமல் மறுத்தேன் நாசகாலம் நேர்ந்தபடியால் யிவ்விதவிபரீதபுத்தியினேந் த[illegible] அரசனாயிருப்பவன் உலகவிடுக்கண்களை நீக்கிப் பாதுகாப்பது தருமியாகும் அதற்குவிருத்தமாக யிக்காலத்தில் விண்ணவர் - தபோதனர் - பிரா

மனர் முதலானவருக்கு உயிரைக்கொண்டுபோகும் எமனுனேன் பாழ்
மனம் ஆழின்பாலாயிற்றென்று யெண்ணியெண்ணிவாடினவனும் மடிகின்ற
காலம் நேர்ந்ததுவாயில் யிவைகளை நினைத்தாவதென்ன யினிநடத்துகொ
ள்ளவேண்டுவதை முயற்சிசெய்வது உறுதியெனக்கருதி வீரபத்திரர் தோயித்து நிற்பதையுங் காளிசீறித்திரிவதையும் பூதப்படைகள் காளிக்கூட்டங்க
ளெவ்விடத்திலும் அதப்படுத்திப்பரந்திருப்பதையும் பாற்குமிடத்தில் ஒடி
ப்பிழைக்கிறதும் அரிதாகக்காணுகின்றது. பழிக்கஞ்சாது தேவரைப்போல
மாறுருக்கொண்டு போய்விடநினைத்தாலும் பிழைப்பதைக்காணேன் ஆதலால் தயிரியம்விடாதிருப்பதே காரியமெனத் துணிபுகொண்டவனாய்க் கே
டையமும் வாளையுங் கரத்திற்பற்றி கொக்கரித்து எதிரில்வருவதை வீரன்
கண்டு வடவையைப்போற்கொதித்துப் பரமசிவத்தை யிகழ்ந்து அவியைக்
கொடாததற்கிது தண்டமெனவுருத்து மின்னலைப்போத்துவிளங்கும் வாளி
னால் அப்பாதகன் சிரத்தைக்கண்டித்துத் தள்ளினர் அதனையொரு பூதமெ
டுத்து விழுங்கியது. இக்காரணத்தைக்கண்ட தேவியாகிய வேதவல்லியும்
பெண்களும் மார்பினறைந்துகொண்டு பிரலாபித்து யிரங்கிக்கூந்தல் நிலத்
திற்புரளவருகின்றதை பத்திரகாளியாத்து தக்கன்மனைவியினது சிகையை
யரிந்து மற்றவர்களைக்கண்டித்து வீரபத்திரதேவருடன்கலந்து ஆழிக்காத்
தும் வடவையும் பெருகியதுக்கிணையாகக் கொக்கரித்து இருடியர் விண்ண
வர் முதலானவரைச் சின்னபின்னப்படுத்தி யுலவும்போது புறம்பிற்சூழ்ந்தி
ருந்த பூதப்படைகள் மதிலையழித்து ஆர்ப்பரித்துக்கொண்டு உள்ளேபிறவே
சித்துக் காளிக்கூட்டங்களுடன்கலந்து வருவதைத்தப்பி யிருக்கின்ற வான
வராதியர்கண்டோட அவர்களைத்துடர்ந்து கண்டதுண்டமாக வெட்டுவதை
க்கண்ட புரோகிதர் பிராமணர்நடுங்கியும் வாடியுந்தியங்கியும் மயங்கியும்
மூர்ச்சித்துங் கோவண மவிழ்ந்துபுரளவோடியும் பிணமலைகளிலொளித்தும்
யிவ்விதபாடுபட்டவர்தவிர மற்றையரைப் பூதர்பற்றித்தோளை முறித்துங்
கால்களைவெட்டியும் மார்பைப்பிளந்துந் தலையையுடைத்தும் பற்களையுதிர்
த்தும் நாவையரிந்தும் கண்களைப்பெயர்த்தும் மூக்கைக்கிள்ளியுங்கரங்களை
க்கண்டித்தும் வயற்றைப்பீறியும் யிவ்விதங்களாகச் சின்னபின்னப் படுத்தி
ப் பொசித்து உதிரபானஞ்செய்துஞ் சிலரைப்பிளந்துஞ் சிலரைத்திசைகளி
லும் வானத்துமெறிந்துஞ் சிலரையுதைத்து வுருட்டியுஞ் சிலரைச்சிதையத்
துவைத்தும் வாட்டினர். இதுவல்லாமற் பலரைப்பிடித்துப் பாத்திரங்களி
லொடுக்கி நெய்யையூத்தி மகத்தியிற்பொரித்து யினிமையாகத் தின்பார்கள்.
பலர்குடற்களைப்பிடுங்கி அவர்மார்பிற்றரித்து நகைத்துமகிழ்வார்கள் பரம
சிவத்தைப்புகழ்வார்கள் பலரைப் பாறையினிட்டரைப்பார்கள் பலரைச்சின்
னபின்னமாகவரிந்து கழுகுக்குங் காக்கைக்கும் பருந்துக்கும் நாய்நரிக்

கும் எறிவார்கள் - இவையன்றியும் இயாககுண்டத்தைச்சுற்றிலும் நிறைத்துவைத்திருக்கும்நெய்க்குடங்களையெடுத்துத்தேக்கிடக்குடிப்பார்கள் தயிர்ப்பதலைகளைவிழுங்கி யேப்பமிடுவார்கள் பால்முடாக்களை ருசிபார்ப்பார்கள் தேவருக்கு வைத்திருக்கின்ற அவிசுகளைப்பொசிப்பார்கள் வேள்வித்தீயைக் கரங்களினாற் பிசைந்து அவிப்பார்கள் சாலையறைகளின் கதவுகளை முறித்து நெருப்பையிடுவார்கள் அதினிருக்கும்பண்டங்கள் மனிதர்சாம்பலாகக்கண்டுமகிழ்வார்கள் கலசகும்பங்களையெடுத்து அம்மானையாடியுஞ் செண்டைப்போலவெறிவார்கள் இயாகத்தம்பத்திற் பிணித்திருக்கின்றபசுக்களையவிழ்த்து கங்கையிற்செல்ல வீசுவார்கள் தேவர்முதலானவரேறிவந்த விமானங்களையும்இரதங்களையுங்கொளுத்துவார்கள் அவர்களேந்தியபடைகளைமுறிப்பார்கள் கலன்களைக் கரித்துத் துகள்செய்வார்கள் வேதிகைகளை யுதைத்துக் குண்டத்திற்றள்ளுவார்கள் தோரணங்களையறுத்துக் காற்றிற்செல்ல ஊதுவார்கள் துவசங்களை யொடித்துத்தள்ளுவார்கள் தக்கன்மருகனைப்பற்றிச்சொல்லப்படாதசெய்கைகளை முடிப்பார்கள் பிடியைப்போல மார்பில் அறைந்துங் குத்தியும் வருத்துவார்கள் உண்ட அவிசுகளைக் கக்கும்படிக்கு முதுகினிடிப்பார்கள் இவையன்றியுஞ்சிலதேவரைவாளினாற்செதித்துஞ்சிலர் தலைகள்மொட்டையாக மயிரைப்பிடுங்கியுஞ் சிலரைப்பந்தலுக்கு நிரைத்திய கால்களிற்கட்டியுஞ் சிலரையறுத்துக்கொறித்தும் இவ்விதமாகத் தாமரைத்தடாகத்தின்மதயானை புகுந்ததைப்போல வேள்விச்சாலையைக்கலக்கும்போது வெட்டென்றும் பிளவென்றுங் குட்டென்றுங் கொல்லென்றுங் குத்தென்றும் உரியென்றுங் கட்டென்றும் பிடியென்றும் உதையென்றும்இவ்வித ஒலி திசையெங்கும் பரவ இயாகமெல்லைபட்டபாட்டைமற்றைத் தெளிந்தெழுந்த விண்டுகண்டு நாள்தலைவனாகவிருந்து யிம்மகத்தைக்காத்ததுவெகுநேர்தியென்றுமானம்பாதிக்கக்கருடனைநினைந்து வரவழைப்பதுதாமதப்படுமென்று தன்கோபத்தைவெளிப்படுத்தி யதின்மீதாரோகணித்துப்பஞ்சாயுதபாணியாய்ப் பூதப்படைகளின்மீதெதுத்து கடலுடைந்ததுபோல பாஞ்சசன்னியத்தைமுழக்கிச் சாரங்கமென்னும் வில்லைவளைத்து அளவற்ற திவ்யசரமாரிகளைத்தூவி வருவதைச்சிவகணங்களுங் காளிக்கூட்டங்களுங்கண்டுமுன்னைமதுகற்தன் தண்டத்தின்மோதலினாற்பட்டவன் வெட்கமில்லாமல்மீளவும் போர்செய்யவந்தானென்றிகழ்ந்து சரங்களைப்புடைத்து நகைத்துச் சீறிமேலிட்டுவருகின்ற பாணங்களைப்பற்றி முறித்தும் பொடித்துந் தட்டியும் அழித்துஞ் சண்டைகொடுப்பதை வீரபத்திரமூர்த்திகண்டு புன்முறுவல்கொண்டு வருகையிற் பரமசிவகடாட்சத்தினால் நவரத்னமயமான தேரொன்று எதிரின்வந்து நின்றதுவாயில் அவசமாறியெழுந்தபிரமன் இதுநல்லதருணமென்கருதி அத்தேரிற்பாய்ந்து சாரதியிருக்குமிடத்தில் அமர்ந்து குதிரை

ணின்வார்களையும் உருவுகோலையுங் கரங்களிற்கொண்டுநடத்தி சிவகுமார னெதிரில் நிறுத்தி வீராதிவீரா கற்றனிதோ ரதமனுப்பினர் சத்திராதிகளைச் செயிக்க தேவியுடன் யிதின்மீதெழுந்தருளவேண்டுமெனப்போற்ற அவனி டத்திருந்த கோபஞ் சற்றுதணிந்து திருத்தேவியுடனேறியபோது சுவாமி அடியேன் வல்லயத்தைப்பாருமென்று வாயுவேகத்திலுமேலாகத் தேரைச் செலுத்திக் கேசவனுக்கெதிரில் நிறுத்தியதறுவாயிற் கண்ணன்வீரனைநோக்கி சிவனை நிந்தித்த தக்கனை தெண்டிப்பதல்லது வேள்விச்சம்பிறமத்தை பார்க்க வந்த தேவாதியரை நீதியில்லாமற்கொல்லத்தகுமோவென்று வினவ நீகுறி த்ததுண்மையாயினும் பரமனையன்றி மகத்தைமுடிக்கின்றவரிடத்திருந்தவர் களுக்கு வேதங்களிற் சொல்லுகின்ற சிக்ஷையின்படிக்குச் செய்தோம் யிகுதன்றியில்நமதெதிரில்நிற்கின்ற வுன்னையும்வாட்டுவோமென்றவுடன் மா யவன்கோபித்துத் தன்வில்லைவளைத்து பாணவருஷித்தைப்பெய்து வீரபத்தி ரனையும் பூதப்படைகளையு மறைக்க வீரன்காளியைநோக்கிநகைத்துத் தமது சிலையைக்கோலி குணத்தொனிகொண்ட வதிர்ச்சியினுற் சத்த சாகரங்கள் கொதித்தடங்கியும் அண்டங்கள் நெக்குவிட்டும் அதிலடங்கிய சீவராசிகள் செவிடுபட்டு யித்தினந்தானே யுகமுடிவென்றுமயங்கக் குரூரமானகோல் களைத்தொட்டு தன்மீதெழுந்த கிளிமுகங்களைக்கண்டித்துத் தாமோதரனையு மூடினர். அவையனைத்தையுங்கொடியபாணங்களினுல்விலக்கிமேலும் ஆயிர வற்றை வீரன்றோள்களைக்குறித்தேவ அவைகளைத் துகளகண்டு ஒருதிவ்வியபா ணத்தைத் தூண்டிவிண்டு நெத்திலைப்பிளக்கநடுநடுங்கி வுதிரத்தைக் கக்கிக் கொண்டு மூற்சித்துக்கிடக்குறவரையில் வீரன் வில்லையூன்றிப்பாத்திருந்தார் சற்றுநேரத்திற் றெளிந்து மீளவும் அளவற்ற கணைகளைச்செலுத்த வீரபத் திரர் அதுகளைத் துகள்கண்டு மாறுசரங்களைப் பிறையோகிக்க யிவ்விதமாக மாறிமாறி அவ்வீரர்செய்த போரின்பெருக்கை யாவராற் றுதிக்கப்படும் பின்பு சிவகுமாரன் சிறி பாசுபதத்தைத் தூண்டிக் கரியவன்மார்பையிள க்கமயங்கியிருந்துதெளிந்தவுடன் எடுவில்லைச்சண்டைகொடுவென்று வீரன் அதட்டக்கொதித்து தேவபாணங்களை யொன்றின்பின்னென்றைவிட அதுக ளுக்குமாறேவித்தடுத்தபின்பு மற்றொருசரத்தினுற்கண்ணன்கரத்தின்மேரு வைப்போல விளங்குஞ்சாரங்கத்தை வெட்டித்தள்ளி மேலுமிரண்டு நாராச ங்களினுல் அவனேறியிருந்த கருடன்சிறகுகளையரிந்தபோது மாயனுதலால் அளவற்றவிண்டுக்கோலங்கொண்டுதாக்க வீரன்கண்டு நுதல்விழியினுல் அத் தோற்றங்களைப் பொடிபடுத்தியதறுவாயில் விஷ்ணுவானவன் யினியென்ன செய்வோமென் றெண்ணுதுமெண்ணிக் கடையிற் பரமனை யரிச்சித்துப் பெற்றசக்கரத்தைப்பிறையோகித்தான் அதைவீரன்பற்றிவிழுங்கினர் பின்பு தண்டைசுமற்றியெறிந்தான் அதையுந் தமதுகெதையினற்பொடிபடுத்தக்

கண்டு கன்னனிடத்தில் வேறுபடைகளில்லாமையால் வாளினையுங்கேடயத்
தையுமெடுத்துப்பாய்ந்துவரும்போது வீரபத்திரர் ஓங்காரித்தார் அவ்வதிர்ச்சி
யினால் மயங்கி அசைவற்று வாளைப்பிடித்தபடியே நின்றனர் அத்தறுவா
யில் யாதினை நினைந்தோ வீரபத்திரதேவருக்கு அதிக வுக்கிறம்பிறவேசிக்கு
முன்னிலையிற் சிவகடாட்சத்தினாற் கோபிக்கவேண்டாங் கோபிக்கவேண்டா
மென்று வானத்தினின்றொரு வாக்கியமுண்டாகக்கேட்டுசிற்றந் தணிந்து
யிதென்னகாரணமென்று பார்த்திருக்கையில் யிது தருணமென்றெண்ணிப்
பாகனுகவிருந்த பிரமன்சேவித்து வேதவாக்கியத்துக்குப்பிசகாய் இயாகஞ்
செய்த பாதகன் றந்தஅவியினைப்பொசித்த அடியேன்பிழையினைப்பொறுத்
தருள்கவென்று திருவடிகளில்விழுந்தான் அவனிடத்திற் கிருபையுற்றுப்
பயப்பட வேண்டாமென்றுதரித்த தறுவாயில் யிதுசமையமெனக்கருதி
மகாவிஷ்ணு வீரபத்திரக் கடவுளைப்புகழ்ந்து பாரித்து நிகரற்றிருக்கும்
என் வில்லைக்கண்டித்ததுமல்லாமற் செலுத்திய திவ்விய சரங்களைப்பொடி
படுத்தி யெதிர்த்தவனைச் சங்கரிக்குஞ்சக்கரத்தினையும்விழுங்கிமூவரிலொரு
தலைமை பூண்டவென்னையுஞ் செயித்ததால் ஓய்வீரனே வுமதுபெருமைகளை
யாவராற் புகழப்படும் அழுக்காறுடைய தக்கன்வேள்வியின் அவியையிச்
சித்து விவேகசூனியனாய்த் தேவரீருடனும் எதுக்கவந்தேன் அதற்குரிய
தண்டனையும்பெற்றேன் ஞானவான்கள் பரமசிவனை மதியாதவரிடத்தினும்
நிற்பரோமேலும் ஆதிகற்தனைத் தொழாதவருக் குரியதண்டம் எங்களுக்
கும் நடத்தியதினால் உமக்குக் குறைவில்லை யிச்சம்பவத்தினை நாங்களே
தேடிக்கொண்டோம் ஓவீராதிவீரனே வாற்தையுரப்பினால் உலகையழிக்க
வல்ல தேவரீர் பாணங்களைச் செலுத்திய திதுவுமொரு திருவிளையாடலா
மெனப் பலவாகத்துதித்து அடியேன் பிழைக்கடுத்த சிக்ஷிட்சைமுன்னமே
பெற்றுக்கொண்டதால் யினியாது காத்தருள்கவென்று வேண்ட வீரபத்
திரதேவர் மகிழ்ந்தருளினார் அத்தறுவாயிற் சிவபிரான் பராசத்தி சமேத
ராய் ரிஷபவாகனத்தில் ஆரோகணித்து நந்திதேவர் போற்றிவரச் சிவகணங்
கள்கொடிகுடை ஆலவட்டம் வெண்சாமரையினைத் தாங்கியுந் தேவதுந்
துமியைமுழக்கியுங் கற்தன் பெருமைகளைப்பாடியுஞ் சூழ்ந்துநடக்கவேள்
விச்சாலையினிடத்தெழுந்தருளக்கண்ட வீரபத்திரர் பத்தி விநயங்களுடன்
தொழுதுநிற்கின்றதறுவாயின் விஷ்ணுபிரமன் பிறிந்தபிதாவை யெதிர்ந்த
வனையொத்துப் பரிவுடன் போற்றுமுன்னிலையிற் கற்தனிடப் பாகத்தில்
வீற்றிருக்கும் பிராட்டியானவள் வேள்விக்களத்திற்றக்கனுதியர் சின்னபின்
னப்படக்கண்டிக்கப்பட்டு உருளுவதையும் மகமழிந்தபாட்டையுங்கண்டு
உலகமாதாவாதலாற் கோபந்தணிந்துபரிவாய் கற்தனைநோக்கி சுவாமி யிவ்
வேள்வியும் யிதினிடத்தில்வந்திருந்த தேவாதியரும் அடியான்பொருட்டு

அழிந்ததாக வுலகத்தோர் வசனிப்பர் என் கோறிக்கையின்படி வீரனைக்
கொண்டு தக்கனுதியவரைச் சங்கரிப்பித்ததனாற் றேவரீரை மதியாதகாரணத்
திற்குரிய தண்டனையைப்பெற்றார்கள் இப்போதும் அடியாள்பொருட்டு
இவரை யெழுப்பத் திருவுளங்கொள்ளவேண்டுமெனத் துதிக்க வுன்னிரக்
கம் வெகுநேர்த்தியென்று பரமன்நகைத்துப் பக்கத்தில்நிற்கின்ற வீரபத்திர
ரைப்பார்த்து உன்னாலிறந்தவரைமீளவு மெழுப்பக்கடவாயென்றனுக்கிரகஞ்
செய்தபடிக்குப் பரமன்பாதங்களைச்சிந்தித்து யிவ்விடத்தின் மடிந்தவர்க
ளனைவரும் உயிர்பெற்றெழுகவென்றவுடன் உறங்கினவர் விழித்ததைப்போ
லத் தேவர் தபோதனர் பிராமணர் முதலாகவெழுந்து பரமனைக்கண்டவுடன்
தங்களுக்குக்கிடைத்த பழிபாதகங்களைமுறையிட்டு வாடிகர்த்தனே ரட்சிக்க
வென்று போற்ற அவர்களையுமாதரித்தருளினார் அக்காலத்திற் கேசவனுதியர்
சேவித்து சுவாமி தேவரீரை யஞ்சித்துத் தக்கன்செய்தவேள்வியில்வந்து அவி
யுண்டபாதகமொழிய எழுந்தருளத் திருவுளங்கொண்டீர் பிதாவல்லதுபிள்ளை
களைப்பாதுகாக்கவல்லவர்யாவர்மேலும்தக்கனுக்கினைக்கஞ்சி நன்னெறியைக்
கடந்தஅடியோங்களைரட்சித்தகடவுளுக்குயாங்கள்செய்யுங் கைமாறுமுண்
டோவீரனாற்றண்டித்தகாரணத்தினால் எங்கள்திரேகம் பவுத்திரமாயிற்று
இதுவல்லாமல் ஆதியில்உலகங்களையழிக்கவெழுந்தவிஷத்தையுண்டதுங்கங்
கையைத்தரித்ததும் அடியோங்கள்பொருட்டல்லவோ தொண்டர்செய்தபி
ழைகள் பலவுண்டாயினும் அதைப்பொறுத்தல் அடிகள்கடமையாகுமென்று
பலபலவிதங்களிற்றுதிக்கின்றவரைக் கையமர்த்தி கோபந்தணிந்தோம் யினி
பயம்வேண்டுவதில்லையென்றருளியவுடன் ஆனந்தவாரியிற்றிளைத்துக் களித்
துக்கூத்தாடி யேத்துகின்றதறுவாயில் அக்கூட்டத்திற்றக்கனைக்காணாததாற்
பிரமன்பரமனைச்சேவித்துக் கர்த்தனேயாங்கள் நரகவாதனையிற்படாமல் அரு
ளியதைப்போலவே என்குமாரனையும் வரவழைத்துரட்சிக்கவேண்டுமென்று
பாதாரவிந்தங்களில்விழுந்திரக்க உமாபதி கிருபைகூர்ந்தவராய் வீரன்மீது
திருக்கண்சாத்த அக்குறிப்பினையுணர்ந்துபானுகம்பனவ்வுடலைத்தருவித்து
அவிக்குண்டத்திலிருந்த ஆட்டின் தலையை யதிற் பொருத்தியெழக்கடவா
யென்றவுடன்பரமசிவத்தையிகழ்ந்தவர்யிப்படிக்காவாரெனச்சகலருக்குமுண
ர்த்துவதுபோலத் தலையையசைத்துக்கொண்டெழுந்து அருகில் நிற்கின்ற
வீரபத்திரதேவரைக்கண்டவுடனொடுங்கி நாணித்தலையிறங்கிவணங்கிவானத்தி
னிற்கும் பரமனையும்நோக்கிநடுநடுங்கி வாடுவதைப்பார்த்தருளி பத்தவற்சல
ரான கடவுள் தக்காபயங்கொள்ளவேண்டாமெனக்கிருபாநோக்கம் பாலிக்க
கவலைநீங்கி மும்முறைவலம்வந்து பலதிரம் வணங்கி ஓ தீனதயாநிதியே
லோகநாயகனே அடியவர்க்கெளியபரமே தேவரீரனுக்கிரகஞ்செய்தசெல்வப்
பெருக்கினுற்றுமதிமயங்கியான்செய்தபிழைகள் அளவற்றதுண்டு நினைந்

தர்லும்மனம்நடுங்குகின்றது அவைகளைப்பொறுத்தருளியதாந் தெறதாந்த ஞனேன் அஞ்ஞானவானாகிய அடியேன் விஷ்ணு பிரமனைத் துணையாகக் கொண்டுதமதுமாயையவயத்தனாய் யிச்சம்பவத்தினைப்பெற்றேனெனவழுது முன்னிலையிற் றம்மைவணங்கியவீரனை உமையவள்வாழ்த்தி காளிமுதலைத் தடவி ஆதரித்து அவர்களுக்குவேண்டிய பேறுகளையளித்தகாலத்திற் கேசவனும் நான்முகனும் மற்றதேவராதியர்களுங் கர்த்தன் குணச்செயல்களைப் புகழ்ந்து போற்றிநிற்பவரிடத்துக்கிருபாநோக்கம்பாலித்து நம்மையன்றி யிந்தவேள்வியினை நடாத்தியகாரணத்தினால் வேதவிதிப்படிக்கு யித்தண்டம்நேர்ந்தது யிதினால் நாணிவருந்தவேண்டாமென்றுந்தங்கள் பதிகளுக்குப்போகவும் அருளிச்செய்து வீரபத்திரர்காளி சேனைவெள்ளங்கள் கணநாதர் சூழந்து போற்றிச் செயபேரி வெற்றிச்சங்கங்களைமுழக்கி நடக்கிடையின்றீது திருத்தேவியுடன் வெள்ளியங்கிரிக்கெழுந்தருளி வீரபத்திரனை அண்டத்தி னெல்லையிலிருந்து சகலபுவனங்களையும் பாதுகாத்து அரசுரிமையினைச் செலுத்துவதாகக் கட்டளையிடக் காளியுடன் ஞய்தத்தை யனாச்சேவித்துவிடைபெற்றுத்தமதிடத்தைச்சேர்ந்துபூதகணங்கள்போற்றவிருந்தார் பானுகம்பன்முதலான பூதகணத்தலைவர் கர்த்தனைவணங்கித்தத்தமிடங்களையடைந்தார்கள்.

அடிமுடிதேடுபடலம்.

கேட்டீர்களோசவுனகாதி ரிஷிகளே சிவபிரான்மறைந்தபின்பு விஷ்ணுவாதியானதேவர் தவத்தர் முதலானவர்கள் தங்கள்பதவிகளிற்சேர்ந்தார்கள் இவ்வாறு சகலருநீங்கியதறுவாயிற் பிரமன் மனம்பொறாமற்குமாரனைதக்கனை நோக்கி நீவருந்திநோற்றுப்பெற்ற செல்வத்தையகந்தையினாற்பறிகொடுத்ததன்றியில் உலகமுள்ளளவுந் தீராதபழியினையும்வேற்றுருவினையும் அடைந்தாய் மேலும் யிறத்தலில்லாததேவர் ரிஷிகளாதியருக்கு எமனாய் அப்பெருமையினை மாற்றினாய் தக்கனென்றெவ்வுலகங்களினும் போற்றும் ஏற்றத்தையும் யிழந்தாய் உன்குறிப்பின்வண்ணமல்லது பெரியோர்கள்சொல்லிய நீதிகளைமறந்து அவர்மனநோகவும்பேசினாய் வேதாகமமுதலிய சாஸ்திரங்களைப்பூர்த்தியாகவாசித்தறிந்தும் அவற்றிற்குக்காரணனாகிய சிவத்தின்பெருமைகளையுணர்ந்தும் அவன்மாய்கையிற்பட்டுகர்த்தனையிகழ்ந்துயிப்பேற்றையடைந்தாய் அவன்செயலைக்கடந்தவ ரிவ்வுலகின்கணொருவருங்கிடையாது முன்னொருகாலங்கண்ணனும்யானும் அஞ்ஞானத்தழுந்தினவர்களாய் நாம்

நாம் பரமென்றகந்தைகொண்டு அளவற்றகாலம்வாதுகொடுக்கின்றதறுவா
யிக் யித்தினத்தைப்போலவே பரமசிவமெழுந்தருளி விலக்கி யெங்கள்
மையலை நீக்கிரட்சித்தார் ஆதலாற் பிதாவையொத்த பரிவையுடைய கர்த்தனை
வழிபட்டுத் தவங்களைச்செய்வையாயிற்பாபத்தைப்போக்கிப் பரிசுத்தனுக்கி
யிம்மைமறுமை யின்பங்களையுங்கடாட்சிப்பார் யிதனைக் கடைப்பிடியாக
நம்பி யீடேறக்கடவாயென்று பலதிறங்களைக்காட்டிப் போதித்தபிதாவின்
வாக்கியங்களைக்கேட்டு ஒருமைப்பட்டவனாய் உங்களிருவருக்கும் ஆதியி
லுண்டாகிய மயக்கத்தினையுங் கர்த்தனெழுந்தருளித்தடுத்தாண்ட சரித்திரங்
களையும் அருளிச்செய்யவேண்டுமென்று கெஞ்சக் குமாரனே நீவினவிய
தற்குமகிழ்ந்தோமென்று அக்கடவுளினதுபாததாமரைகளைக்கருதிச்சொல்லு
தாயினர் கிரேதாயுகமுதற் சதுர்யுகங்களும் ஆயிரம்விசைதிரும்புமாயின்
எனக்கொருபகலாம் அவ்விரவில் யான்றுஞ்சும்போது சத்தசாகரங்களும்
பெருகி யுலகங்களைமூடி தேவர்மனிதர் சூரியன்சந்திரன்முதலான சராசரப்
பிறபஞ்சங்களையழித்ததறுவாயில் விஷ்ணுவானவர்பாலனாய் வடபத்திரசாயி
யாய்பரமசிவத்தின்பாதகமலங்களைச்சிந்தித்துயோகநித்திரைகொண்டிருக்கு
முன்னிலையில் அவ்விரவுகழிந்துவிடிந்தபின்பு மாற்சண்டர்சனகராதியமகத்
துக்கள் கேசவனை நினைந்துதுதிக்க அறிதுயிலுணர்ந்தெழுந்து பூமியை நிலை
பெறச்செய்ய நாடிப்பாதலத்திற்கிடப்பதைத்தெரிந்துவாராகவுருவெடுத்துப்
பாய்ந்து வயிரம்போன்றகோட்டிற்பூமியைத் தாங்கிவந்து பழையபடிக்கு
நிலைபெறச்செய்தமுன்னிலையில் நானும்விழித்துசிருஷ்டியினைச்சிந்திக்கத்
துவாதசஆதித்தருதித்து அவாதுகாந்திதீட்சண்ணியத்தினாற் பிரளயநீர்வற்றி
பூமிவெளிகண்டுளதாப்பிறதாரந்தோற்றதாமோதரன் இஃது தம்மாலாயதென
அகந்தைகொண்டு திருப்பாற்கடலிற் சயனித்திருந்தார் அத்தறுவாயில்
நான்சகலபுவனங்களினையும் பூர்வப்படி நிருமித்துத் தேவரினங்கள் மானி
டர் மிறுகங்கள் பறவைமுதலிய சராசரங்களினையும் உண்டுபண்ணிபூவுல
கம் பொன்னுலகமாதியபதங்களினை நிருமித்து இந்திரனைத்தெய்வலோகத்
துக்கரசனுக்கித் திசைக்காவலரை நிலைபெறச்செய்துசந்திர சூரியாதியநவக்
கிறகங்கள் முதலியவற்றை யெதாப்பிறகாரம் அமைத்து யிவைகளினைத்
தும் நம்மாலாயது நாமுறங்கும்போது சகலமுமழியும் விழித்துநினைத்
தகாலத்திற்பழையபடிக்குண்டாகும் ஆதலால்நம்மையன்றிகர்த்தன்வேறில்லை
யெனத் துணிபுகொண்டிறுமாந்து என்னுலாயவைகளனைத்தினையும் பார்வை
யிட்டுவருகின்றதறுவாயில் என்னைப்போலவே அகந்தையுற்றுத் திருப்பாற்
கடலிற் பள்ளிகொண்டிருக்கும் விஷ்ணுவைக்கண்டு இலக்குமிக்கிடமாகிய
மார்பினிடத்தறைந்தெழுப்பி நீயாவனென்றுகேழ்க்க அவர்நகைத்து உன்
பிதாவல்லவோயிதனைமறந்தையோவென்றனர் அதைநான்கேட்டுஞ்சிரிப்ட

கொண்டு யின்னமும் நித்திரைமயக்கந்தெளியவில்லையோ உன்னுந்திகமலத்
தில்வந்ததனாற் பிதாவெனக்கருதினையோ நீக்கடைக்கோலினிடத்தக்கினியுதி
த்ததனால் அப்பசையற்றவிரகு அச்சிறந்ததேவதைக்குத்தாவெனப்படுமோ
அல்லது தந்தையெனவும் நினைக்கலாகுமோ இருதன்மியில்முன்னம்பிருகு
ரிஷிசாபசம்பந்தத்தினாற் றூணில்நாரசிங்கமாகத்தோன்றினை அதுவனக்குப்
பிதாவாகுமோமேலும்நீபத்துசனனமெடுத்தபோது அவைகளைப்படைத்துப்
படைத்து என்கரங்கள்சுறுத்ததைப்பாரென்றுகாட்டக் கண்ணன்கோபித்துக்
கரங்களினைத்தட்டி பிரமனைமுனம்பரமசிவமுன் சிரங்களினொன்றைக்கிள்ளி
யதையின்னமும்உண்டாக்கிக்கொள்ளவகையறியாதநீநம்மைச்சிருஷ்டித்தே
னென்பதுநன்றாயிருக்கின்றது உனக்குத்தாய்தந்தைகுருதெய்வம்நாமாகும்
நமதுமாயைவயத்தனாய் யிதனைப்பேசுகின்றனை நாமல்லதுசராசரப்பிரபஞ்
சங்களில்லைஎண்ணிவைப்போனும்எண்ணுவோனும்நான்கண்ணுதற்கடவுளு
நான்அவனிடத்தமர்ந்தசத்தியும்நான்பஞ்சபூதிகளும்நான்புலன்களும்நான்
நாராயணனும்நான் ஆதியும்நான்உருவும்நான்அருளும்நான்சோதியும் யிரு
ளும்நான் பரப்பிரமமும்நான் ஆதலாலென்னையல்லதொரு பொருளுமிரா
தென்றுசொல்லக்கேட்டுநாமிருவருமிவ்வாறுவாதுகொடுப்பதிற் பிறையோ
சனமின்மையாற்சமர்த்தலையினைதுத்துப் பொருதுமென்றவர் பரமென்று
நான்சொல்லவிஷ்ணுவுஞ்சம்மதப்பட்டுசாக்கமென்னும்வில்லையெத்திஅள
வற்றதிவ்வியபாணங்களைப்பிறையோகிக்க நானுந்தருப்பைகளைமந்திரித்து
மாறுபடைகளையுண்டுபண்ணிவிட்டுத் தடைசெய்யக்கண்டுகேசவன்சீறிச்சக்
கரத்தையேவினான் நானும்பிரமாஸ்திரத்தைப்பிறையோகிக்க அவையிரண்டு
ஞ்சிலகாலம்போர்செய்துதிரும்பியதுபின்புவிஷ்ணுவானவர்தாம் முனம்பர
மசிவத்தினிடத்திற்பெற்றபாசுபதத்தினைப்பூசித்துவிடநானுங்கற்றனிடத்திற்
கிடைத்திருந்த அப்பாணத்தினையெடுத்துப் பூசித்துவணங்கியுபசரித்தெய்
தேன் அவையிரண்டும் அக்கினியைக்கக்கிப் புகையைவீசிப்பலதிவ்வியபாண
வகைகளையுண்டுபண்ணிப்பொருதுஎங்குமுலவுகின்றதுவாயில்அதினுண்டா
யசுவாலையினால் உலகங்களுக்கழிவுண்டாய்த் தேவர்களிற்பலரிறந்தனுஞ்சிலர்
திருக்கைலாயவாயலினிடத்தில்முறையிட்டுக்கொள்ளவோடவும்மேகங்கள்
கரித்துருளவுஞ் சமுத்திரசலஞ்சுவறவும் யிவ்விதமாகச்சகலமும்வாதைப்படு
கின்றதுவாயிற் பரமசிவகடாட்சத்தினால் நாரதர்வந்து என்னையும் விஷ்ணு
வையும்பார்த்து உங்களிற்பரத்துவத்தைவகித்து வீண் வாதுகொடுக்கின்றீர்
அவ்வாக்கியம் உங்களுக்கடாதுமேலுந் தகுதியாகியபாணங்களைச்செலுத்தா
மல்மேலானபாசுபதத்தை யெய்தீர்கள் அதினாற்சராசரப்பிரபஞ்சங்கள் அலை
கின்றது அப்படையினையளித்தருதிதேவனைமறக்கலாமோ ஆதலாலினிச்சண்
டையினைவிடுத்தக்கடவீர் அல்லதுயின்னமுஞ்சிலகாலஞ்சண்டைசெய்திரு

அடிமுடிதேடுபடலம்.

ப்பிராயின் ஆதியந்தமில்லாதகற்றன்சோதிவடிவாயிருவர்மத்தியிற்றோன்று
வர் அதினற்றன்பம்நேருமெனச்சொல்லிப்போயினர் அவ்வாக்கியங்களை
நினைந்துபாராமற்பின்னுங்கோபமேலிட்டு வெகுகாலங்கொடிய போரினைச்
செய்துவருகையிற்சிவாசிகள்வருந்திசிவபிரானைக்குறித்துமுறையோ முறை
யோவென்றலறக் கற்றனிரங்கிச் சிறியவரையொத்து யாங்களுலகங்களெலாப்
பொருவதைவிலக்கி ஆணவமலத்தைநீக்கிரட்சிக்கத் திருவுளங்கொண்டவராய்
எங்கள்மத்தியில் அக்கினிமலையாகத்தோற்றிநாமேவியபடைகளையுட்கொண்டு
அளவுபடாமல் நிற்பதைக்கண்டு விஷ்ணுவும்நானும்பிரமித்துத்தியங்குற்தறு
வாயில்வானத்தினின்றொருவாக்குண்டாயது அதென்னையெனில்விவேகமில்
லாதவரோவுங்கள்வலியினைத் திறிபுரதகனரோகாண்பார் ஆதலால்யிச்சோதியின்
அடியினையும் முடியினையுங்கண்டவர்பெரியரென் றுசத்திக்கயாங்கள்கேட்டு
கோபந்தணிந்தாலும் அகந்தையினைவிடாமல் யிவ்வொலியுண்டாகுங் கார
ணம்யாதென்றுலோசித்து நாரதர்வாக்கியத்தைநினைந்துதம்மின்மேலானவ
ரைக்காட்டவித்தோற்றமுண்டாயது ஆதலால்யிதின் ஆதியந்தத்தினைக்கண்
டவர் பரமெனநிச்சயித்தனம் அஃதெத்தன்மைத்தெனின் தவழுங்குழந்தை
வானத்திற்செல்லுஞ்சூரியனைப்பற்றச்சிந்தித்தற்கொக்கும்பின்புவிஷ்ணுவடி
ரத்தினையொத்தகுளம்புகள்பொருந்திய குறியகால்களினையும்பிறையினை நிக
ர்த்தகோடுகளையும் ஆயிரயோசனைபரப்புள்ளபாரித்ததேகத்தினையும்வாய்த்
துவராகவுருக்கொண்டுபுவியினைக்கல்லிஅச்சோதியினடியைக்காணச்சென்றார்
யானும்பொற்பிறகாசம்பொருந்திய சிறகுகளையுடைய அன்னவடிவெடுத்து
அதன்முடியினைக்காணவானத்திற்பறந்து அளவற்றபுவனங்களைக் கடந்தும்
அச்சோதிமுற்படியே தோற்றப்பட்டதுபாதலத்தைத் துருவிச்சென்றபன்
றிக்கும்அவ்வாறேகண்டதுமன்றியிற்கோடுகள் தேய்ந்துவாடியிளைத்தபின்பு
அகந்தைநீங்கி பழைய அறிவுதித்துத்தேடும் ஆசையையொழிந்துபுவியின்
மீது வருவதற்குச் சத்தியில்லாமையாற் பரமசிவத்தின் பெருமைகளைப்
போற்றியாவருமறிதற்கரியதேவரீர்பாதாரவிந்தங்களிற்சரணடைந்து அவை
களையருச்சிக்க விருப்புற்றதால் உமது மகிமைகளையறியாமற்செய்தபிழைக
ளைப்பொறுத்துயிக்காலத்திற் காத்தருளவேண்டுமென்றுபலவாகத்துதிக்கின்
றதவர்யிற்கற்றனனுக்கிறகத்தினற்கேசவன்வலிபெற்றெழுந்து புவியிலோ
ங்கிநிற்குஞ்சோதிக்கருகில்வந்துவணங்கிவழிபட்டிருந்தார் யானும்நெடுங்
காலம்பறந்துதேடியும் அதன்முடிகாணுமல்வருந்தியும் முற்குறித்தசபதத்
தினை நினைந்து விண்டு விதனடியைக்கண்டு வருவானுயிற் றோல்வியேநேரு
மென்னும் மானம்பாதிக்க வெவ்வளவுகாலமாயினும் யிதைக்கண்டல்லது
மீளேனென்று பறந்துபறந்து யிளைத்து வலியொடுங்கியுஞ் சிறகுகளுதிர்ந்
தலைவற்றுங் கால்சோர்ந்தும் கண்கள்சுழன்றும் பிரானைன்றந்தனித்து

வாடுமுன்னிலையிற் றெய்வச்செயலாய் அச்சுடரினின்றுஞ் சில சித்தர்வெளி
வந்து பிரமாணத்தடங்காதபரஞ்சோதியினது முடியைக்கண்டேனென்று
அசத்யத்தைபுற்றெழுந்த விப்பறவையின் சிறகுகளும் வலியுமொழிந்தும்
அறிவில்லாமற்றேடவருகின்றது யின்னுஞ் சிலகாலம்பறக்குமாயின் உயி
ரிழந்துபோம் இச்சோதி சிவச்செயலென்றறியாமற் பாதலத்தைப்பிளந்து
போனவிண்டுவும் யிதனடியினைக்காணது யிளைத்துச்சிவனைத்துதித்து வலி
பெற்றுப் பூமியின்வந்து போற்றிநிற்கின்றான் யிவ்வன்னத்துக்கும் அவ
னுக்கிறகமுண்டாயிற்கடத்தேறுமென்றுமீளவுமச்சோதியின்மறைந்தனர்
இவ்வாக்கியங்களைக்கேட்டவுடன் என்மையலொழிந்து கந்தனைத்துதித்து
புவியினிறங்கி விண்டுவைக்கலந்து நாமிருவரும் அகந்தையினுல் நாரதர்
சொன்னதைக்கேளாமலும் யிச்சோதிவடிவானது பரமன்செயலென்றறியா
மலும் அளவற்றகாலந்தேடிவருந்திக் கடையிற் சிவகடாட்சத்தினுலுணர்ச்சி
பெற்றுசிறுதாற்தராயிவடஞ்சேர்ந்தோம் ஆதலாற்பரமனைவழிபட்டுத்தெரி
துசித்யிடேறக்கடவோமென்றொருமித்தவர்களாய் ஒருலிங்கத்தை யவ்
விடத்திற்றாபித்துச் சோடசவுபசாரங்களுடன் அருச்சனையினை வேதவிதிப்
படிக்குச்செய்து போற்றுகின்றதறுவாயிற்பரமசிவம் அச்சோதியினின்றும்
வெளிவந்து உமாபரமேஸ்பர முகூற்தமாகக்காட்சிகொடுக்க நாங்கள் கந்
தன்பாதகமலங்களிற்றொழுது சுருதிகள் துதித்தறியப்படாத தேவரீர்பெரு
மைகளை எங்களா லளக்கப்படுவதோ வுமது மாயையிற்பட்டு மயங்கிப்
பொருதவெங்கள்மத்தியிற் சோதிமயமாக வெழுந்தருளிப்போதிவைத்தந்
தாண்டீர் உமது அனுக்கிரகத்தினுல் உம்மையறியவல்ல பேதையரிழைத்த
பிழையினைப்பொறுத்தருளவேண்டும் பின்னைகள்செய்ததீங்கினைப் பெற்ற
வர்கள் யிஷ்டமாய்பார்த்திருப்பது முறைமையல்லவோவென்று பலவிதங்க
ளாகத்துதிக்கப் பரமனிரங்கி நீங்கள் செய்தகுற்றத்தை யெண்ணி வருந்த
வேண்டாம் உங்கள்பூசைக்குமகிழ்ந்து உமதுபதவிகளையுந்தந்தோம்யின்ன
மும் விரும்பியவரங்களைத் தருவோமென்றருளியபோது மீளவும் வணங்கி
அடிகள் திருவடிகளை மறவாதபேற்றைத்தருகவென்றிரக்கக்கடாட்சித்து மீள
வும்அச்சோதிப்பிழம்பில்மறைந்தார்பின்புஅவ்வனலவடிவமாறி ஒருமலையுருக்
கொண்டு சகலருங்கண்டுதொழநின்றது எங்களாற்பூசித்தசிவக்குறியினை அவ்
விரவில்வழிபட்டுஎங்களுலகங்களைச்சேர்ந்தோம்அதனைச்சிவன்ராத்திரியெனச்
சொல்லப்படும் அவ்விரதத்தினை அளவற்றவர்செய்து யிம்மை மறுமைப்
போகங்களைப்பெற்றுவருகின்றனர் ஆதலால் அவர்குணசிசெயங்களைப்போற்
றிப்பூசியாதவரையல்லதுபேதையருலகின்கண்யாவரிருக்கின்றார்கள் அவ்வாறு
ளிருந்ததால் மையல் நீங்கி அறிவுவிளங்கப்பெற்றாய் தாய் தந்தைகுருதெய்
வமுதலானது அவராக நினைந்து தவஞ்செய்து பேரின்பத்தைப் பெறக்கட
வாயென்று போதித்துப் பிரமன்றன்பதியைச்சேர்ந்தான்

தக்கன்றவஞ்செய்படலம்.

அதன்பின்பு பிதாவானவர் அருளிச்செய்தபடியே தவஞ்செய்யக்கருதிகாசித்தலத்தைச்சேர்ந்து கங்கைக்கரையில் ஆலயமொன்றுண்டாக்கி உருவாய் அருவாய் அருவுருவாய் அமலமாய்ப்பரப் பிரம்மசொரூபியாகிய சிவலிங்கத்தைத்தாபித்து வேதாகமவிதிப்படிக்கு ஆயிரவருடம் அருச்சிக்கக் கற்தனிரங்கி வெள்விடையின்மீது பார்பதிசமேதனாயெழுந்தருளக்கண்டு மும்முறைவணங்கித்துதித்து சுவாமி செல்வப்பெருக்கினாழ்ந்து தேவரீரை வெறுத்து அளவற்றபாதகங்களைத்தேடிக்கொண்டேன் அதைநீக்கி யுமது அடியரிற்சேர்த்துக்கொள்ளவேண்டுமென்று போற்றியபடிக்குக் கணத்தலைமையளித்து மறைந்தார் கற்தனனுக்கிரகத்தினாற் புனிதனாகியும் நந்திதேவர்சாபத்துக்கழிவில்லாமல் ஆட்டுத்தலையினையும் பெற்றான் கேட்டீர்களோ சவுனகாதிவிருடியரேயாமசிவத்துக்கிழைத்தகுற்றத்துக்காயினும்நிவாரணமுண்டு அவனடியருக்குச்செய்த அபராதத்துக்குத் தெண்டனைவிடாது இனிமேல் மற்றதேவர் சூரனால் நூற்றெட்டுயுகங்கள் வாதைப்பட்டசரித்திரத்தினையும் அவனுற்பத்தியையுஞ்சொல்லுவோம்.

தட்சகாண்டம்

சிவமயம்.

அசுரகாண்டம்.

மாயைப்படலம்.

ஐம்புலன்களை நிக்கிரகித்து சித்தத்தைச் சிவன்பால்நிறுத்தி தவங்களைச்செய்து சிறப்பெய்திய சவுனகாதிரிஷிகளே மனமொருமித்துக்கேட்பீராக மரீசிகுமாரனை காசிபருக்குதித்த அறுபத்தாறுகோடி ராட்சதருக்கரசனாகிய அங்கிறகேசனென்பவன் சுமாலிபுத்திரியாகிய பிங்கலகேசியைக் கலியாணஞ்செய்து பாக்கியவசத்தினாற் சுரசையென்னும் பெண்ணைப் பெற்று அவளொப்பற்றவடிவைக்கண்டு பரிவாகவளர்த்துவருகின்ற தறுவாயிற் குரவனானசுக்கிரன் அவளுக்குமாயவித்தைகளுள்ள தனைத்தையும் மந்திரபூர்வகமாகப்போதித்து அவள் வல்லபத்தைப்பார்த்து மாயையென்னும் பெயரையுமிட்டு ராட்சதர்சிறுமையினையுந் தேவர்பெருமிதத்தினையும் அவர்களுக்கு நந்திதேவரிட்ட சாபத்தையும்யோசித்து மாயையையாசீர்வதித்துராசபுத்திரியேகேசவனாலுந் தேவேந்திரனாலும் அளவற்ற ராட்சதரிறந்தபடியால் உன்தந்தைதவலியற்றொடுங்கினன் ஆகினும்மின்னலினொளியினாற்றாழை புட்பிக்கும் என்மகிமையினால்மழைபெய்யும் அதைப்போலவே யுன்னால் அசுரகுலம்விருத்திக்கவேண்டியிருக்கின்றது ஆகையால் நீதாழ்க்காமல்இலக்குமிக்குமேலானவடிவுகொண்டுபோய் வனத்திற்றவஞ்செய்யுங்காசிபனைமயல்பூட்டி யிரவின் அவனைப்புணர்ந்துவலியபிள்ளைகளைப்பெற்றுப் பெயருமிட்டு பரமசிவத்தைக் கருதி சிறந்தவரங்களைப் பெறுவதாக அவுணருக்கடுத்தவேள்விகளையும் விரதங்களையும் மந்திரபூர்வமாகப் போதித்துபிள்ளைகள் நலத்தைப்பெறவுஞ் சத்துராதிகளாகிய தேவர்பழியின்மூழ்கவும் அரிய தவங்களைச்செய்ய அனுப்பியபின் திரும்பக்கடவாயெனச் சுக்கிராசிரியன் சொல்லக்கேட்டு சுவாமி அவுணர் விருத்தியடையும்பொருட்டு யிதனையனுக்கிரகஞ்செய்தீர் ஆதலால் அப்பணிவிடையை அடியேன்செய்யக் கடவளென்று சேவித்துப்போய்ப் பிதாவாகிய ராட்சதராசனுக்கும் யிச்சேதிகளையறிவித்துச் சிலவும்பெற்றுச்சென்று வெள்ளியங்கிரியைப்போலச் சந்

வாங்க தாளிதமணிந்து காசிபர் தவஞ்செய்திருக்கும் வனத்தைச்சேர்ந்து இலக்குமியும் இரதியுந் திலோத்தமையும் மோகினியும் ஏகமாயொருவடிவெடுத்ததையொத்துஉலகிற்கிடையாதமிகுத்தஅழகுவாய்ந்தவுருவுகொண்டு பூமண்டலவாசிகளும்திசைகளினிருப்பவரும்விண்ணகத்தாரும்பாதலவாசிகளும் அவள்எழில்நலத்தைக்காணப்பெறின்மாரன்கணைகளுங்கிலக்காய்ச்சரீரமெங்கும் புண்பட்டு மயங்கிவிளக்கிற பட்டவிட்டில்களை நிகர்த்துவாடித்துடர்வதாகமேகலைமணிகள் பாதசரங்கள் கரத்தின்விளங்கும் வளையல்கள் சத்திக்கஅன்னத்தையொப்பமெல்லனவுலவி அவ்விடங்களிற் பரிமளமிகுத்த புட்பங்கள்வாய்ந்த பூங்காவுகள் மதுரமாய் சலசமற்றியுள்ள தடாகங்கள் சித்திரமண்டபங்களாதியாகத் தன்வல்லபத்தினாலுண்டுபண்ணி மறைந்திருந்தாள் அத்தருவாயில் ஐம்புலன்களையொடுக்கிப் பொறிகளையடக்கிச் சித்தத்தைச்சிவத்தின்கண்செலுத்தித் தவத்தினின்றகாசிபர்கண்களைவிழித்து நூதனமாகவிளங்குகின்ற சிங்காரங்களைப்பார்த்து அற்புதமடைந்தவனாய் வெளிவந்து ஒவ்வொன்றாகநோக்கி யிஃது புதுமையாகவிருக்கின்றது யிதனையாவர் நிருமித்தனரெனப் பலதிசையினும்நாடியொருவரையுங்காணாதவனாய் மாயையின்வஞ்சகத்திற்பட்டுஞானவுணர்வைமறந்துபிரமித்துத்திகைத்துச்சொல்லுவான் பொன்னுலகமிறங்கியதோ அளகைநழுகியதோவின்னதெனத்தோற்றவில்லை அல்லது பிரமசிருட்டிதானோ விண்டுவின் படைப்பின்வக்கமோ லோகநாயகனாகிய பரமசிவச்செயலோ யிதின்காரணமின்னதென நிதானிக்கப்படவில்லை இவ்வரியகாட்டினிடத்தில் யிச்சிறப்புகளுண்டாயது நன்கினுக்கேதுவோ அல்லது தீவினைக்குக் காரணமோவென்று யிவ்விதங்களாகப் பன்னியுழன்று யாதுந்தோற்றாமையால் மனவாட்டத்துடன் தவத்தினைத்துடங்கத் தமதிடத்துக்குச் செல்லுங்காரணத்தையும் அவர் மனக்கலக்கத்தினையும் மாயையறிந்துயிதுதருணமெனக்கருதி தவத்தர்வருமுன்னிலையிலுண்டுபண்ணிய வயிரக்குன்றினிடத்துச் சோடசகலைகளைவாய்ந்த சந்திரனைப்போலத்தோற்றப்படக்காசிபர்அவ்வடிவைக்குறித்துநோக்கியிதனை நினைப்பதாயினார் கற்பகத்தருக்களிற்றவும் வில்லிசாதக்கொடியானது அரியதவப்பேற்றினால் யிக்கொடியாக அவதரித்திறங்கியதோ மின்னற்கொடியினதுவினவோ யித்தோற்றம் அதிசயமாகக்காணநின்றதென்று தவத்தைமறந்து அக்குன்றினருகிற்போய் யிதுபெண்ணுருவாகத்தோற்றுகின்றது சகத்தினைவிளக்கும் பெருமையினையுடைய இலக்குமியோ அசுரரை மயக்கிய மோகினிதானோ பொற்பாவையோதேவகன்னியோ எனது பேரறிவைக்கலக்கியயிவளையாரென்றுமறியேன் பிரமசிருட்டியிற்பட்டவளாகத்தோற்றவில்லை மாயையோ யிக்கோலங்கொண்டு எழுந்ததாகக் காணுகின்றதென்றென்னை மிட்டுவெருத்தித் தவத்தைவெறுத்துப் புணர்ச்சியிற்கலைகொண்டு வலியிற்

பட்டமானைப்போற்கலங்கி இவளென்னையியாதோவென்றேங்கி நிற்கின்ற தருவாயில் மாயையானவள் வெலையொத்தவிழிகளைச்சுழற்றிக் கலக்குறிப் பினைக்காட்டப் பெரியவரென்செய்வர்மருண்டு அவளிலக்கணங்களைப்பாதாதிகேசபரியந்தம் வற்ணித்துயிலைகட்குவமை கூறுகின்ற பொருள்களொன் றும்மெவ்விதத்தினுஞ் சரியொவ்வாதென்று மிசழ்ந்தவளுய்யிக்கன்னிகையினதுவளப்பில்ஆயிரத்திலொருகூறெனும் இலக்குமிக்குக்கிடையாதாகையால் என்னால் அளவிடப்படுவதோ இவள்காலழகுக் கிந்திராணியொவ்வாளெனப் பலவிதமாகத்துதித்துமெல்ல நெருங்கி வனப்புகளுக் கோரணியாக நிற்கின்ற பெண்ணரசியே உமதுவரவென்பாக்கியவசமாகும் ஆதலால் உன்குலம்யாது நீரிருக்குமிடமெது உமது திருநாமமேதும் உமதுதந்தையாவன் சற்று தயைசெய்து சொல்லுமென்றுகேழ்க்க மாயை அவரைப் பரிந்துநோக்கி தவத்தினை விரும்பிநோர்க்கும் உம்மைப்போலொத்தமகத்துக்களுக்கிவைகளினுலாகவேண்டுவ தென்னை மேலுங்காமத்தைவெறுத்தநீர் கன்னியரிருக்குமிடத்திற்றனித்து வரலாகுமோ விருடியருக்கழகோ இதுவல்லாமல் ஞானவறிவில்லாத மனிதரைப்போலப்பேசிக் கிட்டுவதுநீதியல்ல முத்தியினையளிக்குந்தவஞ்செய்யப்பயே மென்றுமறுத்தவுடன் காசிபர்மனங் கரைந்து பெண்கள்சிகாமணியே சரீரம்வருந்தி மனதையொடுக்கி அரிய விரதங்களைச்செய்வது யிஷ்டசித்திகளைப்பெறவாதலால்நான் முடித்ததவப் பேறுகிடைத்தபின்பும்வருந்துவானேன் ஆதலாற்பெயர்முதலியதைப்பின்பு தெரிந்துகொள்ளுவேன் காமநோய்வருத்துகின்றதாற் சற்று தயைசெய்ய வேண்டுமென்றுவேண்ட மாயைநகைத்து என்னிமித்தநீ தவஞ்செய்ததாகச் சொன்னீர் பெரியவர்கள் யிப்படிக்குப்போய் பாடலாமோவென்றுகேட்க அவள்குறிப்பைக் கலைகளனைத்துந்தேர்ந்த காசியர்நாடிப்பெண்ணரசேகேட் பாயாக நான் பிரமகுமாரனாகும் ஒருபோதும் பொய் பேசமாட்டேன் காமவிகாரமேலிட்டுவாட்டுவதினாலுண்மையைத்தான்சொன்னேன்அதென்ன வென்றால் மோட்சவின்பத்தைக் கருதி யிதுவரையில் அளவற்ற அரியதவங் களைச் செய்தேன் அதனிலுஞ் சிறந்தசுகத்தை யெளிதிற்றரவந்தீர் உம் மைச்சேருவதற்கு மேலானபயன்வேறில்லை யிதை யுறுதியாகக்கொண்டேடம் மையடுத்தேன் சித்தமிரங்கவேண்டுமென்றிரப்பதைமாயை கண்டு நகைத்து ஓ மாதவரோ யென் சரித்திரத்தைக்கேளும் நான் செல்வமிகுந்த வடதேசத்தினிருப்பவள் மேருவுக்குத்தட்சணபாரிசத்திற் பெருகுங் கங்கைக்கரையைச்சேர்ந்த யின்பநலத்தைப்பெறவிருப்புற்றவளாதலால் அவ்வாறேபோய் வருவேன நீர் நில்லுமென்று சொல்லக்கேட்ட காசிபர்மயங்கி பெண்கள் சிகாமணியே கிருபைசெய்துகேட்பீராக கங்கை முதலானசத்தநதிகளையுங் காசியாதியாகிய சிறந்த தலங்களையும் பொன்னுலகமுதலியவான நாடுகளை

யும் மற்று மெவைகளை நீர்வேண்டினும் நிமைப்போதிற்றருவிப்பேன் திதி புத்திரனைப்பார்க்க விரும்புவையாகிலும்பிதோவரவழைப்பேன் தேவாமிர் தத்தினிடத்தில் யிச்சை கொள்வையாயினும் பெறச்செய்வேன் வானமடந் தையரை யுனக்கேவல்செய்யவருப்பேன் இதுவன்றியும் வலிய புத்திரரை வேண்டினும் உண்டாக்குவேன் ஆறு லென் பிராணனைமாத்தி ம் நிற்கும் படியாய் விரைவினென் தாபத்தைத்தீர்த்து ரட்சிக்க வேண்டுமென்றவுடன் மாயையுஞ்சிரிப்புகொண்டுபெரியவரோ நான் தனியளாயிருக்கின்றனளெனக் கருதி யிப்படிக்குப் பேசினீரோ யினியதை மறந்து விடுந்தவத்தருக்கிது அடாதுஎன்னெண்ணப்படிக்குக்கங்கைக்கரையைச்சேருவேனென்று நடக்க க் காசிபர் பின்பற்றி யுன்கருத்தின்படிக்கெல்லாமுடிப்பேன் நில்லும் நில்லு மென்றுவிடா மாயை தன் மந்திரவலியினுல் உருக்கரந்திருந்தாள் அப் போது அவள்தோற்றங்காணுமையாற் பிரமகுமாரன்மருண்டுவாடிமனநிலை பெறுமற் புலம்புவதானர்

காசிபன்புலப்புறுபடலம்.

இவ்வாறு காசிபர் அக்கன்னிகையினிடத்திற் காதல்கொண்டு தன்னைக் கண்டோடும் மான்களைப்பார்த்து தேனைப்போல மதுரமாய் வசனித்திருந் தவள் சற்றுமென்னிடத்தில் யிரக்கமில்லாமல்மறைந்தாள் அவளுங்கள் கூட் டத்திற்சேர்ந்தாளோ வுண்மையைச் செல்லாமல் நீங்க ளோடவேண்டிய காரணமென்னவென்பான் சிலையையொத்துப்பிறகாசிக்கும் நுதலையுடையவள் வளையையென்னும் வலையைவீசி யென்பிராணனை கிறிகித்துச்சென்றாள் கலை மான்களே நீங்களதைக்கண்டீர்களோ நிலைபெறாது வெருவி யோடுவானே னென்பான் மதயானையே காதல்கொண்டு பிடியையணையவிரும்பிப்போ வாய் நான்தனித்துவருந்தாமல் அக்கொடியாளைத் தேடிக்கொண்டு வருவா யென்பான் பூஞ்சோலைகளினிருக்கும் வண்டுகளைப்பார்த்து பெரியோர்கள் உங்களை அளியென்று சொல்லுவார்கள் அஃது வியற்தமாகாமல் நீர் வோரி டத்திற்றரியாமல் உலவுகின்றதால் என்மனதில் நினைந்த மங்கையைத் தேடித் திரிவீர்போற்சாணுமென்பான் குவளை மலரைநோக்கி என்னுடன் வார்த்தையாடிப் பிரிந்தவள் விழியையொத்துவாட்டுவாய் என்பிராணனிடத் துப்பரிவில்லாமற் பாதகனுன மன்மதனுக்கும் பாணமாகிப்பாய்ந்து யித் தருணத்திற் சற்றுந் தயையில்லாமல் என்னுயிரை யலைப்பதழகோ வென் பான் செந்தாமரைப்பீடத்தமர்ந்த லிலக்குமிக்கு மேலான வன்பைக் கொண்டெந்து எனக்கதிக மையலைத்தந்தகன்றுள் ஐயோ சந்திரனை நமக்

ரிய சம்பந்தத்தைக்குறித்தாவதுயிதனைவிசாரித்துஅவளிடத்துக்குத்தூது
சென்று அழைத்துவராதகாரணமென்ன சொல்லுமென்றுதூறுவான்பொன்
னைப்போலப் பொலிவாயிருக்கின்ற செழித்தகமலத்தின்கண் பெடையைத்
தழுவிப்பிரியாதிருக்கின்ற அன்னங்காள்யான்தனித்துவருந்தப்பிரிந்த அப்
பெண்கொடி போவதுதருமமோ சொல்லுவீரென்பான் புட்பித்தோங்கிநிற்
கின்ற வேங்கைமரத்தைநோக்கி தணியாதகாதலையடியேனுக்குத்தந்துதணி
வுகொண்டுசென்றாள் அவள்போகுமார்க்கத்தைக் கணித்துச்சொல்லுமென்று
வேண்டினும் அதைமனதிற்கொள்ளாய் காலத்தைக்குறித்துக்காட்டும் உன்
னியல்புக்கிது அடுக்குமோவென்று பிணங்குவான் படைவேள் கணையாக
வுஞ் சூரியனுக்குறவாகவும் மடவார்வதனத்தையொத்துஞ் சந்திரனுக்குப்
பகையாயுமிராநின்ற தாமரைமலர்காள் விடத்தைநிகர்த்துச் சுழன்றுவாட்
டும் விழிகளைப்பெற்ற மெல்லியலாளவள் உன்னிடத்திற்கு வருவளாயின்
ஒளியாது சொல்லுமென்றுவேண்டுவான் மலைகளைப்பார்த்து மிகவும் பருத்
தோங்கி நிற்கின்றீர்கள் தயை தாட்சணியமில்லாமலென்னை நீங்கியகாதலி
போகுமார்க்கத்திலுமிருப்பீர் அவள்செயலுங்களுக்குத்தோற்றும் அதைச்
சொல்லாமலிருக்கின்றீர் உங்களுக்கேதேனுங் குறை செய்திருப்பேனோ
வென்றாடுவான் சோலைகளிலிருக்கின்ற குயில்களைநோக்கி மயிலையொத்த
சாயலையுடையவள் மாயமாகத் தோன்றுகின்றனள் அவள்காரணமொன்று
மறியேன் அவளிவ்விடத் திருக்கின்றனளோ நீர் சில பயல்களைக்குறித்துக்
கூவுகின்றீர் ஆதலா லென்பிராணனைக் கொள்ள விரும்பினீரோவென்று
வாடுவான்மந்தமாருதம்வீசநடுங்கி ஓ தென்றலே உன்னிடத்திற் றன்செல்வ
நினைந்தாசுவசனித்திருந்தாள் அவளிங்கில்லை யிந்தமார்க்கத்தைப்பற்றிநடந்
தாள் நீதென்பிரதேசத்தினின்றும் வருவதால் அவள் செயலேதேனுமறிவை
யாயிற் சொல்லக்கடவாயெனக் கெஞ்சுவான் சந்தனவனத்தைக்குறித்து
உன்னிடத்திற் குளிர்ச்சியும் அன்புமுள்ளதாக எவரும்புகழ்வார்கள் அப்ப
டிக்கிருக்க நெருங்குவேனாயிற் சுடுகின்றனை சோருகின்றவென்னைத் தளர
வேண்டாமென்று ஆதரித்துத் துயரத்தைப்போக்கினையல்லையென வருந்து
வான் களித்தாடும் மயில்காள் கொஞ்சிப்பேசுங் கிளிகாள் யின்பமாகக்கூவுங்
குயில்காள் உங்கள் சுற்றமல்லாதவென்னைத் தளராவகைபோதரவு சொல்லு
வீராயின் அடியேனுயிருக் காணுவீரென்பான் புறாக்களைநோக்கி யெனக்
கதிக துயரைவிளைத்து அணையாமற்றுறத் துறவை விரும்பிச்சென்றவள்
சினேகமுமொரு சினேகமோ வுங்களைத்தானுறவாகக் கொண்டேன் யினி
யாவது அவள்சென்றமார்க்கத்தைத் தொடர்ந்துபோகச் சொல்லீரெனத்தொழு
வான் இவ்வாறு தவ சிரேஷ்டனாகாசிபன் மையல்கொண்டு புலம்பு
மாலையைக்கேட்டு மகிழ்ந்து அழகிய கோலத்தை மறைத்து அருகில் நேர்ந்த

தறுவாயிற் சூரியன் அஸ்தமனகிரியையடைந்தான் அஃதெத்தன்மைத்தெ
னின் அரியதவங்களைச்செய்த முனிபுங்கவனிடத்தில் மாயைவந்து அளவற்ற
விகாரத்தைத்தந்து அவர்செய்ததவப்பலன்களனைத்தையும் அழித்தான் ஐயோ
அதற்குட்பட்டஇவனைப்பார்க்கப்படாதெனப்பரிந்துபோனதை யொத்தும்
பிதாவாகியவிருடியைப்புணரவந்தனளாதலாற்றுடாகும் யிவரிருவருங்காதல்
முற்றச் சரசசல்லாபமாகவிருக்கப்போறதைக்காண்பது பின்னைக்கடாதென்
றெண்ணி மறைந்தவனை நிகர்த்தும் இனியிருளென்று மிராக்கதவெள்ளம்
வரவிருக்கின்றதெனக்கருதி விண்ணகத்தரசன் செங்கோலைநடாத்தும் ஆக்
கியாசக்கரமொடுங்கியதைப் போன்றும் மேற்றிசைக்கடலினாழ்ந்ததறுவா
யிற் றேவர்பெற்ற மகதயிஸ்வரியமுஞ் சீரும் வண்மையும் பறந்தோடத்
தக்கதாக மாயையிடத்துதிக்கும் அவுணவெள்ளம்பெருகநின்றதையொப்ப
மாலையிருள்பரந்தது வுடனேசெக்கர்வானமறைந்தகாட்சிதரித்திரமேலிட்டு
யிரப்பவர்களுக்கு யிம்மியளவுங்களித்துக்கொடாதபதிதன்செல்வம் அழிவ
தைப்போன்றதுபின்புயிருள்பரந்ததோற்றம்பூமிதேவிக்கும்படாம்போர்த்
ததையொத்தது அக்காலத்தில் நட்சத்திராசிக ளுதித்தது மன்மதனெறி
நடாத்துங் கங்குலாகிய மதயானையினது முகத்தில் விளங்கும்புள்ளியினைப்
போன்றுங் கற்பகத்தருக்கள் சிதறும் மலர்களையொத்தும்வானத்திர்பரந்த
மேகங்களில் நின்றுமுதிரும்முத்துகளைநிகர்த்துங்காட்டியதுபின்புசகலருந்
திடுக்கிடத்தக்கதாய் விஷத்தினையொத்து உலகமெங்குஞ்சூழ்ந்த விருளின்
பெருக்கத்தினைதெளிந்த நிலாக்கற்றையாகியகரங்களினால்வாரிவாரிவிழுங்கி
விண்ணவர்போற்ற காளத்தையுண்டு கண்டத்திற்காட்டிய பரமசிவத்தைப்
போலக் கிழக்குச் சமுத்திரத்திற் சந்திரனுதயஞ் செய்து பாற்கடலைத்
தேவர் கடைந்ததறுவாயில் மணிகளுடன் தெறித்த திவலைகளைப் போலத்
தாரகா கணங்கொன்ற அவுணவெள்ளம்பொன்ற காரிருளொடுங்க அக்க
டலினெழுந்த அமுதத்தை யொத்துப் பிறகாசித்து இரவென்னுங் கம்மி
யன் ஞாலமென்னும் உலையினிடத்தில் கரியகடலைக் கரியாகக் கொண்டு
வடவையென்னுங்கனலைமூட்டி வங்கத்தை வெள்ளியிற்சேர்த்து வாயுவென்
னுந் துருத்தியினா லூதிச் சுத்திசெய்து வெண்காரத்தினாற் சொக்கமாக்கி
யதைப்போன்று சிவந்த பிம்பமாகக்காட்டிய திறேகமானது கலைகள் பூரி
த்துவெளுத்த வானமென்னும் விசாலமாகிய தடாகத்தில்நட்சத்திராசிகள்
குவளை ஆம்பல் மலரினையொத்துவிளங்கஅலைகளின் நடுப் பிறதேசத்தின்
அலர்ந்த வெண்டாமரைமலரை நிகர்த்துச் சந்திரன்பிறகாசித்தவளுப் அம்
மலரிற் பெருகுந்தேனைப்போல நிலவைப்பெருக்கி அதனையுண்ணும்வண்
டினங்களையொப்பக் களங்கம்விளங்கவுங் கடலென்னுந்தடாகத்தின் அம்
பியென்னும் பரதவன் நிலவாகிய வலையைவீசிப் பலவகை மீன்களைவாரி

வானமென்னுங் களத்திற் பூளைப்பரப்பியதைப்போன்று நட்சத்திரங்கள் தோற்றியும் மேகசாலங்கள் கருங்கடல் நீரையுண்டு வானத்திற் பரவி பூமியின்கண் பொழிவதைக்கண்ட சந்திரனுமவன் றானும் பாற்கடலைப் பருகி விண் மண் ணென்னுமிடங்களினும்பொழிந்த அமுதத்தைப்போலத் தெளிந்த நிலவெங்கும் விளங்கவும் இவ்வாறு சந்திரிகை யெங்கும் பிரகாசித்ததனுலாயில்உலகத்தின்கண்தோன்றிய சகலசீவராசிகளுங்களிக்கவும் அல்லிமுதலிய மலர்களலர்ந்து தேனைப்பெருக்கிப் பரிமளத்தினை வீசவும் பூங்காவுகள் புட்பித்துமகரந்தங்களையிறைத்துமணியமாகத்தோற்றவுந்தாமரை புஷ்பங்கள் புலர்ந்துகுவியவுங்கணவனைப்பிரிந்தமங்கையருந் துணைவியையிழந்த காதலரும்மனம்புகைந்தழன்றுவருந்தவும் இவ்வகைத்தி னொருவருக்குந் தீங்குகளைச்செய்யாதவராயினும் பேரறிவாளராயினுஞ் சகலருக்கு நன்பாய் நன்வினைச்செய்து கீர்த்தியடையக் கூடாததைப்போலப் பல்லுயிர்களுக்குமின்பத்தைவிளைத்தசந்திரனைக்கண்டவுடன் மெல்லிய தாமரைகளனைத்தும்பொலிவழிந்துகுவியவும் அக்காலத்திற்குமுதங்கள்மலர்ந்து வண்டினங்கள்மொய்த்ததெத்தன்மைத்தெனின் எமதிறைவன் பங்கமுற்றவரிடத்திற்சேரான்கமலமேன்குவிந்ததென்றவாய்மலர்ந்துவசனிப்பதைப்போலத்தோற்றவும் தேனையுண்டொலித்திருந்தசுரும்புகளுடன் கமலங்கள் குவிந்தகாட்சி யெப்படிக்கிருந்ததெனின் சந்திரன்பரஸ்ரீகளை விரும்புகின்றவனென்றஞ்சி எமதிறைவியிவ்விடத்தினில்லையெனச்சொல்லிகபாடபந்தனஞ்செய்ததைப்போலும் இரவுநேர்ந்த காலத்திற்சடிடனேக்கதவைப்பூட்டிச் செங்கண்மாலையணைத்து பஞ்சணைமெத்தையிற்பள்ளிகொண்டதைப்போல மகரந்தங்களையுந்தேனையுமிறைத்திருந்த கமலங்கள் யிசைப்பாடலைமுழக்கும்வண்டினங்களுடன் குவிந்துபொய்கைகளின்விளங்கவும் இவ்விதக்காட்சி மலிந்ததறுவாயிற் றேவரையுந் தானவரையும் படைத்தகாசிபர் வானத்தினெழுந்த சந்திரனது கிரண சமுகங்கள் தன்மேனியிற்றாக்கியவுடன் சரீரம்வெதும்பி மனம்நடுங்கி வலிகுறைந்து அங்குமிங்கும் அலைந்து பெருமூச்செறிந்து அறிவுசோர்ந்து ஐம்புலவிடையங்களழிந்து புலம்பினவனாய் விண்ணிற் றோன்றிய நிலவைநோக்கிக்காலையினெழுந்த வெவ்விய கிரண சமுகங்களைப்பெற்றசூரியன் மாலைப்போதின் மேற்றிசையின் மறைந்தவனைப்போலக்காட்டி மீளவும் விரைந்து கீட்டிசைக்கடலினெழுந்தனனோ விது புதுமை புதுமையென்றும் சூரியனல்லவெனிற் கூற்றுவனைப்போலக் கடல்மத்தியினெழுந்த தன்மையினால் நிமைப்போதி லுலகையழிக்கக் கடலினிடத் தடங்கிநின்ற வடவாமுகாக்கினியேயாம் மதியல்லவென்றும் அத்தியிற் செக்கர்வானமிடுங்காரணம் உலகுளோர் அம்புலியெனப் புகழுந்தழற்கடவுள் கீட்டிசையி லுதித்ததனாயின் விளங்கும் பிரகாசமாகுமென்று பதைத்தும்விண்மண் திசைகளனைத்தினும்

மாலையிருள் பரவியது கண்ணோக்கியமானகலைகளை விரிக்குஞ்சந்திரனெனத்
துதிக்குஞ் செந்தழல்களன்றெழுந்த புகைப்படல மாகுமென் றேங்கியுங்
கடலினுதித்தசோமனென்னும் வெவ்விய தழலானது வெளுத்துக்காட்டுங்
காரணம் உலகர் காராட்டையெள்ளாடென்கின்றதினால் யிருதுண்மையென
பதுபிறதிஷ்டவளவையினுற் காணப்பட்டனன் மேலும் அளவிறந்தபிராணி
களையுண்டுவெப்பமிகுத்த அனலம் வெண்மையினைப்பெறுமாறுபோல யிவ்
வுருவைப்பெற்றதல்லது வேறில்லையெனநடுங்கியும் வடவனலைப்போலொங்
கிச்செக்கர்வானமாக்கியபின்பு வெளுத்துக்காட்டுஞ்சந்திரனுனது யிருத்தெ
ரிவதினின்றுஞ் சிதறுகின்ற கனற்பொறியேயல்லது வானத்திற் றோன்றிய
நட்சத்திரராசிகள் வேறுமுண்டோவெனச் சோர்ந்துஞ் சிறந்த திருப்பாற்
கடலினுதித்தகாரணத்தினுல் ஆலகாலவிடமும் அமுதமாய் அக்காலத்திற்
றேவரையோடச்செய்த நீலநிறத்தை நீங்கியித்தினம் வெண்டிங்களாயெழுந்த
தோவென்றேங்கியும் முற் கூறியதொன்றுமல்ல அக்கடலின் கட்டோன்
றியவடவனலமுழுதும் ஆலகாலவிடச்சமோகத்திற் கலந்து ஆர்த்தெழுந்து
மேகத்தின்மறைந்து தமது சுவாலையை யிப்பூமியின்கண்பொழியச் சந்திர
வுருவைப்பெற்று உதித்ததேயாம் யிதுவே யுண்மையெனத் துடித்தும்
இவ்வாறுமருண்டு பலவாகப் பன்னிய காசிபமுனிவனுனவன் மாயையை
நினைந்து யிருத்தகாதலின் அவளைக்கூவிப் புலம்பத்துடங்கி / உருவெளித்
தோற்றத்தைக்கண்டு பரிமள புட்பவகைகளையணிந்து தாழ்ந்த அளகத்தினை
யுடையபெண்ணே கொடியவனெதிரில் எவ்வெவ்விடங்களினும் மின்னற்
கொடியையொத்துத் தோற்றுவீராயினும் அணைக்க நில்லீர் யான்மங்கும்
போது சேருவீரோ உம்மையல்லது மனவுறுதிபெற்றவ ரொருவருமில்லை
யென்பான் முதற்கண்டவுடன் காதலைவிளைத்து மனவுறுதிமுதலியதையழித்
தீர் அருகன்றியும் மன்மதனையேவித்திரோகத்தினையும்வாட்டியதுடன்பெரு
லைர்வனத்தையுஞ் சிதைத்தீர் யின்னமுஞ் சிறியேனுக்குச் செய்யவேண்டு
மேதுவுமுண்டோ சொல்லுமென்பான் அழகிய வயிரக்குன்றமுதலியதை
யுண்டாக்கி மனங்களிக்கவுலவிய நீர் என்னை யிவடத்திற் றனித்துவிட்டுச்
சென்று மீட்டும்புவியெங்குந்தோற்றுவீர் ஆதலால் உமதுசெயல்களையாவ
ரலறியப்படுமென்பான் உம்மிடத் தன்பு கொண்டதினுல் ஆதிதவக்கிச்
செய்த தவமுயற்சிகளை யிழந்ததுமன்றியில் மன்மதனுல் மிகவும் நொந்
தேன் இவ்வித துன்பங்களைப் பெற்றும் உம்முடன் வாராதுழலின்
றேன் யிதனுல் வியர்த்தமாய் மாண்டேனென்னும் பிழையைமாத்திரம்பெற்
றேனென்பான் நேசங் கொண்டவளைப்போல் வந்தீர் அவ்வாறு நில்லா
மல் மாயப்படிவத்தினைப்பெற் றெனதுறுதியையும் பறித்துக்கொண்டீர்
[illegible]த்த மோகத்தைத்தரும் வடிவைப்பெற்றீர் யிவ்வித மகிமைகளை

யுடைய நீர் என்பிராணனை நிர்க சற்று நினைபிராயிற் கூற்றுவனுக் குற
வாய்வந்ததாகுமென்பான் பெண்ணரசே யினியொரு கன்னியரைக்கனவி
லும்விரும்பேன் உன்னிடத்தி லதிகமோகங்கொண்டேன் மேலும் உமது
மாயை விளைவனைத்தையுந் திஷ்டாந்திரமாகக்கண்டேன் அவ்வாறே யிவ்வி
டத்துலவுவதைப்போற்காட்டி மறைந்தீராயினும் என்னிடத் திரக்கமுற்று
வாராமற் சற்று தாழ்ப்பீராயின் மாண்டுபோவேன் யித்தருணத்திற் பிரா
ணன் நிற்கவரவேண்டுமென்பான் மாயைகளைந்து மோருருவ மாகப்
பெற்றுவந்த நீர் உலகங்களனைத்தையும் வென்றுலவுவீர் ஒருகாலமென்று
யிளையுங்கொள்ள விரும்புவீராயினும் யிஷ்டமாகத்தருவேன் ஆனாற் சரச
சல்லாபமாயொருகா லென்மையல்தீரச் சேரவேண்டுமென்பான் இவ்விவ்
விதமாகப் பன்னிப்பன்னியிடற் கடலிற் படிந்து வருந்திச் சோருமுன்
னிலையிற் சகலதுன்பங்களுக்கும் மூலமான மாயையானவள் தானெண்ணி
வந்த கோறிக்கையினைப் பெறுதற்கிதுதருணமென்றெண்ணிகாசிபன்காணு
மின்னற்கொடியினை யொத்துந் தன்னுருவம்வெளிப்படநின்றாள்.

அசுரர்தோற்றுபடலம்.

இவ்விதமாகத்தோற்றிய மாயையினைக் காசிபர் கண்டவுடன் மகிழ்
சிறந்து யினி பிழைத்தேனென்று மின்னலைநோக்கியவுடன் அலருந்தாமரை
யைப்போலத் தந்தபந்திகள் விளங்கநகைத்துக் குலவியவனுக்[illegible]டு
வான் திரோகபரவசமாய் விழுவான் அவள்மீதுபாடுவான் சரீரம்பு[illegible]த்து
மயிர்ச்செறிவெய்த மாயையின் சமீபத்திற்சென்று மரணமடையநிற்கின்ற
தன் பிராணனைக்காத்தற்பொருட்டு அவளைநோக்கிப் பெண்கள்நாயகமே
நானென்னகருமங்களைச்செய்ய நினைந்தீராயினும் உமதிஷ்டப்படிக்கி யின்
னிமிஷத்தில்முடிப்பேன் ஆதலாற் கோபந்தணித்து தயைசெய்தென்னை
யணைந்து ரட்சிப்பீரென்று அழகியபாதங்களிற்சேவிக்க மாயை யிரங்கி
ஓ ரிஷியே பயப்படவேண்டாம் யிப்போதுநானிருக்கின்றசுந்தரமாகியவடி
விலுக்கும்அழகுக்குந்தகுந்தமேனியும்வனப்பும் பெறுவையாயின்உம்மை
யணைவேனென்று சொன்னவசனஞ் செவிகளுக்கமுதமாகக்கேட்டுமுன்னங்
காமக்கடலிற்படிந்தவன் சந்தோஷசாகரத்திலாழ்ந்தவனும் யிதுநல்லகாரிய
மென்றுபுதைத்திருந்ததிரவியத்தைக்கண்டதரித்திரனைப்போலக்களித்துமின்
னற்கொடியினையொத்த யிடையைப்பெற்றபெண்ணே நீரேவியபணிவிடை
யைச்செய்யக் காத்திருக்கின்றேனெனத் தமதுதவமுயற்சியினைத் [illegible]

றேறையுடைய மன்மதனுக்குமேலான உருவினைக்கொண்டுநின்ற முனிவனை
மாயைநோக்கி உமதுவன்மை வெகுநேத்தியென வியந்துநகைத்து அவர்
கரத்தைப்பற்றிச்சென்று பொன்மலைக் கொப்பாகிய சொற்னமயமான
வொரு மண்டபத்தைச்சேர்ந்து தன்மகிமையினு லுண்டாயிருக்கின்ற சப்
பிறகூடமஞ்சத்தின்மீது முதற்சாமத்திலிருவருஞ் சரசசல்லாபமாய்க்கலந்த
தறுவாயிற் பசிப்பிணியினை நீக்கவகையில்லாமல்வெகுகாலமாய்வருந்தியுமன்
றவன்தற்செயலாய்அமுதத்தைக்கிடைத்துஅவாவுடன்பொசித்ததையொத்து
அக்கன்னிகையைக் காசிபனணைந்து வருந்தி நோற்றுப்பெறுந் தவமுமு
தைப்போலவே "அவளது மெல்லிதழமுதபானமுண்டு கிறீடைகளைச்செய்
யும்போது மாயையுமனமுருகி யின்பவமுதத்தினைத் தருவதைப்போலக்
கொவ்வைக்கனியை நிகர்த்த செவ்விதழூறலைக் காசிபருக்குக் கொடுக்கத்
தன்னறிவு மயங்கி காமவாரியிற் பட்டவளாய் இலக்குமிக் கொப்பானவள்
அல்குலென்னுஞ் சுழியிலகப்பட்டு போகக்கடலின் கரைகாண மன்மத
நூலிலக்கணங்களை நினைந்து நகக்குறி பற்குறி தாடனஞ் சும்பனம் புள்
ளொலி முதலிய லீலைகளை நடாத்திப் புணர்ந்துவருமுனிவனைப்போலயிற் றிரேக
பரவசத்தனாய் கலாபமஞ்ஞையினையொத்த விக்கன்னியிடத் தேககாலமு
மறியாத யின்பநலத்தை யுண்மையாகக் கிடைக்கச்செய்தவிதிக்கு யான்
கைமாறுதவவொரு பொருளுமுண்டோவென்று புகழ்ந்துகொக்கோகசாத்
திரப்பிறகரணமாய்க் கிறீடிக்குமுனிவலயின் மாயையானவள் மனம்பூ
ரித்து முனிவன் அங்கங்களில் நகக்குறிகளுருத்த அவ்விடங்கடோறுங்
காம நீர் ஊற்றெடுத்துப்பெருக மிகவுமகிழ்ந்து சுரதகலைகளைச் செய்து
வருங்காலத்தின் முனிபுங்கவனுக்கு சரீரம்பூரித்து பேரானந்தவாரியைக்
கடந்தவனைப்போலக்களித்தின்பமுற்றியதறுவாயிற்பிரமன்விண்டுதேவேந்
திரன் விண்ணவர் முனிவராதியர் தத்தமுள்ளம்நடுங்கப் புயவன்மைக்கொப்
பில்லாத சூரபன்மன் மாயையிடத்துதித்ததறுவாயின் அவ்விருவருமனங்
கனிந்தணைந்தபோதுண்டாகிய வெயர்வையிற் செயசாலிகளாய் வலிபெற்ற
முப்பதினுயிர வெள்ளந்தானவருதித்தனர் அவர்களையும் பிறதமகுமாரனை
யும் அவ்விடத்தில் நிறுத்திக் காசிபனைமற்றொரு சித்திரமண்டபத்திற்
கொண்டுபோய் மாயை அவ்வுருவைமாற்றிப் பெண்சிங்கவடிவுகொண்ட
வுடன் தவத்தரும் மடங்கலுருப்பெற்றுக் களித்து யிரண்டாஞ்சாமத்தி
நிபுணர்ந்தவுடன் திசையெங்கும் நடுங்க ஆயிரமுகங்களையும் யிரண்டா
யிரங் கரங்களையும்பெற்ற சிங்கமுகாசூரனுதித்தான் அக்காலத்தில் அவ்
விருவரிடத்தினும் பெருகியவெயர்வையில் நாற்பதினுயிரவெள்ளஞ் சிங்க
முகம்பெற்ற விராக்கதர்பிறந்தனர் அவர்களையும் அவ்விடத்தில் நிறுத்திச்
சொற்னமயமாய் ரத்தினகாந்திகளை வீசுகின்ற வேறொரு மண்டபத்திற்

சென்று மாயை பிடியுருப்பெற்றவுடன் காசிபனும்மதயானைவடிவுகொண்டு துதிக்கையினை நீட்டி விறிட்டு மூன்றாஞ்சாமத்திற் புல்லியவுடன் அவுணர் குலம்விற்றிக்க நாற்கோடுகளைப்பெற்ற யானைமுகத்துடன் தாருகாசுர னுதித்தான் அக்காலத்தில் அவ்விருவிறவர் திரேகங்களிற்பெருகிய வெயர் வையில் நாற்பதினாயிரவெள்ளங் கசமுகங்களைப்பெற்ற அவுணர் வெளிவந் தனர் அவர்களையுமவ்விடத்தில் நிறுவி மற்றொரு சந்திரகாந்த மாளிகை யைச்சேர்ந்து மாயை செம்மறியாட்டின்பேடாயுருக்கொள்ள முனிவனுஞ் செச்சைவடிவுகொண்டு நான்காஞ்சாமத்திற் புல்லியவுடன் அசமுகியென் னும் பெண்ணானவள் அவதரித்தாள் அத்தருணத்தில் அவ்விருவர் வெயர் வையினும் உலகங்கள் நடுங்க முப்பதினாயிரவெள்ளம் அவுணர் பிறந்தார் கள் அவர்களையும்அத்தலத்தில் நிறுத்திமற்றையமண்டபங்கடோறுஞ்சென்று இயாளி புலி குதிரை மான் கரடிமுதலானமிருகங்களினதுவடிவைப்பெற்று விடியற்காலத்திற் புணர அவ்வவ்முகங்களைப்பெற்று அறுபதினாயிரவெள் ளம் அவுணர்தோன்றினர் இவ்வாறு சூரன்முதலான நான்குபிள்ளைகளையும் இரண்டுலட்சம்வெள்ளஞ்சேனைகளையும்ஓரிரவிற்பெற்றனள் கேட்டீர்களோ சவுனகாதிரிஷிகளே அகிலங்களை யுண்டாக்கவல்ல மாயைக்கு யிச்செய்கை யரிதோ அவள் வல்லபத்தினை யென்பொலிகளாற் புகழவும்போதுமோ யிவ்வாறு சூரன்முதலானவர்கள்தோற்றியதறுவாயில் இவன்பெறவிருக்கின்ற ஆயிரத்தெட் டண்டங்களினும் அளவற்ற துற் நிமித்தங்க ளுண்டாக அத்தலங்களில் அமாந்தபிராணிகள் கண்டுதிடுகிட்டு வொருபோது மில் லாத யிக்கொடிய தோற்றங்களுண்டாகுங் காரணமென்னமோ தெரிய வில்லையே யோசிக்குமிடத்து யிவைக ளென்னென்ன அனர்த்தத்துக்கேது வோவென்றுமன்நடுக்குற்றேங்கியதுபின்பு மாயை தன்னுருவைப்பெற்று நிற்கக் காசிபருந் தமது வடிவைக்கொண்டு முன்பெற்ற வின்பநலத்தினை நினைந்து நினைந்து அவளுடன்கூடிக்குலவுகின்றதறுவாயிற் சூரியனுதைய கிரியிற்றோற்றினன் அக்காட்சியெப்படிக்கிருந்ததெனில் அவ்விரவிற்பிதா வுக்கும் மாயைக்கும்நேர்ந்தசம்பவங்களைக்காணக்காமுற்று எட்டிப்பார்ப் பவனையொத்துவிளங்கியதுஉடனேயிருள்நீங்கிவெளிச்சமாகியபோதுசூரன் துணைவருடன் கலந்து திசையனைத்தும் நெருங்கிச்செவிடுபட ஆர்ப்பரிக் கின்ற அவுணவெள்ளத்தைப் போற்றிவருவதைக்கண்டு மாயைகளிக்கக்காசி பன்யிப்பெருக்கங்காமத்தினுண்டாகியதல்லமாயமென்றுஅற்புதமடைந்து பிறமித்துப்பார்த்திருக்கின்ற தந்தையைநோக்கி துணைவரோநமதுகுரவ னைச்சேர்ந்துயினிதாம்நடந்துகொள்ளவேண்டுங்காரணங்களைப்போதிக்கப் பெறவேண்டுமெனத்தெற்றிச் சிங்கமுகன் தாருகன் அடைந்தவர்ச்சேனை களை யத்தலத்தில் நிறுத்திப்போந்தனன்.

இவ்விதவெண்ணங்கொண்டுவந்த சூரபன்மன் தமையனுடன் தாய் தந்
தையரைவணங்கிக்குரவரே நாங்களினிமேல்நடந்துகொள்ளவேண்டியமார்க்
கங்களையும்அதற்கடுத்த நீதிகளையுங்கட்டளையிடுமென்றுபோற்றக்காசிபன்
மகிழ்ந்து சிரவெண்டையமணிந்தபாதங்களையுடையபிள்ளைகாள் நீங்களீடே
றத்தகுதியாகியநிச்செயமொன்றைப்போதிப்போம் அதுவென்னவென்றால்
யிதுமுதல் நீங்கள்மூவரும் அரியதவநிலையில்நிற்பீராக அதன்கிரமங்களை
வரன்முறையாகத் தெரிவிப்பேன் பெரியோர்களானவர் தேடியறியத்தக்க
பொருள்மூவகைத்தெனவேதங்களிற்சொல்லும்அஃதாவன பதிபசுபாசமாம்
இவற்றுட்பதியாவது ஈசன்பசுவாவது ஆன்மாபாசமாவதுதளையெனப்படும்
யிவை உயிர்களுக்குத்துணைக்காரணமாயிருப்பதென்றுமகத்துக்கள்சொல்லு
வார்கள் சிருஷ்டிதிதி சங்காரந் திரோபவம் அனுக்கிரகமென்னும்பஞ்ச
கிருத்தியங்களை நடாத்துங் காளகண்டமூர்த்தியானவர் அதற்குப் பதியென்று
சுருதிகளிற்பேசும் பாசபந்தமற்ற பரமனது நிச்சயங்களை யிவ்வகைத்தென்
றெவராலும் அளப்பதரிதெனப் பேரறிவாளராற்றுதிக்கப்படும் இவ்வாறே
வேதங்களும்மயங்குகின்றன அப்படித்தாகிய சிவபிரானது மங்களகுணாதி
சயங்களை யிவ்வகைத்தென்று என்பொலிகளாற்பேசப்படுவதோ ஆணவங்
காமியம் மாயையென்னும்மும்மலங்களின் துவக்கிற்பட்டு அளவிறந்தகால
மாய் அலைகின்றபிராணிகள் அனந்தமாம் அவை நல்வினைதீவினைமுயற்சியி
னாலிடைவிடாது உதித்துமாயும்இப்பிராணிகள்பூமியினும் அதைச்சூழ்ந்த
சலத்திலும் அக்கினியிலும்வாயுவிலும் ஆகாயத்திலுந்தோற்றும் இவையே
பஞ்சபூத காரணமெனப்படும் அப்பிராணிகளுக் கோரிடம் நிலையெனச்
சொல்லவுங்கூடுவதோ மக்களாயும்விலங்குகளாயும் பறவைகளாயுந்தாபரங்க
ளாயுந் திசைகளைக்காக்குந்தேவராயும் மற்றுமிரானின்றபலபிறவிபேதங்க
ளாயுமுதித்துசகலபுவனங்களையும்விளக்கும்யிகுதன்றியும் அவற்றின் பெரு
மைகளைச்சொல்லுவோம்பிள்ளைகளே கவனமாகக்கேட்பீராக ஸ்ரீ புருடர்கள்
காமவின்பத்திற்பட்டுக் கலந்தின்பமுறுமுன் னிலையிற் பெருகுஞ் சுக்கில
சுரோணிதக் கூட்டுறவினா லுருப்பெற்று சிவகடாட்சத்தினால் வளருமுன்
னிலையில் பற்பலவுருக்கள் கெற்பத்திலிடமாகவே மாய்ந்தும் பிறந்தவுட
னிறந்துஞ் சிலநாள்தங்கிமங்கியுங் காளைப்பருவத்திற் செற்றும் மூப்பின்
மடிந்தும் யிவ்வாறுமாறிமாறிவாதைப்படும்அதன் செய்கையினை யிவ்விதமெ
னச்சொல்லப்படுவதோ சூரியன்கிரணங்களிற்றோற்றும்பரமாணுக்களினும்
அதிகப்பிறவிகளைப்பெற்றதென்றுசொல்லுவோமாயினும் அதுவும்பேதமைப்
பாலதாகுஞ் செயசாலியான கூற்றுவன் கொண்டுபோகமாண்டவைகளையும்
மீளப்பிறப்பவைகளையும்ஒருபடித்தாயாவதெண்ணிமுடிவதோ [illegible]யாரா
[illegible]க்கவுணர்ச்சியையுங்கற்பையும் வீரத்தையும்பொன்னையும்[illegible]யையும்மந்

றமுண்டானவைகளனைத்தையும்பிராணிகள்மின்னலைப்போலப்பெற்று மாறு
வதைக்கணிக்குமிடத்து அலைகளிற்றோற்றும் நீர்க்குமிளியைநிகர்த்து நிலைபெ
றாமல் அழியும் அதனை யுறுதிப்பாலதாக நினைக்கப்படுவதோ இவைகளனைத்தி
னுக்கும் மேலானதாய்ச் சலனமில்லனவாய் விளங்குந் தருமமென்றொரு
பொருளிருக்கின்றது அஃது இம்மை மறுமைப் பயன்களைத்தருதியானவ
ருக்கு எளிதிற்பெறச்செய்யும் யாவருமிதனையருமையாகத் தேடப்படுவது
அதன்மகிமையைப் பேரறிவாளிகளுக்கல்லதுதெளியப்படுவதோ அத்தருமத்
தினைப்பாதுகாப்பானுயின் அன்புவிளையும் அதினால் அருளென்னும் பின்னை
யைப்பெறலாம் யிப்பேறுதவமுயற்சியினுற்கிடைக்கும் அஃது முற்றுப்
பெறுமாயின் அவ்வுயிர் சிவத்தைச்சேருதற்கையமில்லை யிதைக் கடைப்பிடி
யாக நம்பிப்போற்றினளா பிறவித்துன்பத்தினை யொழித்துகாமக்குரோத
மோகமென்னுமூவகைப் பாசத்தினையறுத்து பெறுதற்கரியபேரின்பத்தி
னைக்கிடைக்கச்செய்யும் அதன்பெருமைகளை யிவ்விதமென் றொருவராலும்
விரிக்கப்படாது யிதுவல்லாமல்சகலத்தினுக்குஞ்சிரேஷ்டமாகவிளங்குந்தவ
மென்பதொருசிறந்தநிலையுண்டுஅது மிகவும்வன்மையையுடையது இஃதன்றி
ப்பிராணிகளுக்கு உறுதியான கருமமொன்றில்லை அதுசொல்லுதற்கரியசிவ
கதியைத்தரும் ஒருவன் பாதுகாக்கவேண்டுவது அதனையேயன்றி வேறு
மொரு பொருளிருக்கின்றதோ அத்தவம் அல்லலுக்குரிய பிறவியை நீக்
கிச் சிறந்த முத்தியைத்தந்து பவுத்திரமாக்கும் யிதுதன்றியும் நினைந்த
படிக்கு யிம்மை மறுமைப்பயன்களையும் யெளிதிற்பெறச்செய்யும் ஆத
லாற் பலகாலம்வருந்திச்செய்ததவம் பரமனருளினால் இகபரசாதகங்களி
னுலுண்டாகுஞ் சிறந்த பயன்களைக் கொடுப்பதற் கேதுவாகும் இது
வல்லாமல் ஒப்பற்ற தவங்களைச்செய்து முடித்தனராயினும் சிறந்தமோட்
சத்தைப் பெற்றவர் சிலர் இலக்குமிவிலாசமான யின்ப நலங்களைப்பெற்று
வாழ்ந்தவர் சிலர் மேற்கூறிய யிருமைப்பயன்களையும் ஒருங்கெய்தப்பெற்
றவர் சிலருண்டு யிதற்குச்சில திஷ்டாந்திரங்காட்டுவோம் தமதுடல்வருந்த
மனவூக்கத்துடன் பற்பகல் அருமையாகநோற்றவரல்லரோ தேவராங்வான
நாடுகளிற் களித்திருக்கும் பேற்றைவாய்ந்தவர் யிதனைச் சொல்லவும்
வேண்டுமோகுமாரர்களே அம்மகிமைகள் உங்களுக்குத்தோற்றவில்லையோ
பத்திவயிராக்கியத்தினைக்கொண்டுசிறந்ததவத்தைமுடித்துமுத்தியினைப்பெற்
றவரது பாதங்களைச்சிந்தித்தவரை யிவ்விதப்பெருமையினையுடையவரெனப்
புகழவும்படுமோ இருமைப் பயன்களையும் வாய்த்த மெய்த்தவரல்லரோ
பிரமன் விஷ்ணுவென்னுஞ் சிறந்தபதவிகளைப் பெற்றவர் பல்லுயிர்களைக்
கொன்றழிக்கும் பூமிக்கெக்காலமும் பொறையாய் அதிக துன்பத்தைச்
செய்துமேலானதவங்களைவிரும்பிநோற்கர்தவர்யிருமைப்பயன்களும் கிட்

டாதவர்களாய் நினைத்தற்கரியபிறவித்தடுமாற்றத்தழுந்தி துக்கசாகரத்தைக் கடக்கவறியார்கள் இதனைநினைந்திரக்கமுற்று நன்னெறிகளைப்போதிக்கினும் மிப்புவியினுதித்த மனிதர் மறங்கொலைகளவுமயக்கத்தைநீக்கவறியாது துறவறத்தைமறந்துதுன்பத்திற்பட்டுயிறந்தும்பிறந்தும் யிவ்வாறலைந்துளக்காலத்தும் மோட்சவீட்டைப்பெறவறியார்கள் ஆதலாற் றவத்தினுஞ்சிறந்த பொருளொன்றுமில்லை அளவற்றசிறப்பினைவாய்ந்ததவத்தினுக்கிணையானது மில்லைதவத்தினும் அரியதொன்றில்லை இதனையோசிக்குமிடத்து அதுக்கதுவே யொப்பாம் ஆதலான்மைந்தர்காள் அறத்தைச்செய்வீர் தீயவைகளைவிலக்குவீர் சிவபிரானைக்கருதி மேலானதவத்தினைச்செய்வீர் அதல்லது செய்யத்தக்கபொருள் வேறொன்றுமில்லைசீரவாஞ்சையற்றுநோற்றவர் உலகர்புகழவாழ்ந்துதம்மையடைந்தவரைப்பாதுகாத்து காமக்குரோதலோபமதமாச்சரியமென்னுஞ் சத்துருக்களைக் கடிந்து சிறந்தபொருள்களை விரும்பி நித்தியத்தைப்பெற்றுவாழ்வார்கள் இதுது உங்களுக்கு உறுதிபெறவொருகதையினைக்கேட்பீரெனக் காசிபர் சூரபன்மனாதியருக்குச் சொல்வதாயினர்.

மார்க்கண்டப்படலம்.

ஓசவுனகாதிரிஷிகளே அச்சரித்திரங்களைவரன்முறையாகக்கேட்பீராக சமுத்திரஞ்சூழ்ந்த பூமண்டலத்திற் சகலராலும்புகழத்தக்கபிருகாரகோபுரமாடமாளிகை கூடகோபுரங்கள் துசபடங்கள்வாய்ந்து சிறந்திருக்குங்கடகமென்னும்நகரத்திற்பிரமகுலத்தில்அவதரித்து அமுதத்தினையும்நஞ்சையுமொத்து ஆடவரைமருட்டுமங்கையரதுவிழிகளென்னுங்கூரியவேல்பாய்வதினால் அவசப்பட்டுக்காமவலைத்தின்மயங்காமற் றுறவறநெறியினின்று பெறுதற்கரிய தவங்களைச்செய்து சிரேஷ்டனுயிரானின்ற சூச்சகனென்னும் பேரறிவாளனொருவனுண்டு அம்முனிவன் மில்லறத்தினைவிரும்பிபதிவிரதா சிரோமணியாகிய ஒருகன்னிகையைமணந்துவாழ்ந்திருக்கின்றதறுவாயில் அவனுக்குத் தவங்களே யுருப்பெற்றதைப்போலக் கவுசிகனென்னுங் குமாரனுதித்து வேதசாத்திரங்களைப் பூரணமாகக்கற்றபின்புகளையற்றபவக்கடலைக்கடந்து முத்தியினைப்பெறவிரும்பிபொருதடாகக்கரையிற்சேர்ந்துதேவாதிதேவனுனபரமசிவத்தைத் தியானித்தவனாய் எல்லைக்கல்லைபொத்து அசைவறநின்று சுவாசபந்தனஞ்செய்து வுலகவாழ்வைப் பித்தெனவெறுத்து ஞானானந்தப் பேரின்பசாகரத்தின்மூழ்கிப் பஞ்சாக்கரத்தைச்செபித்துக் கற்றவிருவரு

வினையிலதயகமலத்தின்கண்பொருந்தி அரியயோகசாதனையினின்று ஓவியம் போலமௌனதீட்சைவகித்துஊணுறக்கமற்று யிவ்விதசிறந்ததவத்தைச்செய்துவருகையில்மான்கடமை பன்றிமுதலியமிருகங்கள் தமதுடற்றினவுநீங்க அத்தவச்சிரேஷ்டர்திரேகத்தில்உராய்ந்துராய்ந்துபோமாயினும் அப்பரிசத்தினையெவ்வளவுந்தெரியாதவனாய்ஒப்பற்றநிஷ்டையினைச்செய்துவருகின்ற தறுவாயில்அவன்மனவுறுதிக்குத்திரிபுரதகனரானசம்புவிரங்கிக் கடாட்சித்தபடிக்குவிஷ்ணுவானவர் கருடன்மீதாரோகணித்து தேவர்சூழ்ந்து போற்றிவரச்சென்று கவுச்சிகன்தவநிலையைக்கண்டு அற்புதமடைந்துகொண்டாடிச் செந்தாமரையினையொத்த தமது திருக்கரத்தினால் அவன் திரேகத்தைத் தடவி தவக்குன்றமொத்தரிஷியே யின்றுமுதலுமக்கு மிருகண்டு வென்னும் நாமம்விளங்கக்கடவதெனத் திருவாய்மலர்ந்த தறுவாயில் கண்களை விழித்தெழுந்து கரங்களைக்கூப்பி வலம்வந்துசேவித்துப்போற்றக் கேசவன்மகிழ்ந்து தபோநிதியே சந்திரசடாதரனை சிவபிரானருளை யொருங்கெய்தப்பெற்றுப் பூர்வவினைச் சம்பந்தங்கள் நீங்கி முனிபுங்கவனாக விளங்குவையென்றாசீர்வதித்து விண்ணவர் வாழ்த்த வைகுந்தத்திலெழுந்தருளினார் பின்பு மிருகண்டுவென்னுந் தவச்சிரேஷ்டர் திரிநேத்திரதாரியாகிய பரமனருளையடைந்து மகிழ்சிறந்தவனாய் விரைந்துவந்துபிதாவைக் கண்டு பாதகமலங்களிற்சேவிக்க சந்தோஷ சாகரத்தின் மூழ்கியெடுத்து மார்பினணைத்து குமாரனே தவத்திற் பெற்றபயனைச் சொல்லுவாயென்று வினவப் பிதாமனமுருக நடந்தசரித்திரங்களை விண்ணப்பஞ்செய்தவுடன் களித்து ஐயனே உன்மரபில் யிதுவரையிலெவ ரித்தன்மைய வரங்களைப் பெற்றார்கள் ஆதலால் உனக்கரியதொன்றுமில்லை யாதலவாசிகள் பூமண்டலத்தார் விண்ணகரத்தினர் இன்பநலங்களை யனுபவித்திருக்கின்றநாக நாட்டினர் மற்றையபுவனங்களிலும் அமர்ந்தமுனிவரில் உன்னைப்போலச் சிறந்தவர்யாவரிருக்கின்றார்கள் அப்பனே நீ தோற்ற விரதமுயற்சியைக் காலகண்டமூர்த்தியல்லது மற்றெவராலறியப்படுமென்று பலவாகப் புகழு முன்னிலையில் அக்குமாரன் மரபிற் பிற்காலத்தின் ஞானவானொருபுத்திரனுதித்து எமனையும்வெல்லவிருக்கின்றதாலும் வினைப்பகையை நீக்கி யானவல்ல சிவபிரானருளினாலும் மற்றொருபாயமுதித்துப் பிள்ளையைநோக்கி உனக்கின்னும் போதிக்கவொன்றுண்டு அது ஆதிநூலாகிய வேதங்களின் துணிபாகும் மேலும் நல்லொழுக்கங்களினிற்கும் அந்தணருக்குரியதாகப் பெறவேண்டுங் கடனாகவும் யிருப்பது அதுதென்னவெனிற் பிரமசரியங்கிரகஸ்தாசிரமம்வானப்பிரஸ்தஞ்சன்னியாசத்துவமென்னுநால்வகைத்தாகும் இவைகளில் நீ தற்சமயம்பிரமசரியத்தைவகித்தவன் அன்றியுமக்கண விலுமிவையாமல் அதற்குரிய தர்மத்தினைக் குற்றமறப்பாதுகாக்கவேண்டும்

அதற்குமேல் நின்ற கிரகஸ்தாசிரமத்தினிற்பவன் உத்தம ஸ்திரீயை மணந்து
யில்லறத்தையோம்பி அதிதிபூசை முதலியதைச் செய்தற்குரிய வொழுக்
கங்களிற் றவறின்றிநடத்தவேண்டும் அதற்குமேனின்ற வானப்பிறஸ்தன்
வனத்திற்சென்று கற்புடைமனைவி வழிபட காலநியதியளவை யினித்திய
கருமங்களைமுடித்துப்பரமனைவழிபட்டுவேதாகமசாத்திரபுராணங்களையாரா
ய்ந்து சத்கருமங்களை நடாத்திவரவேண்டும் அதின்மேனின்ற சன்னியா
சத்துவம்பூண்டவன் ஓரிடத்தில் நிலைபெறுமற் பூவலம்வந்து பசிக்கொரு
போது பிச்சையேற்றுண்டு மனதையொடுக்கி யோகசாதனைகளைச்செய்து
கர்த்தன் பாதாரவிந்தநீழலிற் சேரவேண்டும் இவை வேதங்களின் துணிபாம்
அதுகளில் முர்கியதற்மத்தைத் தவறின்றி யிதுபரியந்தம் வழிபட்டுச்
சிறந்தபேற்றைப்பெற்றனை அதன்மகிமையனைத்தும் உனக்குத்தெரியுமாத
லால் விபரிக்கவேண்டுவதில்லை அதற்கடுத்த வில்லறத்திற்கு மேனிற்கும்
மிரண்டறங்களின்பெருமைகளை யிப்படித்தென் றென்மொழிகளாற் சொல்
லப்படுவதோ அவைநிற்க மேற்குறித்தவொப்பற்ற யில்லறத்தினைப் புனித
னே யினி நீவகித்து அதினிலைமைகளை வரன்முறையாகக்கோடிக்கவேண்டு
மெனத் தந்தையுரைத்ததைக்கேட்டுப் பேதமைப்பாலதாக்கும் பிறவிக்கட
லைக்கடக்கவல்ல ஞானத்தையுணர்ந்தவனுதலாற் றந்தையானவர் நானீடேறு
மார்க்கத்தை நன்றாகப் போதித்தாரென்று சரீரங்குலுங்கநகைத்து குற்ற
மற்றதவச்சிரேஷ்டரே அன்புள்ள பிள்ளையாகியவனுக்கு யிதனைப்போதி
ப்பதழகோ ஐயனே முன்னமிருக்கின்ற பாசபெந்தத்தினை நீக்க விரும்பி
யபான் மீட்டுமொருபுதிய தளையிற் கட்டுண்பேனுயிற் றுக்கசாகரத்தி
லழுந்தி வாடுவதல்லது வொப்பற்ற பரமேஸ்பரன் பாதநீழலை யெவ்வாறு
விடைக்கப்பெறுவேன் வலியற்ற முடவனொருவன் கரங்களைக் கொண்டு
தவழுமுன்னிலையில் அதற்கும் வெவ்வியபிணி நேருமாயின எவ்வாறுகடத்
தேறுவன் தேவரீர் போதித்த நிலையினிற்பேனுயின் யானும் அவனைப்
போலத் தளர்ந்துவாடவருமே சிறப்பையெய்துதற்குரிய தவத்தினல்லது
பொய்யாகிய யில்லறத்தைப்பூண்டு செனனவாதையை யொழிக்கலாமேன்
பது மெய்மாசைக்கழிக்க விருப்புற்றவொருவன் நல்லசலநிறைந்தடாக
மிருக்கச் சேறுடைய குட்டையிற்கழுகநினைந்ததையொக்கும் பிரமனுனவன்
பூமியின்கண்ணுளாநின்ற அளவற்றமகாபாதகங்கள் அனைத்தையும் ஏகமாய்ச்
சேர்த்துப்பெண்ணுருவாகப் படைத்ததன்றி வேறல்ல விது தேவரீருக்
குத்தோற்றுதலுமன்று அவர்களைமனதில் நினைப்பினும்வரும்பாதகத்தையெழு
பிறப்பினும் நீக்கப்படுவதோ அஞ்ஞானமென்கின்ற ஆதரவைப்பெற்றுஅல
மரும் ஐம்புலன்களைநடிப்பிக்கும்பூதங்கள் தத்தம் வழியின்வலிக்கப்புலம்
புகின்றனொடிபேனைமாதவொன்றுங்கற்மத்துடந்துபற்றுமாயின்னென்னசெய்

வேன் ஐயோ விக்கொடுமையெனக்கோநேரவேண்டும் மேலுமிப்புவயந
பவகாலத் துன்பக்கடலினழுந்துவதன்றிப் பிற்காலத்திலும் நவநரகாதிநர
கக்குழியிற்றள்ளியலைப்பதற்கேதுவாகியமங்கையரிடத்துவிருப்புற்றவர்களு
ருக்கு எக்காலமாயினும் மின்பமுண்டாகுவதோ நாயானது தன்பற்களின்
வும் வருந்தத் தசையற்ற எலும்பைக்கறிக்குமாயினும் அதின் மின்பச்சுவை
யினைப்பெறுமோ அவ்வாறே துன்பத்துக்கேதுவாகிய வினையின் தொடர்ச்சியி
னாற் பேரின்பத்தையனுபவிக்கின்றவரையொத்து பெண்கள்மையலிற்பட்டுச்
சிற்றின்பத்தினைமேம்பாடாகவெண்ணிக் துக்கசாகரத்தினுழ்ந்துழலுவர் மைதீ
ர்ந்தகூரியவேலையொத்துக் காதளவுமோடியவிழிகளைவாய்ந்த அரிவையரி
டத்திற் பொருந்தியமிக்கவாசையொருவன் மனதிற்படுமாயின் அதைக்கடத்
தற்கொருவகையுமுண்டோமேலும் சொல்லாது உயிரையெக்காலமும்வாதிக்
குங் கொடியநஞ்சையுண்டால் ஒருதினமும்வருத்தாமல் அந்நிமிஷத்தின்
மாய்க்கும்ஆதலால் அதைநன்காகவேசொல்லவேண்டும்பரிமளித்துக்கறுத்து
நீண்டிராநின்ற கூந்தலைச்சுகந்தபுட்பங்களுடன் அளகபாரமாகக்கொண்ட
மங்கையர் மனதில் நினைந்த வெண்ணங்களை யாவராலுமளக்கப்படுவதோ
பிறந்தநாண்முதல் விடைவிடாமற்றம்முடன் பழகியுள்ளிருக்கும் ஆன்மா
வாகிய கர்த்தனாலும் அறிதற்கரியனவாம்பேலும் அவர்கள்வசனிப்பதொன்று
உள்ளமொன்று செயலொன்றும் இவவிதமாகிய பேதைமனதைப் பெற்று
மிருந்தபாதகங்களைச் செய்யும் நாரியர்மையல்வலையிற்பட்டு மயங்குகின்ற
வரல்லரோ யிறந்தும் பிறந்தும் அலைகின்றவரியிதற்கையமுமுண்டோ ஆனால்
உலகின் அரியகற்பைவாய்ந்த மங்கையரில்லையோவெனச் சொல்லுவிராயிற்
கடவுளாக நினைத்தற்குரியதமது கொழுனன்கட்டளையினை மறாமல்நடத்து
கொள்ளவல்ல யாகையொத்தமொழியினர்சிலரிருப்பர் அதற்கொரு திஷ்
டாந்திரங்காட்டுவேன் அக்கினிப்பொறியானது உலர்ந்த கிளையிற்பற்றுமா
யிற் கனன்றுதீயையெழுப்பி தகிக்கப்படாத பச்சைமரங்களையும் வாட்டுமாறு
போலவே கற்புடையவளெனக்கருதி யொருமங்கையினையணையும்ன்பமுந்
துக்கசாகரத்திற்றள்ளும் இதுவன்றியும் பூரணச்சந்திரனை நிகர்த்து விளங்
குந்திருமுகமண்டலத்தைப் பெற்றுசொர்ணவளையல்கள் அசையுங் கரங்களை
வாய்ந்த அகலிகையாகிய கௌதமர்பத்தினியினால் இந்திரனுக்குத் தீராத
பழிபாதகநேர்ந்தது அறுது தேவரீருக்குத் தோற்றவில்லையோ அந்தச்சந்
திரனையொத்த நுதலைப்பெற்ற மங்கையர்கூட்டங்களுக் கரசியாகத்தங்கரத்
தினாற்படைத்தமான்போன்றநோக்கைவாய்ந்ததிலோத்தமையினிடத்துத்தா
மரைப்பீடத்தமர்ந்த பிரமன் மையல்கொண்டுதொடர்ந்தகாலத்திலவள் திசைக
ளெங்கும் ஓட அவன்பொருட்டு நான்முகனான தன்மையினை நாமறியாதன
வோ ஆதலால் மங்கையர் குணங்களைப் பேசவேண்டுமோவென்று [illegible]

லோகங்களினும் அளவற்றவர் யிப்பேற்றியிற்பட்டு அலைந்தவர் செய்வை
யினைச்சொல்லுவோமாயினும் முடிவெய்தப்பெறு தலைவயனைத்தும் நிற்க
யிறவித் துயிமாற்றத்தினை நீக்கவிருப்புற்ற யான் அவ்வரிவையர் செயற்
கையைப் பெற்று யில்லறத் தைவகிக்கமாட்டேன் இருதன்றியும்இரத்தின
வாரு வலயங்களணிந்து மேருவை நிகர்த்த புயங்களைவாய்ந்த இந்திரன்முத
லானவர் பெற்றிருக்குஞ் செல்வச்சிறப்பினை யொருபோதும் வேண்டேன்
இல்வாழ்க்கையென்னும் அரியசிறையினும் விழேன் மாட்சிமைப் பாலதா
கிய ஐம்புலன்களிற்பட்டுமாயும் மயக்கத்தை நீத்துச்சிறந்த தவமெனச்
சொல்லுஞ்சலனமற்ற யதார்த்தத்தினைப்பெற்று இன்பசாகரத்திற் றிளைத்து
ஆனந்தத்திருப்பேனென்று பலவாகக்குமாரன் சொல்வதைக்குச்சகன்வருந்
திக்கேட்டு யிப்பூவுலகவாசிகள் சிறந்ததாசப்புகழும் யில்லறவாழ்க்கையைக்
குற்றமென வெறுத்திகழுகின்றனன் மேலும் மறைகளின்துணிபை யால
தெண்ணியங்கீகரியாமற் றவச்சையேமுக்கியமாகக்கருதி னுனெனத்துக்கசா
கரத்திலழுந்தினவனுய்ப் புத்திரனைநோக்கித் தவசிரேஷ்டரான புலத்தியரை
நிகர்த்துச் சிறந்தவனேகேட்பாயாக வேதவிதிப்படிக்கு வேழ்விமுன்னிலை
யிற் பொற்றூலியைத்தரித்து வேட்டமங்கையைக்கலந்து குலமுறையைவழு
வின்றோம்புநிமித்தத்திற் குமாரனைப்பெற்றுவைத்தபின்பன்றோ சிறந்ததவ
த்தைச்செய்து பெறுதற்கரிய பதவியினைச் சேரவேண்டும் ஐயனே இப்புவி
யினமர்ந்தபிராணிகளை யொத்து நீ மையலிற்பட்டுமயங்கி காமவின்பத்தை
யனுபவித்திருப்பதற்கோ. யிதனைப்போதித்தனன் நமதுமரபிலிருந்தமே
லோர் நிரையத்தழுந்தி வருந்துவதை நீத்தற்பொருட்டுப் பழமையாரா
ட்டியிம்மைமறுமை யின்பநலத்தைத்தரும் புதல்வனைபெறவேண்டி உத்த
மக்கன்னியை மணஞ்செய்யக்கடவை பவழத்தினைநிகர்த்து விளங்குஞ் சிவ
ந்தவாயினையும் அழகியபாதங்களையும் வாய்ந்தசிறுவாப்புத்திரனொன்னும்வா
க்கியத்தின் பொருளினதுஉறுதியைநீவாயறமறந்ததாகக்காணுகின்றது யிச்
சிறப்பையோசித்து யில்லறவாழ்க்கையினைய னுசரித்திருப்பது நன்மார்க்க
மாகும் மேலுந்தவத்திலொழுக்கமிகுதேயாம் நீயிப்போதுதோற்றபிரமசரி
யத்தினின்றுஞ் சிறந்தசன்னியாசத்துவத்தைவகித்து யோகத்திநிற்கநினைப்
பதுயில்லறத்தையனுபவித்துவெறுக்காமல்யிச்சைமிகுத்தலைக்கநின்றவொரு
வன் ஆக்கங்கொண்டு குவிந்துநிவப்புற்றிருக்குஞ் சிகரங்கள்வாய்ந்தோங்
கியமலைச்சாரலிற்சென்று தவத்தில்நிற்கவிரும்புவதை நினைக்குமிடத்துகாம
மயக்கமேலிட்டலைக்க அதன்வயப்பட் டொருவினத்திலொழியாது பலகால
ம்வருந்தியுமன்று சகலாது மிகழத்துணிவுகொண்டதற்கொக்கும் மிரு
கன்மியுந் தருக்களினும் மிருகங்களினும் அவ்வகைத்தாகிய மற்றவைகளி
னும்வருஞ்சிறந்தபயனைக்கொள்வதற்கன்றோஅவையினைப்படைக்கிலொழி

வைப்பர் அவ்வாறேசிறந்தஇல்லறத்தினின்று நற்குமாரனைப்பெறும்பொருட்டு நீயும் உத்தமமங்கையைப்புணர்ந்து அக்கருமநிறைவேற்றிப்பின்னர் அரிய தவத்தைச்செய்யக்கடவை இந்நிலையினைமுன்னமே நினையாதவனும்பிரும்மசரி யத்தம்முதற் செய்யுங்கடனாகிய பிரமசரியத்தைப் பலகாலம் வழுவின்றி நோற்றனனாயினியாவதுஆலோசித்துபாணிக்கிரகணமுதலியசிறப்பைநடாத்தி தேவாதியருக்கு அவிர்ப்பாகம் ஆராதனைக்கிரமங்களைக்காலந்தவறிக்கொடா மல் பின்னரும் தவத்தினையேவிரும்புவது தகுதியோ இந்திரன்முதலாய புகழ யோக்கியமான தாய்ப் பழமையாகவும்பிரானின்றயில்லறத்தைப்பொய்ப்பு வின்றவர் தத்தமமர்புக்குரிய வொழுக்கங்களிற் சற்றேனும் பிசகுவராயின் சகலசெல்வங்களையும் யிகழ்ந்து மலையினுச்சியினின்றும் வீழ்ந்தவனை ப்போலவெக்காலத்தும் யீடேறவழியார் மாறிமாறி வரும்பிறவியென்னும்வலை யிற்பட்டுச்சோர்ந்து அழிவதற்குரிய துக்கசாகரத்தைக் கடக்கவல்லமை யின் அதற்கடுத்தநெறிகளை யனுஷ்டித்துப் பற்பகல் வருந்திநோற்றல்லது வினைவிற்றுறக்கப்படுவதோ ஆதலால் ஆதிதொடங்கி வழிவழிபாய்வருகின்ற உன்பெரியோர்களை யொத்து இல்லறத்தினைவகிக்கக்கடவை ஐயனே செந் தாமரைக்கண்ணனான விஷ்ணுபிரமன்முதலியதேவர் முனிவராதியர் அனை வரும் மங்கையரைத்தழுவி யில்லறத்தினை நடாத்துங்காரணமானது சிவசங் காரத்துக்குப் பின்பு பராசத்தியுடன்கலந்து சராசரப் பிரபஞ்சங்களைப் படைத்த ஆதிகர்த்தனான பரமசிவத்தினா லுண்டாயதல்லது வேறுமுண்டோ ஆதிநூலாகிய வேதாகமசாத்திரமுதலியவற்றை வரையறுக்கத்தகாயனே அக் கடவுளினுலேற்படுத்திய வரம்பினைக்கடக்கவேண்டாம் நான்போதிப்பவை யும் அவ்வாறேயென்றுவெறுக்கவேண்டாம்உலகநடையினை விலக்கவேண் டாம். வெறுப்பினுலிதுகளினின்றினையுந்துறவேண்டாம் இதற்கொருதடை யுஞ்சொல்லவேண்டாஞ் சத்தியத்தைத்துறக்கவேண்டாம். இக்கருமங்களை யனுஷ்டிப்பதினால் உனக்குக்கீர்த்தியுண்டு மேலுஞ் சில இதிகாசங்காட் டுவோம் அதுதென்னையெனின் முனிபுங்கவனுகியவசிஷ்டன் விசிருமி யையொத்த வனப்புள்ள அருந்ததியை நிமைப்போதும் பிரியாமல் உட னிருத்திச் சிறந்ததவத்தை நடாத்திவருவன் யிதனுற் பெருமையொருத்திய பூமண்டலங்களில் அவருக்கேதேதும் பழிப்புளதாயுண்டோ யாசெபத்தங் களைவென்று தவமுயற்சியிற்சிறந்த மகத்துக்கள் வெறுப்பின்றி நயந்து நாடோறும் மங்கையரைக்கூடி யின்புறினும் அரியதவநிலையில் நிற்பினும் ஞானவுணர்வைப்பெற்றுச் சிறந்ததமதுமனம்வேறுபடுவதுண்டோ அக்கினி தேவர்சாட்சியாக மணந்தகன்னியரைமருவி யில்லறநிலையைப்பெற்று அரிய தவப்பயனையும் அடைந்து யிம்மைமறுமைப்பயனையும்பெற்று இனையின்றி வாழ்வர். அவர்களுக்கியல்பொருளொன்றுமில்லை ஒப்ப [illegible]

தெய்வமாகப் பாவித்து உபசரிக்குங்கற்பமைந்த தவப்பெண்களினது
சொல்வழியின் தெய்வங்களும் மேகங்களும் நிற்குமாயின் ஆண்டிறம்பெற்ற
புனிதரான ஆடவரை அவர்களுக்கு நிகராகச் சொல்லவும்படுமோ கற்
புடைய மனைவியைக்கலந்து யில்லறத்தை முற்றிச்செய்யாமற் பவித்திர
மானதவநெறியில் நிற்பையாயின் மாயைப்பெருக்கமூடி காமமீறிதாக்கு
மியந்திற் சிருட்டிகர்த்தனுன பிரமனே பாதுகாப்பினும் விலக்கப்படுவதோ
துறந்தவர் விருப்புற்றவுண்டியைக்காலங்களிற்படைத்துவுபசரித்தும் இறந்த
பிதுர்க்களுக்குரிய திலதர்ப்பணபிண்டவகைகளை வரன்முறையாக நடாத்தி
யுஞ் சிறந்த அறங்களை வழுவின்றிமுடித்தும் விருந்தினரைப் பரிந்தழைத்
துணவுமுதலானதையளித்துப் போற்றுவதல்லது மானிடதேகமெடுத்த
திற்பெறும் அரியபயன்வேறுமுண்டோ சகலராலும்புகழும்நன்னெறிகளிற்
பிசகாத ஆடவருஞ் சுகுணங்களைப்பெற்ற யில்லாளும் மனமொருமித்து
நன்குநிற்குமவ்வறத்தைச்செய்தாலும் அதற்கடுத்தபயனைப்பெறுவர் அதெப்
படித்தெனின் உழவர் புலங்களின் விளைந்த பொருள்களின் பயனல்லது
மற்றொன்றைப் பெறுதல்போலாம் ஆதலால் நற்றவமாகியயில்லறத்தினை
முற்றிநடாத்தி காமக்குரோத லோப மதமாற்சரியமென்னுங் குற்றங்களைக்
கடிந்தபின் துடங்குந்துறவே குற்றமற்றதுறவாம் அதற்கியாதொரு யிடை
யூறும்நேராது அதனைவழுவின்றி நீசெய்து வருவையாயில் உனக்கொரு
தீங்குகளும்நேரவறியாது அச்சிறந்தநெறியைப்போற்றுவதற்கொரு மறு
மொழியும் ஆடவேண்டுவதில்லை நமதாணையென்று பலவிதங்களில்விரித்துத்
தவச்சிரேஷ்டரான பிதாபோதித்ததைக்கேட்டு இருது வேதமுதலானசாத்
திரப்பிரமாணமென்றுஞ் சற்பாபரணராகிய சிவபிரான்கட்டளையென்றுங்
கூறுகின்றனர் இனிமேலென்ன மாறுரைப்பதென நினைந்து ஆலோசித்தவ
னும் நந்தமது அருட்குரவரானவர் ஒப்பற்றவனங்களை நீங்கி மகாபாதகங்க
ளின் விழக்குறித்தாலும் அதைமுக்கியமாயெண்ணிப் பத்தியுடன்செய்வது
புத்திரனுக்குரியகடனாகும் யிதுபுதிதல்லதொண்டுதொட்டு உலகர்பாராட்டி
வருவதாகும் ஆதலால்யிக்கருமத்தைமறுக்காதுசம்மதிப்பேமெனத்துணிபு
கொண்டு கடவுளைப்போற்கருதும் பிதாவினதுவாக்கியங்களை வேதமொழி
யாகவெண்ணிச் சிரமேற்கொண்டுபோற்றுமற் றவமாகமறுத்த யகாபாத
கரும் பத்துமாதஞ்சுமந்து பெற்றபின்பு பலதுன்பங்களையும் பாதுகாத்து
உண்மையாகவளர்த்ததாய்பரிந்துரைத்ததைத்தடுத்துடதாணைத்தசண்டாளரும்
ஞானதேசிகனைப்போலத் தன்குலமுத லிடேறக்குறிப்போதித்த ஆசிரிய
னட்டகட்டளைவெண்ணமற்றிசந்தபதிதருக் நிதிலோகங்களினும்முக்
கியமாகவோதிப்போற்றும் பெருமைக்கியுடையதாய்ப் பரமனுவோதப்
பெற்ற ஆதிநூல்களினங்கும் வேதவொழுக்கங்களைத் தமக்குரிய கடமை

மறியாமற் புறநடையிற்செல்லுந் தீயரும் மற்றக்கொடியரும் பூமியின்கண் ணிருந்தவரையிற் பலராலும்மிகழத் துன்பத்திற்பட்டுழன்று கடையில் யமபடரின் பலதெண்டனைகளைச்செய்யத்துக்கசாகரத்திலழுந்திச்செந்தழலைமிக் கொதித்திருக்கும் ரௌரவாதி மகாநரகக்குழியினுழ்ந்து வருந்திடுவென்னுனு மிருப்பர் யிஃது சுருதிகளின் துணிபாகும் ஆதலாற் பிதாவாக்கியத்தை மறாமற் பரிபாலனஞ்செய்வதுகடனென நிச்சயித்தவனாய்க்குற்றமற்றதவக் குன்றம்போன்ற ஞானநிதியான குச்சகர் அழகிய பொற்பாதகமலங்களிற் றொழுது ஐயனே கோபிக்கவேண்டாங் கட்டளைப்படிக்குப் பிசகின்றிநடந்துகொள்ளக்கடவேன் ஆனால் ஒருவிண்ணப்பமுண்டு அதாவது தன்னவையைப்பத்தியுடன் வினவி அவ்வாறு நடாத்தவறியாதமனைவியுடன் கலந்து யில்லறவாழ்க்கையைச் செய்வதினும் வெவ்விய நரகக்கும்பியிலழுந்திவருந்துதல் உத்தமமாம் அத்தன்மையமகளிருடன் பொருந்திவாழும ஆடவருக்கு வேறொருகூற்றுவனும்வேண்டுமோ கொடியபிணிகளும்வேறுமுண்டோ ஆதலால் யென்னாணைகளிற்சற்றும் பிசகின்றி நடந்துகொள்ளவல்ல குணதிசயங்களை வாய்ந்த மங்கையிருப்பளாயின் அக்கன்னியை அக்கினி சாட்சியாய்மணஞ்செய்வேனெனவொருமித்துச்சொன்னவார்த்தையைக்கேட்டு குச்சகர்மகிழ்ந்தவராய் விவேகசாலியாகிய மிருகண்டுவென்னுங் குமாரனை நோக்கி அப்பனே யென்வாக்கியத்தைமறாமல் நீ கோடித்தகாரணத்தினால் யானீடேறுவதன்றியில் எனவருக்கத்தினருஞ் சிறந்தனர் அரியவிரதங்களைச் செய்து உன்னைப்பெற்றதாயுங் களிப்பினுழ்வள் தவவிரதவெக்கியங்களும் விருத்தியடையுங்காலம்நேர்ந்தது ஞானம் அன்புமுதலிய சத்கருமங்களுந் தழைக்கநின்றது வானநாட்டினர்களிப்பர் பூமண்டலவாசிகள் குறைவின்றி வாழ்வர்தேவாசனுந்தன்னரசுநீடிக்கவீறுவன் ஐயனேவுனக்கின்னும்வேண்டுவதைப் பயமற்றுக் கேட்பாயாக நீ யிப்போது குறித்தவிலக்கணங்களைந்தும்வாய்ந்து குற்றமற்றுவிளங்குங் கன்னிகையை யிப்பூவுலகமெங்கணும் ஆராய்ந்துகொண்டுவந்து உனக்களிப்பன் யிதனைச் செய்யாமற்போவேனாயிற் கலைகள்தேய்ந்தழியுஞ் சந்திரனது பிரகாசம்போலவே என்தவமும் மங்கக்கடவதென்று அரியசபதத்தினைக்குச்சகர்சொன்னவுடன்முனைந்தான் செய்த தவத்திற்கிரங்கி விஷ்ணுவெழுந்தருளிக் கடாட்சித்தமிருகண்டுவெனு நாமத்தினைப்பெற்ற குமாரனதந்தை திருவடிகளிற்பணிந்து ஒருதனையனாய் யும்பொருட்டு யிதனைவொருபொருளாயருளி நீர் தவச்சிரேஷ்டராணமுனி புங்கவரோ தேவரீருக்கரியனவாகிய கருமம் மும்மையுலகங்களினுமுண்டா ஆயினும்மின்னமுமியான்விண்ணப்பஞ்செய்வதொன்றுண்டு அதாவதுபிதாவையிழந்தவர் பெற்றதாயைப்பறிகொடுத்தவர் தமக்கையரில்லாதவர் தங்கையரைப்பெறாதவர் தமக்கு அரணாயிருக்குந்தமையனர் தம்பியருடன்பிறவாத

வர் யிவர்களிருந்தும் யிறந்கப்பெற்றவர் பெருஞ்சுற்றமில்லாதவர் புசழ
போக்கியமானசெல்வமற்றவர் நற்குடியிற்பிறவாதவர் பிணியிற்பட்டுழன்ற
தாய்தந்தையருக்குதித்தவர் காளகண்டமூர்த்தியாகிய கடவுளர் நாமத்தைப்
பெறாமல் அவராற்படைத்தமாந்தர் அவமிற்றுவாவிறந்தவர் பெயரைப்பெற்
றுச்சிறப்புற்றுத் திரியும் அலகைநாமத்தைப்படைத்தவர் யிப்பூமியின்கண்
சிறந்தோங்கிய சைவசமையத்தையல்லது அஞ்ஞான மார்கத்தைப்பெற்ற
பிலசமையப்படுகுழியிற்பட்டுழல்கின்றவர் பிணியைப்பெற்றவர் ஊமையர்
முடவர் கூனர் சதாகாலமும்புறமனையிற்செல்கின்றவர்கணிகையரைப்போல
மருட்டும் நோக்குடையவர் சுந்தரமிகுத்த காளையரைப் பலகாலும்நோக்கிக்
காமவின்பத்தைவிரும்பியிருப்பவர் வீதிவாய்தலில் எப்போதும் நிற்பவர்
நோக்குதற்குவியப்பாகவஸ்திராபரணங்கண்முதலியதுகளினால் அலங்கரித்
துத்திரிபவர்பிரமாணத்துக்கதிகரித்தவுண்டியைப்பொசிப்பவர்,தன்னைமறந்த
அதிக நித்திரைகொள்பவர் தனக்குமூதிர்ந்தவர் ஏககோத்திரத்திலுதித்தவர்
தருவிக்கு மேற்பட்டுபர்ந்தவர்குள்ளாகவிருப்பவர் பருத்த உடலைப்பெற்ற
வர் மெல்லியதிரோசத்தைவாய்ந்தவர் பார்க்கப்பிறையோசனமற்று மிகுத்துக்
கறுத்தவடிவைப்பெற்றவர் இலக்குமியைப்போலச்சொற்னகாந்தியைக்காட்
டுங் காயத்தைப்படைத்தவர் பெருமைபெற்ற பசலைபூத்தவர் தேமல்பரந்து
வெளுத்திருப்பவர் சிவந்துவிளங்கும் படிவத்தினர் இயல்பாகிய நாணத்தை
ப்பெறுதவர் ஆடவரைப்பக்காலும் புணர்வதில் யிச்சைகொண்டவர் பலகா
லும்நகைப்பவர் மெல்லியகுரலில்லாதவர் பெருத்ததொனிவிளங்கப் பேசப்
பட்டவர் தாய்தந்தையர்விதித்த கட்டளையினல்லாமல் மீறிநடப்பவர் கோப
மேலிட்டிருப்பவர் வீண்வாதாடுகின்றவர் ஒருபேதுவையுமின்றிசண்டையை
மூட்டியலைப்பவர் கூத்துமுதலான வேடிக்கையைக்காணவிருப்புற்றவர் காம
விகாரத்திற்பட்டு வருந்துகின்றவர் தேவாதிதேவரான பரமசிவத்தின்கண்
பத்தியில்லாதவர் பெரியோர்முனிவர்முதலான மேன்மக்களைச் சுலபமாயெ
ண்ணி யிகழ்பவர் தன்னுயிரைப்போல மற்ற சீவராசிகளிடத்துப் பரிவில்லா
மற்கடிகின்றவர் தமதுகுலவண்மையொழுக்கங்களைமீறித் தமது யிச்சையின்
படிசெல்பவர் அழுக்காறுடைய குணத்தைப்பெற்றவர் சிறந்தகற்புத்தன்மை
யில்லாதவர் பஞ்சேந்திரிய விஷயங்களில் அறிவைச் செல்லவொட்டாமற்
காக்கத்திறனற்றவர் ஆத்துமலாபத்தைப்போதிக்குங் குருவாதியாகியதேசி
கனை மற்றையமனிதருடன்சமமாகக்கருதி அசட்டைசெய்பவர் ஆலயமுத
லிய யிடங்களிற்குபித்திருக்கும் இலிங்கமுதலியதெய்வப்படிவங்களைக் கல்
லென்று அலட்சியமாகச்சொல்பவர் பத்துக்குமேற்பட்டவயதையுடையவர்
பிறவுடைகாலத்துக்கணித்தாகிய பருவம்பெற்றவர் மனதுக்கினியகுணமில்
லாதவர் அச்சமில்லாதமனத்தைப்பெற்றவர் யிடியைப்போல வார்த்தையாடு

இன்றவர் தாய்தந்தையர்ஒருமித்துஒருகணவனைத்தேடிக் குலமுறைப்படிக்கு மணஞ்செய்து தருவதின்முன்னந் தனக்கிச்சையாகி யவனிடத்து ஆசை கொண்டு அவனைச்சேர விரும்புறுமனதைப்பெற்றவர் தனக்கிணையாகிய வனப்பும் வடிவமு மொருவருக்கு மில்லையென விறுப்படைந்திருப்பவர் நாணமடமச்சம் பயிர்ப்பென்னுங் குணங்களைப்பெறாதவர் தாயின்வயிற்றி னின்று முதித்தகாலத்தின் விழியின்றிப் பின்பு சிலகாரணங்களினாற் பார்வை யுண்டானவர் மறுவிளங்குங் கண்களையுடையவர் படலைவாய்ந்த விழி களையுடையவர் குறிப்பினான் மெல்லச்செல்லுங்குருடர் குருட்பார்வை பெற்றவர் அசங்கியமான பூனைக்கண்ணைவாய்ந்தவர் கணப்போதிற்பலதிக்கி னுஞ் சுழலும் நோக்குடையவர்செம்பட்டமயிரையுடையவர் சுருட்டைமயி ரைப்பெற்றவர் பாலநரைவிளங்கும் அளகத்தினர் பரட்டைமயிரைப்பெற் றவர் நீண்டகூந்தலைவாய்ந்தவர் சிறுத்தமயிரைப்பெற்றவர் விரிந்த அளகத் தைக்கொண்டவர் சிவந்தபங்கியர் பூமியிற்புரளுங் கூந்தலைப்படைத்தவர் ஊறுபட்டகூந்தலைப்பெற்றவர் மிருகங்களைப்போன்று உரத்துப்பேசுங் குரலுள்ளவர்சிறுத்தகண்ணினர் நீண்டமூக்கைப்பெற்றவர்சொரந்தபுருவத்தை வாய்ந்தவர் குறியகாதைப்படைத்தவர் உயர்ந்தபற்களைப்பெற்றவர் வளைந்த கண்டத்தைக்கொண்டவர் மறுவுற்றிருக்குமுகத்தினர் தேமல்படாத அழ கிய கொங்கைகளோங்கிய மார்பையுடையவர் சிறுத்தயிடையைப்பெற்ற வர் சிலையைப்போலத்தோற்றும் வயிற்றைப்பெற்றவர் நிரோகவிலக்கணங் கள் சாத்திரப்படிக்கிராத அல்குலையுடையவர் அதரமும் உள்ளங்கையும் நகமுங்காலடிக்கீழ்ப்புறமும் அழகியசிகப்பைவாய்ந்திராதவர்மயிர்செறிந்த கால்களையுடையவர் மெல்லிய சிறகுதழைந்திருக்கும் அன்னத்தையொத்த நடையில்லாதவர் கால்விரல்பூமியிற்படாதவர் இவ்வித விலக்கணப்பழு துளைப் பெற்றமங்கையர் மணவினையிற் சேரத்தகாதவராகச் சாஸ்திரங்க ளிற்சொல்லுகின்றது அத்தன்மையினளை விரும்பேன் யிவ்விதப்பழுதுக ளொன்றேனுமில்லாதகன்னிகை யிருப்பளாயிற் றேவரீர்யிஷ்டப்படிக்குக் கலியாணஞ்செய்து யில்லறத்தில்நிற்பேன் ஆதலாற் றேமமா யாராய்ந்து கடாட்சிக்கவேண்டுமென்று வனத்திற்பர்ணசாலையினிருந்து நோற்றகவுசி கன் சொல்லக் குச்சகர்கேட்டு நகையுமுவகையும்பெற்றவனாய்க் குற்றமற்ற சிறப்பையுடைய யிப்பூவுலகின்கண்யிராநின்றநாடுநகரங்கள்முதலானவிடங் களிற் பரிசோதித்துச் சாத்திரவிதிப்படிக்கு நற்குணநற்செய்கை யிலக்கணச் சுத்தமுள்ள பதிவிரதையினைக்கொண்டுவந்து உனக்குத்தருவேன் சந்தேகிக் கவேண்டாமெனச்சொல்லிக் குமாரனை யவ்விடத்திலிருத்தி அபரஞ்சிப் பொன்னினாற்சோடித்த பதக்கத்தில் நடுநாயகமாகவைப்பதற்கு அரிய மணியொன்றைத் தேடுகின்றவனைப்போல வெய்யத்த பெண்ணொரு

ணொருத்தியை பாராய்ந்து திரிகின்றதறுவாயிற் றம்மையொத்த சில தவச் சிரேஷ்டரைச் சந்தித்துத்தன்கருத்தை யவர்களுக்குச்சொல்லி அவர்களாற் சென்னிதேசத்திற் சிறந்த அருமையமென்னும் வனத்தின் உசத்தியனென்னும் அருந்தவன்புத்திரியானவள் யிவ்விலக்கணங்களனைத்தையு மடம்பெற்றுப் பருவ மாயிருக்கின்றதாகவறிந்து அவர்களிடத்திற்சிலவுபெற்று அதிசீக்கிரமத்தில் அத்தவத்தர் ஆசிரமத்தில் வரக்கண்டவுடன் அவர் அசமுசமலர்ந் தெதிர் கொண்டுசேவிக்கத்தாமுங் கரங்களைக்கூப்பிவந்தித்து அணைத்து ஒருவருக் கொருவர் ஷேமங்களைவினவித் தமது சாலைக்கழைத்துப்போய்த் தற்பா சனத்தில் எழுந்தருளச்செய்து விதிப்படிக்குப்பூசையினைநடாத்தித் தன் பத்தினியையும் அரிதிற்பெற்றபெண்ணையுமழைத்த ஞானதேசிகனெழுந் தருளினுமொன்று அவர்களையுஞ் சேவிக்கச்செய்து பூசித்துப்போற்றித்தவக் குன்றமொத்த தேவரீர் எழுந்தருளியத்தலமும் என்குலமும்முன்னமென்ன தவஞ்செய்ததோவென்பப் பன்முறையுபசரித்து பின்பு அறுசுவை கறிவகை கள் பஞ்சகச்சாயவிதங்கள் முக்கனி தேன் பசுவினெய் திரட்டுப்பால் முத லானதுகளுடன் அமுதம்போன்ற போசனத்தைச்செய்வித்தபின்பு சுவாமி திரேகம் வருந்த பாதங்கணோகத்தொலைதூரம்அடியேனை யொருபொருளாகத் தேடிவந்தகாரியத்தைத்தயைசெய்து திருவுளம்பற்றவேண்டுமென்று துதிக் கக் குச்சகர் அவர்கள் உபசாரங்களுக்கும் ஒழுக்கங்களுக்கும் மகிழ்ந்து தவச்சிரேஷ்டரோ நீர் அரியதவவிரதங்களைச்செய்துபெற்ற பெண்கொடியை யென்குமாரனுக்கு மணஞ்செய்யக்கருதிப் பேசவந்தோமென்றசொற்செவி யின்விழுந்தவுடன் திரேகபரவசமாய்க்களித்து ஐயனே தேவாதிதேவனுண பரமசிவனது பூரணகடாட்சம்பெற்ற உமதுகுமாரனுக்கு அடியேன்பெற்ற விருத்தையைப் பாணிக்கிரணஞ்செய்துதர நான்முன்னமெத் தவஞ்செய்தே னோவென்று ஆனந்தவாரியின்மூழ்கி மனம்பூரித்துநகையுமுவகையும்பெரு கத் திருக்கலியாணத்துக் கிசைவுகொண்டு பின்னுஞ் சிலநாள் குச்சகனைத் தனதகத்திலிருத்தி யுபசரித்துவருகின்றதறுவாயில் ஒருதினந் தவச்சிரேஷ்ட னாகிய உசத்தியன்மனைவி மங்கலையனுமதியிற் குமாரத்தியாகிய விருத்தை தோழிப்பெண்களுடன்கலந்து சேற்கெண்டைமுதலிய சலசரங்கள்பாய்ந் துலவும் புனலாடிவரச்சென்று கான்யாற்றிற்குளித்துத் துணைவியருடன் அருகிற்றழைத்துவிரிந்திருக்கின்ற பூஞ்சோலையிற்சேர்ந்து அவ்விடத்திலிரா னின்ற பரிமளமிகுந்த புஷ்பவகைகளைத்தேடிப் பறித்து அவைகளைச்சூடி யும் மாலைகள்தொடுத்துமுலவியபின்பு இலக்குமியைநிகர்த்தகன்னிகையான வள் பலநட்சத்திரங்கண்மத்தியிற் பூரணச்சந்திரன் விளங்குவதுபோலப் பாங்கியர்சூழக்காலைநீங்கித் தன்னிருக்கைக்குவருந்தறுவாயின் வழிபெற்ற யானையொன்று ஒளிமிகுந்தயிடிகளைக்கக்குங் கரியமேகம்போல வீறிட்டுச்

சீறிவெவ்விய கன்ற பொறிகள்கண்களிற்சொரிவதாகப் பருத்ததிரோகத்துடன் மும்மதங்களினையும் ஆற்றினையொத்தொழுக்கிப் பனையை நிகர்த்தகையையும் நீண்டதுதிக்கையைச் சூலவிவயிரம்போல வுறுதிபெற்றகோடுகள் விளங்க உரலையொத்த கால்களைப்பெயர்த்துவைக்குந்தோறும் பற்வதங்கள் துகள் படமிதித்துப் பிரசண்டமாருதம்போல வேகமாவெதிரின்வரக்கண்டவுடன் திருப்பாற்கடலினுதித்த விஷமெதிர்ந்தகாலத்திற்றேவராதியர் மருண்டோடி யதைப்போல அம்மார்க்கத்திற்செல்லும் ஆண்டிறம்பெற்ற மனிதர் இலிற் பட்டுச்சிதறியொளிக்கவுந்தோழிப்பெண்களும்மனநடுக்குற்றுவருந்திப்பய திக்கினும் மனறந்த தறுவாயின் விருந்தையென்னுங் கன்னிகை கைகா லுதறலெடுத்து அன்னமொத்த நடையைவாய்ந்த பாங்கியைக்காணுதவளாய் யிம்மதயானை யென்னசெய்யுமோவென் றெண்ணியேங்கி யதிவேகமாகத் தானுமொருபுறத்திலோடும்போது நரகக்குழியிற்றேங்கியிருக்கும் பாவி வருக்கங்கள்போலத்தாழ்ந்த பசியபுற்றழைத்து முடித்தோற்றுதாழ்ந்திருக் கும் பாழ்பட்டகிணற்றின்வி ழுந்தழுந்திமாண்டனள் அக்காலத்திற்சுருண்ட பிடரிமயிரலையப் பறந்திருக்குமுகத்தைவாய்ந்த சிங்காசனே யெதிரில் நேர்ந்தும் மாறுகொண்டோட்ட வல்லமதயானையானது கல்லென்னும் ஆர்ப் புடன்மலயநாட்டைநோக்கிப்போயது பின்பு நிலைகெட்டோடிய மகளி ரனைவருஞ்சேர்ந்து மானைப்போற் றிகைத்துப்பார்த்துத் திரேகமெங்கும் வியர்க்கக்கூந்தல்கலைந்தலைய மனநடுங்கக் களிப்புநீங்கினவராய்ச் சுற்றினும் பார்த்து யெங்கும் மதநீர்சிந்த மேகத்தினையொத்து அதிவேகமாய்வந்த நீண்ட தந்தங்களைவாய்ந்த களிற்றினைக்காணுது சற்றுத் தேறினவர்களாய்த் தமது தோழியாகிய விருந்தையைநாடிக்காணுது பிராணனுண்டில்லை யென் னப் பெருமூச்செறிந்து அத்தடங்களெங்கும் நதியைப்போலக் கண்ணீ ரோடப் பொருமிக் கிலேசித்துச் சோர்ந்தபின்பு உயிர்பெற்றவராய்ப் பழைய புண்ணின்கண் அக்கினிபட்டு வருந்துபவரையொத்துப் புலம்பத் துடங்கிப் பெண்கள்சிகாமணியே சிறந்தவனப்புகளனைத்தினுக்குங் காரண மாகத் தோற்றமுருவைவாய்ந்தவளே நோக்குனர் கண்களுக்கு அணியா யின்றவளே பொன்னந்தாமரைப்பீடத்தமர்ந்தலட்சுமியைநிகர்த்தஅழகுள்ள வளே எங்களுக்கரசே யிவ்வனத்திலோடும்புனலிற்படிந்து வெறுத்துச்சிறந்த வான கங்கையிற்றோய்ந்து களிக்கநினைந்து துணிவுகொண்டு எங்கள்தொழு மையைமறந்துசென்றனையோ குளிர்ந்த கங்கையிலாடிப் பாதுகாத்தென் பெண்ணைக்கொடுவந்து சேர்ப்பீரெனச் சிலவுகொடுத்தனுப்பிய வுன்னரிய தாய்க்கென்னத்தைச் சொல்லப்போறேம் அடிதோழி கொலைக்களிற்றின் முனமுன்னைத் தனித்துக்காட்டிவிட்டு யிந்தப்பாழுயிரைப்போற்றவிருப் புற்றேடினேம் உன்பிதாவாகிய உசத்தியனும் நற்றாயாகிய கற்புடையமின்

லையும் வையமெங்குந் துதித்துப்போற்றுந் தவச்சிரேஷ்டராய் மாதல னைவந்தருச்சகருந் துக்கசாகரத்திலழுந்திவாடமறைந்தனையோ ஒதுணைவி யினியொருதரம் உனது செந்தாமரையைப்பழித்த முகாரவிந்தத்தையும் முத்தினங்களைநிகர்த்த தந்தபந்திகள்விளங்குந்திருநகையையுங்காட்டாயோ வென்று யிவ்வாறு பலபலவாகப்பன்னிவனமெங்கும் அதிரயிரங்கியவராய்க் கடையிற்றிரும்பிப் புகழ்தற்கரியசிறப்பையுடைய கவுசிகன் தவத்தமர்ந் திருக்குந் தெய்வீகமாகியசாலையினமர்ந்துயில்வாழ்க்கையைவழுவின்றோம்பி வருந் தேவியைக்கண்டு யிச்சேதியை வாய்குழறச்சொல்லிக் கடலுடைந் ததைப்போலக்கதறினார்கள் அதனைக்கேட்ட தாய்வயறுபற்றப் பிசைந்து தீயிற்பட்டமெழுகைப்போலமனங்கரைந்துருகி வாடிவாளைப்போல நீண்டு பரந்திருக்கும் விழிகளிற்றாரைதாரையாகச் சலம்பெருக வாய்விட்டலறித் தன்கணவன் பாதகமலங்களிற் பெருங்காற்றிற்பட்ட பனையைப்போல விழுந்து மகளுக்குச்சம்பவித்ததை விண்ணப்பஞ்செய்தவுடன் ஐம்புலச் சேட்டைகளைக்கடந்த முனிபுங்கவன் மனநெகிழ்ந்துகன்றைப்பறிகொடுத்த பசுவைப்போலக்கதறிப்புலம்பிக்கென்றெழுந்துதேவி முதலானவர் சூழ்ந் துவர அத்தலத்தைச்சேர்ந்து பிரிந்துவந்த தோழிப்பெண்களைப்பார்த்துச் சோபித்து வுங்களைத்துரத்திவந்தயானைநமது புத்திரியைக் கொன்றுபோயி ற்றோ பயப்படாமற்சொல்லக்கடவீரென்று கேழ்க்க ஐயனே புனிதமாகிய நதியின்மூழ்கியபின்பு அச்சோலையிற்சென்றுமலர்பறித்து விளையாடித்திரும் பி யிவடத்தின்வரும்போது வெவ்வியகன்றபொறிசிதறுஞ்சிவந்தகண்களைப் பெற்ற மதயானை யுருத்துவருவதைக்கண்டு மனந்ததளித்து எல்லவருங் கலந்து ஒருவர்போனவழியொருவருக்குத்தோற்றமற்பலதிக்கினும்பறந்து கொடியமதக்களிற்றினுக்குத் தப்பிக்கூடியபின்பு விருத்தையைக்காணாமல் யித்தலங்களெங்கும் ஆராய்ந்து வந்தனமென்றுதுக்கித்துச்சொன்னவுடன் பிதாவானவர் மீட்டுஞ் சோதித்துத்தோற்றமற் றியங்கிப்பார்க்குந்தறுவா யிற் றன்குமாரத்தி அணிந்த பொன்னாபரணங்க ளொன்றொன்றாக ஒரு பாதையில்விழுந்து கிடப்பதைக்கண்டு என்தாயோடியமார்க்கமிதோவென் றேங்கி யதைத்தொடர்ந்து தேவிமுதலானவர்பின்பற்றிவரப் போய்ச்சிலதூரத் திற் புதரமூடியிருக்குங்கேணியை யெதிர்ந்து வானத்திற் சென்றபெண் கொடியினது உடல்மிதப்பக்கண்டு வருந்தி விழிகளில் நீர்குதிகொண்டு பெருக அதிற்குதித்து ஆவலுடன் மகளைத்தழுவியெடுத்துக் கரையில்வைத்த வுடன் தோழியரனைவரும் மேல்விழுந்துகட்டிக்கொண்டு புலம்புமோசை யை வாடிப்பின்னால்வருகின்ற தாயானவள்கேட்டோடிவந்து அந்திவேளை யிற்சோலைகளிற்சேர்ந்தொலிக்கும் பட்சிக்கூட்டத்தினையொத்து மிகவுமல றிக் கொடியதுக்கசாகரத்திற்பட்டவளாய் அரியதவமுயற்சியினாற்றன்வயற்

நின்வந்தவதரித்தகன்னிகையைநோக்கித்தரியாதவனாய் அன்பினாலுயிர்பதைக்க வயராதுக்கித் தேம்பித் தேம்பி அழுதுவாடி மின்னற்கொடியின்மீது மற்றொரு மின்னற்படிந்ததன்மையாய் மேல்விழுந்து முகத்துடன்முகத்தை யணைத்துத்தாயே யிவ்வுலகவாழ்வையிகழ்ந்துதென்பிறதேசத்தின்விளங்கும் வைவச்சுத நகரத்திற்சேர்ந்து அச்செல்வத்தைக்கண்டு களித்திருக்கின்றனையோ ஓமகளேயென்று கண்களுடன்கண்களைப்பொத்தி முத்தமிட்டு என்னாசைப்பெண்ணே எவ்வாறுன்பிராணனை எமன்றுணிந்துகொண்டுபோனான் அக்காலத்திற்பயந்து என்னை நினைந்தனையோவெனப்புலம்புவதாய்என்னைப் பெற்றபொற்பாவாய்தமியேனைத்தனித்துவாடவிட்டுப்பிரிந்துபோகலாமோ ஆ ஆ கொடியஅறக்கடவுளேயென்னிடத்துச்சலமுண்டோ ஐயையோதெய்வமே யிவ்விடிநேருதற்கொரு யேதுவுமறியேனே கனவிலுங்கண்டதுமில்லையே சகுனப்பிழையாயினும் நேர்ந்ததுங்கிடையாதே ஆ கற்றனே முன்னம் நெடுங்காலம் புத்திரரில்லாமல் *அரியவிரதங்களாதியானபிறபலதருமங்களைப்பலகாலம்வருந்திச்செய்யப் பரமசிவகடாட்சத்தினாற்பெற்றமின்னலையொத்தவக்கொடியோ வுயிரிழந்து புறங்காட்டிற் பொன்னையொத்த திருமேனி புழுதியிற்புரளக்கிடப்பையோபிரமன்செய்கையிதுவோயானொருத்தி பெண்ணாகப்பிறந்துபெற்றபலனிதுதானோஒருமானையரிதின்வளர்த்துக் கடையிற்புலிக்கூட்டங்கள்சஞ்சரிக்கின்ற கானகத்திற்போக்கி யிழந்து அலைகின்றவனைப்போலப் பெண்ணமுதைக் கைசோரவிட்டுத் தமியளாயழுவேனோ செந்தாமரைவாசியாகிய திருவையொத்தமகளை அநியாயமாய்க்கொல்லவந்த கூரியகோடுகளைவாய்ந்த கொலைக்களற்றினுருப்பெற்றுப்போந்தது பாதகியாகிய யான்செய்த பெரும்பவத்தின்கோலமோ மதயானையென்பதுபொய்யெனச்சோருவள் தருமதேவதையித்தலத்தைவிட்டு ஆரணியங்களிற் சென்றொடுங்கியதோ சராசரப்பிரபஞ்சங்களைப் பாதுகாக்கவல்ல சர்வந்திரியாமியாகியகடவுளும் என்னிடத்திற்பொய்த்தனரோ அரியமோட்சவெல்லையைக் காட்டவல்ல சிறந்ததவமுந்தவறியதோ வரன்முறை பிசகுதற்கேதுவாகிய கலிகாலமும்நேர்ந்ததோ கொடியமதயானைதுரத்திவந்து அடர்க்கவென்மகளிறந்து யிப்பறந்தலைநிலத்தில் அழகிய திரேககாந்திமழுங்கிவாடி உயிரிழந்து கிடக்கக்காண்பேனோ என்னே என்னே யிதுவுமொரு புதுமையோவென்றிவ்வாறுபாடிப்பாடிப்புலம்பி அரற்றுகின்றதறுவாயிற்பரிமளமிகுத்த அளகபாரத்தைப்பெற்ற மாதரனைவரும்வந்துசூழ்ந்து ஐயையோ பாழுந்தெய்வமே கொடிய எமனே கொலையானையே பாதகமானவூழ்வினையே யிப்படிக்குஞ்செய்யலாமோ ஐயையோ மகளிவ்வாறிறப்பானோதாயேவுன்றிருக்கலியாணத்தைக் கண்டுமகிழவிருந்த எங்கள் வயற்றினும் அருமையாகச் சோட்டிவளர்த்தவுன் தாயின்பாழுதிரத்தினுந்தணியாத நிலைமூட்டிபரதவிக்க

விட்டுப் போகலாமோ யிவ்வாறலைவார்களென்பது உனக் கெவ்வளவுந் தோற்றவில்லையே எங்களை முற்றிலுமறந்து கண்களைவிழித்துத் தேறுதலையான வசனமொன்றுஞ்சொல்லாமல் மூடிப் பேருறக்கங்கொள்ளலாமோவென் றிவ்வாறுபதைத்துச்சோரத் தோழிப்பெண்கள்முகத்திலறைந்து அடிபாங்கி அடியிருந்தாய் ஆற்றிற்குளிக்கவோடிவாராயோ நல்ல மலர்பறித்துச் சூடி விளையாடிப் பூங்காவுக்குப்போகவெழாயே பவழம்போன்றவாயைத் திறந் தொரு வார்த்தையாவதாடாயோவென்றரற்றிச் சோபித்தார்கள் கேட்டீர்க ளாசவுனகாதிதவத்தரோ கடந்துளோர்களுங் கடப்பரோமக்கண்மேற் காத லென்பதை யிங்கனந்திஷ்டாந்திரமாகக்கண்டனம் தபோநிதியாகிய பிதா முதலானவருக்கும் அத்தினம் நேர்ந்தகிலேசத்தினையும் அழுமோசையினையுங் கண்ணீர்ப்பெருக்கினையும் யிப்படித்தோன்றும் யாவராலும்விரித்துச்சொல் லப்படுவதோ இவ்வாறனைவருமொருவர்மேலொருவர்விழுந்துபிராணனிழந் தவரையொத்து வாடிவருந்துமுன்னிலையிற் சலனமற்ற மனவுறுதியையுந் தவத்தினையும்பெற்றருச்சகன் அத்தாய்தந்தைமுதலானவர் படுந்துக்கத்தினைக் கண்டேங்கி விழிகளில் நீரைப்பெருக்கிப் புலம்புகின்ற பெண்கள்கூட்டத் தைச்சேர்ந்து யென்வருந்துகிறீர் சிலநேரத்தில் யிக்கன்னிகையை யெழுப் பித்தருவோமெனத்தேற்றி மற்றோரிடத்திற்றலையைக்கவிழ்ந்து தாரைதாரை யாகக் கண்களிற்சலமோடச்சோபிக்கின்றதந்தையையடைந்துயிதனைச்சொல் லுவார் வேதாகமசாஸ்திரபுராணமுதலியநூல்களை வாசித்தறியாதமனிதரைப் போலவுஞ் சிற்றறிவைப்பெற்ற யெளியவரையொத்தும் பஞ்சேந்திரிய நிலை கள்நீங்கிய முதியோரைநிகர்த்தும் காரணகாரியக்கிரமங்கள் தொற்றுதடால ரைப்போன்றும் ரத்தினாபரணங்களையணிந்து பேதமைப் பருவத்தினுமிந் திருக்கு மகளிருக்குச்சமதையாகவுந் துக்கசாகரத்தி னழுந்திவாடுகின்றீர் ஆழ்வினைச்சம்பந்தத்தையெவ்வளவும் யோசித்தவரல்ல பேரறிவாளனேஉம் மைப்போன்றவரேயிவ்விதமாகக்கற்றன் மாய்கையிற்கட்டுண்டுமயங்குவை யாயின் வேதநிச்சயங்களை மற்றையபாமரரா லுணரப்படுவதே ஆதலால் நீயே மனக்கவலை நீங்கி வாட்டமொழிந்து களித்திருப்பாயாக மூர்ச்சித் துணர்ச்சிபெற்றவரையொத் துன்பெண்ணை நாளைக்கெழுப்பித்தருவேன் பின்பு வேதவிதிப்படிக்கு மணமுன்னிலையில் நமது குமாரனுக்களிப்பாய் இதற்கெவ்வளவும் ஐயம்வேண்டுவதில்லை யிக்கன்னிகை காலமுடித்திறந்தவ ளல்ல யிதனைப்போத வுணர்விலுலதித்தோம் யிவ்வுடலையிப்போதே தயிலத் தொப்பரையிற்சேர்த்துப் பதனப்படுத்துவாய் நான்தவத்தைச்செய்துயிரை மீட்டுத்தருவேனென்றவுடன் தந்தையொருவகையாகத்தேறிச் சீக்கிரமாய்த் தயிலத்திற்கிடத்தி யவ்வுடலைப்போற்றியிருந்தான் இப்பாற் றவச்சிரேஷ்ட னானருச்சகன் அருகினிருக்குமொரு தடாகத்தைச்சேர்ந்து அதின்மூழ்கி

எமனைத் துதித்து தவத்திருக்குந்ததுவாயில் ரத்தினமயமா யிலகுண்டலங்களை யணிந்தமகளிர் இடுக்கிட்டஞ்சிவாட முன்னம் பிரசண்டவாயுவைப்போலப் போந்த மதயானைமீட்டு மதிவேகமாய்வந்து குச்சகர் தவஞ்செய்திருக்குந் தடாகத்தின்விழுந்து கால்களினுழக்கிப் பணமகுடம்விளங்கும் பாந் தளையொத்தசையும் வலிய துதிக்கையினுற்றழுவி நிஷ்டையிலிருந்தமுனி புங்கவனைப்பற்றி யெடுத்துப் பிடரியில்வைத்துத் தூலதூரத்திற்கொண்டு போகின்றதனுவாயிற் குற்றமற்ற குணச்சிரேஷ்டனுகுச்சகன் வாலதியை நீங்கி புணர்ச்சிபெற்று மதக்களிற்றைநோக்கி என்னைப்பற்றிச்செல்லுங் காரணமென்னையென்று போந்ததினுல் அதனாழ்வினைச் சம்பந்தத்தைக் கணிப்பதாயினர் அஃதென்னையெனின் எதிர்ந்தவரைக் கோபித்துச் சின்ன பின்னப்படக் கொல்லுங்கொடியயானைகள்சூழ் அவைகளின் மதப்பெருக் காலது காதவழிவரையிற்சமழும் வளம்பெற்ற கலிங்கதேசத்திற் குபேரனை நிகர்த்த வைசியர்வாழும் அரிபுரத்தில்வணிக்குலோத்தாரகனுய்ச் சகலசம்பத் தையும்பெற்ற தேவதத்தனென்னுஞ் செட்டிக்கு அரிய தவமுயற்சியி னுற் றருமதத்தனென்னுங்குமாரனுதித்துச் சிறந்தவனுய் யிவ்வுலகத்திலிருக்கும் மேன்மக்களும்புகழப் பல அறங்களைநடாத்திக் கீர்த்திபெற்று மெய்வழியி னின்று தற்மார்த்தகாமமென்னும் மூவகைப்பொருளையுங்கிரமப்படிக் கனு பவிக்குங் குணதிசெயங்களைவாய்ந்துதனதனுக்குமேற்பட்டபாக்கியத்தைச் சம்பாதித்துவாழுந்தருவாயிற் றய்தந்தையரிறக்க மிகவும்வருந்தி அவர்க ளுக்குரிய ஈமவிதிமுதலிய கடன்களைநடாத்திமனந்தேறிவுற்றதுணையொரு வருமின்றித் தனித்திருக்கின்றநாளில் அவன்பொருளனைத்தையுங் கொள்ளை கொள்ளக்கருதி யொருரசவாதியானவன் மொட்டந்தலையனுய்ச், சொற்ண மாதியகலப்பினுற்செய்த குண்டலங்களிருசெவிகளிலும் அசைய முப்புரி நூல் மார்பிற்புரள விபூதிமுப்பட்டையாக நுதலிற்றுலங்கக்காவிச்செட்டை யணிந்து உருத்திராட்சத் தாவடங்களசையக் கரத்திற் பிரம்புகொண்டு பஞ்சாட்சரமோதித் தெருக்கடையில்வருவதை வணிகன்கண்டு பரிந்தெதி ர்ந்து மும்முறைவலம்வந்துசேவித்து அருபியாகிய சிவபிரானைத் தெரிசித்த வனையொத்துமகிழ்ந்து யிப்புவியிலிருக்கின்றமகத்துக்களில் யிவர்மிகுந்த தவசிரேஷ்டரெனக்களித்துச் சுவாமிதேவரீர் யிச்சிறுகுடலைவிரும்பி வருவ தற் கெத்தனைபாக்கியம்பெற்றேன் உள்ளெழுந்தருளுமென் றழைத்துப் போய்ப் பூசித்து பொற்பள்ளயத்தில் அறுசுவையுண்டியைப் படைத்து அன்பாயுபசரித்து உண்டபின்பு பொற்பூடத்திருத்திக் கலவைச்சாத்தணி வித்து தாம்பூலவிலையைநல்கியபின்வணிகதிலகன் இரேகம்பூரிக்கக்கரங்களைக் கூப்பி நின்று பெரியவரோ அடியேனையொருபொருளாக நினைத்து யிவ்வி டத்திலெழுந்தருளுங்காரியம் யாதோ திருவுளம்பற்றுமீரெனப்போற்ற

அந்தப்படசன்னியாசிகுஞ்சிரிப்புகொண்டு அப்பா நீ சுகசீவியாய் அஷ்ட
அயிஸ்வரியங்களையும் பெற்றுவாழக்கடவதென்றாசீர்வதித்து வணிககுலோ
த்தாரகனே கேட்பாயாக பரமனாலுண்டுபண்ணிய சாத்திரமொன்றையரி
திற்பெற்றேன் அதையாவருக்கும் போதிக்கப்பட்டதன்று குருபத்தி விசு
வாசம்விளங்கும்புண்ணியவான்களுக்குஉபதேசிக்கத்தக்கதாயிதற்குப் பாத்
திரவான்கள்கிடையாமற்றேசமெங்குமாராய்ந்துகடையில் யித்தலத்திற் பரி
சுத்தமனதையுடையவுன்னைக்கண்டவுடன் அப்பேற்றினுக்குரியவனென நிச்
சயித்தோம் இஃதன்றியுஞ் சிவபிரானுண்மையாகப்படைத்த இரதச்சுன்னை
யிருக்கின்றது அதினால் வேண்டியபொன்னைச் செய்வோம் அதுவும்எமக்
கரியதன்று அதினும் அரிதாயுலகத்தில்விளங்காத பலவித்தைகளைக் குரு
கடாட்சத்தினாற்பெற்றிருப்போம் இவைகளின் மகிமைகள் விரதமாதவ
ரல்லது மற்றொருவராற்கணிக்கப்படுவதோ காரிரும்பைநாகமாக்குவோம்
மீட்டுமதனை யுலைபெறுமாத்துடையபொன்செய்வோஞ் சொர்ணமயமான
மேருவையும் வெள்ளிக்குன்றமாகிய கயிலாசத்தையுந் திஷ்டாந்திரமாகப்
பார்க்கக்காட்டுவோம் யிதுநமக்கரியனவோ காரீயத்தையும் பித்தளையையுஞ்
சொக்கவெள்ளியாக்கவல்லோம் யிருதன்றியும் வங்கத்தை அபரஞ்சிசெய்ய
வல்லோம்மேலுந்தகுந்தவர்களுக்கெளிதில்அவைசித்திக்கவுணர்த்தவல்லோம்
ஆயினும்உலகரிசமூம்வஞ்சகருக்கு குருவின்மொழிப்படிக்கி யிச்சித்துகளைக்
காட்டவும்போதிக்கவுமாட்டோம் இரும்பிற்செம்புண்டாக்குவோம் நயத்
தையும் அவ்வாறேபெறச்செய்வோம் வேண்டுமாயின் அளவற்றபுவனங்களை
யும் அண்டங்களையும் நிமைப்போதிற் பொன்மயமாக்கிவிடுவோம் அவை
முதலாகமலைறக்கநினைந்தால் கணத்திலொடுங்கச்செய்யவும் வல்லோம் ஒன்
றைக்கோடியாக்குந்திறமுண்டு கோடியிருக்குமாயிற்கோடாகோடியாக்கிக்
குன்றுகளைப்போலக் குவிக்குந் திறம்பெறுவோம் இவ்வித மகிமைகளை
யுடையயாம் யிதுவரையிலொருவருக்கு மனுக்கிரகஞ்செய்ததில்லை நீசுகுண
னாதலாலுனக்கிஷ்டமாயளிக்கவிருக்கின்றனம் ஆகையாலுன்னிடத்திருக்
கின்றபொருளனைத்தையுந்தருவையாயின் உன் மனங்களிக்கச் சிலநேரத்தி
லித்தவிசாலமானமாளிகையினிடங்கொள்ளாமற் சொர்ணக்குவைகளாய்நிரப்
புவோம் யினி வியாபாரத்தில்வருந்தாமற் சகலசெல்வங்களையுமனுபவித்துத்
தானதருமங்களைச்செய்து குபேரனும்ஆசைகொள்ள வாழ்வையெனப்போ
தித்தவஞ்சகன் சொற்களையுறுதியாகநம்பிச்செல்வமென்னுமாசைதூண்டச்
சேவித்து சுவாமிகள் அடியேனிடத்துக் கிருபையுற்றிதனையருளியது நானீ
டேறுங்காலநேர்ந்தது சற்றுநேரத்திற் சேகரித்து வருவேனென்றோடிப்
பாட்டன்முதற்றேடிவைத்த பிதுரார்ச்சனையையுந் தான் அரிதிற்சம்பாதித்த
பொன்னையும் பேழைகளினிலைத்துவைத்திருந்த வெள்ளி பொன் நகை

களையும அதிசீக்கிரமாய்வாரிவந்து எதிரிற்குவித்தான் அதுகளை வாதியான
வன் சுல்பமாகப்பாத்து மற்றப்பொருளையுங் கிறகிக்க வெண்ணினவனாய்
வணிகர்திலகனே நீபடைத்த செல்வமிவ்வளவுதானோ ஓகோவென் றிகழ்ச்சி
யாகப்பேசிக் கரங்களைத்தட்டி அந்தியில் நட்சத்திரங்கள்தோற்றம்போலப்
பற்கள்விளங்கச் சரீரங்குலுங்க நகைத்து நீ பெரிதாய்நினைந்துசேர்த்தவிப்
பொருள் நமதுவிஞ்சையின் திறத்துக்குயிம்மியளவும்போதாது நாம்மூ
சையில் வைத்துருக்குமுன்னிலையிற் சிந்துகின்றஅவ்வளவுங்காணாது அப்பா
நம்முடன் திரிவையாயில் அளவற்றதனத்தை தருவோம் வருவாயென்றெ
ழுகின்றவனைப்போற்காட்ட வணிகன்வெருவி சுவாமிகோபிக்க வேண்டாநீ
தேவரீர்குறித்தபொருளளவைக்குச் சரியாகயிதோதருகின்றனன் தயைசெய்
திருந்தருளுமென் றிருத்திப்போய்த் தானணிந்தது தவிர மற்ற ஆடையே
முதலாய்விலைபெற்றநவரத்தினங்களையும்பாரித்தநகைகளையுஞ்சாக்குகளையும்
பண்டசாலைகள் பணைகள் வீடுகள் கடைகள் ஏவலர்முதலாகவுண்டாயதியாய்
விற்பனைசெய்துபணமாக்கிக் களிப்பினுற் றலையின்மண்ணைவாரிப்போட்டுக்
கொள்ளும் மதவெறிகொண்ட யானையைப் போலவே வணிகன்மயங்கி
புலகினில்லாதபாக்கியவானுவோமென்னுங் களிப்பினுற் றருமம்நடாத்துவ
தற்கேற்படுத்திய சத்திரங்கள் மானியங்களையும் விலைக்குமாறித்தருமதத்த
மென்னும்பெயரைப்புவியில்நாட்டினவனும்யிவ்விதமாகச்சேகரித்தபொரு
ளனைத்தையுந் தலையிலுந்தோளிலுங் கைகளிலுஞ் சுமந்துவந்து வஞ்சகன்
காணச்சொரிந்துகரங்களைக்கூப்பிநிற்கக்கண்டுஉன்னைப்போலமனம்பழுத்த
அன்பனையெங்குங் கண்டதுமில்லை யிதுவரையிற் கேட்டதுமில்லையென்று
மகிழ்ந்து குருகடாட்சிப்பாரொன்று ஆசீர்வதித்து எதிரிலிருக்குந் திரவிய
மனத்தையுஞ் சேர்த்தெடுத்து உருக்கவெத்தனித்தவனாய்த் தீமூட்டிப்
பொன்முழுதுமொரு கட்டியாக்கி அதற்கிரட்டியிடைகொண்ட காந்தக்கல்
லொன்றைத்தருவித்து ரசத்தையுஞ்சேர்த்து பின்பு வணிகன் பிரமிக்கத்தக்
கதாகப்பொற்கட்டிமுழுதும் மூலிகைச்சாற்றினுரைத்து குருவாக்கிஅத்தொ
ய்லையிற்சிறிது மேற்சொல்லிய காந்தக்கல்வலிபெறப் பூசியுருட்டியவுடன்
பருத்தமூசையொன்றைப் பிடித்து கக்கத்திற்செருங்கும் பையிலிருக்குமரு
ந்திற்கொஞ்சமெடுத்து அதனடியிற்றெறித்துக் காந்தத்தையும்வைத்துமண்
ணை யப்பிச்சீர்செய்தவுடன் மற்றதெய்வையை வேறொன்றிற்சேர்த்து அதற்
கும் மண்தடவும்வேகத்துடன் குழியொன்றையுமிட்டு அவைகளின்மீது ம
ண்சீலைசாத்தித் தீமூட்டி வணிகனுக்குத் தோற்றாமல் அதின்மருங்கிற்
பொற்குகையைமறைத்து மற்றதையும்அக்கினியினிடத்தில்வைத்துமாறிமாறி
நாற்றெட்டுப்புடமாணவுடன் சோதித்து முழுமாற்றுவந்தது வாரிகொட்
சத்தினுற் பழுத்துப்போம் அதற்குள்ளாக நீ பயங்கவேண்டாமென்று வணி

கனைத்தேற்றி யினிபதலப்படுத்தவேணுங் காற்றசைவற்றவிடத்தைக் காட் டென்று வஞ்சகன்சொல்வதைவணிகன் நம்பி சேமமாயிருக்கும் அறை யொன்றைத்திறந்துவிட்டான் அதில்வாதிபிறவேசித்து குறியகட்டகளைவிதி ப்படிக்கடுக்கிச் சூரணவனை ஈமவிதிப்படிக்குக் கொளுத்திய அக்கினியைய ழைப்பித்துத் தீமூட்டிவராகியைக்கூவி ஆவாகனஞ்செய்து மதுமாம்சாதிக ளைப்படைத்துப்பூசித்து வணிகனுக்கும் பிரசாதங்கொடுத்து மயக்கி அவன் கண்காணமேற்சொல்லியதீயைக்கொண்டு அனல்மூட்டி மற்றதந்திரங்களைச் செய்துவரும்போது யிவையனைத்தையுங்கண்ட வணிகன் களிப்பினுல் மன வெழுச்சிபெற்று விழிகளிலானந்தவாரிபெருக வுயிர்தத்தளிக்கச் சரீரம்பூரித் துவெப்பத்தினுற் சலதாரையாய் வியர்க்க வூமையைப் போல வாயைச்சு ப்பிக்கொண்டு ஒருவார்த்தையுமாடினவனுமல்ல அவடம்விட்டுப் பெயர்ந்த வனுமல்ல பக்கத்தில் மரம்போலநின்றனன் அவன்பட்டபாட்டைச்சவுனகாதி ரிஷிகளே யொருவராற்சொல்லப்படுவதோயிவ்விதமாகப் பரவசப்பட்டிருப் பதை வாதிகண்டு யிதுதருணமென்றெண்ணிப் பாதகனுனவன் போன குகையைச்சூதயெடுத்துமேற்போர்வையிற்பதலப்படுத்திஅதைப்போலவே பக்கத்திற் சாக்கிறதைசெய்திருப்பதைச் சீக்கிரமாய் அதற்குப் பதிலாக வைத்துவணிகருலதீபமான தனதத்தனேபத்தியாய்யிக்குகைகளையுன்கையினு லெடுத்து உனதிஷ்டதேவதையை வழிபட்டுப்போற்றித் தழலினிடத்து வையென்றவுடன் அவ்வாறேசெய்தான் பின்பு விதிப்படிக்கு அதற்குரிய தேவதைகளை மந்திரபூர்வகமாய்க்கூவி விறகுகளையிட்டுத் திக்குபந்தனமுத லானகிரிகைகளைமுடித்தவுடன் ஒருதந்திரயுத்தியையெண்ணியிதனைச்சொல்லு வான் ஓய்வணிகர்பெருமானேசரக்கினுஞ்சிலநேரத்தில்முற்றிலும்பழுத்து விடும் அதற்குமுன் நீசெய்யவேண்டுவ தென்னவென்றால் சலபானமுத லாக யாதினையுமருந்தாமலும் ஒருவருடன்பேசாமலும்பெண்களைமனதினும் நினையாமலும் அன்னியனைக்கண்ணெடுத்துப்பாராமலுங் கபாடபத்தனஞ் செய்துகொண்டு குற்றமற்றகுணசம்பன்னனே நம்மைக்குருபாவனையாகக் கொண்டு யிடைவிடாமற்தியானித்து மூன்றுதினபரியந்தம் யிராப்பகலை யெப்போதும் யிவ்விடத்தினை நிமைப்போதும்விட்டுப்பிரியாமற் போற்றி யிருக்கக்கடவை யிதின்மத்தியில் யிதுமுற்றுப்பெறப்பரிமளநெய்திமிர்ந் தலங்கரித்திருக்குஞ் சடைகள்விளங்காநின்ற பத்திரகாளி சன்னிதானத்தில் ஆகமவிதிப்படிக் கொருவேள்வியை நடாத்தவேண்டும் அதையும் நாம் போயிருந்துகிரமமாகமுடித்து யின்றையநான்காவதுதினம் பிருதகாலையில் யிவ்விடம்வருவோம்அத்தருணத்தில்வேண்டுந் தூபதீபநைவேத்தியங்களைச் சம்பாதித்துப் பதலமாகவைப்பையாக வணிகர் அரசே யினியுனக்கொரு குறைவுமில்லைச் சகலராலும் பூசிக்கவாழ்வாயென்று வஞ்சகன்சொல்லஅதனை

நம்பி மகாபாக்கியமவ்வாறே செய்யக்கடவேன் தேவரீரும் நிச்சயித்த பூசையைக் காளிக்குப் பிரியாகச்செய்துவருமென்று மும்முறைவணங்கி யனுப்பிப் பொருள்முற்றிலுமிழந்தவணிகன் அக்குகையினைப்போற்றியிருந்தான் யிப்பாற்கரவடமனைதைப்பெற்றவாதியானவன் பொன்னைக்கொண்டு அதிவேகமாவொருநாழிகையிற் காதவழியாகப்பறந்து சிலதூரங்கடந்தவுடன் அவ்வேடத்தை மாற்றி வேறொருதேசத்தையடைந்து மறைந்திருந்தான் இது நிற்கவணிகன் அவன் விதித்தவலின்படிக்குமுப்பகல்போற்றினான்காவது தினம் நியமித்தகாலஞ்சென்றதாற்பேரறிவாளரானதபசிகுறித்தகாலங்கடந்தும்யிதுபரியந்தம்வரக்காணோம் யிது அதிசயமாயிருக்கின்றது அவர்சொற்றவிருவாரோவென்று மனந்தளர்ந்து சகலராலும்புகழ்ந்துபூசிக்கும்மகிமையினையுடையபத்திரகாளி ஆலயத்திற்சென்று முற்றுநாடிக்காணுமற் பட்டினமெங்குந்தேடியலைந்து மனமயங்கிப்பித்தனுய்வாடித் திரும்பி மனையின் வந்து கரவடன்வைத்தகுகையையெடுத்து உடைத்து யிரும்பாகக்கண்டு குற்றமற்ற மனதைப்பெற்றவணிகன் யிது மாயவஞ்சகமென்றறிந்தவுடன் மதிமயங்கிக்கரத்திலிருந்ததை நழுகவிட்டு அதுவிழுவதின்முன்னந்தானும் நிலத்தின்மறிந்து பொருள்நிலமுதலானதனைத்தையுமிழந்தவாட்டமுங் காலமும் குறுகியதாற்றனதத்தமென்னும் வணிகன் உயிரிழந்து விண்ணகத்தைச்சேர்ந்துந் தருமத்தைவிற்பனைசெய்த கொடியகாரணத்தினால் அப்பாதகன் மதக்களிருக அவதரித்துப் பூர்வசம்பவங்களொன்றையுமறியாமல் யிதனைச்செய்தானென்று போதவுணர் விஞலறிந்தகுச்சகன் யிப்பவத்தைச் சிவகடாட்சத்தினுல் யிந்நிமிஷத்திலிமாற்றுவனெனத்துணிவுகொண்டவனாய்த் தாம் ஆதியிற் றவனிலையினின்றகாலத்தொருதினஞ்செய்தவிரதபலத்தை யக்களிற்றினுக்கு மனோவாக்கொருமித்து தத்தஞ்செய்தமாத்திரத்திற் சூரியன் முன்பனியைப்போல அப்பாதகம் நசித்துச் செப்படிவித்தையைநிகர்த்து அவ்வுருவமாறிச்சகலரும்புகழ்தற்கரியசுந்தரமுள்ள தேவவுருப்பெற்றுநின்றான் அக்காலத்தில் வானவர் தேவதுந்துமியாதியான பஞ்சவாத்தியங்களையும்முழக்கிக் கற்பகப்புட்பமாரியைப்பொழிந்துவாழ்த்த யிந்திரவிமானமொன்றிறங்கியது தனதத்தனும் அதின்மீது யிந்திரவோலக்கமாய் ஆரோகணித்ததறுவாயில் ரத்தினுபரணபூஷிதைகளாகிய அரம்பாஸ்திரீகளனைவருமவர் சூழ்ந்து வெண்சாமரைகள் ஆலவட்டங்களசைக்க தேவகன்னியர்நடிக்க விண்ணவராசீர்வதித்தெதிர்கொள்ள யிவ்விதசம்பிரமகாலத்திற்றனதத்தனுவன்னுரேதயத்தை வெளியினளித்த தேசிகாரணகுச்சகர்பாதாரவிந்தங்களைக் குவித்து நியானித்துக் கரங்களைக்கூப்பிவந்திக்க அதைக்கண்டதவச்சிரேஷ்டராகுந் தருமசீலனிடத்துங் கிருபாநோக்கம்பாலித்தனர் தேவவுருப்பெற்ற வணிகன் அவனை நோக்கிவாயின்வந்தவந்தபலவிதங்களாகப்போற்றிவணங்கி

சுவாமி நீக்குதற்கரியவல்வினையைப்போக்கி நற்கதிதந்தாண்டீர் உமதுகடா
ட்சவீட்சண்ணியத்தினுற்றேவனும் அவ்வாழ்வினிருக்கப்போகின்றனனெனச்
சிலவுபெற்றுப் பொன்னுலகையடைந்தான் அதன்பின்பு குச்சகர் பழைய
படியே நினைத்தற்கரியதவத்தைச்செய்யத் தருமனிரங்கி எமபடாள்சூழ்ந்து
போற்றக் கடாவாகனத்தினெழுந்தருளிக் காமம்வெகுளிமயக்கமென்னும்
முப்பகைகளைவென்ற முனிபுங்கவனே யுன்தவநிலையுறுதிக்கு மெச்சினேம் நாம்
நம்மாலாகவேண்டுவதைக் கேளுந் தருவோமென்றருள அவர்பாதங்களிற்
பணிந்துபோற்றி சுவாமிதவக்குன்றமன்னகீர்த்திபெற்றவுசத்தியன் பயந்த
பெண்கொடியை அடியேன்குமாரனுக்கு மணஞ்செய்ய நிச்சயித்தபின்பு
நேத்திரத்தினம் அவமிருத்தியாயிறந்தனள் தேவரீர் கிருபையுற்றுப் பழைய
படிக்கு உயிருதவிரட்சிக்கவேண்டுமெனப்போற்ற அதற்கிசைந்தவராய்ப்
பக்கத்திநின்றதூதனைநோக்கி முந்தியதினம்போந்த அக்கன்னிகையினது
பிராணனையதிசீக்கிரமத்திற்கொண்டுவந்துசேர்ப்பையாகவென்று கட்டளையி
ட்டுத்தவத்தனைவாழ்த்தித் தமதுபதியையடைந்தார் அவர்உத்திரவின்படியே
சாரணனேடியவ்வுயிரைத்தேடிநொடிப்போதில்வாடியிருக்குமுடலிற் கூட்
டியவுடன்சடமாயிருந்தவள்உணர்ச்சிபெற்றுச்சற்றுமூக்கசைவுகொண்டுகால்
கன்றுடிக்க மார்பிற்பதைப்புண்டாய்த் திருமுகமண்டலந்துலங்கிப்பூரணச்
சந்திரனையொத்துவிளங்க வாட்டத்தினுற்றுசமுண்டாய்க்கரங்களைத்தூக்கிச்
சைகைகாட்டிப்பசியமூங்கிலை நிகர்த்த தோள்கள்பூரிக்கக்கண்களைவிழித்து
நித்திரைசெய்துணர்ந்தவளையொத்துக் குதித்தெழுந்தாள் அப்போதுசகல
ருங்களித்துத் தேனைவண்டினங்கள்மொய்த்ததைப்போலச் சூழ்ந்ததருவா
யிற்பெற்றதாயானவள்மேல்விழுந்துகுமாரத்தியை ஆவலுடன்வாரியெடுத்து
மார்பினிறுகத்தழுவித்தழுவித்தாயே யிதுவரையில்யாமெல்லவரும்வருந்த
வெவ்விடத்திற் சென்றனையென்றிரங்கிமுகத்தூடன் முகத்தைச்சேர்த்தும்
முத்தமிட்டுங் கூந்தலைக்கோதிமுடித்தும் உடையைத்திருத்தியும் முத்
தாடும்போது பிதாவோடிவந்துபரிவாகப்பெண்ணைஏந்தித்தோளினும்மார்
பினும் பலகாலணைத்துமுதுகைத்தடவியுச்சியையடிக்கடிமோந்து மடியில்
வைத்தவனும் எமது ஞானதேசிகனுகவுங் கடவுளாகவுந் தவப்பயனுகவு
மெழுந்தருளிய ஆசிரியன் நேத்திரத்தினமருளியவாறே அரியதவத்தைச்
செய்து யிவளைப்பிழைப்பித்தாரென்று சகலருமறியச்சொன்னதைச் சூழ்ந்
திருந்தசுற்றமுதலானவர்கேட்டுஅற்புதமடைந்துகளித்திருக்குந்தருவாயில்
நற்குணநிசெயங்களில் உலகமாதாவாகிய பார்பதியாரைப்போன்றும் வனப்
பிற்செல்வனுயிராகிய லட்சுமிதேவியை நிகர்த்துமிராநின்ற மகளினிட
முகத்தைநோக்கி அம்மாநேத்திரதினந் தோழிகளைக்கலந்து யிவ்விடம்வந்த
நீம் பிறத்தவிதமும்மீட்டுமெழுந்தவிஸ்தாரங்களையும்வரன்முறையாகப்

பவழமொத்தவாயைத்திறந்து காதுகுளிரச் சொல்வாயென்ற வாக்கியத்தை கடகங்கணங்களை யணிந்தபொற்பாவையன்னவள்கேட்டுக்கிள்ளையைநிகர்த் தமழலைச்சொற்களினால் தான் தாயினிடத்துச் சிலவுபெற்றுப் பலதோழிப் பெண்களுடன் போந்ததுஞ்சலப்பெருக்கையுடைய காளியாற்றில் அவர்க ளுடனாடியதுஞ் சோலையிற்சென்று மலர்பறித்துத்திரும்புங்காலையின் மத யானை துரத்தியதும் அதைக்கண்டுபெண்கள்கலைந்தோடியதும் தானொருத்தி யாகத்தனித்து அதிவேகமாய்ச்செல்லும்போது காலிடறிக்கிணற்றில் வீழ்ந் திறந்ததுந் தென்தேசத்திற்றன்னைவைத்திருந்தசீரும் மறுபடியும் பழைய படிவந்ததும் பாந்தமாகச்சொல்லத்தெரிந்த பிதாமுதற்சகலருஞ்சந்தோஷ சாகரத்தின்மூழ்கிக் களித்திருக்கின்றதறுவாயிற்குற்றமற்றருணைக்குன்றன்ன குச்சகன்கொடியசூலத்தைத்தாங்கிய எமதருமராசனருளைப்பெற்றுத்திரும் பிவருவதைக்கண்டவுடன் அமுதத்தைத்தேவரெதிர்ந்ததைப்போல உசத்தி யனுந்தேவியும் அவராலுய்யப்பெற்றபெண்கொடியு மற்றையரு மெதிர் கொண்டுவலம்வந்துபாதங்களிற்சேவித்துப்போற்றஅவர்களிடத்துக்கிருபா நோக்கம்பாலித்ததறுவாயில் உசத்தியன்கரங்களைக்கூப்பிச்சுவாமி அடியே னுயிரையும் பெருஞ்சுற்றத்தினது பிராணனையும் யில்லறத்துக்கியல்பாக நேர்ந்ததேவியினது ஆன்மாவையும்யித்தோழியர்முதலானவர் ஆவியையுஞ் சர்வசங்காரகாலம்போல மாளாமற் பாதுகாத்தருளத் தவமுயற்சியினாற் பெற்ற பெண்ணமுதி னான்மாவைத் தந்தருளினீர் குரவனே சமுத்திரஞ் சூழ்ந்த சராசரப் பிறபஞ்சங்களனைத்தையும் பெற்றுக் காத்தழிக்குஞ்சிவ பிரான்தேவரீரோவென்றென்னுள்ளத்தி னிச்சயமாகக்கொண்டதால் இச்செ ய்கை அடிகளுக்கரியனவோ ஈதொருபொருளோ அல்லது அதிசயமோ தமதுமகத்துவத்தையும் மனத்தூய்மையையும் யாவராற் கணிக்கப்படும் உமது திருக்குமாரனாகிய கவுசிகனென்னுந்தபோதனுக்கு அடியேனரிய தவத்திற்பெற்ற விருத்தையைப்பேசிக்கொள்ள வெழுந்தருளினீரோ அல் லது கூற்றுவன்கொண்டுபோகும் உயிரைத்திருப்பித்தந்து அவளுக்கிருந்த ஆபத்தினைநீக்கி எங்களையும் ஆட்கொள்ளத்தான் வந்தீரோ மறையாமற் சொல்லுமையாவென்று இவ்வாறு பலவுபசாரவார்த்தைகளையாடி அவரை யழைத்துக்கொண்டு மற்றையருடன் தமது பர்ணசாலையைச்சேர்ந்து குச கனைவழிபட்டுச்சிலநாள்சென்றபின்பு ஒருதினங்குரவனைவணங்கிச் சுவாமி தேவரீர்தயைசெய்துகுமாரனையிட்டுவந்துசகலருங்களிக்கவென்பெண்ணைத் திருமணஞ்செய்வித்துக் கொண்டுபோகவேண்டுமெனப்போற்றச் சம்மதித் துச்சென்று கவுசிகனென்னும்புத்திரனை யழைத்துவந்தவுடன் உசத்தியன் தன்குமாரத்தியாகிய விருத்தையென்னுங் கன்னிகையைத் திதிவாரயோக கரண நட்சத்திரமுதலானவைகளமைந்த சுபமுகூர்த்தத்தினத்திற்றேவர் முனி

வர் அக்கினிசாட்சியாய் வேதவிதிப்படிக்குத் திருக்கலியாணமுன்னிலையிற் றத்தஞ்செய்யப்பெற்றுச் சிலநாள் அவ்விடத்திற் றங்கியபின்பு மாதுலனிடத் திற்சிலவுபெற்றுத் தந்தையுடன் பழையயிருக்கையைச்சேர்ந்து தேவியுந் தானும் உயிருமுடலும்போல அன்பினொடொருமித்து யிறையளவும்மனங் கோணாமல் தேவிவழிபடக்களித்துப்பலநாள்யில்லறத்தை நடாத்திவருவதைத் தந்தைகண்டு களித்து மனக்கவலையொழிந்தவனாய்ப் புதல்வனையும் மருமி யையும் அவ்வனத்தில் நிறுத்தித் தான் வடபுறத்திற்றவஞ்செய்யச்சென்றனன் பின்பு புனிதனாகவுச்சிகன் தவமுயற்சியினாலுங் கற்புத்தன்மைவாய்ந்தபத் தினியினது விரதமுக்கியத்தினாலும் பூவுலகவாசிகள் புகழத்தக்கசிரேஷ்ட னும் அரியவடிவைப்பெற்ற மிருகண்டென்னும் புத்திரனுதித்து ஆறுவயது நிறைந்தவுடன் பிரமசரியம்விளங்கப் பூணூற்கலியாணமுடித்து வேதா கமசாத்திரபுராணமுதலான வைதீகநெறிகளை வரையறப்போதித்துப் பிதா வைப்போலவே தாமுந்தவத்தைமுடித்துப் பரமன்றிருவடிநீழலின்வாழும் மோட்சத்தைவிரும்பி மேருச்சாரலிற்சென்றான் இப்பாற்பிள்ளையானவன் வரன்முறைப்படிக்கு முதற்செய்யும் பிரமசரியத்தைச் சிலநாளனுசரித்த பின்பு வேதவிதிப்படிக்கு யிரண்டாவது யில்லறத்தையோம்பக்கருதி அதற் குரிய குணவதியான கன்னிகையையாராய்ந்து முற்கலரிஷி புத்திரியாகிய மருத்துவதியினது நல்லொழுக்கவிலக்கணங்களைக்கேள்விப்பட்டு அவருடன் வார்த்தையாடி வேதவிதிப்படிக்குத்தேவர் முனிவர் அக்கினிசாட்சியாகமண ந்து கிரகஸ்தாசிரமத்தை வான்முறையாக நடாத்திவருகின்றநாளிற்புத்திர ரின்றிவருந்திச் சுற்றமுந்துணைவியுந் துடர்ந்து வாக்காசிப்பதியையடைந்து முன்னந் தேவர்கடைந்தமுதம்பெற்ற பாற்கடலையொத்துவெளுத்துமதுர மாகியசலப்பெருக்கையுடைய கங்கையின்மூழ்கியபின் தவச்சிரேஷ்டராகி யான புண்ணியவான்கள்நெருங்கியிருக்கும் விசாலமான வீதியைக்கடந்து பொன்மயமாயோங்கிப் பரந்திருக்கும் பிருகாரகோபுர மண்டபமுதலிய வலங்காரங்களினால்விளங்குந் திருமணிக்கன்றிகையென்னும் ஆலயத்திற் போய் வலம்வந்து சன்னிதானத்தையடைந்து மும்முறைவணங்கிச்சந்திர சூடாதாரனை கற்றன் நடனபாததெரிசனம்பெற்றுச் சுருதிவாக்கியங்களினாற் போற்றி வேதசாத்திரசம்பன்னனான மிருகண்டுவென்பவன் அந்தக்கோயி லுக்கருகினிருப்பிடமொன்றுண்டாக்கிக்கொண்டு புகழ்தற்கரிய ஆகமங்க ளிற் குறித்திருக்கும் முக்கியவிரதங்களை முடித்துக் காலகண்டமூர்த்தியை வழிபட்டு ஆண்டிற்குரிய காலங்களாகினும்வெய்யல் பனி மழை குளிர்முத லியவருத்தங்களுக்கெவ்வளவு ! மனமிடைந்துவாடாமல்பார்பதிபாகனைசிவ பிரானைத்தியானித்து மகப்பேற்றைவிரும்பி ஒருவருஷகாலம் அரியதவங்க ளைச்செய்துவருகையில்அவன்பத்திக்கிரங்கித்திரிபுரதகனானவன் ரிஷிய

வாகனருடனாய் எழுந்தருளக்கண்டு முனிபுங்கவனெழுந்து ஆனந்தக்கூத்
தாடி பிறதக்ஷணம்வந்து வணங்கிப் பலவாகத்துதித்துக் கரங்களைக்கூப்பி
நிற்கின்றவனைநோக்கித்தபோநிதியேஉன்மனதிலிஷ்டத்தைச்சொல்வாயென்
றருளச் சகலசீவதயாபரமூர்த்தி புதல்வரின்றிவருந்துகின்றனன் அப்பேற்றை
யளித்தருளவேண்டுமென்று விண்ணப்பஞ்செய்யப் பரமன்நகைத்தருளித்
திருவுளம்பற்றுவார். நீபகுணமிகுத்துச் சற்றுநல்லறிவின்றி ஊமையாய்க்
கூன்முடங்குருடுமாய் நூறுவயதைப்பெற்றுப்பிணிகளினுழன்றலையும்பிள்
ளைவேண்டுமோ-அல்லது-ஒப்பனையற்ற வனப்பினையுங் குறைவற்ற வடிவை
யும்பெற்று வருத்தும்பிணிகளின்றி நம்மிடத்துப் பத்திவிசுவாசம்பெற்று
வயதுபதினாறுற்றுப் பலகலைகளையுங்கற்றுத் தவவன்மையிற் சிறந்திருக்கும்
பாலனைத்தருதுமோ உன்னெண்ணத்தைக்குறியெனக்கேழ்க்கத் தவச்சிரே
ஷ்டனானவன் அதைச்சீர்தூக்கிப்பார்த்து வயதுகுறைந்தாலும் பேரறிவாள
னாய்த் திரோகவுபாதியற்று எமதுகடவுளாகிய தேவரீரிடத்து மெய்ப்பத்தி
விளங்குங்குமாரனையேவேண்டுவேன் அவ்வாறுகிருபையுற் றளிப்பீரெனத்
துணிந்துகேழ்க்கப் பரமன்களித்து முனிவனே நீநினைந்தபடிக்கொருபுத்
திரனை யளித்தனமென்ன மிருகண்டு மகிழ்சிறந்து வாழ்த்திவிடைபெற்று
சந்தோஷசாகரத்தினாழ்ந்தவனாய்ச் சுற்றமுந்துணைவியுங்களிக்கவாழுநாளில்
பூமிதேவி கவலைநீங்கிக்களிக்கவும்தன்கிளுக்குரியதருமதேவதைநான்கு பா
தங்களினும்பெருமைதங்கிய தவமுனிவர் மகிழ்சிறந்து நடிக்கவும்குதிக்க
வுஞ்சைவசமயம்விர்த்திக்கவுந்தேவாதிதேவனான சிவபிரானனுக்கிரகத்தினால்
எமனைவெல்லற்குரிய மேம்பாட்டினைப்பெறுங்குணநிதியாகிய சற்புத்திரன்
மிருகண்டுவினது தேவிவயிற்றிற் கருப்பமாயதையறிந்தவுடன் சாஸ்திரசம
பன்னனான பிதாவானவன் களித்துப் பரமசிவனுக்கபிஷேகமுதலான சிறப்பு
களைநடாத்தி அவரடியார்முதலாயினோர்களுக்கு வேண்டியமட்டும் பொன்னாதி
யான பலவளங்களையும் வெறுக்கக்கொடுத்து இவ்விதமாகவேமாதந்தோறும்
விதிப்படிக்குச் சகலசிறப்புகளையும் வழுவின்றிச்செய்துவருகையிற் பத்து
திங்களும்நிறைவெய்திப்பங்குனிமாதமுடிந்ததினத்தில்மிதுனலக்கினஞ்சம
பூர்த்தியாயிருக்கவுஞ் சுக்கிரனும் பிரகஸ்பதியும் உச்சத்திற் சுபகரமாய்நிற்
கவுஞ் சூரியன்முதலிய மற்றகிரகங்கள் குற்றமற்ற யிடங்களிற் பொருந்த
வும் யிப்படித்தாகிய-சுபகரமானகாலத்தில் விஷத்தினைக்கக்கும் காளி தா
ளி மாதங்கி யென்னுங்கூரியபற்கள்விளங்கக் கொடிய சீற்றத்தினைப்பெற்ற
சர்ப்பமாகிய ராகுவினாற் கவ்வப்பட்டுத் திரோகாந்தி மங்கிக்காட்டிய சந்தி
ரன் அதைக்கடந்தவுடன் உலகம் விளங்கக்களிக்கத்தக்கதாய் அமுதகிரண
சமோகங்களை வெளிவிட்டதைப்போன்று பொறைமையும் அஷ்டஅயிஸ்வரி
யங்களைத்தரும் மைத்துவத்தையுமுடைய லட்சுமிதேவியைப்பொருந்த [illegible]

தாசிரோமணியாகிய ரிஷிபத்தினியானவளுக்குக் கருப்பயாதனை நேர்ந்து திரோகம்வாடச் சிலநேரத்திற் றிரிலோகங்களுமீடேறத்தக்கதாய் வேதங்களை யோதுஞ் சிவந்த வாயைப்பெற்றகுழந்தையைபிரசவித்தாள். இவ்வாறுபின்னை பூமியிலுதித்ததைக்கேட்டவுடன் நற்றாயினுக்குற்ற களிப்பைச்சொல்லவறியோம். மற்றச்சுற்றத்தாரும் அவ்விடத்திலமர்ந்தவரும் ஏகமாய்த்திரண்டு நவரத்தினங்களையும் பொன்னாகிய வெகுக்கைகளையும் பரிமளமிகுந்த பொற்சுண்ணப்பொடிகளையுஞ் சுகந்தபரிமளங்களுள்ளசுமலர்களையும் மெல்லியமகரந்தங்களையும் பவுத்திரமாகிய கலவைச்சாந்துகளையுங் குளிர்ந்தநாளச்சேறுகளையுந் தலைத்தலைகொண்டுஉயர்ந்தவிண்ணகத்திருக்குந்தேவரும் மண்ணகத்துறைபவும்மாந்தரும் வியந்துகொண்டாடத்தக்கதாய்த்தெருக்களெங்குந்தெளிச் சந்தோஷங்கொண்டாடி ஆர்ப்பரித்தார்கள் அக்காலையிற் றோற்கருவி துளைக்கருவி நரம்புக்கருவி கஞ்சக்கருவி மிடற்றுக்கருவிகளாகிய பஞ்சவாத்தியங்களாகிய தேவதுந்துமிகள் சமுத்திரகோஷ்டியினும் மேலிட்டுமுழங்கவுந் திதிமூர்த்திகளன்றி மற்றவிண்ணவர் கற்பகமலர்களைத்தூவிச் சுகசீவியாயிருந் திம்மை மறுமை யின்பங்களை யொருங்கெய்தப்பெற்று அமுதம்போலச் சகலருக்குமுதவியாயிருக்கக்கடவனென்றாசீர்வதித்தார்கள் ஓ சவுனகாதிதவத்தரே அக்காலையிலுண்டாகிய சம்பிரமத்தினையிப்படித்தென்று நம்போலிகளாற் கணிக்கப்படாது அதற்குத் திஷ்டாந்திரஞ்சொல்லக் கேட்பீராக- அந்நகரமே முதற் சமுத்திரஞ்சூழ்ந்த பூமண்டலங்களிலிராநின்ற நாடுபதிகளாகிய இடங்களிலிருக்கும் மக்கள் தங்கள்தங்களுக்கொரு பெரிதாகிய நன்குகிடைத்ததைப்போலவே பரமனைப்போற்றித் தானங்களாதியதைவழங்கிச் சுற்றங்களுடனுண்டுமகிழ்ந்தோங்கினர். பிதாவானவருமிச்சந்தோஷவார்த்தையைக்கேட்டவுடனேடிப் பவுத்திரமாகிய கங்கையின்மூழ்கிப் பிராமணர் சிவனடியராதியருக்குச் சொர்ணமுதலான சோடசமகாதானங்களையுங் கரங்கள்சிவப்பக்கொடுத்துஓமமாதியசிறந்தசடங்குகளைவான்முறையாகச்செய்து வரும்போது பிரமனெழுந்தருளி பிள்ளைக்குமார்க்கண்டனென்றுநாமகரணஞ்செய்து ஆசீர்வதித்துத் தன்பதியைச்சேர்ந்தனர் பின்புதாயானவள் பரிவாக வளர்க்கின்றகாலத்தில் மறுவற்ற பூர்வபட்சச்சந்திரனைநிகர்த்துத் தினமொருமேனியாக அப்பாலன்வளர்ந்துவருகின்றதறுவரயில் மாதங்கடோறுஞ் செய்யுஞ்சடங்குகளைக்கிரமப்படிக்கு நடாத்தி அன்னப்பிராசனமுமுடித்து ஒருவயது நிறைவெய்தியவுடன் சவுளகமென்னும் மயிர்வினையைச் சிறப்பாகச்செய்துமுடித்து இரண்டாமாண்டிற் றமதிருப்பிடத்தையலங்கரித்துச் சுற்றம் அந்நகர்வாசிகள்திரண்டுகளிக்கப் பல்லியங்கள்முழங்கத் தானங்கள்வழங்கிக் காதுகுத்துமுறையைநடத்தி ஐந்துவயதானவுடன் நற்சுபதினத்தில் மங்கலவாத்தியங்கள்முழங்கச் சிவபூசனைவழி

பட்டு முனிவர் பிராமணர்களுந் தது வேதவிதிப்படிக்குச்சடங்குகளை நடாத்தி வாழ்த்தப்பத்பலதானங்களைவழங்கிப் பூணூற்கலியாணமும்வித்தியாரம்பமுஞ்செய்து கலைகளனைத்தினையுந்தெளிவெய்தவாசிப்பித்து முற்றியகாலையின்வேதாகமசாஸ்திரபுராணமுதலிய நூல்களினது நிச்சயங்களைத்தெளிந்து அவைகளுக்குக் காரணகர்த்தனுந் தேவதேவனுஞ் சுயம்பிரகாசமாயும்எங்கும் நிறைவெய்தி முத்தொழிலையும் அருண்முறையேநடாத்துந் திருவிளையாடலைச்செய்யும் மூலகாரணன் சிவனென்றறிந்து அவனது திவ்வியசரணாரவிந்தங்களிற் றஞ்சமடைந்தவனும் அன்றுமுதற்காலையினெழுந்தவுடன் நித்தியகடன்களைக்கழித்துப் பரமேஸ்பரனை வேதவிதிப்படிக்குவழிபட்டுவணங்கியும் அவனன்பரை அவனைப்போற்கருதித் தாழ்ந்து உபசரித்துந் தமது குரவனைப்பத்தி விநயத்துடன்றொழுதுங் குற்றமற்ற தவச்சிரேஷ்டர்முதலானபெரியோர்களுக்குத் தொண்டுசெய்தும் அவர்களால் நன்னெறிகளைப் போதிக்கப்பெற்றுந் தன்னையீன்ற தாய்தந்தையர் பாதபங்கயங்களைச் சிரத்துக்கணியாகச்சூடிப் பாதுகாத்தும் மிவ்வாறுநடந்துவருங்காலையிற் றனதுபிறவியை நீத்தற்குரியபுனிதன் சிறந்தபிரமசரிய வொழுக்கங்களையனுஷ்டித்துவரு முன்னிலையிற் பதினாறம்ஆண்டு உதித்ததினம் புத்திரசிகாமணியைக்கண்டவுடன் அரிதிற்பெற்ற அன்னையும் அத்தனும் மைந்தனே மைந்தனேயென்று தனித்தனியிருந்து துக்கசாகரத்தினுழ்ந்து பிறலாபித்து வருந்துவதைப் பிள்ளைகண்டு பயபத்தியுடன் சமீபத்திற்சென்று அவர்பாதங்களில் நித்தியப்படிக்குச்சேவித்து நீங்கள்மிகவும் நடுக்குற்று அழுகின்றீர் இதற்கொரு ஏதுவையையுங்காணேன் விசனத்தையொழித்துஉங்களுக்குற்றவின்னலை அருளிச்செய்மினெனப்போற்றும்பிள்ளையைவாழ்த்தி ஐயனே எமதான்மாவையொத்து நீ காத்திருக்க வொருகுற்றமுநேருமோஅப்பனே எங்கள் மனக்கிலேசத்தைக்கேட்பாயாக முன்னம் நெடுங்காலம் புத்திரரின்மையிற் பரமனைக்குறித்துத் தவவிரதங்களைச் செய்திருந்த தறுவாயில் ரிஷபவாகனக்கடவுளெழுந்தருளி உன்னையனுக்கிரகித்துப்பதினறுவயதுடன்றமுடிவிலிறப்பாயெனவுந் திருவுளம்பற்றிப்போயினர் அவ்வருஷம்இன்றுபிறந்த காரணத்தினாற் சத்புத்திரனை யிழக்கப் போகின்றனமென்னும் மனவருத்தத்தினாற் றுன்பத்தழுந்திபிரங்கினேம் மற்றொன்று மில்லையெனவிழிகளில் நீரைப்பெருக்கிக்கொண்டு சொன்னதந்தைமுகத்தைநோக்கி ஐயனே யிருதொருபெரிதாகவெண்ணி யிரங்கவேண்டாஞ்சகலசீவதயாபரமூர்த்தியாய் எங்கும்நிறைவெய்திநிற்கும் அரனை யருச்சனைமுதலிய பூசனைகளைச் செய்து அவன்கடாட்சவீட்சணியத்தினால் யமன்கொடுமையைக்கடந்து அதிசீக்கிரமத்தி லுங்களிடத்திற்குவருவேன் அதுபரியந்தந் தயிரியங்கொண்டு யில்லிடத்திலிருப்பீரென்று அதற்கடுத்தபேதுவைகளைப்பலவிதங்களிற்காட்

டித் தேற்றி யொருமிக்கச்செய்து பாதங்களிற்றொழுதுநிற்குஞ் சகலசாத்தி
ரப்பண்டிதனுன பிள்ளையையணைத்து உச்சியைமோந்து முத்தமிட்டுச் சகி
த்தற்கரிய வருத்தத்தினை யொருவகையா யொழித்து தாய்தந்தையர்மனங்
களித்தனுப்ப விடைபெற்றுப் பரமனருளும் அன்பும் வழித்துணையாகச்
செல்ல வொப்பற்ற களிப்புடன் அதிசீக்கிரமத்தில் அவ்விடம்நீங்கி பொன்
மயமாயோங்கிநிற்குந் திருமணிக்கன்றிகையென்னும் ஆலயத்திற்சென்று
விசுவநாதனைத்தெரிசித்து மனங்களித் தென்புநெக்குருக விழிகளிலானந்த
வாரிபெருக வலம்வந்து அஷ்டாங்க பஞ்சாங்க திரியாங்க யோகாங்கமாகச்
சன்னிதானத்தில்வணங்கி கற்தன்றிருவடிகளை முடியிற்சூடிப் போற்றிபின்
அவ்வாலயத்தின் தென்பாரிசத்தி லொருசாலையமைத்துக்கொண்டு பரமசிவ
த்திருவுருவமாகிய இலிங்கத்தை ஸ்தாபித்து வேதாகமவிதிப்படிக்கு அன்பு
டன் காலங்களில் அருச்சித்தேற்றி அரியதவவிரதங்களைச்செய்துவருகையிற்
சிவபிரானெழுந்தருளி நம்பாலன்புடன் பூசனைகளையும் அரியவிரதங்களை
யுந் திரோகவாஞ்சையற்று வருந்திநீடித்துச் செய்துவருகின்றனை நயக்குவப்
பாய்மகிழ்ந்தனந்தவச்சிரேஷ்டனே யினியுனக்குவேண்டியவரங்களைத்தரு
வோங்கேளென்று திருவாய்மலர்ந்தபோது கரங்களைக்கூப்பிவிண்ணப்பஞ்
செய்வான் அம்மையப்பனுய்ச் சராசரப்பிரபஞ்சங்களைப் படைத்தாளுங்
கர்த்தனே பற்றிலற்றநிர்மலக்கடவுளே எள்ளினெண்ணையைப்போலவெங்
கும் நிரஞ்சனமாய்விளங்குநித்தியத்தைப்பெற்றசோதியேதேவதேவனே
பரஞ்சுடர்வடிவைப்பெற்றவனே உலகையழிக்கவெழுந்த அழலையடங்கிக்
கரத்தினேந்தி அண்டாண்டபுவனங்களைப்பாதுகாத்த தயாநிதியே தேவரீர்
பாதங்களுக்கடிமைபூண்ட அடியேன் எமன்கையினகப்படாமல் அத்தரு
ணத்திலெழுந்தருளி பிராணனைக்காத்தருள்வேண்டுமென்றுபலவாகப் போற்
றுகின்றவன்மீது கிருபாநோக்கம்பாலித்துப் பிள்ளாய் காலனுக்கஞ்சவேண்டா
வும் அஞ்சலஞ்சலையென்றுபைய சாருரவிந்தங்களையும் பத்தன்சிரத்திற்
சூடினுர் அவ்வேலையின் மாற்கண்டன் சந்தோஷசாகரத்தினுழ்ந்து திரோகம்
பூரித்துமயிர்ச்செறிவெய்தவிழிகளில் நீர்துளிக்க உய்ந்தேன்உய்ந்தேனென்
றானந்தக்கூத்தாடிநிற்கின்றவேளையிற் பாற்கடலினுதித்துத் தேவாதியரை
யழிக்கவெழுந்தகாளகூடத்தையுண்டுகண்டத்திற்றரித்தாண்டகடவுள் மறைந்
தனர் அதற்பின்னும்பழையபடியே சிவனுதனைப்பூசனைவழிபாடுகளை முன்
னினும்முக்கியமாகச்செய்துவருமுன்னிலையிற் பதினறுவயதும் நிறைவெய்
திபதறுவாயில் வானத்திற்சஞ்சரிக்குங் காளமேகம் வழுவியதைப்போலப்
பாரித்துக் கறுத்தவுடலைப்பெற்றுப் பிறையைநிகர்த்துக் கோரதந்தங்கள்
விளங்கமின்னலையொத்து பிறகாசிக்கும்முத்தலைச்சூலமொன்றைக் கரத்திற்
பற்றி பகிவேசங்கொண்டொரு யமதூதன் அவ்விடத்திலவந்து ஆதியிலவ

கங்களை பழித்துத்திரிந்த முப்புரங்களை நகைத்தெரித்த சிவக்கொழுந்தினது திருவடிகளைத்தியானித்து மனோவாக்குக்காய மொருமித்துச்செய்யும்பூசனை யைக்கண்டவுடன் நடுநடுங்கி மனமலைந்தவனாய் யிம்மார்க்கண்டனைக்கிட்டு வதே அரிதாயிருப்பதால் அவனுயிரைக்கொண்டுபோவதெவ்விதம் யிதுநம் மாலாவதன்றென்றெண்ணி நிற்கவு மஞ்சி விழிகளிற் கனற்பொறிசிதறப் பாய்ந்தபுலியானது தான்குறித்த யிரைவலிபெற்றதாற் கொல்லப்பெறாம லோடியதைப்போலவே வந்தவேகமாறி மனங்கலங்கித்திரும்பி அத்துதன் தென்தேசத்திற்போய்ச் சபாமண்டபத்திற்கொலுவீற்றிருக்குந் தமதிறை வனைக்கண்டுவணங்கித் தேவேந்திரன்முதலாகப் புகழவாழும் யிறைவனே கேட்டருள்க அந்திவண்ணனானபரமசிவத்தின் கண் யிடைவிடாதுமனதை யிருத்தவல்லவன் அவன் பாதகமலங்களை யெக்காலமுந் தொழுங் கருத் தைப்பெற்றவன் இராப்பகலாக அவன்புகழ்களையே ஓதும் நாவைவாய்ந்த சுகுணன் ஈசனதுஉருவமாகிய இலிங்கத்தினைக் காலங்கடோறுந் திவ்விய பரிமளமலர்களால் அருச்சித்திருக்குஞ்சிரேஷ்டன் காமக்குரோத லோபமத மாற்சல்லியமென்னுங்குற்றங்களைக்களைந்து பழுத்தமனதைக்கொண்டவன் ஞானபாதத்தினுக்குரியபேரறிவாளன் பிராமணகுலோத்தாரகன் மகத்துவ முடையகாசியின்வாசஞ்செய்யும்பேறுடையவன் மார்க்கண்டனெனுஞ்சிறந்த நாமம்படைத்தவன் இவ்விதமகிமைகளைப்பெற்ற பாலனுக்குக் காலங்குறு கியதாற் றேவரீர்கட்டளையின்படிக்குப்போய்ப்பார்க்குமிடத்தவன்செய்யும் தற்கருமங்களின்வலியினால்நெருங்கவும்படாமல்அஞ்சியெதிரினுஞ்சென்ற வனுமல்ல திரிநேத்திரதாரியாகியகற்தன்சன்னிதானத்தைப்பிரிவின்றியிருந் தலாலவன்பிராணனைக்கொண்டுவருவதென்னாற்கூடாது ஆதலாற்றண்டநாய கனே யிதற்குவேண்டுவதைக்கட்டளையிடுகவெனத் தூதன் அறிக்கையிட்ட வுடன் ஆறியசெந்தழலில்நெய்யையூற்றியதைப்போலச் சீறிப்புகையுமனலு மெழப் பெருமூச்செறிந்து அந்தப்பயல்சிவபூசை செய்ததினால் ஈறில்லாத கர்த்தனாவனோவென்றுகோபித்துஇந்நிமிஷத்தில் நமது சம்பிரதிகளையழைப் பீராகவென்றாக்கியாபிக்கப் பக்கத்தினிருந்ததூதரிலொருவன் வணங்கியோ டிக் கர்ணீகருக்குத்தலைவரைக்கண்டு நமதிறைவனுங்களைக்கியாபகஞ் செய்த னென்றவுடன்கணக்குச்சுருளையும் எழுத்தாணியையுங்கொண்டுவிரைந்து வ ந்துஇமராசன்பாதங்களிற்சேவித்துக் கரங்களைக்கூப்பி நிற்கின்றவரைநோ க்கி அரிபிரமவொவர்களாலும்அறிதற்கரியசீர்வெண்டையமணிந்த பாதாரவிந் தங்களைப்படைத்த சிவனுதனையருச்சித்தேற்றி யிருக்கும்மாசற்றகாட்சிபெ ற்றமார்க்கண்டனென்னுநாமமுமுடையசிறுவனுக்கிறுதிகாலத்தைச்சோதித் துரைப்பீரென்றவுடன் சித்திரனென்றுங் குத்தனென்றும் பெயரைப்பெற் றவர் மேலும் அறிவாளிகளாயுஞ் சமரசகுணங்களைப்பெற்றவராயும் உணர்

வித்சிறந்தவராயு மிருப்பவர் யித்தன்மையசிறப்பைப்பெற்றக்ருணீசர்சந்
தினிருந்தகருணை விரித்துத்தன்னிகணக்கையாராய்ந்து சுவாமிநெற்றிவிழியை
யுடைய கர்த்தன் ஆதியின் அவனைக்கடாட்சித்தபோது பதினறுவய திவனுக்
கென்று நிச்சயித்தருளினர் அதுவும்நேத்தியத்தினத்துடன்கழிந்தது ஆனு
லவன்செய்த சிவபூசைமுக்கியமானதவமாயிருக்கின்றது முதிர்ந்ததவப்பே
ற்றைவாய்ந்த முனிபுங்கவராயினும் அஷ்டஅயிஸ்வரியங்களைப்பெற்றமுப்
பத்திரண்டறங்களை வளர்த்தபுண்ணியவான்களாயினும் ஞானவறிவையுடைய
யோகியாயினும் புசபெலபராக்கிரமம்பெற்ற சூரோயாயினும் விதியைக்
கடக்கவொண்ணுது யிதுவரையிற்கண்டதுமில்லையிப்பாலன்செய்ததற்கரும
பலத்தினுற் கொடியநிரையவாதனையைக்கடந்து தெய்வலோகவாழ்வினிருக்
கப்பெறுவனென்று அவ்விருவரும்படித்தவுடன் தருமனதிகோபங்கொ
ண்டு முக்காலங்களையு முன்ளங்கைநெல்லிக்கனியைப்போலத் தெருட்டவல்
லவனுய்த் திறலுடையவனுய் மந்திரித்தலைமையும்பெற்றிருக்கும் பெருமை
யைவாய்ந்த காலனையழைத்துப் பிராமணபுத்திரனெருவன் வலிசெய்துகா
சியினிருக்கின்றனும் அவனுவியைக்கொண்டு வரக்கடவாயென்றவுடன்வி
டைபெற்றுச் சிலதூதருடன் பூமியினிறங்கிக் காசிப்பதியைச்சேர்ந்துகுற்ற
மற்றதவச்சிரேஷ்டனிருக்குமிடத்தை யடைந்து பிராமனேத்தமன் பூசைத்
திறமங்களையும் அதற்கடுத்தவழிபாடுகளையும் பாத்துயிப்பேற்றைக்கிடைத்
தவன் நம்முடன்வருவதே தென்றேங்கினவனுய் அவன்விழிகளுக்குத்தோற்ற
மாக வெதிரிற்போய்வணங்கிநிற்க மார்க்கண்டன்கண்டுநீயார்சொல்லென்று
கேட்டவுடன் உலகமெங்குமிராநின்ற உயிர்களைக் காலங்கருதி முடிக்கும்
ஆணையைச்செலுத்துகின்ற எமன்பாதங்களைப்போற்றி அவன்பணிவிடையை
நடாத்துங்காலனுவேன் யிவடம் வந்தகாரணமென்னென்றுசெழ்ப்பீராயின்
பூர்வத்தில் நடந்த சவிஸ்தாரங்களைக்கேளும் ஆதிமூர்த்தியாகிய பரமசிவம்
உமக்குநியமித்த பதினறுவயதும் நேத்துடன் கழித்தது யினிநீர் தென்
தேசத்துக்குவரவேண்டும் யிக்கருமத்தையொருவராலுந்தடைசெய்வதன்று
மேலுஞ் சிருஷ்டிகர்த்தனுய் மும்மூர்த்திகளிலொருவனுக விளங்கும் பிர்ம
தேவனுலுந் தடைசெய்யப்படாமற் காலாதிகளிற்பெறத்தக்கது கர்த்தனுக்
கிறைப்படிக்கு சம்பவிப்பதன்றி வேறல்ல அவ்வாறடுக்குமாயில் அத்தினை
மே அழிதலும் ஆதலும் முற்றுப்பெறும் இவ்விதமாகவே கூற்றுவனும்
உயிர்களைப்படுக்கின்ற காரணமுங் காலகண்டமூர்த்தியினது பணிவிடையா
கும் ஆதலால் உம்மையழைத்துவரச்சொன்னர் இஃதன்றியும்நிர்மலமூர்த்
தியின் பாதாரவிந்தங்களை யருச்சித்துவரும்பெருமைகளைத்தூதர்சொல்லக்
கேட்டு மகிழ்ந்து உம்மைக்காணநினைந்து சந்தோஷித்துடனே எதிர்பார்த்
திருக்கின்றுன் அழிக்குந் தொழிலைக் கொண்டவனுதலாற்றெரியாதவர்செய்

கையைப்பற்றிக் கொடியவனென்பர் முடிவெய்திய உயிரனைத்தையுந் தனக்
குரிய முறைப்படிக்கழிப்பன் உலகங்களனைத்திலும் அவனைத் தருமனென்
பதைக்கேட்டதில்லையோ மனதில் யாதொன்றும் நினையாமற்றென்பாரிசத்
திலிருக்கும் இமலோகத்துக் சென்னுடன் வருவாயாயின் அவனெதிர்கொ
ண்டு கரங்களைக்கூப்பி வணங்கிப்போற்றி உபசரித்து வளமிகுந்த போக
பூமியாகிய தேவேந்திரன் பதவியைத்தருவன் தடைபேசாமல் வாருமென்ற
வுடன் மார்க்கண்டர் நகைத்து சந்திர சடாதரக்கடவுளை வழிபடும் அடிய
வர்கள் இந்திரனுலகிலும்போகார் அல்லது கூற்றுவன் பதவியிலும் உன்னு
டன்வாரவறியார் சிறந்தோங்குஞ் சிவகதியிற்சேர்ந்தின்புற்றிருப்பர் லோகநா
யகனான சிவனடியருக்கடியனாயிருக்கப்பெற்ற யானும் அவ்வாறே உமதிறை
வனான எமன்நகரத்துக்குவரமாட்டேன் பிரமன் விஷ்ணு பதவிகளையுங்
கனவிலும் நினையேன் என்வாற்றையறிவதிற்பிறைபோசனமில்லை யிவ்விடத்
தில் நில்லாமற் சீக்கிரமாய் வந்தவழியைநோக்கிப்போவாய்போவாயென்று
உருத்துச்சொல்லக் காலன்மாறுனை செய்யப்பயந்து நமமிடத்திற்றில்
அகப்படுகின்றவனல்ல வென்றுலோசித்தவனுப்ச் சீக்கிரமாகத்திரும்பிப்
போய் தமதிறைவனைவணங்கி நடந்தசேதிகளைத் தெரிவித்தவுடன் மனம்
பதைபதைத்துச் சரீரமெங்கும்வியர்க்க விழிகளில் அனற்பொறிசிதறப் புரு
வம்வளைந்துநெற்றியிலேற வடவையைப்போற் கோபித்துப்பரிசனரைநோ
க்கி நமதுவாகனமாகிய கடாவைத்தருவீரென்றவுடன்கொடுவந்தெதிரில்நிறு
த்த அதின்பிடரியில் மதயானையைப்போல ஆரோகணித்துப் பலதூதர் முத்
துக்குடைகள் ஆலவட்டங்கள் வெண்சாமரைகளேந்தித்தொடரப்படைவீரர்
சூலம் பாசந் தண்டம்முதலான படைகளைத்தாங்கிப் போற்றிச்சூழ்ந்துவரத்
தன்னகரைக்கடந்து காசிமாநகரத்தில் ரிஷிபுத்திரன்பரமனைவழிபட்டிருக்கு
மிடத்தைச்சேர்ந்து சிவந்தசிகையுங் காளமேகத்தையொத்துவிளங்கும் மே
னியுங் கோபவனலைவீசுங்கண்களும் விளங்கக் காலபாசம் முத்தலைச்சூலம்
வயிரத்தண்டமுங் கரங்களிற்கொண்டு எதிரில்நின்றதுவாயின் மார்க்கண்டர்
கண்டு எமன்வந்தானென்றறிந்து அவன்செய்கைகளையும்பார்த்துச் சஞ்சலப்
படாமற் றேவாதிதேவனான சிவபிரான்திருவடிகளில் வணங்கித்துதித்திருப்
பதை எமன்கண்டு பிள்ளாய் நீஎன்னகாரியத்தைநினைந் தேதினைச்செய்தாய்
ஊழ்வினைச்சம்பவத்தையுந் திறிநேத்திரதாரியின் கட்டளையினின்றுந்
தடைக்கப்படுவதோ பிரார்த்த கர்மவலியைக் கொஞ்சமாவது நினைந்தவனல்ல
உறுதிப்பாட்டையும் அறிந்தவனுக்காணவில்லை பிறப்பதும் இறப்பதுஞ்
சர்வசாதாரணமாயிருப்பது யிதனைப்பேசவும் வேண்டுமோ சிறந்த தவச்
சீலருக்காயினுங் கூடாதயிக்கருமத்தைப் பேதையறிவைக்கொண்டு சாதிக்க
லாமென்றெண்ணி இவ்விதமாயொளித்திருப்பது சாத்திரசம்மதமாகுமோ இ

யபத்தையுணர்ந்தஆடவருக்கமைக்குமோ பரமேஸ்பரனுடைய சரணாரவிந்தங்களின் மனமொருமித்த பத்தியுடன் நித்தியமும் நீசெய்யும் பூசனையின்மூயற்சியானது கொடியபவத்தைப்போக்கும் அல்லது நானுருத்துவீசும் பாசவன்மையை விலக்கவும்வல்லதோ அலைகள்பெருத்த சமுத்திரக்கரையின்மெல்லிதாய்க்குவிந்திருக்கும் மணலையெண்ணினாலும் வானத்திலடர்ந்திருக்கும் நட்சத்திரங்களைக்கணித்தாலும் என்னுக்கிணைப்படிக்கிறந்த இந்திரனையெண்ணவும்படுமோ இருதன்றியுங் காலாதிகளிலிறந்ததேவனையும் புயவலிபெற்றவிராக்கதனையு மொருவகைத்தாக நிதானிக்கவுமுடியவதோ வென்றுசொல்லுவோமாயின்மற்றசீவராசிகளின்பாட்டைப்பேசவும்வேண்டுமோபிறப்பதும் இறப்பதுஞ் செந்தாமரையையொத்த விழிகளைப்படைத்த விஷ்ணுவுக்குஞ் சிருஷ்டிகர்த்தனுன பிரமனுக்குமுண்டு சகலசீவராசிகளையுந் தண்டிக்குமெனக்குமுண்டென்றால் உனக்குமடுக்குமெனக்குறிக்கவும்வேண்டுமோ பூர்வத்திளைவிறந்தகாலஞ்சுகந்தபரிமளமிகுத்த கற்பகமலர்களினுற் பரமன்பாதங்களினருச்சித்துப்போற்றக் கர்த்தனிரங்கி யிவ்வரசாட்சியும் யிதோநானேந்தியிருக்குங் கொடியபாசத்தையும் சூலத்தையுந்தெண்டினையையும் அருளினுர் அதைக்கொண்டிதுபரியந்தந் தடையில்லாமல் அரசுசெலுத்திவருவேன் இக்காலத்தில் நீவலிசெய்கின்றதால் உன்னிடத்தன்பாய் அமுதபோசனவலியுடையதேவர்சாற்கினும் படைத்தளித்தழிக்கு முத்தொழிலைநடாத்துந்திரிமூர்த்திகளேபோற்றினும் அல்லது இவர்களினுஞ் சூராயிருப்பவரெவர்வந்துதவிசெய்தாலும் பரமன்கட்டளையின்படிக் கவர்கள் வலியினைக்கடந்து இத்தினமுன்னுவியைப் பதைக்கப்பதைக்கக்கொண்டல்லது திரும்பிப்போவேனு ஆதலால் நீமனம்வருந்திப் பயங்கொள்ளாமலென்னுடன் வருவையாக மேலுஞ்சூலபாணியின்து அன்பர்களாயினுங் சாலமுடிவின் தமதுவக்குவந்து அவரவர் வினைமுயற்சிப்படிக்குச் சிவகதிகளிற்சேர்க்கப்படும் யிதுவுண்மையாகும் இனிமேற்றடைசெய்யாமல் என்னுடன்வருவையாயின் உனக்குச்சவுக்கியமாகியயிடத்தைக்காட்டுவோம்நடவுமென்று சொன்னதைதெரிந்தமார்க்கண்டர் ஓஇமனேகேட்பையாக எமதுகர்த்தனுனசிவனடியருக்கு எக்காலத்தும்முடிவில்லை ஒருசாலமுண்டாயினுஞ் சிறந்தோங்கிய வெள்ளியங்கிரியைச் சேருவதல்லது உன்பதவியையணுகார்கள் அப்புண்ணியவான்கள் குணுதிசெயங்களிற் சிலவற்றை யுணர்த்துவோம் அவாவைநீக்கி அரியதவங்களைச்செய்தவராயினுஞ் சிறந்தமனைவாழ்க்கையில் நின்றவராயினும் வினைப்போகங்களைக்கடந்து சாரூபப்பதவியைச்சேர்ந்து கர்த்தன் பாதநிழலைப்பெற்று வாழ்வார்கள் குற்றமற்றசோமசூரியாக்கினியென்னும்முச்சுடர்களையும் உலகத்துக்காதாரமாகிய பிதிவி அப்பு தேயு வாயு ஆகாயமென்னும் பஞ்சபூதங்களையும் உத்திசைமலைகளாகிய பிரமனையும் புறம்பாகவே

நீக்கியிருப்பர் அம்மகிமைபெற்ற மகத்துக்கள் பாதங்களையடைதலே முத்தியாம் அவர்களுன்னையுமொருபொருளாக நினையார்கள் நரைதிரை மூப்பில்லாத பொன்னுலகவாசிகளையும் மதியார்கள் அவர்களுக்கிறைவனை இந்திரனையுஞ் சுல்பமாக வெண்ணுவார்கள் தாமரைப்பீடத்தினனை அடியனையும்மதியார்கள் துழாய்மாலையையணிந்த கேசவனையுமென்னார்கள் மற்றமுள்ளதேவரை யொருபோதுமதிக்கவேமாட்டார்கள் இருதன்றியுஞ் சராசரப்பிரபஞ்சங்களுக்குக் கர்த்தனும் நின்றாட்டுஞ் சிவபிரானையும் அவன் பாதபங்கயங்களைக்கருதிப் போற்றிவழிபடும் பத்தரையும் சமமாயெண்ணுமற் பிரிவினைப்படுத்தி மதிப்பவர்பேதையறிவையுடையவரொன்றும் வேதங்களிற்சொல்லுவது பொய்யாவதோ மேலும் சன்மார்க்கங்களிற் செலுத்தும் இதையத்தைப்பெற்றவர் ஞானபாதத்தையுணரும் பேரறிவினர் காமக் குரோத லோப மதமாற்சர்யங்களென்னுங் கொடுமைகளை முற்றுந்துறந்த பரிசுத்தவான்கள் யானெனதென்னும்பற்றைத் துறந்து தவநிலையில் நிற்பவர் இம்மை மறுமையின்பங்களை யொருங்கெய்தப்பெற்றவர் தமக்கரிய பொருளெங்கு மில்லாதவர் நன்மையை இயல்பாகக்கொண்டவர் காமம் வெகுளி மயக்கத்துக்கேதுவாகிய கெடுதிகளைக் கனவிலும் விரும்பாதவர் இத்தன்மையசிறப்புள்ளபத்தர்பெருமைகளை யாவரால் விரிக்கப்படும் அப்பேற்றையுடையசிவனடியார்கள் பத்திவயிராக்கியங்களையுஞ் சார்பையும் எவ்வளவும் நினையாது பிறபஞ்சத்திலிருக்குமற்ற மாந்தரைப்போலக்கருதினை அவர்கள் அடியருக்கடியனாய்ப் பணிவிடைசெய்திருக்கும்என்பிராணனுக்குந் தீங்குசெய்ய நினைந்து வந்தனை இவைவியர்த்தமாய்ப்போவதோஉன்னுவிக்கும்வெகுகாலமாகப் பெற்றுவீற்றிருக்கும் அரசுரிமைக்குங்கேடுகாலம்நேர்ந்தல்லது யிக்கியாபகமுனக்குவரமாட்டாது சிவபூசைவேளையிற்காடிபுகுந்ததைப்போலவேதேவாதிதேவனையருச்சிக்கும் அடியேன் செவிகளிற்கேழ்க்க விக்கொடியவார்த்தைகளை வதறுகின்றனை அதனால்மேல்வருங்கெடுதியாகிய பிறையோசனங்களையும் அபகீர்த்தியையும் அறியாத பேதாய் நீசற்றும் யிச்சன்னிதானத்தில்நிற்கவும்பெறுவையோ ஆதலாற் புறம்பிற்போவாய் போவாயென்று குற்றமற்ற மனதைப்பெற்ற மார்க்கண்டர் சொன்னதைக்கேட்டவுடன் எமனுக் கதிக கோபம்பிறவேசித்து விழிகளில் அனற்பொறிசிதற வடவையைப்போற்சீறி நான்பயந்திடைவதற்கு உறுதியாகிய சொற்களைப்பேசிக் காட்டுகின்றனை வலியற்றவனே நம்முயிரைக் கூற்றன்கைக் கொண்டுபோக மாட்டானென்றெண்ணினைபோற்காணுகின்றதென்று உருத்து உடனே மேக கெர்ச்சிதம் போன்றார்ப்பரித்து யிவனைக் கிரமமாயழைத்துப்போக நிற்போமாயின் அதற்கிசைந்துவருந்தன்மையனல்லவென்றெண்ணி வானத்தையளாவிய நீலகிரியையொத்த தேகத்தினையுங் கொடியவேலையுந் தாங்கியதருமன்யாவன்

சமீபத்திற்போய்த்தன்கரத்திற்கொண்டகாலபாசத்தைச்செலுத்தநினைந்திரு
ம்றெனச்சுழற்றியெறிந்து கண்டத்திற்மாட்டிச் சிவலிங்கத்துடன்வலிக்கத்து
டங்கினன் அத்தருவாயில் மாற்கண்டர் சற்றும்மனமிளையாமற் சிவக்குறியி
னைத்தழுவி மிற்தஞ்செயா மிற்தஞ்செயாவெனப் பரமனைப்போற்றிக் கந்த
னே கூற்றுவன்வலிசெய்கின்றான் ஆதியிற்கடாட்சித்தவாறே தேவரீரெழுந்
தருளியித்தருணத்திற்பாதுகாக்கவேண்டுந்தினையாபரமூர்த்தியேஎன்றுஅன்
பென்னும் பாசத்தினுற்பரமன் பாதாரவிந்தங்களைச்சிக்கெனக்கட்டி யன்
னிழலைப்பிரியாமற் புகுந்திருக்க யிக்கொடுமையைப் பாத்திருந்த தேவர்
கலங்கி ஐயையோபாலன்மறிந்தான் மறிந்தானென்றேங்கினுர்கள் இவ்வாறு
பாசத்தைக்கழுத்தின்மாட்டி யிழுக்கும்போது மனஞ் சஞ்சலப்படாமற்
பத்திநெறியைச்செலுத்து மாற்கண்டனோதிரிற் றேவனை ரட்சிக்கும்பொருட்
டுக் கடலிலுதித்தவிடத்தையுண்டு கறுத்தகண்டத்தையும் அழல்விழியையும்
படைத்த சிவபிரானெழுந்தருளி பத்தர்களிற்சிறந்தவனே உனக்கடுத்ததுன்
பத்தைத்தீர்க்கவந்தோம் யினியொன்றுக்கும் அஞ்சலை அஞ்சலை எனத்திரு
வாய்மலர்ந்தருளி நமது பூசனையைச்செய்கின்றுனென்றெவ்வளவும் மதியா
மல் மதாங்காரத்தினுல்எமனிப்பாலனுயிரைக்கொள்ளத்தீவரப்பட்டானென்
றறிந்து திரிபுரதகனரான பரமன்கோபித்து வீரவெண்டயமணிந்த யிடது
பாதத்தைநீட்டிச் சற்றுதைத்தார் அத்தாக்கவினுற் கூற்றுவன்மேகத்தைப்
போல யிளைந்து பூமியிலடியற்ற பனையையொத்து விழுந்துருண்டுமாண்
டான் அதைக்கண்ட பிரமன்முதலான தேவர் கற்றனுக்குக்கோபம் பிறவே
இத்தகாரணத்தினுல் உலகங்களும்நாமும் வாழ்வதரிதரிதென்று மருளவுஞ்
சத்தசாகரங்களும் அலைகளோய்ந்தடங்கவும் ஆயிரகோடி அண்டங்களுங்
கீழ்மேலாய்க்கவழ்ந்துமறியவும் பூமியும்பிளந்துகலங்கவும் மற்றவைபட்ட
வருத்தங்களைச்சொல்லிமுடியாது அக்காலத்தில் எமனைச்சூழ்ந்து வந்தவிங்
கிலியர் சின்னபின்னப்பட்டிறந்தார்கள் வாகனமாகியகடாவும் உதைத்துக்
கொண்டுமாண்டது கேட்டீர்களோசவுனகாதிதவத்தரோ கொடியசெய்கையை
யுடையவனழியுங்காலத் தவனைச்சேர்ந்தவ ரனைவரும் அதப்படுவதன்றிப்
பிழைப்பரோ பின்பு தன்னுயிரைக்காத்திரட்சிக்கச் சிவனுதனிருக்கின்றான்
உருத்துவந்த கூற்றுவனென்னை யென்னசெய்யப்படுமென்றுறுதிகொண்டு
ஆதிநூலாகிய வேதவாக்கியங்களினுலமைந்த சந்தப்பாவினங்களினுற் றம்
மைப்புகழ்ந்துபாடியிருந்த மைந்தனைக் கிருபையாகப்பார்த்து மகிழ்ந்து
பிள்ளாய் நீ நம்மைப்போற்றிச் சிறந்தபூசனையைநடாத்திய காரணத்தினுல்
என்றும் பதினுருய் அழிவில்லாத ஆயுளையுனக்களித்தோமென்றருளி தமது
பாதங்களைவாழ்த்தி வழிபடுமாற்கண்டன்பூசித்த லிங்கத்திற் கூற்றுவனுக்
கும் குற்றமாயெழுந்தருளியபரமன் மறைந்தார் கேட்டீர்களோ நைமிசா

ரணியவாசிகளே எமதூதர்தனுக்குப் பிராமணப்பிள்ளையிடத் தன்பும் எம்மிடத்திற்கோபமுண்டாயிதனைச் செய்ததாக நினைக்கப்போறீர்கள் பெரறிவாளரிதனை யோசிக்குமிடத்தில் எமதையன்செய்கைமுறைமைப்பாடாகவே விளங்கும் யிதுதன்றியும் அடியாரிடத்துவிளக்குமுண்மைக்குங் காரணமாகும் இவ்வாறு தயாநிதியாகிய சிவபிரான் மறைந்தவுடன் தாயைப்பிரிந்த கன்றைப்போல மாற்கண்டன்வருந்திகற்தன்திருவுருவையொருமித்த பத்தியுடன் தியானித்துக்கொண்டே திருமணிக்கன்றிகையென்னும் ஆலயத்திற்போய்வலம்வந்து தேவாதிதேவன் பாதாரவிந்தங்களைச் சிரத்துக்கணியாக வணங்கிக் கரைந்து கரைந்தழுது விழிகளினூனந்தவாரிபெருகப் பேரானந்தக்கடலின்மூழ்கி வெளிவந்து குமாரனுக்கென்னசம்பவித்ததோ வென்றேங்கி யிருக்குந்தாயதந்தையரைக்கண்டு பத்திவிநயத்துடன்வணங்கியவர் விசனமுற்றும்போக்கிலவனுய்ச் சிலநாள் அவர்கள்களிக்கவுடனிருந்தபின்பு அவர்களிடத்திற் சிலவுபெற்றுக்காசியைக்கடந்து சிவந்த கண்களையுடைய ரிஷபவாகனமூர்த்தி யெழுந்தருளியபதிகளெங்கும்போய் அளவுபடாத காதலுடன்வணங்கி யருச்சித்துப்போற்றி யிவ்வாறனவற்றகாலஞ் சிவஸ்தலங்களோறும் வாசஞ்செய்துவழிபட்டுப் பரிசுத்தாத்துமாவாய்ப் பின்பு சிவன் முதலுமாய்ச் சிவத்திலிச்சையங்களைப் பூரணமாயறிந்து வானநாடெங்குமுலவியும் பத்தியுடன்போற்றும் அன்பர்களிணினுங் கருத்திலும் யிடைவிடாதிருந்தும் பூமண்டலங்கள்முற்றுஞ்சஞ்சரித்தும்மற்லையகாலங்களிற்றிருக்கயிலையில் வாசஞ்செய்துமிருப்பன் அவன் மகிமைகளை யொருவனெடுத்தாய் அளவிடப்படுவதோ அல்லதுபுகழவும்போமோ அவன்கண்ட சிருஷ்டிகர்த்தனை நான்முகனிறந்தபிரளயங்களைத்தான்கணிக்கலாவதோ உலகரட்சகனை மகாவிஷ்ணு மாண்டகற்பங்களையாவது நினைக்கலாகுமோ இவ்விதச்சிறப்பைப்பெற்ற மாற்கண்டனைத்துன்பஞ்செய்த எமனிறந்ததால் ஆயிரம் படமகுடங்களைக்கொண்டு ஆதிசேஷன் தாங்கும்பூமியின்கணுதித்த எறும்பு முதல் யானையீறுகச்சொல்லும் எண்பத்திநான்குலட்சஞ் சீவபேதங்களும் பிறந்தவைகளுக்குநாசமில்லாமல் அளவிறந்ததாய்ப்பெருகச் சுமைமிகுந்ததைப்பூதேவி தாங்கப்படாமல்வாடித்திதிகர்த்தனை விண்டுவைக்கண்டுசேவித்துத் தனக்கடுத்ததைமுறையிட விக்கருமம் பரமசிவகடாட்சத்தினாலன்றி நம்பொலிகளால்முடிவதோவென்றெண்ணினவனுய்ப்பிரமன் இந்திரன்மற்ற தேவருடன் காலகண்டமூர்த்தியெழுந்தருளியதிருக்கயிலையையடைந்து நந்தி தேவாருள்பெற்றுப்போய்க்கோடிசூரியப் பிரகாசத்தைவீசுஞ் சிங்காதனத்தில் உமையவளுடன்வீற்றிருக்குந்தேவதேவன்பாதாரவிந்தங்களில்வணங்கி நான்முகனுங் கேசவனும் வேதாகமவாக்கியங்களினூற்போற்றப் பரமசிவனவர்களிடத்துக் கிருபாநோக்கம் பாலித்து கேசவனைநோக்கி நீங்கள்வந்த

ரணமென்னென்றுகேட்கச்சுவாமிதேவரீரனுக்கிரகப்படிபிரமன்முதலானதேவர் தத்தம்பதங்களினின்று அவரவருக்குரிய தொழில்களைக் கிரமமாய்நடத்துகின்றனர் அங்ஙனே நீர் அடியேனுக்கு முன்னங்கட்டளையிட்ட கருமத்தைத் தமதருட்டுணையினாற் குறைவில்லாமற் செலுத்திவருகின்றேன் ஆயினும் யிக்காலம் அதற்கொருயிடையூறுநேர்ந்தது யிதனை விண்ணப்பஞ்செய்துகொள்ளவந்தேன் யிரக்கமுற்றுக்கேட்டருள்க தேவரீர் அருட்டிறத்தையறியும் விவேகமில்லாதஎமன்மாண்டதால்அத்தொழிலைச்செலுத்துவார்களில்லாது சீவராசிகள்மிகுந்து அச்சுமையைப்பரித்திருந்த பூமிதேவி வருந்துகின்றாள் தன்னகத்திற் சமஸ்தத்தையுந் தாங்குந்திறம்பெற்றவளே வருந்தப்பிராணிகள் பெருகுமாயில் என்காவலென்னபாடுபடாது அழித்தற்கொருவருமில்லாமையா லென்பேரிற் கோபங்கொள்ளாமல் எமன்செய்த தீமையைப்பொறுத்தருளியெழுப்பவேண்டும் யிக்கோறிக்கையை மறுமற்றந்தருளுவீரென்று பாதங்களின் வணங்கிவேண்டச் சிவபிரானிரக்கமுற்று எமனைவாவென்றழைக்க மீளத்தோன்றிப் பரமன்பாதங்களிற் பன்முறை பணிந்து வேதாகமங்கள்தேடியின்னுங் காண்பரியதிருவடி அடியேன்மீது தாக்கலாற்சகலவினைகளுந்நீங்கிக் கிருதார்த்தனானேனினியென்பிழையைப் பொறுத்தாளவேண்டுமென்று பலவாகப்போற்றுந்தருமனைத் திரிபுரதகனர் பார்த்தருளி உனக்கின்னுங்கட்டளையிடுவதென்னவென்றாற் பவித்திரமாகிய உருத்திராட்சந்திருநீறணிந்து எம்மைப்பூசனைவழிபாடுகளைச்செய்யுமகத்துக்களிடத்திற்கூற்றன் யானென்றகங்கொண்டுபோகவேண்டாங்கிடைத்தற்கரிய முத்தியினைப்பெறநின்றதமதடியாரைமண்ணுலகவாசிகளாகியமனிதரென்றும் எண்ணவேண்டாம் நம்மைப்போலக் கோடிக்கக்கடவாய் அவர்களையொரு காலஞ்சந்திப்பையாயினும் பத்தியுடன்பணிந்துபோற்றிப் போகக்கடவை மனோவாக்குக்காயமுதலான கருவிகளிலகப்பட்டுப் புண்ணியபாபங்களைச் செய்தழலும் மற்றையரைக்காலங்கருதிச் செய்கையைத்தெளிந்து சொர்க்கவாழ்வின் அல்லது நரகத்திற்றிறமைப்படிக்குச்சேர்த்து உன்னரசிலிருக்கக்கடவைசீக்கிரமாய்ப் படைவீரருடன்பதிக்குப்போவாயென்றருளியவுடன்சபைகடோறும்நடனஞ்செய்யும்பொற்பாதகமலங்களிற்றொழுதுவாழ்த்திச்சுவாமிபுத்திவந்துதுயிலிதிருவுளப்படிக்குநடந்துகொள்ளக்கடவனென்றுவிடைபெற்றுப்பரமனருளினாலெழுந்தசடாவாகனத்திலேறிக்காலதூதர்சூழ்ந்துவரத்தன்பதியைச்சேர்ந்துஎதாப்பிரகாரந்தன்றொழிலைச்செலுத்திவந்தான் அதற்பின்மன்மதனைப்பெற்றசெங்கண்மால்முதலான தேவர்முனிவர்க்கற்றனைமும்முறைவணங்கிப்போற்றிச் சிவ்வுபெற்றுத் திருக்கயிலையைநீங்கிதங்களிடங்களிற்போயினர் இப்பாற் கண்டவரைவருத்துங்கொடிய சூலத்தினைத்தாங்கிய எமதருமராசன் பழையபடிக்கின்று மெதுவினையுமோவென்றாராய்த்து

ப்ராமணருட்டிறம்பெற்ற மாற்கண்டன் கதையை வாசிப்பவரிருக்குமிடத்தினும் போவதற்கஞ்சித்திரிவன் ஆதலாற் குமாரர்களே தவமேசிறந்ததாகும் அதற்குசாட்சி குச்சகரிஷி தன்விரதமுயற்சியினால் மருகியினது பிராணனை வரவழைத்தெழுப்பியதன்றியிற் கற்மவசத்தினால்வந்தமதயானையின் பாதத்தைப்போக்கித் தேவனுக்கு மேலானபதவிற்சேர்த்தான் அவன்பிள்ளை மிருகண்டுயென்பிரமன்விண்டுபோற்றும்முதன்மையைப்பெற்றான் அவன்பிள்ளை மிருகண்டு தவவன்மையினால் ஒப்பற்றமாற்கண்டனைக் குமாரனாகப்படைத்தான் அவன்செய்தசிவபூசைத்திறத்தினால்ஒருவருங்கடக்கப்படாதவிதியையும் வென்று எமன்அகந்தையையுமழித் தெக்காலத்தும் மிறவாத சிரஞ்சீவிப் பதம்பெற்றுச் சகலரும் புகழவிருக்கின்றான்.

மாயையுபதேசப்படலம்.

ஓ குமாரர்களே இதுபரியந்தம்விளக்கிய நிச்சயங்களைத்தெளிந்தீர்களன்றோஇன்னமுந் தவவிரதமுக்கியங்களைப்போதிப்போங் கியாயகமாய்க் கேழ்க்கக்கடவீரென்று பிதாவாகிய காசிபன்கூடங்குமுன்னிலையில் அருகில் வீற்றிருந்தமாயை நகைத்துநன்னயவார்த்தைகளினால்இதனைச்சொல்கின்றாள் வேதாகமசாஸ்திர சம்பன்னராகிய ரிஷியே தேவரீர் இதுவரையில் வேதநிச்சயங்களைத்தெருட்டினீர் இகுதுமேலாகிய மோட்சவீட்டைச்சேர விருப்புற்ற தவத்தருக்கல்லது நாம்பெற்ற சிறார்களுக்குப் போதிக்கப்படுவதோ சகலசம்பத்துகளையும் பெற்று விறிவிளங்கச்செய்யுஞ் செல்வங்களையும்உலகமெங்குந்தழைத்தோங்கும் கீர்த்திகளையும் அழிவற்றிருக்கும் ஆயுளையும்ராசராசர்கள் வணங்கும் மேம்பாட்டையும் மறுவற்றகல்விச் செல்வங்களையும் மற்றுமுள்ளசிறப்புகளையும் நமதாசைக்குமாரர்கள் பெற்றுச் சக்கிறவர்த்திகளாய்வாழவேண்டும் ஆதலான் முனிசிரேஷ்டரே இவைகளனைத்தினையுமிவர்கள் விளைவிற்கிடைத்துச் செயசாலிக ளாகும்படிக் கன்பாய் அதற்குரிய நடைகளைப்போதிக்கவேண்டுமென்று கேழ்க்க உன்னெண்ண மிதுவாகில் நீயே அவைமுடிபெய்துமார்க்கத்தினைத்தெரிவிப்பாயென்று உத்திரவுகொடுக்கமாயைகளித்துத்தன்பிள்ளைகள்முகத்தைப்பார்த்துஐயமாரே உங்கள்பிதாவாகிய தபோதனர்போதித்ததனைத்தும் உண்மையேயாயினும் உங்களுக்கு அடுத்தகருமமல்ல ஆதலால் இனிநான்தெருட்டும் மார்க்கங்களைக்கவனித்துக் கேட்பீரென்று வரன்முறையாகச் சொல்லதாயினள் - மாயாபாசக் கருவிகளின் வயப்பட்டேழும் புத்தியைக்கடந்து குற்றமற்ற அறிவின் சம்பந்தப்

பட்டபிராணிகள் அனைத்துந்தாமெடுத்தபிறவிப்பயனைப்பெறத்தேடவேண்டும் அழிவற்றபொருளாவது கல்விச்செல்வமும் பொருட்செல்வமுமாம் இவ்விரண்டிற்குமேற்பட்ட பொருளொன்றுமில்லை லட்சுமிகரமாகிய பொருட்செல்வங்குற்றமற்றகல்விச்செல்வமெனக்கூறிய இவ்விரண்டினொன்றைப்பெறுவிடின் அருமையாகவுதித்த அவ்வுயிரினும் பேயின்சனனம் மிகவுஞ் சிறந்ததாகும் இவ்வுலகின்கட்டோன்றியபிராணிகளனைத்துக்கும்பெருமிதத்தினைப்பெறச்செய்யவல்லசிறந்தவிப்பொருளிரண்டினதுமகிமையினை அறிவுடையோர்நிதானிக்குமிடத்தில் அரியகல்வியினுஞ் சகலவளங்களையுந் தருஞ் செல்வத்தினையே சிறந்ததெனச்சொல்லப்படும் உணர்ச்சிக்குரிய கலைகளைப் பலகாலம் அநுசரித்தாராய்ந்து அதுகளினுட்பங்களைத்தெளிந்த பண்டிதராயினும் மனோவிஷ்டப்படிக்கு அநுபவத்திற்கு வேண்டும் வஸ்துக்களில்லாவிடின் அதனைத்தரும் பொருளைவேண்டிப் பகைவரையும் பணிந்துநிற்பர் அளவுபடாத கல்வியுஞ் சகலத்துக்குங் காரணமாகிய செல்வமும் பலமுயற்சிகளைத்தருவதினொன்றுக்கொன்று குறைவுபாடாதாயினும் அவைகளினாற்பெறும் பலசிறப்புகளையும் பிறையோசனங்களையுங் கீர்த்திகளையுஞ் சீர்தூக்கிப்பார்க்குமிடத்தில் ஏறியோங்குவதுகேடுபடாதசெல்வமேயாம்சகலவித்தைகளையுந் தெளிவிக்குங் கல்வியைக் கூர்த்தபுத்தியினாலாராயுமிடத்தில் பேரறிவைப்பெற்றவரப்பிரசாதிகளேயாயினுஞ்சிறந்ததிருவைப்பெறாராயின் அவர்களை உலகர் மதியாரிகழ்வார்கள் கல்வியானது புத்திவிசாலத்தினையுஞ் சாதுசங்கங்களான் மதிக்கும் மகிமையினையும் முடிவில் ஞானபாதமே முதலியவற்றினைமாத்திரமே கிடைப்பிக்க வல்லது செல்வமோ போகபாக்கியவநுபவங்களினையும் பலரும்வந்தித்துப்புகழத்தக்ககீர்த்தியினையும் அரிய தருமவிரதங்களினையும் செம்பிரத்தினையும் இம்மை மறுமைச் சம்பத்தினையும் மற்ற மேம்பாடுகளெவற்றினையும் பெறச்செய்வதால் அதனினுஞ் சிறந்த பொருள் இவ்வுலகத்தினொன்றுமில்லை இவ்விதப் பெருமையினையுடைய செல்வத்தை யொருவன் பெறவேண்டினாற் றீரத்தைக்கிடைப்பானாயிற் சுலபமாய்க்கிடைக்கலாகும் அதை யிடைவிடாதுபோற்றுவானாயின் விளைவிற் பலவிதத்திலும் அதிகச்செல்வனாவன் மேற்குறித்த வளம் பலவிதமாய்விளங்கும் அவைகளைச் சகலரும்பெறவறியார்கள் ஆதலான் நீங்கள் செல்வத்தினையொருங்கெய்தப்பெற்று வாழ்தற்கடுத்தவகைகளைச்சீக்கிரமாக அநுசரித்தக்காலங்களிற் பெறக்கடவீர் இருதல்லது சிறந்திருப்பதற்குவேறொருதந்திரமுமில்லை எமதிடத்து நேத்திய இரவிலுதித்த காரணத்தினாற் சேபாலினாகிய ராட்சத அம்சம்பெற்றீர்கள் உங்களுக்குச் சென்மவயினாயிருக்குந் தேவர்கள் தங்கள் முயற்சியினாற் றன்மையெய்தித் திரிலோகங்களுக்கும் மேலாகியசெல்வச்சம்பத்தையனுபவித்து வாழுகின்றனர்.

நீங்களும் அவரிலுஞ்சிறந்தமேம்பாட்டைப்பெறநினைந்து அதற்கேற்றசெல்வத்தை முதன்மையாகச் சம்பாதித்துக்கொள்ளக்கடவீர்கள் இச்சிறப்பைப் பெறுதற்கு வேண்டுவதை யெடுத்துக்காட்டுவேன் அதைமூவருங்கவனித்துக் கேட்டறிவீராக இத்திசையை ஆலந்தீவெனச்சொல்லப்படும் இதற்கு வடபூமி சிறந்ததாகும் அத்தலந்தானவர் தவஞ்செய்யத்தகுதியாம் நீங்கள் மூவருங்கணக்கிறந்தசேனைகளுடன் அவ்விடஞ்சேர்ந்து வேள்விக்கடுத்தபரப்புள்ளவிடமொன்றை யேற்படுத்தித் திருத்தி அதன்மத்தியில் விசாலமானஓமகுண்டமுதலான கிரமங்களைவிதிப்படிக்குச் செய்துகொண்டு விஷேச்சமித்துக்களை யடுக்கித் தழலைமூட்டி யாகதிரவியங்களையும் இரத்தமாம்சங்களையும் மந்திரங்களைச்செபித்துச்சொரிந்து சவுரியவான்களாகிய குமாரர்களே வீரமாமகத்தைத்துடங்கிச் செங்கண்மால் அயன்முதலானதேவர் தமக்கிறைவனென்றேற்றி வணங்குஞ்சீர்த்தருவதாககங்காசடாதரமூர்த்தியைச்சிந்தத்திலிருத்தி பலகாலம்வருந்திமகத்தினைச்செய்துமுடிப்பீராகிற்காளகண்டக்கடவுளாகியபரமசிவம் மிரங்கிக் காட்சிகொடுத்து நீங்கள் வேண்டியதனைத்தினையும் உண்மையாகக்கிடைத்து வாழும்படிக் கனுக்கிரகஞ்செய்வார் மேற்குறித்த வேள்வியினை நீங்கள்முடிக்கப்போகுமிடத்தில் அதற்குவேண்டும்உபகரணங்களை வெவ்வேருக வுதவிசெய்ய நானுமவ்விடம்வருவேன் ஆதலாற் றாமசஞ் செய்யாமல் நீங்கள் மூவரும் நடப்பீரொன்று மீட்டுமதற்குரிய மந்திரந்திரங்களையும் நடைநொடிபாவனைகள் முதலானவைகளையும் மக்கள் இந்திர திருவினும் மேம்பட்டசிறப்பினைப்பெற்று வாழும்படிக்கு மனப்பூர்வகமாகப்போதித்தாள் இதுகளனைத்தையுந் தெளியவைத்தபின்பு அவ்வாறே செய்யக்கடவமென்று தாய்தந்தையரை வணங்கிப்போற்றி அவர்கள் சிலவு கொடுக்கப்பெற்று அவுணருக்குத்தலைவனான சூரபன்மன் றுணைவருடன் சேனைகள்சூழ்ந்துவரத் தவஞ்செய்யுமிடத்தைநோக்கிநடந்தான்

மாயை நீங்குபடலம்.

ஓசவுனகாதிரிஷிகளேமற்றையசரித்திரங்களினையும்போதிப்போமெனச் சூதபுராணிகர்சொல்லுவார் பிள்ளைகள்போனபின்பு ஒப்பற்றவனப்பினையும்வடிவழகுமுள்ளமாயையானவள்தன்னிடத்திற்பொருந்தியமோகவாஞ்சையிற்பட்டுபக்கத்திற்குலவியிருக்கின்றகாசிபமுனியைப்பார்த்துத் தேவரீர்மனம்வருந்தாமல்இவ்விடத்திலிருந் துதவத்தைச்செய்யும்நான்குமாரர்களுக்குஉதவியாகப்போய்வருவேன்சிலவுதாருமென் றுநடக்கமுனிபுங்கவன் தன்மனதிற்பொருந்தியஆசைவிடாமலிணைப்பற்றித்தன்னமாயையைத்துடர்ந்து பெண்

னாகே அன்னியனைப்போல நினைந்து கிஞ்சிற்றுமிரக்கமில்லாதவனாய் என்னைத் தனித்துவாடவிட்டு மனந்துணிந்து நீபோவது தருமமோ சொல்லென்று வேண்டமாயையானவள் காசிபனை நோக்கி என்வரலாற்றினைக் கேட்பீராக நானிவ்விடம் வந்தது உம்முடன் கலந்து இல்வாழ்க்கையைச் செய்திருப்பதற்கன்று வலியபிள்ளைகளைப் பெறும்பொருட்டாகும் ஆதலாற் காரியந்தெரிந்தும் நீர்வியர்த்தமாய் விசனப்படவேண்டாம் நில்லும் நான்மாயவள்யிதனைற் றெரிந்து கொள்ளுமென்று சொல்லிச் சஞ்சலித்தனைய் அரசுசெலுத்தும் இராசனைவிட்டு நீங்குந் திருவுஞ்செல்வமும்போலவுருக்காந்து போயினள் பின்பு பிரமகுமாரனான காசிபனானவன் தான்மையல் கொள்வதற்குக்காரணமாகியசிறந்த வடிவைப்பெற்ற மாயையின் தோற்றங்காணமல் மதிமயங்கித் தெளிவுபெறாமல் வருந்தித்திகைத்துத் தன்பெருமைகளனைத்துமழிவுபடப் பரதவித்துத் துக்கசாகரத்திலழுந்தினவனாய்ப் பொன்னுலகவாசிகளாகிய தேவருமதிசயிக்கவிளங்கியபொய்கைகள் தடாகங்கள் சித்திரமண்டபங்கள் வயிரக்குன்று முதலெவற்றையுங்காணதவனாய் வாடிமயங்கிப் பிராணனையிழந்ததேகத்தைப் போலப்பிறமித்துச் சோபித்திருக்கின்றதனுவாயிற் பிரமன் தன்குமாரனுக்கடுத்த சம்பவத்தைப் போதவுணர்விலறிந்து மோசம்நேர்ந்தது யின்றாமதப்படலாகாதெனக்கருதி அன்னவாகனத்திலேறிக் ககனமார்க்கமாய் வருவதைக்காசிபன்கண்டு பிதாவெழுந்தருளினுனென்று எதிர்கொண்டு வணங்கிநிற்க ஆசீர்வதித்துக்குமாரனே நீசெய்திருந்த சிறந்ததவங்களையொழித்து இவ்வாறுபுலம்பித் திரிவதற்கடுத்த காரணமென்னவென்று வினவியபோது நடந்த சரித்திரங்களைப் பிதாவுக்குத் தெரியப்படச்சொல்லியவுடன் நாணமுற்றுக் குமாரனுக்கடுத்த மனக்கவலையைத்தேற்ற நினைந்தவராய் நான்குவேதங்களையும் மற்றக்கலைகள்முதலாக வோதித்தெளிந்துபேரறிவைப் பெற்றமுனிவனே உன்னைப்போன்றவனே ஒருபெண்பொருட்டாய் மையலைப்பெற்றுப் பேதைமாந்தரையொத்து மயங்கி வருந்துகின்றனையோ பெரியோர்களால் சோதித்து நீக்கப்பட்டு இவ்வுலகங்களிற் றொண்டுதொட்டிருக்குங் கொடுமைபெற்ற பொருள்களானவை கட் காமம் எனச்சொல்லுவர் இதிற்கள்ளையுண்பானுயின் உணர்வையழிக்கும் மற்றக்காமத்தைமனதிற்கொண்டவுடன் உயிரையும்மாயாமல் வதைத்து வாட்டுஞ் சற்றுநினைத்தாலும் உள்ளத்தைக் கெடுக்கும் கேழ்விப்பட்டாலுஞ்செவிகளைக்கொளுத்தும் ஒருகாலமித்துடக்கிற்பட்டவுடன் யிதுகெடுதியென்றறிந்து தள்ளினுஞ்சுடும் இத்தன்மையினற்கள்ளினுங்காமங்கொடியதுமேலும் மாறிமாறிவரும்பிறவியையுந் தீவினைகளனைத்தையுந் தருவது காமமாதலாற் சலனமில்லாத விவேகத்தினுலாராய்ந்து அந்நோயினைக்கொன்றவரல்லரோ மோட்சவீட்டையெளிதிற்பெறவல்லவர் விவேகஞானிகள் அதனை நெஞ்சிலும் நினைப்பரோ ஒருகாலும் ஊழின்பாலாய்ச்சந்

றெண்ணினபோதினும்இம்மையில்மிகுத்ததுக்கத்திலழுத்துவதன்றியில்மறுமையினும் அளவுபடாத பவக்கடலிற்றள்ளியலைக்கும் இதுவன்றியும் நலமில்லாதகாமமானது உலகைநிமைப்போதிற்றகிக்கவல்ல விஷத்தினுங் கொடியதாம் ஆதலாற் குமாரனே இம்மைமறுமைநலனை யழிக்குங் காமக்கவலையிற்பட்டுவாடித்தவத்தையிழக்கவேண்டாம்உனக்கிவ்விதகளிப்புண்டாகப்புணர்ந்தமாதையாரொன்றெண்ணினை தேவரைவாட்டவஞ்சகங் கொண்டுவந்தமாயையாகும் இனிஇத்தீயகருமத்தை யிச்சித்துச்செய்ததனா லுண்டாகிய குற்றங்களைக்கழிக்க நினைந்து பழையபடிக்கு நிலைபெற்றுத் தவங்களைச்செய்யக்கடவையென்று பலவாகப்போதித்துக் காமக்கவலையைப்போக்கிக் குமாரனைத் தவத்தில்நிறுத்திப் பிரமன் தந்நகரைநோக்கிச்சென்றான் பின்பு ஒப்பற்ற பிதாமகன்போதித்த வுண்மைகள் மனதிற்பட்டவுடன் சேறாடிய சலத்திற்றேற்றாங்கொட்டையையுரைத்தவுடன் றெளிவெய்துமாறுபோலக்காமவின்பத்தினாற் கலங்கிய காசிபன் மனந்தெளிவெய்தினவனாய்ரிஷபவாகனக்கடவுளைப்போற்றிக் கொடியவினைகளை நீத்தற்பொருட்டுக்களிப்புற்று அரியதவத்தினைச் செய்வதானான் இப்பாற் காசிபனைப்பிரிந்துபோன மாயை சுக்கிராசிரியனைக்கண்டு வணங்கி நடந்தசேதிகளை விண்ணப்பஞ்செய்ய மகிழ்ந்து அவன் மேல்நடந்துகொள்ளவேண்டும் மார்க்கங்களைப்போதித்தபடிக்கு மாயை வனத்திற்சென்று தன்பிள்ளைகள் அகோரமாகிய தீயைவளர்த்தி வேள்விசெய்கின்றதறுவாயில் வேண்டிய உபகரணங்களைத்தரும் வரத்தைப்பெற்றுப்போகச் சிவபிரானைநோக்கிக் கடினமாகிய தவத்தினின்றனள் கேட்டீர்களோ சவுனகாதிரிஷிகளே இதுபரியந்தங் காசிபன் மாயையைக் கலந்தவிதமுஞ் சவுரியவான்களான சூரன்முதலிய பிள்ளைகளைப்பெற்ற காரணத்தையும் விரித்தோம், இனிஅக்குமாரர் தவவிரதயாகங்களைச்செய்து பரமசிவகடாட்சத்தினாற் கிடைத்த வரப்பிரசாத முயற்சிகளையும் விளக்குவோமென்றுசூதபுராணிகர்சொல்லத்துடங்கினர்.

அசுரர்யாகப்படலம்.

தாயினேவலின்பிரகாரம் வேள்வியைச்செய்யவேகமாய் நடக்கின்ற சூரபன்மன் துணைவர்முகத்தைப்பார்த்துச் சகலசெல்வங்களையும் பெறுதற் கடுத்தமகத்தை முடிக்கும் நிமித்தம் நாம்வடதிசையிற்குறித்த எல்லையைச் சேரு முன்னிலையில் உலகமெங்கும்பார்த்து நடக்கின்ற சேனைவெள்ளங்க

னைத்தையுஞ் சேர்த்து அணிவகுத்து முன்னும்பின்னும் நீங்கள் காவல்கொ
ண்டு வருமினென்றவுடன் தலைமையனைவணங்கி தேவரீர் நினைந்தகருமம் நன்று
யிருக்குமென்று எப்போதுங் கோபமேசொலித்திருக்குஞ்சிங்கமுககாசூரன்
முன்னணியைக்காவல்கொண்டு போகவுஞ் செயசாலியாகிய தாருகன் பின்
னணியைப்போத்திவரவும் இசைந்து தலைமையனிடத்திற்சிலவுபெற்றுப்போய்
ப்பதாதிகளைக்கூட்டி வரிசைப்பட வகுத்து அவ்விருசூரருங் காவல்கொ
ண்டுவர அவர்களைவலின்பிறகாரம் இராக்கதச்சயின்னிய மெங்கும் பரந்து
அடர்ந்து யிடிகளைப்போலக் கால்களைப்பெயர்த்துவைத்தும் உசனித்தும்
பெரும்புறக்கடல்பெருகியதையொத்துச் செல்கின்றபொறையைத் தாங்கப்
படாமையாற்பூமிதேவிவருந்தவும் அவளுக் காதாரசத்தியாயிருக்கும்அஷ்ட
மாநாகங்களுஞ் சேடனும்நெளிந்து விஷங்களைக்கக்கிக்கண்மண்டையிதிங்
கித்தத்தளித்துச்சோரவுஞ் சந்தகுலாசலங்களும்மேருவும் ஆற்றுமல்நெக்கு
விட்டுச்சலிக்கவும்ஆதிகூற்மமும்முதுகுநெளிந்துஉறுப்புக்களைவெளியிட்டு
வாடித்தியங்கவும்மற்றவைஅல்லோலகல்லோலப்படவும்மேலும்அச்சேனை ந
டக்கும்வேகத்தினெழுந்ததூளிபடலமானது ஓங்கிப்பொன்னுலகத்தைமூடி
ப்பிரமன்பதிலைத்தாண்டிவிண்டுவுலகைக்கூடியஸைப்பதுஎப்படிக்கிருக்கின்
றதென்றால் புதிதாகத்தோற்றி யெங்குமூடிக்கணிதப்படாத ராட்சதவெள்
ளங்களின் சுமையைத்தாங்கவென்னாற்கூடாதெனப்பூமிதேவிபறந்துசேசவ
ளிடத்தில்முறையிட்டுக்கொள்ளச்சென்றதுக்கொக்கும் இதன்றியும் அச்
சேனைகள்பாதங்களிலணிந்த வெண்டயங்களிளோசைக்கு மாறுகச் சமுத்திர
மொலிப்பதோவென்று அதிககோபங்கொண்டுதாவியதைப்போல அளவிறந்த
சயின்னியங்கள் கால்களைப்பெயர்த்துவைக்குந்தோறும் பறந்த பூழியானது
சென்றுபடிந்து செருக்கிச் சத்தசாகரங்களின் சத்தங்களையடக்கவும் அப்ப
தாதிகள் கால்களிற்பட்ட வானத்தையளாவித்தழைத்தவிருட்சங்களனைத்துந்
துகள்பட்டெழவும் மிதிக்குந்தோறும் மேருவைநிகர்த்த பறவதங்கள்முழு
தும்பொடிபட்டிறையவுஞ் சகலமுந்தன்சுமையாகத்தாங்குஞ் சேடன்பரிக்
கப்பெறாமல் மார்புநெக்குவிட்டுவாடவும் எதிர்ந்த பிராணிகள்முற்றுஞ்
சின்னபின்னப்பட்டொடுங்கவும் பூர்வத்திற் பரமனாற் றிரிபுரங்கள் துகள்
பட்டதைப்போலப் பூமண்டலம்பொடிபட்டெழவும் வலியராட்சத வெள்
ளத்திலுண்டாகும் பேரொலியும் நடையிலெழுந்த தூசிப்படலமுங் கலந்
தெழுவதைக்கண்டதேவர் வெருவி நமது கர்த்தனானபிரமன் மாண்டனனோ
சத்தசாகரங்களும் விண்ணகத்தெழுகின்றனவோவென்றுவாடவும் மறுவற்ற
லட்சுமியினுமேலான வனப்புள்ளமாயையினது திரோகத்திலுதித்த சிறந்த
அவுணவெள்ளமானது திசைத் திசைக்குப் பதினாயிரயோசனை யளவையில்
நெருங்கிப்புவியினும் விண்ணினும் அடர்ந்துசெல்வதைக்கண்ட தேவேந்

திரன்யினியென்னசெய்வோமெனப் பயப்பிராந்திகொண்டுசோரவும் அக்
கினிதேவன் தன்வெப்பமாறி மறைவிடந்தேடவும் பிராணிகளைமுடிவுசெய்
யும் எமன் ஏக்கமுற்றுமூலையிற்சாரவும் நிருதியானவன்வாடிமனஞ்சோரவும்
வருணன் ஊக்கமடங்கிவாடவும் வாயு ஆற்றலடங்கியோடவும் ஈசானன்
நெஞ்சழிந்தோயவும் இவ்வாறுசகலருந்தத்தளித்தலையப் பிறையையொத்து
வளைந்தொளிருங் கூரியகோறதந்தங்களைப்பெற்றராட்சதவெள்ளங்கள்நடக்
குமுன்னிலையில் எழுந்ததூகள் விரிந்துமூடிய காலத்துத்தேவர் சரீரகாந்தி
யழிய அச்சேனைகள்கெற்சித்த ஆற்பாட்டமோசையவர்மனவூக்கத்தையும்
வாட்டியது இவ்வித வுற்பாதங்களை விளைத்துநடக்கும் பதாதியின் முன்
னிலையிற்றீயும் அஞ்சியொடுங்குங்கோபக்கண்களையுடைய சிங்கமுகாசூரன்
கண்ணிமையைப்போலக்காத்துப்போகவும் மதயானையையொத்த தாருகா
சூரன் புறவணியைப்போற்றிவரவுஞ் சக்கிரேஸ்பரனை சூரபன்மன் பலதி
சையினும் விழிகளைப்பரப்பி நம்ப்பிறதேசத்திற் செல்கின்றதறுவாயின் இச்
சந்தோஷசேதியை ராட்சதகுருவாகியசுக்கிராச்சாரியறிந்து அவர்களைக்கண்டு
வாழ்த்தைசொல்லிவாழ்த்திவர நினைந்துமுத்துப்பல்லக்கி லெழுந்தருளினவரா
ய் அந்நடிசையினும் நெருங்கிப்போகின்ற சேனாசமுத்திரத்தைப்பார்த்து
அவ்வீரர்நடக்கும்வேகத்தையும் வலியினையுஞ் சூழ்ந்த காவல்களையும்மன
வூக்கத்தையுங்கொடியவீரத்தையும் வெற்றியையும் நிதானித்தறிந்துமனந்
திடுக்கிடவாடினவனாய் அம்மம்ம யிதுபுதுமை யிதற்குமுன் அளவிறந்த
அவுணவீரனைக் கண்டதுண்டுயிவனையொத்தவன்மையும் வேகமுஞ்சூரமும்
பெற்றவனை யிதுபரியந்தம் பார்த்ததுங் கேட்டதுமிராது ஆதலால் யிது
தாமரைக்கமலவாசியாகிய பிதாமகன்படைப்பின் பெருக்கோ யிவர்களுக்
கும்ஒருவர் நிகருண்டோ எதிர்ந்தசத்துருக்களுயிரையும் உடலையும்ஏகமாய்க்
கவளீகாரஞ்செய்யவல்லயித்தானவருக்குத்தேவராசனையும்விஷ்ணுவையும்மற்
றதேவரையுஞ்சமர்த்தலையில்வெல்லவொருபொருளோ இச்சூரர்வலிக்கழிவில்
லனவாயினும்இவர்முன்னோர்கள்வருந்திநோற்றுப்பெற்றதைப்போலத் தவ
வலியுஞ்சிறந்தவரங்களுந்திவ்வியபாணங்களும்பெற்றவரல்லர் ஐயையோ இவ
ர்களுக்குமொருகுறைபாடிருக்கின்றது ஆகிலும் எமனைவென்றசிவபிரானுக்
குமாத்திரம் யாதொருகுறையுங்கண்டதில்லைமற்ற அண்டங்களிலிருக்கும்
அனைவருக்குமொவ்வொருகுற்றமுண்டுயிதனைச்சகலருமறிவார்கள் ஆகையால்
யிவரிடத்தில்நேர்ந்திருக்குங் குறைபாட்டினைச் சிலவிரதங்களை முடிப்பரா
யின் ஒளிதிற்போக்கிச் சிறப்பைப்பெற்றோங்குவர் இது நிலைபட்டதல்ல
தாழ்ந்தவர் ஒருகாலமுயர்வதுமுண்டுயிதற்குகாதிமகாராசன் பிள்ளைவிசுவா
மித்திரன்சாட்சியல்லவோவென றுஇவ்வாறுஅளவற்றஆட்சேபனை சமாதான
ங்களைப் பேசியபின்பு ராட்சதராசராசனைவிருக்கின்ற சூரபன்மனெதிற்

போய்உபசரித்து ஆசிகளைச்சொல்லி வருவோமெனச்சுக்கிரன் நினைந்து யிவ்வெள்ளத்தினைக்கடந்து தீயின்வெப்பத்தையவிக்குங்கோபத்தையுடைய அவுணராசன்முன்னஞ்சேர்ந்து வார்த்தையாடுவதுமிகவுமரிதாயிருக்கின்றது ஆதலால் மாயமந்திரமொன்றைச் செபித்துப்போய் ராசனைக்காணுவோமெனக் குறித்துபூமியிலிருக்கும்பிராணிகளைவசியப்படுத்தவல்ல சம்மோகனமென்னுமந்திரத்தைவிதிப்படிக்குஉச்சரித்துச் சேனாசமுத்திரமத்தியிற் புகுந்து ராட்சதராசனை நெருங்குமுன்னிலையில் அம்மாயமந்திரத்தின்கொடுமையினால் வஞ்சகமேகுடிகொண்டிருக்கும் ராட்சதரிடவலிய யிரும்பையொத்த மனமுருகிஉதிரத்தினாற்குழைபடும் வாளாயுதத்தினைப்போலக் கரைந்துபத்தியினையத்துடன் எதிர்பார்த்திருந்தனர் ஆதலாற் பிரகாசமிகுத்தயிடத்தில் யிருள் நீங்காமல் நிற்குமோ இப்பிரகாரஞ் சலசமற்றியாகிய பெரும்புறக்கடலையொத்து நெருங்கிச்செல்லுஞ் செயசாலிகளான இராக்கதப்படைத்தலைவர் சுக்கிரனைக்கண்டவுடன் வபிரம்போலவுறுதிபெற்றுத்தயையற்றிருக்கும் மனங்கரைந்து கரங்களைக்கூப்பித்தொழுதகாலத்தில் ஆசிரியனானவன் சூரன் சிங்கமுகன்தாருகன்யிவர்களைப்பார்த்துக்கையெடுத்துச்சகலசெல்வங்களையும் பெற்றுத்தேவேந்திரன் முதலானவருக்குமேலோங்கிச் சுகசீவிகளாகவுமக்கடவிர் இராக்கதருக்குநெடுநாளாயடைந்திருக்குங்கொடிய துயர்நோயைநீக்கத் திறிகடுகின்சம்பந்தமாகிய மருந்தைப்போலவுதவிசெய்துஉங்கள்குலம் விறிவிளங்கச் சிவகடாட்சத்தினாற் சகலபேறையும் அடையக்கடவீரென்று பலவாகவாழ்த்த அதுகளைக்கேட்ட சூரபன்மன் களித்துயிதனைச் சொல்லுவான் நீர்மேகவாகனனானயிந்திரன்வாழும்பொன்னகரத்திலிருப்பீரோ மற்ற விண்ணவர்பதிகளின் வாழுவீரோ பூமண்டலவாசியோ ஆதிசேஷன்அமர்ந்த பாதலத்திற் றங்குவீரோ ஐயனே தேவரீரின்னுமொன்றும்வந்தகாரணமியுதென்றும் அடியேனுக்கொன்றுந்தோற்றவில்லை உம்மைக்கண்டவுடன் என் மனங்குழைவதன்றியில் எலும்புமுருகி றோகபரவசமாகப்பூரித்துப் பத்தியிலாகின்றது அரியதவத்தைச்செய்வதாகவனத்தைநோக்கிப்போகக் கால்களுமெழவில்லை எங்களிடத்திற் பிறியத்தினலெழுந்தருளினீர் யோசிக்குமிடத்திற் பிராணிகளனைத்துந் தங்களுக்கொருபிடர்நேருமாயின் அம்மையப்பனென்றுமுறையிடவிரங்கி பிரசன்னமாயாளும் பரமனைப்போற்காணுகின்றது இஃதன்றியும்யான்முற்சனனத்திற்றிரோகம்மிகவும் வருந்திநோற்றதவப்பேற்றினாற் றேவரீரைக்காணப்பெற்றேனென்று உருகிச்சொல்வதைக் கேட்ட சுக்கிராசாரியனானவன் ஓ ராசசக்கிரேஸ்பரனே எமதுசரித்திரத்தைக் கேட்பாயாக நாம் வானவழியிலுலவி உலகந்தழைத்தோங்க மழைபெய்தல் முதலான கருமங்களைநடாத்திவருவதுமன்றியில் உங்கள்வம்சபரம்பரையாக குருவாகவுமிருப்போம் நமதுபெயர் சுக்கிரனெனச்சொல்லுவார்கள் நீங்க

ளுதித்த சேதியறிந்து யினி நீவிர் நடந்துகொள்ளவேண்டுமெ உறுதிகளைப் போதிக்கநினைந்து யிவண்வந்தோமென்றவிசேஷஞ் சூரன் செவிகளில் விழுந்த வுடனே மனங்களித்து எமதுகுரவனேயினிகிருதார்த்தனானேனென்று போற்றி மும்முறைவணங்கிநிற்கச் சுக்கிரன்மகிழ்ந்து சிவகடாட்சத்தினால் யிதனைச் சொல்லுவான் சகலசாஸ்திரங்களையுங் கேழ்விப்பட்ட சூரனே நீ போய் தவஞ்செய்திருக்கையில் உங்களுக்குச்சத்துருக்களாகிய தேவர் அளவற்ற யிடையூறுகளைச்செய்வார்கள் அதுகளுங்களை நெருங்காமல் யிதனைச் சொல்லுவோமென்று கூற்றுவனையுதைத்தசற்கன் மந்திரமாகிய பஞ்சாட்சரத்தை வேதவிதிப்பிரகாரஞ் செவியிலுபதேசித்துக் கேளும் ராசனே யிச் சிறந்தமந்திரத்தை மனம்வாக்கொருமித்துக் கொலைகளவு கட்காமமாகிய குற்றங்களைப்போக்கி யிடைவிடாதுஉச்சரித்துத் தவத்தைச்செய்வையாயிற் பரமன்காட்சிதந்துவேண்டும் வரங்களையுந்தருவானென்றருளச் சூரன் மீளவுஞ்சேவித்து எமதிறைவனேதேவரீர்கட்டளையின்படிக்குச்செய்யக் கடவேனென்றுசொல்லக் குரவன்களித்து அவர்களுக்களவற்ற ஆசிகளைச் செய்து தவத்துக்குப்போகச்சிலவுகொடுத்து தனதுபதவியைச்சேர்ந்தான் இப்பால் மாயைபுத்திரர் அளவிறந்தசேனைகள்சூழ்ந்துபோற்ற வடதிசையைநோக்கி நடந்துதன்னிடத்திலிருந்துநோற்றவருக்குயிஷ்டகாமியங்களையும் மோட்ச வீட்டையும் எளிதிற்பெறச்செய்யும் மகிமையையுடைய வுத்தரபூமியைச் சேர்ந்து தழைத்தோங்கிக்குளிர்ந்தநிழலைப்பரப்பும்விருட்சங்கள் அடர்ந்த அவ்வனத்திலொருயிடத்தைக்குறித்து வேள்வியைமுடிக்க யோக்கியமாய்ப் பதினாயிரயோசனை விஸ்தீரணமுள்ளமதிலையெழுப்பநினைத்து வலிபெற்ற ராட்சதவீரரையழைத்து அவர்களாற் பூமண்டலயிடங்களிலிருக்கும் பறவதங்களனைத்தையுந்தருவித்துப்பொன்மலையளவை யுயர்ச்சியுள்ளதாய்ச்சமுத்திரவளையி லோடிப் பரந்திருக்கும் மதிலையெழுப்பி அதன்மத்தியில் விசாலமாகிய வாயிலொன்றைவிட்டு கொம்மைகள்முதலிய வுறுப்புகளைச் செய்வித்துச்சிற்பநூலின்படிக்குமுடித்த மதிலைச்சூழக் கணிதமற்ற ராட்சதப்படைகளைக்காவல்வைத்து அதற்குட்பிரகாரத்தில் நான்கு வாயல்களை யெழுப்பிப் பூமிமுதல் வானபரியந்தம் ஏகமாய்ப் பல பறவதங்களினாற் செய்யப்பட்டதாய் நம்பொறிகளால் அதின்பெருமையைக்குறிக்கப்படாததாய்ப்பரந்தெழுந்தசுவரும்அதைச்சூழக்காவலாகராட்சதவெள்ளங்களையணியாகவைத்திருப்பதையும் யோசிக்குமிடத்தின் இப்பூமண்டலத்தை வளைந்திருக்குஞ் சக்கிறவாளகிரியையும் அதைச்சூழ்ந்திருக்கும் யிருட்பூமியையுமொத்துத்தோன்றவும் அச்சுவர்த்தலத்திற் சித்திரப் பொறிகளைப்போலச் சிகரங்களோங்கியவரைகளினாலமைக்கப்பட்டதாய் ராட்சதர் காத்திருக்கும் புரிசையின்புறத்தில்விளங்கும் வாயல்கடோறுங்காவல்கொண்டுபோற்றமந்

திரபூத்வகமாய்ப் பத்திரகாளியையமைத்திருத்தி வெளிப்புறம் முற்றினுங் காவல்கொண்டிருக்கக் காளிக் கேவல்செய்வோரையும் பூதபசாசங்களையும் மந்திரவாக்கியங்களினாற் கூவி வரிசைப்படநிறுவி இவ்வாறு ஆம்பல்மலரை யொத்துச் சிவந்தொளிரும் விழிகளையுடையபத்திரகாளி முதலானவரைக் காவலிருத்தியபின்பு மந்திரவிதியினாலுபாசித்துவந்தவயிரவக்கூட்டங்களைச் சேவித்துப்போற்றி யாகத்தைப்பாதுகாத்தருளத்தாபித்து இப்படித்தாய்ப் புறத்தினும் மத்தியினுந் தள்ளுதற்கரியபோற்றுதலை நாட்டியவுடன் சூரனானவன் வேதாகமவிதிப்பிரகாரம் பரமசிவத்துக்குப்பிரீதியாகவேள்வியை நடத்தயோக்கியமானதாய் அளவைப்படிக்குநடுப்பிறதேசத்தில்ஆயிரயோசனைப்பரப்பும் ஆழமுமுடைய ஓமகுண்டத்தினையும் அதைச்சூழ வெதிகைகளையுஞ்செய்வித்ததறுவாயிற் பூமிதேவியானவள் பாதகர் நம்மை வருத்துகின்றனர்ஒளிக்கவும் யிடமுமில்லையென்னசெய்வோமென்றேங்கியொடுங்கவும் ஆயிரயோசனையாழப்பட்டநிலத்தைப் பேத்தெறிவதைப்பாதலத்திலிருக்குஞ் சேஷனும் மற்ற நாகராசருங்கண்டு கொடியதானவக்கூட்டம் யித்தலத்திலும்பிறங்குவர்போற்றோற்றுகின்றதென நடுங்கித் தமதிருப்பிடங்களைநீங்கி அன்னப்பித்திகையின்கீழ்ப்புறத்திற் சேர்ந்தொளிக்கவும் அக்காலத்திற்பாதலசங்கையானதுகுமிளியிட்டுப்பெருகியெழக்கண்டவருணராசன் பாதகர்சூழ்ந்திருக்கின்றனர்வெளிவருவையாயின்வுள்ளங்கையிலேற்றஉண்டுவிடுவர்மேல்வருவதுதகாதுபாதலத்தைப்பிளந்தோடியொளிப்பதழகென்ன அவ்வாறேபெருகியதுபோலக் கீழ்த்தலமேழினும்நிறைந்தலைக்க அவ்விடங்களிற் றங்கியபிராணிகள்கண்டு யிக்கங்கை யிவ்விடங்களிற்பாய்ந்துமோதுதற்குக்காரணம்யாதென்று அற்புதச்சிந்தையராய்யிதினாலென்னதீங்குநேரவிருக்கின்றதோ தெரியோமெனவாடவும் யிப்படிக்கு நடுநாயகமாகிய ஓமகுண்டம்முற்றியபின்பு அதைச்சூழ்வர் நூற்றெட்டு குண்டங்களையமைத்து அவைகளைச்சூழ ஆயிரத்தெண்வகைக் குண்டங்களையுங் கல்லிவைத்து இவ்வாறு விதிப்பிறகாரம் ஓமவகைக்குண்டங்களும் அதற்குரிய வெதிகைகளாதியானவைகளையும் முடித்ததறுவாயிற் சூரன் யிதுகளைக்கண்டுகளித்து வேள்வியைநடாத்த முயற்சிகொண்டவனாய் இனி ஓமத்திரவியங்கள் மற்றவுபகாரணங்கள்வேண்டும் யிதற்கென்செய்வோமென்றுயோசிக்குமுன்னிலையில் யிதனை நற்குருயூகியமாயையறிந்துதேவதேவனாகியபரமசிவனாட்சத்தினால் அவைகளைவுதவுவதாயினள் அஃதென்னையெனின் இயாளி சிங்கம் புலி யானை குதிரை வெள்ளாடு முதலியமிருகங்களின்பிறச்சியை அவிக்குஉதவுவதாகமலைகளைப்போல ஒருபக்கத்திற்குவித்தாள் மற்றோரிடத்தில் அவற்றினுதிரங்களைச் சமுத்திரம்போலநிரப்பினள் மற்றொருபாலில் நெய்யைக் கடலையொப்பச்சேர்த்தாள் மற்றொருபாகத்தில் வேம்புமுதலிய கொடிய

எண்ணெவகைகளைப்பிரமாணமில்லனவாகநிரப்பினுன் மற்றயிடங்களிற் பால்
தயிர் தேன்யிவற்றை அச்சாகரங்களைப்போலச் சேர்த்தான் இஃதன்றியுஞ்
செஞ்சந்தனக்குழம்பையொருபுறத்தில்நிரப்பினுன் ஐவிதநிறமுள்ளசோறு
பாற்சோறுநீஞ்சோறுயிவற்றையொருபுடையிற்குன்றுகளையொப்பக்குவித்
தனன் வேள்விக்குரியபசுக்களையொருபுறத்தில்அணிவகுப்பாகச்சேர்த்தனன்
இவையனைத்து முற்றியபின்பு புதல்வருக்கரியபேற்றினைத்தரவல்லவேள்விக்
குண்டமத்தியில் உலகங்களையுண்ட செந்தாமனாக் கண்ணனையுந் தடாரித்
துருவுங்கூர்மைபெற்றவயிரக்கம்பமொன்றைநாட்டினன்ஒருபுறத்திற்சிகப்பு
அட்சதையைக்குவித்தனன் செந்நல் அரிசியையொருபாற்சேர்த்தனன் செம்
மலர்வகை புனுகுசவ்வாது முதலியதையொருபுறத்தில்நிரப்பினன் செம்மறி
யாடு தருப்பைவகைகளை யொருபக்கத்தில் வைத்தனன் விஷீச்சம்பந்தப்
பட்ட எட்டிவேம்புமுதலானசொடியவிருட்சங்களைமுறித்துச்சமித்துகளாக
மலைகளைப்போல அடுக்கினன் வேள்விக்குண்டம் வெதிகைதோறும் நிறுத்
துப்படியாகக் கும்பக்குடங்கள் மடக்குகள் கலயங்கள் பாலிகைகளாதிய
பாத்திரங்களைக்குன்றெனச்சேர்த்தனன் பொற்றலத்தின்கண் வெள்ளிமுளைத்
தைதப்போல நெற்பொரிகளை மலையையொப்பக்குவித்தனன் நவதானியங்
களை யொருமருங்கிற்சேர்த்தனன் இஃதன்றியும் வேண்டுவன யாவையும்
வெவ்வேருய் அச்சிறந்த யாகமுடிபெய்தற்பொருட்டு மூன்றுயோசனையள
வையிற்குவித்த மாயையின்செய்கைகளைச் சூரன்கண்டு விம்மிதமுய் ஓஓ
இவ்வாறு யாவரால்முடிக்கப்படும் நற்றுயாதலின் யிவையனைத்தையும்வருந்
திச் சேர்த்தனளென்றுமகிழ்ந்து யினி தாமசப்படலாகாதென்றெண்ணிச்சக
லரும்புகழத்தக்க விரமாமகத்தைத்தொடங்குவதற்கு நிச்சயித்தவனுய் இரத்த
மாம்சசம்பந்தப்பட்டபலவகைப்பிராணிகள்நெருங்கிய உலகங்களனைத்தை
யும் எள்ளினுள் எண்ணெயைப்போற் கலந்தாட்டும் மகிமைபெற்ற பரம
சிவத்தைப்போலவே மேம்பாட்டையடையநின்ற சூரபன்மன் வேள்விக்
குண்டமத்தியிலிருக்கும் வச்சிரக்கம்பத்தைத் தன் வலிகொண்டுசீர் பெற
நாட்டி வேதவிதிப்படிக்குப் பூசித்து இயாகவெல்லையைச் சூழ்ந்திருக்கும்
மதில்நாற்புறத்திலும்ஓங்கிநிற்கும்வாயல்கள்தோறுஞ்சென்று உச்சிறநோக்
கையுடைய ரணபத்திரகாளிமுதலியனைப் பூசித்துப்போற்றி ஆட்டுக்கடாக்
களின் மாம்சங்களையும் ரத்தங்களையுந் திறத்தியாகப் பலிகொடுத்தபின்பு
மதிலினிடங்களில் நெருங்கிக் காவல்கொண்டிருக்கும் உரத்தவாற்றலை
யுடைய பூதபேதாளக்கூட்டங்களுக்கும்மேகத்தைப்போலக்கறுத்தநிறத்
தைப்பெற்றபசாசவகைகளுக்கும்போதுமானமட்டும் பசுமிருகங்களினுன்
களைப்பலிகொடுத்துப் புறத்திற்போற்றிநின்றகாளிக்கூட்டங்களுக்கும்மாம்
சங்களையும் உதிரங்களையும் அபரிமிதமாகப்பலிகொடுத்துக் கூற்றுவனையும்

வெல்லும்வலிபெற்றவயிரவக்கணங்களைப்பத்தியுடன்வழிபட்டுப்போற்றி அளவிறந்ததசையுடன் மதுக்களைப்பொலிப்பித்துஇவைமுற்றியபின்புதலைமைபெற்றகுண்டத்தினைச்சூழவிருக்கும்ஆயிரத்தெண்வகைக்குழிகளிலும்வியிச்சமித்துக்களை மந்திரவிதிப்படிக்கிட்டு முத்தழலினையும் ஒருங்கெய்தமூட்டித் தம்பியர்சூழவரச் சூரபன்மன் அவைகளைப்பூசித்து மாம்சவகைகளையும் உதிரவெள்ளங்களையும்மிறைக்குந்தோறும்பரமசிவத்தின்திருமந்திரங்களை யிடைவிடாமற்செபித்து அவ்வவிகளைச்சிவப்பிரீதிசெய்துயிம்மகத்தை நடாத்தவல்லவர் யாவரொன்றுயோசித்துத்துணைவனாகியதாருகனைப்பார்த்துப் பெருமைபொருந்திய யிவ்வேதிகைகடோறுமவி வேதவிதிப்படிக்குமந்திரபூர்வகமாகச்செய்யவல்லவன் உன்னையல்லதுவேறுகாணேனாதலால்யிவ்விடத்திலிருந்து போற்றக்கடவையென்று அவனை அயலவைகளுக்குத்தலைவனாக்கிவிட்டு அதற்குட்புறத்தில் விளங்கும் நூற்றெட்டு குண்டங்களைச்சேர்ந்து மேற்குறித்தபடிக்குப் பலிமுதலிய பூசனைகளைக் கிறமப்படிக்குமுடித்துச் சிங்கமுகாசுரனைநோக்கி யிம்மகத்தைப்பழுதுறாமல் நடத்திவருவையென நிறுத்தியபின்பு நடுப்பிறதேசத்திற் பிற்மாண்டமாகிய அகலமும ஆழமுமுள்ளதாய்க் கல்லியிருக்கும் பிறதான ஓமகுண்டத்தைச்சேர்ந்து மந்திரவிதிப்படிக்கு அற்சனைமுதலானவைகளில் ஒருகுறையாடுமில்லாமல் நடாத்திப் பார்பதிபாகனைகற்தனை மனதிற்றியானித்துப் பத்திபூர்வகமாய்வேள்வியைத்துடங்கி விஷத்தைதக்கக்குங்கொடிய சமித்துக்களைக் குன்றங்களைப்போலவடுக்கித் தீக்கடைக்கோலிற்பிறந்த அக்கினியை மந்திரங்களையோதி ஆவாகனஞ்செய்து வருஷத்தையொப்பநெய்க்குடங்களைக்கவிழ்த்துப் பற்வதங்களைப்போலக்குவித்திருக்கும் ஊனவகைகளை அபரிமிதமாகத் தீயிற்போட்டு மத்திமத்தியிற்சோரிகளைமந்திரமொழிகளுடற்சொரிந்து மிகுத்ததழலின்மீதுபலவகைச்சோற்றையிறைத்துவெம்பாகிய எண்ணைநெய் இரத்தங்களை ஒன்றின்பின்னொன்றைச்சொரிந்து யிடையிடையிற் பால் தயிர்க்குடங்களையிறைத்து வெண்ணெற்பொறிகளை முத்துக்களைப்போலவாரிவாரியிட்டுஒவ்வொருமந்திரமுடிவிற்றேன்மதுப்பதலைகளைவருஷத்தையொப்பச்சொரிந்து தொவரை மலைநெல் செந்தினை பயறு எள்ளுமுதலிய நவதானியங்களையும் யிறைத்து நெய்யைக்குடங்கொண்டுசொரிந்து கொடுமைபற்றிய ஐவகை நிறம்பெற்ற சோறுடன் பலவகைக்கறிகள் முதலாகப்பூமியின்கண்யிராநின்றபண்டங்களனைத்தையும் வடவாமுகாக்கினியின்மீது சமுத்திரம்பாய்ந்ததைப்போல மென்மேலுங்கொட்டி வுலகங்களில் எக்காலமும் அழிவற்றசித்தியைத்தாபித்த சூரபன்மனானவன் இவ்வாறுபலவகைப்பட்டதிரவியங்களை வேதவிதிப்பிறகாரம் பொன்போன்றசடைகளையுடைய சிவப்பிறதியாகமந்திரங்களைச்சொல்லி பேராக்கியெரியும் வேள்விக்கனலிற் சொரிந்து

வீரமாமகத்தைநடாத்திவருமுன்னிலையிற் பூவனங்களையுண்டு பொன்னுலகத்தையும் வாட்ட எழுவதைப்போல முன்னம்விஷ்ணு வாகமாய்த் தேடிக் காண்பரியபாதாரவிந்தங்களையுடைய சிவபிரானைக்கருதிச்செய்யும் வேள்விக் குண்டத்தினின்று பெருகியமுத்தழலுஞ் சடசடத்த தொனியுடன் வீறிச் சகலரும்பயந்தொடுங்க மேலோங்கிவானவெல்லை முழுதும்பரவி அஷ்ட திசையெங்கும்மூடிப் பிரமனுலகைவளைந்து யாதலத்தைக்கிட்டி மற்றைய புவனங்களினும் படர்ந்ததுமன்றியிற் சூரியன்பதத்தைக் கரித்தும்சந்திர மண்டலத்தையும் நட்சத்திரப்பதவிகளையும் அதற்குமேற்பட்ட சனிமுதலானவரிடங்களையுந்தகித்துந் தேவராசன் வாசஞ்செய்யும் அமராபதிபட்டணத்தையுங் கரியாக்கியுங் கேசவன்வாழும்வைகுந்தத்தைக் கொளுத்தியும் மற்ற தேவர்நகரங்களைச்சுட்டுந்திசைக்காவலர்பதங்களைவாட்டி அதாஅதஞ் செய்தது கேட்டீர்களோ சவுனகாதிரிஷிகளே அளவிறந்தகாலம் அரியதவங் களைச்செய்து மேம்பட்டகாசிபன் பிள்ளையாகிய சூரபன்மன் தன்முயற்சியினாற்செய்த ஓமகுண்டத்திற்பற்றியெழுந்த தீயானது மேற்குறித்தவாறு உலகங்களனைத்தையுங்கொளுத்தி வாட்டியதென்றால் இனிமேற்பட அவன் முடிக்குஞ் சிறப்புகளை யாவராற்கணித்துச்சொல்லப்படும் இஃதன்றியும் மகத்தைநடத்திவருமிடையிற் பால்தயிர்தேன்முதலிய அவிகளையிறைக்குந் தோறும் ஓங்கியெழுந்தபுகைப்படலமானது பரவி மேகவினங்கள்தோற்றுது மறைத்தும்உலகத்தைவிளக்குஞ்சூரியசந்திரர்பிரகாசங்களையடக்கியுங் கொண்டல்வண்ணனானவிஷ்ணுபதத்தைமூடியும் பிரமன்பதியைக்கொள்ளை கொண்டும் விஸ்திரணமாயிராநின்ற சத்தசாகரங்கள் பெரும்புறக்கடலினை மறைத்தும் வடவனலின் கொடுமையையடக்கியும் பரந்த பூமண்டலமெங் கும்மூடியும் யிக்கொடுமையினாலவ்விடங்களிலிருக்கும் பிராணிகள் சுவாசம் விடப்படாமையாற் கண்கள்பிதுங்கிவாடித் தத்தளித்தனர் இவ்வாறுசூரபன் மன் வேள்விக்குண்டத்திலெழுந்ததீப்படலமும் அவன்றுணைவராகியசிங்க முகன்றாருகனும்விளைத்த ஆயிரத்தொருநூற்றுப்பதினாறுஓமக்குழிகளினும் பெருகிய சுவாலையும் ஏகமாயோங்கி அண்டமுகட்டைத்தாவநின்றது எப் படிக்கிருந்ததென்றாற் சற்வசங்காரகாலத்தில் அண்டாண்டபுவன சராசரங் களையுங் கொளுத்தவெழுந்தவடவக்கனலையொத்து விளங்கியது இத்தன்மை யாகச் சூரபன்மன் வளர்க்கும் வீரமாமகப்பெருமைகளைக்கண்ட தேவதூத ரோடிஇந்திரர்க்கிதனைவிண்ணப்பஞ்செய்யக்கேட்டுரம்பையூர்வசிமுதலான தேவகணிகையராலும் மற்றுமுள்ளதந்திரங்களினாலும் யிடையூறுண்டாக்க வெத்தனித்துப்பார்த்துக்கூடாமையால் நடுங்கிவாடி துக்கசாகரத்தி லழுந்த வுஞ் சூற்கொண்டமேகவண்ணனான கேசவனும் நான்முகனும் ரிஷிகணங்க ளுஞ்சூரன்செயல்களைக்கேழ்விப்பட்டுஇவ்விதக்கொடியவேழ்வியினையாவி

செய்யவல்லவர் இப்பாதகன்நம்மினுமேம்பாட்டைப்பெற்று வாழமுயற்சி கொண்டனனேயென்று தத்தம்மிடங்களினிருந்தபடியே ஆகட்டும் இவன் வலியையுஞ் சவுரியத்தையும் அறிவோமென்றுகோபித்தார்களல்லது நெருங்கினவர்களல்ல இப்படிக்குச்சூரன் தன்றுணைவருடன் பஞ்சேந்திரியச்சேட்டைகளையடக்கித் திரோகவாஞ்சையற்று வெய்யல் மழைகுளிர் பசியிவைகளினால்வருத்தமின்றிப் பதினாயிரவருஷகாலம் அரிய வேள்வியைச்செய்தும் அழகியசெஞ்சடையையுடைய சிவபிரானெழுந்தருளிக் காட்சிதராமையைத் தெரிந்து திரிநேத்திரதாரியாகியகற்தன் நாஞ்செய்யும் அவ்வேழ்விக்கிரங்கி வருவரோவென்றெண்ணித் தம்பிமாரைக்கூவித்தான் நடத்திவரும் மகத்தை முடிக்கக்கட்டளையிட்டுவைத்துத் தேவர்மருண்டோட விண்ணிற்பாய்ந்து ஓமகுண்டத்துக்குநேராகநின்று திடசித்தனாய் உடைவாளையுருவிக்கொண்டுகூச்சமில்லாமற் றன் சரீரவுறுப்புகளைநாடி யரிந்தரிந்து மண்டியெரியும் அக்கினியினிடத்தில் அவியாகப்போட்டுச் சோனைமேகப் பெய்யலையொப்பப் பெருகுஞ்சோரியை நெய்க்குப்பதிலாகச்சொரிந்து வீரவேள்வியைச்செய்துவருகையிற்றன்னுடலிலிருக்கு மூனைக்கழிக்கக்கழிக்கப்பழையபடிக்குச்சேர்ந்தொன்றுவதைக் கண்டுவிம்மிதங்கொண்டுசகலருங் கிடுகிடென்று நடுங்கக்கொக்கரித்துமனதிலதிகசந்தோஷத்தைக்கிடைத்தவனாய் இச்செய்கை தமதிறைவனால் உண்டாயதெனநிச்சயித்து மந்தரகிரியையொத்த புயவலிபெற்ற நிருதராசனானவன் மீட்டும் அவ்வாறே அந்தரத்தில்நின்று ஆயிரவருஷவரையிற்றனையாகத்தைச்செய்தும் நெடியவனாவிஷ்ணுவும் பிரமனுந்தேடிக்காண்பரிய நிற்மலக்கடவுள்வராமையைக்குறித்து சூரன் மனம் வாடியேங்கி யான் முடிக்கும்வேழ்விக் கிரங்கிப் பரமசிவனாதுபரியந்தமெழுந்தருளாததன்மையினால்யிவ்வுயிரைவைத்திருப்பதிற் பிறையோசனம் யாது ஆதலால் யிறந்தவேயுறுதியெனநிச்சயித்துஒப்பர்றவிவேகசாலியாகிய சூரனானவன் அக்கினிக்கொழுந்துவிட்டெரியும் யாககுண்டத்தின்மத்தியிற் சிவப்பக்காய்ந்துமந்திரவலியினா லழிவின்றிப்பிறகாசித்திருக்குங்கூரியவச்சிரக்கம்பத்தின்மீதுகுதிக்க அவ்வூசியானதுதடாரித்து கபாலத்துக்குமேலுமுருவி வேழ்விக்குண்டத்தினடியின் விழுந்து சூரனென்னும் ராட்சதன் றிரோகமுற்றுத்துகள்படப் பதைபதைத்துமாண்டனன் அம்மகத்துக்குத் தலைவனாய் ஓமஞ்செய்திருந்த சிங்கமுகாசூரன் யிதனைக்கண்டவுடன்மனம் நடுநடுங்கிச்சகோதரசம்பந்தத்தினாற்கண்களில் நீர்பெருகுவதுமாதிஇரத்தவெள்ளமூற்றெடுத்துப் பாயக் கரங்கள் தீயினிடத்தில் அவிகொடுப்பதை ஓய்ந்தும் அதற்குரியமந்திரங்களைச்செபித்திருந்த வாயின்செய்கைகளையும் மறந்து கண்டவர் உயிரிருக்குமென்றையப்பட்டுவசனிக்கும்படியாகப் பிராணன் மூலாதாரத்தினொடுங்கத் துக்கசாகரத்திலழுந்தியுணர்ச்சியற்றிருந்து ஆயி

ரஞ்சிகரங்களையுடைய மகம்மேருவைப்போல நிலத்தில்விழுந்து புரண்டு சற்றுநேரத்திற்கியாபகம்வந்தவுடன் பதைபதைத்தெழுந்து மனஞ்சுழலப் பெருமூச்செறிந்து தன்வீரத்தையும் வலியையும்மறந்திவ்வாறு புலம்புவதானான் வல்லபத்துக்கொப்பற்ற மாயைகுமாரனே அரியதவங்களைச்செய்து சிறந்தகாசிபருக்கு யிஷ்டமுள்ளபுத்திரனே நிருதர்குலத்துக்கதிபதியேமன்மதனையொத்த வுமதழகிய தேகத்தைக்காணேன் எங்கொளித்தீர் தேவரீர் மனமும் உடலமும்வருந்திப்பலகாலம் அரியமகஞ்செய்ததற்குப் பெறும் பேறிதுதானோ ஓ அண்ணாவோ சகலதுன்பங்களையும் நீக்கிச் சீராட்டிப் பரிந்துவளர்த்த நற்றாயுங்கல்விமுதலியசெல்வங்களைப் பெறச்செய்யுந் தந்தையும் நீரேயென்றும் இத்தானவக்குலத்தை விர்த்திசெய்து ஆளவல்ல சக்கிரேஸ்வரனும்நீராகவும் எங்களுயிரும் நீரேயென்றும்எண்ணி உமதுஆதரவிலிருந்தோந் துணைவனே சற்றும் அவ்வுறுதிகளை நினையாது எங்களைக் கைசோரவிட்டிறக்கலாமோ உமது போற்றுதலில்லாவிடத்து மாய்ந்து போகும் அபலாளான அடியோங்களுக்கு யினியொரு ஆதரவுமுண்டோ வீராதிவீரனே தானவக்குலசிகாமணியே மிகுத்தகீர்த்தியும் பிறதாபத்தையும் பெற்றோங்கநின்ற சூரபன்மனே உம்மைப்போலயிவ்வித அரிய வேள்வியைத்தொடங்கிப் பலகாலம்யிதற்குமுன் யாவர்செய்தனர் அவ்விதச் சிறந்த யாகத்தை வருந்திமுடித்தும்அதற்குரியவரத்தினைப்பெற்றுவாழ்வதன்முன்னம் அடியோங்களிடத்தில் யிதக்கமுந் தயையையுங்கொண்டுபாதுகாத்தலை மறந்து தாமரையிலையிற்பட்ட நீர்த்துளியைப்போல நாங்கள்தத்தளித்துப் பரதவித்தலறவிட்டுப்போவது உம்போலிகளுக்கழகோபரமனுக்குமும்மிடத்தில் அருளில்லையென்பதைத் தெரியாதவனாய்ப் பலகாலம் தேகவாஞ்சையையொழித்து வருந்தி ஆதியிற் றிரிபுரங்களையும் யிரக்கமின்றிக் கொளுத்திய கன்மனதைப்பெற்ற சிவபிரானுக்குப்பிரீதியாக இவ்விதகொடியயாகத்தைவருந்திச்செய்தனை அதற்குப்பரிசாகவோ உமதுடலிற்பொருந்திய உயிரினையுங் கிரகித்துக்கொண்டனர் தீனதயாபரமூர்த்தியெனப் பெயர்பெற்ற கடவுளுக்கு இச்செய்கையும் ஒருதிருவிளையாடலோ ஐயனே உம்மைப் போல அரியபிராணனையிழக்கும் மகத்தைச்செய்தவரும் பரமசிவத்தைப் போல இவ்வழிபாடுகளைக்கண்டுங் கிருபைசெய்யக் கடினகுணம்பெற்ற கடவுளரும் இச்செய்கைகளைத் திஷ்டாந்திரமாகக்கண்டவுடன் உயிரைவிடாமல் என்னைப்போலப்பரிவற்றுப் பிராணனைத்தாங்கிநின்றதுணைவரும் இவ்விதக் கடினச்சிற்றம்பெற்றவரும் யாவராயினுமுண்டோ எமதிறைவனே வாயைத் திறந்து ஒருவார்த்தைசொல்லமாட்டீரோ இஃதன்றியும் இவ்வரியவேள்வியை வருந்திமுடித்துப்பரமசிவகடாட்சத்தினாற் சொல்லுதற்கரிய வரப்பிரசாத உறுதிகளைப்பெறநின்றவர் தமதுயிரும்அழிவற்றசெல்வங்களையும் போக்

குவருமுண்டோஇனிஎன்செய்வோமென்றெண்ணுதுமெண்ணினவனுய்வக்க
மூற்றிருந்ததேவேந்திரனுகியர்இத்தினமனக்கவலையொழிந்துகளித்திருப்போ
ஐயனேஎல்லவருங்கொண்டாடமுத்தியுங்கொழுந்துவிட்டெரியும் வேழ்வி
யைச்செய்துப்பல்லாயிர நாட்பழகிய தேவரீர்சகோதரராயிருக்கும்நாங்கள்
உம்முடன் வரமாட்டோமென்றெண்ணியிதன்மகிமையையெங்களுக்குவெ
ளியிடாமலிருந்தீரோ மணிவாயைத்திறந்தொருஉத்தரஞ்சொல்லலாகாதோ
இவ்விடத்தில்நின்றயாங்களனைவருங்காண மனவலியனுய் மண்டியெரியும்
ஓமகுண்டமத்தியில்நின்றவயிரக்சம்பத்திற்பாய்ந்துஉயிரையிழந்துமாண்டு
இரோகத்தையும்போக்கினீர் இதனைக்கண்டு புலம்புகின்றநான் மிறப்பேனுயி
னுந் தேவரீர் சந்திரபிம்பம்போன்ற திருமுகமண்டலத்தைக் காணப்பெறு
வேனேவென்று இவ்விதங்களாகப் பன்னிப்புலம்பிய சிங்கமுகன் தன்னை
யின்று முலைகொடுத்துக்காத்திருந்த தாயைக்காணுதயிளங்கன்றைப்போலக்
கதறி வருந்துங்காலத்தில் இத்திறங்களைக்கண்ட தாருகனும் பறவதம்போன்
றதன்கரங்களினுல் முகத்திலும் மார்பிலும் அறைந்துகொண்டு கோடுகோ
டெனப்புலம்பிச் சோயித்து நிலத்தில்மறிந்துபெருமூச்செறிந்து வேழ்வித்
களமுற்றிலும் வளையவளையப்புரண்டு இரண்டுகைகளையுமோங்கிநிலம்பிளக்க
வறைந்துதுக்கசாகரத்திலழுந்திவிண்ணுலகங்கள் திடுக்கிட்டஞ்சத்தக்கதாகப்
புலம்பினுன் இத்தன்மையாகச் சிங்கமுகனுந் தாருகனுந் தமையனையிழந்
தகிலேசத்தினுல் அலறிவாடுவதைக்கண்ட ராட்சதவெள்ளங்களனைத்துஞ் சத்
தசாகரங்களும் அலைகள்வீசியெழுந்தொலித்ததைப்போலக்கதறி வாய்விட்
டலறிப் படாதபாடும்பட்டார்கள் அக்காலத்தில் இவர்கள் புலம்புவதையும்
சூரன் அக்கினிகுண்டத்தில்விழுந்துசாம்பலாய்மாண்டதையுங்கண்ட தேவ
தூதர் களித்தோடி வாட்டமுற்றிருக்கும் இந்திரனைவணங்கி இச்செதிகளை
விண்ணப்பஞ்செய்யக் கேட்டவுடன் மகிட்சியென்னும் அளவுபடாதசமுத்
திரத்தில்முழுகிப் புதியஅமுதத்தை யுண்டவனைப்போத்து நகைமுகத்தனுய்
மனங்குளிர்ந்து சரீரம் பூரித்து மயிர்சிலிர்க்கக் கவலைமுற்றுமபோக்கி அயி
ராபதத்தின்மீதாரோகணித்து தேவர்புடைசூழ்ந்துபோற்றப் பொன்னுல
கைநீங்கிச் சந்திரமண்டலத்தைத்தாண்டிச் சூரியன்பதத்தைக்கடந்து ராட்ச
தர்படுந்துயரத்லைதக் கண்டுகளிக்க மேகமண்டலத்தில்வந்து விண்ணவர்
புடைபார்த்து நிற்க தேவராசனுனவன் வேழ்விக்களம்படும் பாட்டைக்கண்
டு மகிழ்ந்து சரீரங்குலுங்கநகைத்துத் தான்பூர்வத்திற்செய்த தவமுயற்சி
கள் வீண்படுமோவெனக்கொண்டாடி ஓவென்னுமோசைபடப் புலம்புஞ்
சிங்கமுகனுதியான அவுணவெள்ளங்கள் படுந்துன்பத்தைக் கண்களாரநோக்
கி விம்மிதனுய்த் தேவர்களுடன் வானவெல்லையிலிருந்தான் அக்காலத்தில்
ராட்சதச்சயின்னியங்களுடன் கலங்கி துக்கசாகரத்திலழுந்திவாடியசிங்கமு

கன்றெளிந்து நல்லகாரியம் நமதுடயினை விளிமாப்பது தருநியல்ல
தமையனைப்போலவே இவ்வேழ்வியைமுடித்து அதின்முன்னிலையிற் பரம
சிவமெழுந்தருளாவிடின் மாள்வது சித்திட்டாலதாகுமென நிச்சயித்தெழு
ந்து நடுநாயகமாய்விளங்கும் ஓமகுண்டத்தி னருகிற்போயிருந்து பரந்தி
ருக்கும் ஆயிரஞ்சிரங்களையும் ஒவ்வொன்றாகத் தன்கரங்களில் விளங்கு
கூரியநகங்களினால் கிள்ளிக்கிள்ளிச் சமித்துளாகக்கொண்டு தமையன்பூசித்த
யாகத்தீயில் வீரங்களைப்பேசி மந்திரவிதிப்படிக்குப்போட்டு இரச்சவெள்
ளங்களையிறைத்து வீரமாமகத்தைச்செய்புமுன்னிலையிற் றவமுயற்சியினால்
மீட்டும் அச்சிரங்கள் முளைக்க அவைகளையும்பறித்துப்பறித்து அவிகொடுத்
துவருவதைக்கண்ட ராட்சதசேனைகள் மனம்பதைத்து ஐயையோ தமைய
னைப்போலவே தம்பியாகிய சிங்கமுகனுந் தன்தலைகளை அரிந்தரிந்துயாகத்
தீயிலிட்டு மகத்தைச்செய்கின்றான் இதினாலென்னவிளையுமோவென்றேங்கி
வாடுமுன்னிலையில் அதனைக்கண்ட அவுணவீரரிற்சிலர் உடைவாளையுருவிக்
கொண்டு தங்கள் தலைகளையுங்கண்டித்துத் தீயிற்போட்டும் அக்குண்டத்தில்
விழுந்தும் பிராணனையிழந்தனர் அத்தருணத்திற் சிங்கமுகாசுரனுக்குக்கர
ங்களோய்ந்து கந்தன் அதுவரையிற் கடாட்சியாததினாற் சூரபன்மனைப்
போலவே தானுந் தீயிற்பாயத்துணிந்து ததேகத்தியாகமாய் வேள்வியை
நடத்திய தன்முன்னவனைப்போல வானத்திலெழ மனதிற்றிடங்கொண்ட
மாத்திரத்தில் இச்செய்கையனைத்தையும் பரிமளமிகுத்த கொன்றைமாலையை
யும் மூன்றாம்பிறையையுந்தாங்கிய சிவந்தசடாபாரத்தைப்பெற்றுப் பேரி
ன்பவாரிக்கொரு தெப்பமாகவிளங்கும் சிவபிரான் திருவுளத்தறிந்து இத
னைச்செய்வதாயினர் - கேட்டீர்களோ சவுனகாதிரிஷிகளே இதுபரியந்தஞ்
சூரனாதியர் வேள்விசெய்த சரித்திரங்களைப்பேசினோம் இனிக்கந்தனெழுந்த
ருளி வரங்களைப்பாலித்த விர்த்தாந்தங்களைச் சொல்லுவோமென்று சூதபுரா
ணிகர் ஆரம்பித்தார்.

வரம்பெறுபடலம்.

காளகண்டமும் அனல்விழியும்பெற்ற பரமசிவனானவர் பூர்வத்தில்
விஷ்ணுமுதலானவர் அதிசெயிக்கத் திருவெண்ணைநல்லூரிற் சுந்தரமூர்த்தி
களைத் தடுத்தாட்கொள்ள வெழுந்தருளிய விர்த்தப்பிராமணக் கோலங்கொ
ண்டு திருக்கயிலையைநீங்கி ஒருகரத்திற் கோலூன்றித் தள்ளாடிநடந்து கண்
டவர் அற்புதங்கொள்ள இராக்கதவீரர் வேள்விசெய்யும் ஓமகுண்டத்தரு

காருகில்வந்து சிங்கமுகசூரனைப்பார்த்து நீங்களெல்லோரும் அநேகதிலே
சித்தராய் இம்மகத்தைச்செய்கின்றீர் இப்படிவருந்துவதற்கு உங்களுக்கு
அடுத்ததுன்பத்தைச்சொல்லென்று எமதுகற்றன்வினவச் சிங்கமுகன் பர
டன்திருக்கோலத்தைத் தெரிசித்தவுடன் மனமுருகிப் பத்திவிளைந்து பிதா
வையொத்த இப்பெரியவர் அடியேன் பரிந்துயாத்துக்கிரங்கி யித்தலத்தில்
வருந்திவந்து விசாரிக்கின்றனர் இரக்கமுள்ளமனதைப் பெற்றவரொன்றெண்
ணி நின்மலமூர்த்தியினது திவ்வியசரணாரவிந்தங்களிற் றன்சிரங்கள்முற்றும்
படச் சேவித்தெழுந்து கரங்களைக்கூப்பிக்கொண்டு சுவாமி எங்கள்வரன்மு
றையும் இத்துன்பம் நேர்ந்ததற்குக் காரணமுங்கேட்டருள்க பிதாவாகிய
பிரமகுமாரனை காசிபருக்குந் தாயாகிய மாயையென்பவளுக்குஞ் சூரபன்
மன் சிங்கமுகன் தாருகனென்னும் நாங்கள்மூவரும் மேலும் அளவற்ற
பிள்ளைகளும் பிறந்தோம் அதற்பின்பு தாயின் கட்டளைப்படிக்கு இவ்வன
த்தில்வந்து லோகநாயகனான பரமசிவத்தைக்குறித்து மூவருமாய் இந்தம
கத்தைச் செய்யத்துடங்கிவருகையில் எங்களில் மூத்தவனானசூரனென்பவன்
பலவருஷம் அரியவேள்வியை நடாத்தியுங் கங்காசடாதரமூர்த்தியானவர்சற்
றும் இரக்கமுற்று கடாட்சியாதகாரணத்தைக்கண்டு மனம்வாடி மேகங்கள்
பரந்திருக்கும் வானத்திற்பாய்ந்துநின்று திடசித்தனாய் மின்னலைப்போல
பிரகாசியாநின்ற உடைவாளையுருவி கரத்திற்பற்றிச் சற்றும்மனஞ்சஞ்சலப்
படாமற்றன்சரீரத்தைச்சேதித்து அத்தசையைச்சமித்துகளாகவும்ஊற்றெடுத்
துப்பெருகும் உதிரத்தை நெய்யாகவுஞ்சொரிந்து பலநாள் சிரமாமகத்
தைச்செய்துவருகையிற் பழையபடியே சரீரம்பூரிக்க மீட்டும்அரிந்தரிந்து
கனலிற்போட்டும் பரமன் திருவுளமிரங்கிக் காட்சிதாராததினால் வருந்தித்
தன்சரீரத்தைப்போல வலியதாய்ச்சொலித்திருக்கும் இந்தவயிரக்கம்பத்திற்
குதித்துத் தடாரித்துருவத்துகட்டப்பட்டு அக்கினிக்கிரையாய்மாண்டான் அதை
யாங்கள்கண்டவுடன் உடல்பதைக்க மனங்கலங்கிப் புலம்பினவர்களாய்இத்
தழலின்முன்னிலையில் எங்களுயிரையும் அவனுடன்விட நிச்சயித்துஆயித்த
மானோம் இத்தருணத்திற் றேவரீரெழுந்தருளிப் பரிவாய் விசாரித்ததால்
உத்திரவுசொல்லுகின்றவரையிற் சற்றுநின்றோம் பிராமணோத்தமனே யிது
தான் எங்கள்வரலாறுந் துயரப்படுங்காரணமுமென்று சிங்கமுகன் விண்
ணப்பஞ்செய்யுந்தறுவாயில் எதிரில்நின்ற கிருபைக்கடலாகிய முக்கண்மூர்த்
தியானவர் இரக்கமுற்று அப்பா சிங்கமுகனே உங்கள்தமையனைப்போலவே
நீங்களும் இறக்கவேண்டாம் உமது முன்னவனைப் பழையபடியேயின்னிமி
ஷத்தில் வருவிப்போம் இவ்வுறுதியைநம்பி சகோதர வாற்சல்லியத்தினால்
பாதிக்குந் துயரை நீங்கிச் சற்றிருமென்று தயாநிதியாகிய கர்த்தன் திருவா
ய்மலர்ந்து உடனே பூர்வத்திற் பார்பதியார் திருக்கரத்தில்விளங்கும்விரக்

களில்நின்றும்பெருகிய கங்கையிற் றமதுசடையிற்பரித்ததுபோல விஷ்ணு பிரமன் தேவேந்திரன் யிவர்களுக்குத் தந்தலைகளிற் பொன்னுலகத்திற் பாயிருக்குங் கங்கையை வருவதாகத் திருவுளங்கொண்டபோது ஆதியில் மாயவன் பூசித்துப்பெற்ற கோதண்டத்தைத்தாங்கிய கரகமலங்கள் விளங்கியகற்தன்றினைவை அக்கங்கையானவளறிந்து குமுறித் தேவர்கூட்டங்களெவரும் பயந்தோட ஒலித்துப் பலமுகங்களிற்பெருமிதத்துக்கள்பணிந்துபோற்றவும் அஷ்டதிசைகளிலும் இருப்பவர் நடுங்கிப் பயந்தேற்றவும் அதிசீக்கிரமத்தில் உயர்ந்தவிண்ணுலகங்களைத்தாண்டிப் பூமியின்கண்ணிறங்கி எமதுகற்தன் பாதாரவிந்தங்களிற்றொழுது அவரனுக்கிறகப்படிக்குக்கொழுத்துவிட்டெரியும் பலவேழ்விகளுக்கு மத்தியில்விளங்கும்பிறதான ஓமகுண்டத்திற்பாய்ந்தவுடன் அலைகள்பெருத்தோங்கிய திருப்பாற்கடலிலுதித்த ஆல்காலவிஷத்தைப்போலக் கொக்கரித்து பழையபடியே சூரபன்மன் வெளியில்வந்ததைக்கண்ட சிங்கமுகனுந் தாருகனுங் கொடியதரித்திரத்தையநுபவித்திருந்தவர் கெசேந்திரச்சம்பத்தைப்பெற்றுவசிறியதைப்போல மகிழ்சிறந்து மிகுத்தவலிபெற்றவராய் விரைந்தோடிராசாதிராசன்பாதங்களிற்பணிந்துநிற்கத் தமதிறைவனைத்துணைவர்வந்திப்பப்பார்த்த தானவப்படைகள் எமதுகர்த்தன் வந்தான்வந்தானென்றபதினாலுலகங்களிலுங்கேழ்க்கும் ஓசையுடன்கூவிச் சந்திரன்றோற்றங்கண்ட சமுத்திரத்தைப்போல அரசனே வாழிவாழியென்றார்ப்பரித்துச் சந்தோஷங் கொண்டாடினார்கள் இவ்வாறுகணக்கிறந்த நிருதவெள்ளங்க ளெழ்றெடுப்பத் துணைவர்களிக்கச் சூரன்வெளிவந்துநின்றதைக் கண்டமாத்திரத்தில் விண்ணகத்திற் சந்தோஷமாய்வேடிக்கைபார்த்திருந்த தேவேந்திரன் நடுக்குற்று விண்ணவருடன் ஓட்டமெடுத்துத் தமதுபதிகளிற்சேர்ந்து திகிற்பட்டிருந்தார்கள் அத்தருவாயிற் றம்பியர்துக்கசாகரத்தைக்கடந்து ஆனந்தவாரியிற்றிளைத்துச் சந்திரபிம்பம்போல முகமண்டலங்கள்துலங்க யிருமருங்கிலும் நிற்கவும் ராட்சதவெள்ளங்கள் புயங்கள் வானத்தோங்கப்பரந்து பல்லாண்டுகள்பாடிப்போற்றவும் நட்சத்திரக்கூட்டமத்தியிற் சந்திரன்விளங்குவதைப்போலச் சூரபன்மன் வலியதிரேகத்தைப்பெற்று நின்றதருவாயில் விண்மண்ணெங்கும்நிறைந்து அலைகளைவிசிப்பரந்த கங்கையைத்தருவித்த பிராமணக்கோலங்கொண்டுநின்றசிவபிரான்மறைந்து தன்னுருவைத்தெரிசிக்கத்தக்கதாகப் பார்வதியாரிடப்பாகத்தில்விளங்கவுந் திரிநேத்திரங்கள்துலங்கவுஞ் சதுர்ப்புயங்கள் பவழவரைகளைப்போலத்தோற்றவும வலிபெற்ற ரிஷபவாகனத்திலாரோகணித்துச் சிவகணங்கள்சூழ்ந்துதுதிக்க எமதிறைவன் வானின்கட்போன்றிடைலையைச் சூரன்கண்டவுடன்திரோபெரவசனுப் பூமியிற்படியவிழுந்துபணிந்தெழுந்து பலவிதங்களாகப்பன்னியேற்றித் துணைவருடன்

கண்களைச் சிரங்களிற்கூட்டி விழிகளிற்போதநீர்பெருகநின்று போற்றுஞ் சூரபன்மன் முகத்தைக்கற்றன் கிருபையாகப் பார்த்தருளி ஓய்தானவேந் பரனே அளவற்றகாலமாய்மனவுறுதிபெற்று யாவராலும் முடித்தற்கரியவிர மாமகத்தை நிறைவேற்றி மிகவும்வாட்டமுற்றனை நமக்கும் உவப்பாயிற்று ஆதலால் உனக்குவேண்டியதைத்தருவோங் கேளென்றருளியவுடன் பொற் பிரகாசமாகிய ஆயிரம்மிதழ்விரிந்ததாமரைப்பீடத்தினனானான்முகன்முத லானதேவர்வெருவி யித்தினம்நமது பதங்களுஞ் சீரும்பெருமிதமும்போ யதுபோயதென்று வாடிவருந்தச் சூரன் யிதனை விண்ணப்பஞ்செய்தான் தீனதயாபரனே அடியவர்க்கெளியனே சச்சிதானந்தக்கடவுளே தேவரீர்தெரி சனம்பெற்றுச்சிறந்தேனாயினும் விசாலம்பொருந்தியபூமியின்கட் பலபுவ னங்களைக் கொண்டிருக்கும் அண்டங்க ளனைத்தினுக்குஞ் சக்கிறேஸ்பர னாய் அரசுசெலுத்தவும் அவைகளைக்காத்தாட்சிக்கவல்ல ஆக்கியாசக்கிரமும் பெறவும் நினைத்தற்குமுன் அவைகளைச் சுத்திப்பார்த்துவரும் வேகமுள்ள வாகனங்களும் எக்காலமும் அழிவில்லாத வச்சிரதேகத்தையுந் தந்தருள வேண்டும் இஃதன்றியும் அலைகள்பெருத்த திருப்பாற்கடலிற் பள்ளிகொள் ளுங் கேசவனேமுதலானவரொத்துப்பொருதாலும்பின்னிடையாமல்மாட் டும் பெருவலியுடன் தேவாஸ்திரங்களனைத்தையுங் கடாட்சிப்பதன்றியில் நாசமில்லாமல் எப்போதுஞ் சிரஞ்சீவியாயிருக்கவும்வேண்டுமென்று சூரன் விண்ணப்பஞ்செய்யக் கலைகள்விளங்கும்பிறையையணிந்த செஞ்சடாமண் டலதாரியாகியபரமேஸ்பரனருளிச்செய்வார்இப்பூமண்டலமெல்லையில் ஆயிர கோடி அண்டங்களுண்டு அவற்றுள் ஆயிரத்தெட்டுஅண்டங்களுக்கதிபனாய் நூற்றெட்டியுகங்கள்வரையில் அரசுசெலுத்தக் கடவையென்றருளி மேற் குறித்த அண்டங்கள்முற்றிலும் நினைவின்படிக்குச்செல்லும் வேகமும் வலி யும்பெற்ற இந்திரஞாலமென்னுந்தேரைப்படைத்தளித்து அப்புவனங்களை எப்போதும் பாதுகாக்கத்தக்கதாய்ச் செந்தாமரைக்கண்ணனன்பரித்த சுதரி சனமென்னுஞ் சக்கிறத்தினும்வலிபெற்றுச் சிறந்ததிகிரியொன்றைச் சிருஷ் டித்துக்கொடுத்துத் தீட்சண்ணியமுள்ளகோபமும்வலியும் வீரமும்பெற்ற சிங்கவாகனத்தையுந்தந்து அகிலங்களிலிராநின்றதேவருக்கெல்லாம் அன்று முதற்றலைமைபெற்றுவாழும்மேம்பாட்டையும் அனுக்கிறகித்து மேலுலக வாசிகளாகிய தேவரையும் மற்றுமுள்ளவர்களையும் என்றும்வெற்றிகொள் ளத்தக்க பெருவலியும் பாசுபதமேமுதலானதேவப்படைகளையுங்கொடுத்து எக்காலத்தினுஞ் சலனமில்லாத வச்சிரக்காயத்தையுந் தந்தபின்பு வேகம் பொருந்தியகங்கையை விண்ணுலகத்தில் மீளக்கோட்டித்து அக்கங்கைக் கும் பலவகைப்பட்ட வேழ்விக்குண்டத்தில்மண்டியெரிந்த ஜோதிய தழ் லுக்கும்மேலான தோற்றம்பெற்றுக் குலவத்தக்கதாய்ச் சற்[illegible]

னிற்பெருகிய கடலின்பெருக்கையொத்தும் வலிபெற்ற பதினாயிரகோடி வெள்ளமாகிய மதயானைகள் குதிரைகள்தேர்கள் ராட்சதர்கலந்தசயின்னியங்களையும் படைத்தளித்துச்சூரனைச் சிறக்கச்செய்ததுவாயிற் றிணையாகிய சிங்கமுகனுந் தாருகனுங் கந்தன்திருவடிகளிற்சேவித்துப்போற்றத் தமக் கொப்பற்றசிவபிரானருளிச்செய்வார் சூரபன்மனிருபுயங்களைப்போலவே வீரத்தைப்பெற்றுச்செயசாலிகளாய்நூற்றெட்டுயுகவளவையிற் சகலவையனையும் பெற்றுச் சிறக்கவாழ்ந்துதேவர்முதலானவரைப்போர்முனையில்வெற்றி கொண்டு முதுகுகண்டு கீர்த்திபெற்றிருப்பீர் தேவர்யாவரும்வந்து தொழுத் தக்க முத்திறத்தராகிய வுங்களை நமது ஒப்பற்றசத்தியொன்றல்லது மற் றெவர்களாலும் வெல்லப்படாதென்றருளிஇவ்வாறு அழிவற்றவபதுந்தமது திருநாமத்தால்விளங்கும்படையே முதலாகக்கொடுத்ததுமல்லாமல்வெவ் வேறு டேமங்களையுந்தந்து வாழ்த்திக் கங்காசடாதரமூர்த்தியாகிய பரமேஸ் பரன் கணங்கள்போற்றப் பழையபடிக்குத் திருக்கயிலையைச்சேர்ந்தார்.

சுக்கிரன்உபதேசப்படலம்.

"அக்காலத்திற் கோட்டையைப்போல வளர்ந்திருந்த ராட்சதவெள் ளங்கள் தமதிறைவன்பரமசிவகடாட்சத்தினால்அளவற்றசம்பத்தைப் பெற்றா னென்பதையறிந்து முன்னினும் அதிகவலியையுந்தயிரியத்தையுங் கிடைத்த வராய்ச் சந்தோஷமிகுதியினாற் கல்லென்றுற்பரித்துப் பிரமதேவன் உறங் கும் நித்தியப்பிரளயகாலத்திற் பூமண்டலத்தைச்சூழ்ந்திருந்த சத்தசாகரங் களுங் கந்தன் கட்டளைப்படிக்குத் தடைபட்டிருந்த தத்தமெல்லையைக் கடந்து அலைகளைவீசிப்பெருகி உலகங்களைமூடி மகம்பேருவை வளைந்து கொள்ளுமாறுபோல வேள்விக்களமுற்றிலுங் காவல்கொண்டிருந்த அணை யைக்கடந்து குலகிரிகளையொத்தோங்கிப்பூரித்திருக்கும் புயங்களையுடைய சூரபன்மனைவளைந்து கண்களாரக்கண்டு அண்டமுகடும் வெடிபடச் சிங்க நாதங்கள்செய்துவீரவெண்டயமணிந்தபாதங்களிற்சேவித்தெழுந்து நாற்ற மிகுந்த கள்ளையுண்டவர்களைப்போலக் களித்துக் கரங்களைக் கொட்டி மன வெழுச்சியினால் யினியெங்களுக்கொருவரும்நிகரில்லையென்று ஆடினார்கள் தமதரசன்கீர்த்திகளைப்பாடினார்கள்இவ்வாறு அளவுபடாதசந்தோஷத்தினைப் பெற்றுப் பழையகிலேசங்கள் அனைத்தையும்போக்கிச்சூரபன்மனை நீங்காமற் சூழ்ந்துபோற்றியிருக்கின்றதருவாயில் ராட்சதராசனபடைவீரரைப்பார்த்து ஜெயசாலிகளே யதற்குமுன்னம்உங்களுக்குவலியில்லாமலிருந்தீர்களோ

வென்று சிலவுபசாரவார்த்தைகளைப்பேசிக் கிருபாநோக்கம்பாலிக்கச் சந்தோஷசாகரத்தில் அழுந்தினவர்களாய் அவ்வீரர் அனைவருஞ் சூரனைத்தொழுது சகலபுவன சராசரங்களனைத்தையும் நிலைமைப்போதிற் றங்கவல்ல நிறைச்சிதறும் நெற்றிவிழியையுடைய சிவனுதன் நமசிடத்திற் பூரணகடாட்சமைவத்திருக்கவும் அக்கற்தனுற்சகலவளங்களையும்பெற்றதேவரீரெங்களுக்கிறைவனுயிருக்கவும் அடியோங்களுக்கு ஒருகுறைகளுமுண்டோ சாசுவிதமாய் நிலைபெற்றிருக்குஞ் செல்வச்சிறப்பினைக்கிடைத்துச் சகல துன்பங்களையும்போக்கினேம் அரிதிற்பெற்றுப் போஷிக்கவல்லதாயானவன் சுகமாயிருக்கின்றவனாயிற் பிள்ளைகளுக்கொரு குறைகளும் நேருவதுண்டோவென்று மன்னனைப்புகழ்ந்திருக்குமுன்னிலையில் இச்செதியையறிந்த தேவகூட்டங்கள்நடுக்கமுற்றுவாடியிதுவென்ன அதிசயம்பாரும் இத்தினவரையில் நம்மைப்பாதுகாத்திருந்த பரமேஸ்பரன் நம்மிடத்தன்பில்லாதவனாய் இக்கொடியதானவர்பக்கலிற் பூர்ணகடாட்சம்வைத்தகாரணத்தினுற் சூரன் வலியானென்பாற்குச் சந்தேகமுமுண்டோ இனி நாஞ் செய்யவுண்டுவதெனனையென்றேங்கிப் பிராணனையிழந்தவரைப்போலவாடிவருந்தினர் அத்தருவாயிற் சத்தசாகரங்களைப்போலப் பரந்திருக்குஞ் சேனைகளின்மத்தியிற் செல்வச்சிறப்புகளையும் வலியையும்பெற்ற சூரபன்மன் கெம்பீரமாகத்தப்பதைக்குபேரன்கண்டு தன்படைகளாகிய தானவருடன்வானத்தில்நின்று சோனைமாரியைப்போலக் கற்பகமலர்களைத்தூவி வஸ்திரங்களைவானத்தெறிந்து சூரபன்மனே நீடூழிகாலம்வாழ்ந்திருக்கக்கடவையென்று ஆசீர்வதித்து ஆடிப்பாடினவனாய் இதனுல் இந்திரனுக்கடுத்ததுன்பத்தையறிந்துங்காவலருகிச்சொல்லப்படாத பெருமகிழ்ச்சியைப்பெற்றிருந்தான் இப்பாற்சூரனுனவன் பரமசிவகடாட்சத்தினுல் ஓமகுண்டத்திலிருந்தெழுந்த கணக்கிறந்தபடைகளைப்பொற்றவாதி தன சேனைகளிலிருக்கின்ற வீரர்பனைத் தலைவராக்கினுன் அத்தருவாயில்மேருவையொத்தோங்கியபுயங்களையுடையஅவுணராசன் சயின்னியப்பெருக்கானது பூமியினும்வானத்தினுந் திசைகளெட்டினும்நெருங்கிநடக்கச் சூரபன்மன்தம்பியருடன்யோசித்து இயாகவெல்லையைக்கடந்து பிதாவாகிய தபோநிதியானகாசிபரிருக்கும்வனத்தைச்சேர்ந்து அவர்பாதங்களில் வணங்கித் தாங்கள் வேள்வியைச் செய்ததுஞ் சிவபிரானெழுந்தருளித் தங்களுக்கனுக்கிரகஞ்செய்தவரத்தின்சீரையுந் தெரிவித்து ஐயனே இனிநாங்கள்நடந்துகொள்ளவேண்டும்மார்க்கத்தைப்போதித்தருளுமென்றவாக்கியங்களைக் காசிபன்கேட்டவுடன் மனமவாடி தேவேந்திரன் செல்வத்துக்கு முடிவுகாலம்நேர்ந்ததோ பொன்னுலகவாசிகள் துன்பப்படுமேதுவையுமுண்டாயதோ நாள்பலநாள்வருந்திதோற்ற வேதவொழுக்கம் பழுதுபட்டதோ எமது சுத்தனைகாளகண்டமூர்த்தியின் திருவுளம்படிக்

சாயதோமென்றெண்ணி எண்ணி வருந்தி ஊழ்வலியைநினைந்து துணிவு கொண்டு குமாரர்முகங்களைப்பார்த்து உங்கள்வம்சபரம்பரையாய்க்குருவாக விருப்பவன் சுக்கிராச்சாரியாருஞ்சீக்கிரமாய் அவனிடத்துக்குப்போய் பத்தி யுடன்சேவித்துப் போற்றுவீராயின் இச்செல்வம் உங்களுக்கு அழிவின்றி நீடித்திருக்கும் நன்கினைப்போதிப்பன் தாமசஞ்செய்யாமற்போவீரென்று சிவைகொடுக்கப் பிதாவைச்சேவித்து விடைபெற்றுக் கொடியனான சூரன் றுணைவருடன் அளவற்றசேனாசமுத்திரஞ்சூழப்பிறையாணப்பட்டு மனதுக் கினியசூரவன் வீற்றிருக்குஞ்சோலைக்கருகில் வருவதையறிந்து மனவாட்ட மொழிந்து களிப்பைத்தருங்கள்ளையுண்டவனைப்போலமனமெழுச்சிபெற்று சீடர்புடைசூழ்ந்துவரச் சுக்கிரன் எதிர்கொண்டழைத்திற் சூரபன்மன்கண்டு பத்தியினோடுடன்சயின்னியப்பெருக்கைநீங்கிமுனைவனியில்வந்து துணை வருந்தானுமாகப்பிரத்தகாதலுடன்வருகின்றதேசிகன்பொன்னந்தாமரையை யொத்தபாதாரவிந்தங்களிற்றீர்க்கதெண்டன்சமர்ப்பித்தெழுந்துகரங்களைக் கூப்பிநிற்குஞ் ராசராசனைச் சுக்கிரன் கிருபையாகப்பார்த்து என்றுஞ் சுக சீவியாகச்சிறந்துசகலசெல்வங்களையும் அனுபவித்து இந்திர ஐசுவரியமாக வாழ்ந்திருப்பீரெனப் பலபல ஆசீர்வாதங்களைச்சொல்லி நிருதராசனைத்தன் கரங்களாரத்தழுவி மார்பினிறுகவணைந்து முகமன்புகளைப்பேசித் தாம்வா சஞ்செய்யுந்தலத்துக்கழைத்துச் செல்கின்றதறுவாயிற் கொடியமனதைப் பெற்ற சூரபன்மன் தன்தம்பியாகியதாருகனைப்பார்த்து நான் ஆசிரியனுடன் போய்வருமளவும்இந்தசேனைப்பெருக்கைக்காவல்கொண்டிருப்பாயென்று யூகமுனையில்நிறுத்தித் தன்பிராணபதமாகிய சிங்கமுகனுடன்வரச்சுக்கிரன் தமதாச்சிரமத்துக்கழைத்துப்போய்க் கிரமப்படிக்கு உபசரித்து ஆசனங் களைத்தந்திருக்கச்செய்து அன்பாகச்சிலநேரஞ் சுபகரமான வார்த்தைகளைப் பேசியிருந்தபின்பு நல்லகாரியம்நீங்கள் தவமுன்னிலையிற்பெற்றபேறென்ன வென்றுகேழ்க்கச்சூரன்முகமலர்ந்துதான் அரியவேழ்வியினைச்செய்ததுஞ் சிவபிரானெழுந்தருளி மனயிஷ்டப்படிக்குச் சகலசெல்வங்களையும் அனுக் கிரகித்தவிசேஷத்தினையும் பின்பு பிதாவாகிய காசிபரிடத்துக்குவந்து அவ ரனுமதியின்பேரில் இவடம்வந்தது முதலாக விபரமாகத்தெரிவித்து சுவாமி யினிநாங்கள் நடந்துகொள்ளவேண்டும் நீதிகளைத் தீர்க்கமாய் யோசித்துச் சொல்லுமென்றுகேழ்க்கக் குற்றமேகுடிகொண்டிருக்கும்மனதைப்பெற்ற சுக்கிராசிரியன் இதனைப்போதிப்பதாயினன் ஓ ராசனே கவனித்துக் கேட் பாயாக பாசமென்றும்பசுவென்றுஞ் சிறந்த ஈசனென்றும் மூவகைத்தாகச் சொல்வர் அதனை நிதானித்துப்பாற்குமிடத்துப் பிறகிறுதியிற்றோன்றும் மாயாசம்மந்தமல்லதுவேறல்ல அதின் நிச்சயமாவது ஆன்மாவுஞ் சிற்பை வாய்ந்தஈசனும் ஒன்றேயாம் இஃதன்றியும்பிராணிகள்செய்கைகள்நல்வினை

தீவினையென்றிரண்டுவகைப்படுத்தியும் அவற்றின்செய்கைகளின் முயற்சியி
னாற்பிறப்புண்டாயதென்றும் நல்வினைப்பிரயோசனத்தினாலின்பக்கடலிற்
றிளைத்துச் சகலசெல்வங்களையும் அனுபவிக்கப்படுமென்றுந் தீவினையின்
வலியினால் வறுமைமுதலியகொடுமைகளிற்பட்டு துக்கசாகரத்திலழுந்துமென்
றும் இவைகளையொருகாலமல்லாமல் ஊழ்வினைத்தொடக்கினால் இம்மை மறு
மையினும் அதினால்விளையும் நன்றுதீதுகளை யனுபவிக்கப்படுமென்றும்
அவ்வரியவூழ்வினைமுயற்சியினால் மேற்குறித்த இருவினைகளை நடாத்துமிடத்
து அவைகளுக்கடுத்த பலப்பிராப்தியைப்பெறுமென்றும் இவ்வகைத்தாய்ச்
சம்பாதித்த இருவினையினாக்கத்தினாற்பிராணிகள் மாறிமாறித்தோன்றுமென
வும் அவ்வாறேமாயுமெனவும் அதற்கேற்ற வினைப்போகங்களைக் காண்டற்
புண்றேசுவரம் ...... *
தற்தகேசுவரம் ...... *
ருத்திராட்சேசுவரம் .. *
கவீந்திரேசுவரம் ....
தவசேசுவரம் ...... *
மணீசுவரம் ...... *
பதிபீனீசுவரம் ...... *
ஆமற்தேசுவரம் .... *
துறுணேசுவரம் ...... *
பிதாமகேசுவரம் ...... *
துடிலேசுவரம் ...... *
சஷீசுவரம் ...... *
பற்தேசுவரம் ...... *
லெசறேசுவரம் ...... *
செகஷீஈசுரோறேசுவரம் ...... }
தண்டகேசுவரம் ...... *
லங்கேசுவரம் ...... *
மணிபதிறேசுவரம் ...... *
கபோதகேசுவரம் ... *
புரேசுவரம் ...... *
நடேசுவரம் ...... *
காமற்தேசுவரம் ...... *
ஆம்பிருதகேசுவரம் .. *
சணிபூதேசுவரம் ...... *

ரத்னபூஷேசுவரம் ... *
பிடாளலேசுவரம் ... *
மணீசுவரம் ...... *
மவுதீசுவரம் ...... *
புருஷேசுவரம் ...... *
பறம்பேசுவரம் ...... *
கவுரீசுவரம் ...... *
ரமணீசுவரம் ...... *
பிலவங்கேசுவரம் ...... *
கீதகிரேசுவரம் ...... *
நரத்தியேசுவரம் ...... *
பாஷீகனீசுவரம் ...... *
மகாதானேசுவரம் ... *
மண்டபேசுவரம் ...... *
வசீசுவரம் ...... *
சனிதேசுவரம் ...... *
கிற்மகேசுவரம் ...... *
பதுர்புத்திரேசுவரம். *
புஷ்டராகேசுவரம் ... *
கோமேதேசுவரம் .... *
லவேசுவரம் ...... *
பிறதீசுவரம் ...... *
ரட்சயேசுவரம் ...... *
பிறசாதேசுவரம் ...... *
குலேசுவரம் ...... *
வச்சிரேசுவரம் ...... *
ஷேத்திரகேசுவரம் ... *
கறணிகாரேசுவரம் .... *
காசிரேசுவரம் ...... *
புண்டரீகேசுவரம் ... *
விருபாணீசுவரம் .... *
தந்தரீசுவரம் ...... *
கானகேசுவரம் ...... *
ஆகாஉன்தீசுவரம் ... *
பயோதகேசுவரம் .... *

குடேசுவரம்.......... *
குடசாரோசுவரம்...... *
சுவேத்தானப்பிரித்சுவரம்.. *
பிறதாணேசுவரம்..... *
சிலாதேசுவரம்......... *
சந்தேசுவரம்........... *
பத்தேசுவரம்........... *
இரிலோசனேசுவரம் *
பக்ஷேசுவரம்.......... *
ஸ்தாலகண்டேசுவரம் *
பிறகடேசுவரம்......... *
தாரகேசுவரம்......... *
சோசாதீசுவரம்......... *
யந்திரோசுவரம்........ *
மந்திரோசுவரம்......... *
கனகலேசுவரம்......... *
சறவலேசுவரம்........ *
பிறதாரியேசுவரம்.... *
ஆதாரியேசுவரம்....... *
குணீசுவரம்............. *
பகிரதேசுவரம்......... *
இல்பேசுவரம்.......... *
றுதீசுவரம்............. *
அருதீசுவரம்........... *
மித்திரவிந்தேசுவரம் *
சுவரோசணஅரோசுவரம்..... *
சங்கேசுவரம்........... *
பிசங்கேசுவரம்........ *
பாரியேசுவரம்......... *
தாறணேசுவரம்....... *
சகாரோசுவரம்......... *
மாத்துறகேசுவரம்... *
குஷிகாரோசுவரம்..... *
அரிதேசுவரம்.......... *

அடசேசுவரம்.......... *
பக்தாலவியேசுவரம்.. *
வோயாமுத்திரோசுவரம்
சுராயாண்டேசுவரம் *
மணிஅல்தீசுவரம்..... *
சித்திறதுவசேசுவரம் *
றத்திணசௌ தேசுவரம்
காமேசுவரம்........... *
றத்திறணீசுவரம்..... *
அவந்தீசுவரம்......... *
கற்படேசுவரம்......... *
துவசேசுவரம்.......... *
சத்திறகேசுவரம்...... *
சுதேசுவரம்............ *
விசுதேசுவரம்......... *
புல்லேசுவரம்.......... *
சாலகேசுவரம்.......... *
தேவகன்னியேசுவரம் *
நாதகன்னியேசுவரம் *
சத்தியேசுவரம்........ *
நாபேசுவரம்............ *
குபேரோசுவரம்....... *
வனேசுவரம்........... *
பஷித்திரோசுவரம்..... *
வாட்டேசுவரம்...... *
மகாட்லேஷிசுவரம்...... *
நகேசுவரம்............ *
சப்பிணேசுவரம்....... *
தாவதேசுவரம்......... *
சமாசினேசுவரம்...... *
சற்வகாமச்சப்பிற....
தேசுவரம்.............. }
சச்சிதேசுவரம்........ *
சுகேசுவரம்............ *

பிறணதாற்றி........
அரோசுவரம்.......... }
பஞ்சகங்கேசுவரம். *
பத்மறுபேசுவரம்..... *
பஞ்சவக்திறேசுவரம். *
பஞ்சாடசரோசுவரம் *
சமதேசுவரம்.......... *
சுந்தேசுவரம்......... *
கெற்சிகேசுவரம்....... *
அதரிசேசுவரம்........ *
காகேசுவரம்........... *
கலாவற்தேசுவரம்.... *
தாம்றதுவஜேசுவரம் *
அம்சதுவஜேசுவரம்.. *
விருஷீத்துவஜேசுவம்
சிம்மதுவஜேசுவரம்.. *
பிஞ்சேசுவரம்......... *
குமாரோசுவரம்........ *
நிஷிங்கேசுவரம்....... *
இலீசுவரம்............. *
ஈசாணேசுவரம்...... *
விகற்தேசுவரம்...... *
சுரபீசுவரம்........... *
அணிகேசுவரம்........ *
சாரங்கேசுவரம்...... *
கடக்கேசுவரம்....... *
பந்துரோசுவரம்...... *
சமேசுவரம்............ *
சம்பேசுவரம்.......... *
மாதுரோசுவரம்....... *
றுத்திறகணேசுவரம். *

என்பனவாம்.

இத்தலங்களை நினைந்தவரும் பூசிக்கப்பெற்றவருஞ் சாரூபபதவியினைக்கிடைத்துவாழ்வர் யிதுவல்லாமல் வேதாகமங்களை யோதுமகத்துக்கள் பிராமணராதியானவர்களிருக்கும் பெருமையினைப்பெற்றதாய் பலகிரமங்களும் வேதவொழுக்கங்களைச்சார்ந்தொழுகும் மெய்ந்நெறிசேர்ந்தபுண்ணியபூமி குமரிகண்டமாம் - மற்ற எட்டுகண்டங்களும் பலவிதமிலேச்சர் வாசஞ்செய்யப்பட்டு வியப்பில்லாமற் சிறப்பற்றிருக்கும் இவைசம்புத்தீவினிடமிறிவாகும் - தென்பாரிசக்கடல்சூழ்ந்த சாகத்தீவுக்கரசனை மேதாதிக்கு சாந்தபயன் - சிசிரன் - க்ஷேமையன் - நந்தன் - சிவன் - க்ஷேமகன் - துருவனென்னுமேழுபிள்ளைகளுண்டு அவர்பேரால்வருடமாக்கி அக்கண்டத்தைப் பகிர்ந்தவர்களுக் களித்தான் அவர்கள் வாயுவைக் கடவுளாகத் தொழுபவர் ஆரியர் - விந்தகர் - சூரகர் - அவ்விடத்திருப்பார்கள் - சோமகம் - சுமனம் சந்திரம் - துந்துமி - வப்பிராசலம் - நாரதியம் - கோமதமென்னுஞ் சத்தகிரிகளும், சிவம் - விபாவம் - அமுதம் - சுகிர்தம் - மனுத்தகை - சித்தி - காமமென்றேழ் நதிகளும் அவ்விடத்திற்பரவியிருக்கும்ததி கடலைச்சூழ்ந்திருந்த குசத்தீவில் வபுட்டுமென்னும் அரசனுக்கு - சுப்பிரகன் - உரோகிதன் தீக்கன் - மூகன் - சுவேதகன் சித்தசனன் - வயித்திதனென்னு மேழுபிள்ளைகளுண்டு அவர்கள் பேரால்வருடமாக்கி தன்தேசத்தைப் பகிர்ந்துகொடுத்தான் உன்னதங் - குமுதம் - குமாரமேகம் - வைப்புருசம் - தகம் - மயிடம் துரோணமென்னுமலைகளேழும் - சோனை வெள்ளி - மகி - தொகை - நேத்திரை விமோசனை - விருத்தி - என்னுமேழுநதிகளுமுண்டு வாயுவைதெய்வமாகக்கொண்டாடுவார்கள் - தற்பகர் - எகபிலர் - சாரணர் - நிலத்தர் - தண்டர் - விதண்டகரென்னுஞ் சனங்கள் அவடத்திருப்பர் அதற்கடுத்த நெடியசமுத்திரத்தைச்சூழ்ந்தது கிரவுஞ்சத்தீபமாகும் அதற்கரசன் சோதிடனென்பவனுக்கு சாரணன் - கபிலன் - கிருதி - கீற்றி - வேணு - இலம்பன் - உற்பிதனென்னுமேழுபிள்ளைகளுண்டு அவர்கள்பேரால் வருடமாக்கி தன்னரசைப் பகிர்ந்துகொடுத்தான் - குசேசயம் - அருவி - துருமம் - புடபம் - அருத்தம் - இமம் - மத்தாரமென்னு மேழுமலைகளும் - சிவை - தூதபாவை - இயம் - புனிதை பொருனை - அலிபாவை - பத்தமென்னு மேழுநதிகளுமுண்டு - தபதர் - சடாவகர் - மாதேகரென்னுஞ் சனங்கள் வாசஞ்செய்பவர் பிரமனைத்தேவதையாகப்போற்றுவார்கள் அதற்கடுத்த இக்குசமுத்திரத்தைச்சூழ்ந்த தீபஞ் சான்மலியென்னும் பெயராயுடையது அதற்கரசன் துதிமந்தனென்பவன் அவனுக்கு - குசலன் - அணிபலன் - தேவன் - முனி - அந்தகாரன் - மனோதரன் - துந்துமி - என்னுமேழுபிள்ளைகளுண்டு அவர்கள் பெயரால் வருடமாக்கி, தன்தேசத்தைப்பகிர்ந்தளித்தான், சொற்றமிரம், சுரபி, வாமனம், கிருத்தம் - துந்துமி - தன்னிபதடம் - புண்டரீகமென்னு மேழுமலைகளும்

யொது-குமுதம்-கவரி-இயாமம்-புண்டரீகம்-மனோபவம்-சந்தியமென
ச்சொல்லு மேழுநதிகளுமோங்கியிருக்கும் புட்கலாதர்-புண்டகரர்-சிசிரர்
என்பவர் அவ்விடத்திருப்பார்கள் பரமசிவத்தைத் தெய்வமாகப்பெற்றவர்
அதற்கப்பால் மதுக்கடலைச்சூழ்ந்த கோமேதகத் தீபத்தையாளப்பட்டவன்
ஒளியனென்டவனுக்கு நாகவிமோகனன்-மோகன்-சகலன்-சோமன்-சுகு
மாரன்-குமாரன் மணிசகனென்னுமேழுபிள்ளைகளுண்டு அவர்களுக்குத்தன்
புவியைப் பங்கிட்டுக்கொடுத்தான் - சிங்கம்-அத்தம்-உதயம்-சலகம்-கிற
வுஞ்சம்- அம்பிகேயம்-இரமியமென்னுமேழுகிரிகளும் ஆகி-தேனு-சுபத்
தி-குமாரி-சுகுமாரி-ருக்கு-மாயையென்னு மேழுநதிகளுமுண்டு-அந்தகர்
மாகதர்-மானசர்-மங்கரென்னுஞ் சனங்கள்வாசமாய்ச் சந்திரனைத் தெய்
வமாகக்கொண்டாடுவர் அதன்பக்கத்திற் சுத்தோதகசமுத்திரம் அதைவளை
ந்த தீபம் புட்கரமெனச்சொல்லப்படும். சவனனென்பவனரசன்- அவ
னுக்கு உத்தாத்தி-மாவீரனென இரண்டுபிள்ளைகளுண்டு தன்னரசை அவர்
களுக்கு இருகூறாக்கிக்கொடுத்தான் விடயம்-ககேந்திரம்-அருணம்-வராக
ம் நீலம்-இந்திரம்-இந்திரியமென்னுமேழுமலைகளும்-குடிலை,சிலை,உமை
-தரணி-சுமனை - சிங்கை - குமரி-என்னு மேழுநதிகளுமிருக்கின்றது நக
ரர்நாகரென்பவர் அவ்விடத்திலிருக்குஞ்சனங்கள் சூரியனைத்தேவதையாகப்
பூசிப்பர்- அத்தீவின நடுமுடியிலதன்பதினாயிரமேடாசனைபரப்பிற்சகடைபோ
ல வட்டமாய் மானசோத்திரமென்றொருமலையுண்டு அதினிட்டத்தில் இந்திரன்
முதலான அஷ்டதிக்குப்பாலகருங் கிழக்குமுத லெட்டுத்திக்குகளினும்
வாசமாகிய பதவிகளிருக்கின்றது யிதுவல்லாமற் சத்தசாகரங்களின் முடி
வுகடோறும் வட்டணையாய்வளர்ந்து ஒவ்வொருபரவதமிருக்குஞ்சாகத்தீவு
முதல் மற்றதீவுகளிலிருக்கின்றவர்களுக்கு நரை திரை மூப்புதுன்பங்கிடை
யாது அவர்கள் கயிலையிலிருக்கின்ற கிம்புருடத்தன்மையைப்பெற்று பதி
னாயிரவயதிருப்பார்கள் அதற்கப்பாற் பொன்பூமிவிளங்கும் அதனைச்சூழ்
ந்து சக்கிரவாளகிரிநிற்கும் அவ்வரைக்கிப்பாற் சூரியப்பிறகாசமுண்டு அப்
புறத்தில் இருள்மூடியிருக்கும் அதற்சூரியமன்னர் செய்யமணிநிறம்பெ
ற்று இயக்கர் இராக்கதர் பேய்சனங்கள்சூழ வாசஞ்செய்வார்கள் திக்குப்
பாலர் தமக்குரிய மாதிரங்களிலும் மேருவினுந் தங்குவதைப்போல அவ்
விடத்தினு மிருப்பார்கள் அதற்கப்பால் காடாந்தகாரமான இருட்பூமி
யிருக்கும் அதையடுத்த பெரும்புறக்கடல் அண்டப்பித்திலைசயைப்போல
விளங்கிநிற்கும் ஊழ்வினைப்படிக்குத் தந்தம்முயிரைத் தாமேபொடுக்
கும் வல்லமையுடைய மகத்துக்களுந் தெருட்சிபெறுமுணர்வில்லாதவர்களு
ஞ்சக்கிறவாளகிரிமருங்கிற் சூழ்ந்திருப்பார்கள் மேற்கூறிய இருட்பூமியிற்
பிரமன் விஷ்ணு பானிலைம் வாழும்நகரங்கள்மூன்றுண்டு அதற்கடுத்தஅண்

டச்சார்பில் கணிதத்திலடங்காத தொகைப்பட்ட ருத்திரகணங்கள் கூட்டங்
கூட்டமாயிருப்பார்கள் சம்புத்தீவுமுதல் அண்டச்சுவர்வரையில் பூமியினங்
ரும் இப்புவிக்குமேல் கணங்கள்வாசஞ் செய்யுமுலகம் அதற்குமேல் குஹ்
யகலோகம் அதற்குமேல் வாயுவியங்குமுலகம் அதற்குமேல் சத்தமே
கங்களும் வாசஞ்செய்யு மண்டலம் முப்பதினாயிரகோடி மேகசாலங்க
ளொவ்வொரு மேகத்தைச் சூழ்ந்திருக்கும் அதற்குமேல் கிம்புருடர் கரு
டர் சித்தர் விஞ்சையர் இயக்கர் வாசஞ்செய்யும் பதவிகளுண்டு இதற்
குமேற் றேவகங்கை பரவியிருக்கும் அப்பால் சூரியமண்டலம் பூமிக்
கு லட்சயோசனை பிரமாணத்திலிருக்கும் அவ்விடத்தில் முப்பத்துமு
க்கோடி தேவர் சூரியனுடன் கலந்திருப்பார்கள் அதற்குமேல் சந்திர
மண்டலம் லட்சயோசனை அதற்குமேல் நட்சத்திரமண்டலம் லட்சயோ
சனை அதற்குமேல் புதமண்டலம் இரண்டுலட்சம்யோசனை அதற்குமே
ல் சுக்கிரமண்டலம் இரண்டுலட்சம்யோசனை அதற்குமேல் வியாழபக
வான் இருக்கின்றபதவி இரண்டுலட்சம் யோசனை அதற்குமேல் சனி
யிருக்குமிடம் இரண்டுலட்சம்யோசனை அதற்குமேல் சத்தரிஷிகள் வாசஞ்
செய்யுமுலகம் லட்சம்யோசனை அப்பால் துருவமண்டலம் லட்சம்யோ
சனையிலிருக்கும் இத்தொகைகூடியது புவலோகத்தில் பதினைந்துலட்சம்
யோசனையாயிருக்கும் சந்திரவுலகத்தின்மீதிலிருக்கின்றதேசம் ஏழுவகை
யாய்த்தோன்றும் அவ்விடத்திலூழிமேகங்கள் வாசம்பண்ணுஞ் சகலருந்
தொக்கியிருக்கும் இப்பதவிக்குமேல் சுவலோகம் எண்பத்தைந்துலட்ச
ம்யோசனையுண்டு அவ்விடத்தில் தேவர்முதலானவர்கள்போற்ற தேவேந்
திரனமர்ந்து அரசாட்சிசெய்வன் அப்பால் மகலோகம் இருகோடியோசனை
அதில்மார்க்கண்டர்முதலான நாற்பத்தெண்ணாயிரம்ரிஷிகள்கூட்டமாய் நெ
ருங்கியிருப்பார்கள் அதற்குமேல் சனலோகம் எட்டுகோடியோசனை அவ்வி
டத்திற் பிதிர்தேவதைகள் வாசஞ்செய்வார்கள் அதற்கப்பால் தவலோகமுன்
னதம்பன்னிரண்டுகோடியோசனை அவ்விடத்திற் சனகாதிமகத்துக்கள் வாச
ஞ்செய்வார்கள் அதற்குமேல் சத்தியலோகம் பதினாறுகோடியோசனை உய
ர்ந்திருக்கும் அவ்விடத்திற் பிரமனிருந்து உலகங்களைச்சிருஷ்டிப்பன் அ
தற்குமேல் பரமபதம் மூன்றுகோடியோசனை அதற்குமேல் விஷ்ணுலோ
கம் முக்கோடியோசனை அதற்குமேல் சிவலோகம் நாலுகோடியோசனை
உயரத்தில்நிற்கும் அதற்குமேல் அண்டசோளகை கோடியோசனைப்பிர
மாணத்தில் கவிந்திருக்கும் வேதாகம யிதிகாச மிருதிகளும் மற்றசாஸ்
திரங்களும் வெவ்வேறாகப்பேசும் அண்டத்தின் பிரமாணங்களைச்சொல்லு
வதற்களவுபட்டதோ மேலும் உண்மையை அறியவல்லமோ [illegible]
ப்புஅளவற்றபேதமுண்டு ஆகையால் அவைகளின் பிரிவுகளை [illegible]

மும் அறிவையுடைய உனக்கு மேற்கூறிய உண்மைகளை விரித்துச்சொன்னோம் இவ்வண்டத்தில் நூற்றெட்டு புவனங்களுண்டு அவைகளில் பரமசிவமருளிச்செய்த ருத்திரகோடிகள் வாசஞ்செய்வார்கள் ஓராசனே இவ்வண்டத்தின் பிரமாணங்களையும் இயற்கைகளையுஞ்சொன்னோம் பரமசிவமுனக்களித்த ஆயிரத்தெண்டண்டங்களினுமிவ்வாறேதோற்றம் அவைகளைப்போய்ப்பார்த்துவரக்கடவாயென்று ஆசிரியன்சொல்ல மிகுந்த சந்தோஷத்துடன் சூரபன்மன்றம்பியுடன் கேட்டுமகிழ்ந்தான்.

திக்குவிசையப்படலம்.

இவ்வாறு தாங்கள் சவுக்கியப்படுங்காரணங்களைப் பலவாகப்போதித்த சுக்கிராச்சாரியைச்சேவித்து விடைபெற்றுச் சிங்கமுகாசூரனுடன் வயசிங்கவாசனத்திலேறிநடாத்தும் வீரகாளிவாசஞ்செய்யும் புயவலியுடைய சூரபன்மனானவன் ராட்சதவீரர்நெருங்கிக்கொக்கரித்துச்சமுத்திரத்தைப்போலப் பரந்திருக்கும் நால்வகைச்சேனைப்பெருக்கில் நிமைப்போதிற்கலந்ததறுவாயிற் றாருகன்கண்டு எதிர்கொண்டு சூரனைச்சேவித்துச்சிங்கமுகனையும்வணங்கி கரங்களைக்கூப்பி நின்றதம்பியை ராட்சதராசன்கிருபையாகப்பார்த்துத் தான்போனவிடத்தில் நடந்தசேதிகளைச்சொல்லநல்லகாரியம்இனி சத்துருக்களைச்செயங்கொள்வது தகுதியெனப்பேசிக்கொண்டிருக்குந் தறுவாயில் முன்னம் யாகத்துக்குவேண்டிய வஸ்துக்களையுதவிப்போய்த் தவஞ்செய்திருந்த மாயையானவள் சிவந்தசடைகளையும் அனல்விழியினையும்படைத்த பரமன் அநுக்கிரகத்தினாற் பிள்ளைகள்பெற்ற வரங்களையும் வன்மையினையும் உணர்ச்சியிற்றெரிந்து பரிவாய் வானவழியாகவரக்கண்ட சூரபன்மனானவன் சிங்கமுகன் தாருகன் அசமுகியுடனும் அதிகப்பிரியத்துடனெதிர்கொண்டுசேவிக்கமுன்னம் அவர்களைப்பெற்றநாளிலும் மிகுந்தசந்தோஷத்தினைப்பெற்றவளாய்ச் சுகசீவிகளாகச் சகலசெல்வங்களையும்பெற்று வாழ்ந்திருப்பீரென்று ஆசீர்வதித்தாள் அக்காலத்திற் குமாரர்கள் தாங்கள் தவஞ்செய்து பரமனிடத்திற்பெற்ற வரங்களின் சிறப்புகளைச் சொல்லக்கேட்டதாய் மகிழ்ந்து பிள்ளைகளே உங்களைப்பார்த்துப்போகவந்தேன் இனியுங்களுக்கு ஒருகுறைவுகளுமில்லை ஆதலாற் றாமதஞ்செய்யாமற் றேவேந்திரன் முதலானவர்களைச்செயித்து உங்கள் வசப்படுத்திக்கொண்டு சகலரும் வணங்க இப்பூமியில் வாசமாய் அரசுசெலுத்தி வாழ்ந்திருக்கக்கடவீர் உங்களுக்கு மாயைகளின்முயற்சிவேண்டியகாலங்களில் என்னைநினைப்பீராயில் அந்நிமி

வீத்தில்வந்து நினைந்தபடிக்கெல்லாம் உதவிசெய்வதுமல்லாமல் உங்களைப் பிரியாமற்பலதரம்வந்துகண்டுபோவேன் நீங்கள்பேதமில்லாமல்மனமொருமித்துச் செயசாலிகளாய்க் கெசேந்திரச்செல்வங்களினுமேலாய் அநுபவித்திருப்பீரென்று பிள்ளைகளை வாழ்த்திச்செவிகளையாவிப்பரந்தவிழிகளையுஞ் சொற்னவளைபல்களையும்படைத்ததாயானவள்போனபின்பு விழிகளைப்புரட்டி கோடிதேர்க்காறராகிய தானவனைப்பார்த்துப் பெரும்புறக்கடலைப்போலப்பரந்திருக்கும்நமதுசேனைகள் நிதிபதியாகிய குபேரன் பட்டணத்துக்குநடக்கத்தக்கதாகப் பேரொலிபெற்றபேரிகைகளைத்துரிதமாயறையக்கடவீரெனத் திருவாய்மலர்ந்தமாத்திரத்தில் அரசனுத்திரவின்படிக்கு ராட்சதவீரர் பல்லாயிரம் யானைகளின் மீதிருக்கும் முரசங்களைமுழங்க அச்சத்தத்தினைக்கேட்டமாத்திரத்திற் பிரமனுறங்குந்தருவாயிற் புவனங்களனைத்தையும் ஏகமாய்மூடி அலைகளைவீசியெழுஞ்சத்தசாகரங்களைபோலச்சேனைப்பெருக்கானது அத்திசையைநோக்கி ஆர்ப்பரித்துநடக்கும்போது ஒன்று பத்து நூறு ஆயிரம் பதினாயிரம் லட்சம் இவ்விதமாகியபலகணிதப்பட்ட சிரங்களையும் அகற்றிரட்டிபெற்றகரங்களையுங்கொடியகுணங்களையும் அனற்பொறிசிதறும் விழிகளையும் சிங்கம் யாளி புலியையொத்தமுகங்களையும் பர்வதம்போன்றதிரேகத்தையும்பெற்றவர்களாய்ச் சூலந் தண்டமேமுதலான பலபடைகளைக்கொண்டவர்களாய் அதிகவலியுடையவர்களாய்ச் சமுத்திரமுழக்கினும்மேலிடும் உரத்தசொல்லைப்பெற்ற ராட்சத வெள்ளங்கள் கணக்கிறந்ததாகத்தொடரவுங் கண்ணிமைத்துமுடுமுன் வானவெல்லையெங்கும் பாய்வதாய்ச்சூரியன்ரதத்தின்மீதுதாவப்பட்டதாய்க்கடலினிடத்துலவப்பட்டதாய் அஷ்டதிசைகளிற்குதிக்கப்பட்டதாய் வடவனலத்தின்மீதினும் நடக்கப்பட்டதாய்ப் பர்வதங்களினுச்சியிற் றுலவப்பட்டதாய்ச் சமுத்திரஞ்சூழ்ந்தபூமண்டலமுற்றினும் வட்டணைவரப்பட்டதாய் இவ்வித வேகத்தைப்பெற்றும் பஞ்சலட்சணங்களுடனமைந்து சவரியைப்போலப் பிடரிமயிரசைய ரத்தினவெண்டையங்கள் கால்களைப்பெயர்த்துவைக்குந்தோறுஞ் சத்திக்கத்த்தாவிநடக்குங் குதிரைப்பந்திகள் அபரிமிதமாய்த் தொடரவும் பருந்துகள் வட்டமிட்டுவரவுங் காக்கைகள்தொடர்ந்து கூவவும் பேய்க்கூட்டங்கள் நடித்துவரவும் பூதங்கள்பின்பற்றிப்போகவும் மேகசெந்நிறத்துக்குமாறுப்படிடுமொலியைப்பெருக்கி மும்மதங்களையும் ஆற்றினைப்போலொழுக்கி சித்திரமுகபடாம் பிறகாசிக்க மணிகளிருமருங்கினும் மாறியொலிக்க இவ்விதப்பெருமையினையுடைய யானையணிகள் தொடர்ந்துபோகவும் மகம்மேருவினிடத்துந் திருக்கயிலாயத்தினும் மற்றைய குலகிரிகளின்மீதும் மேகங்கள்பரந்திருக்கும் வானவெல்லையினுங் கடல்சூழ்ந்த பூவட்டத்தினும் நிமைப்போதிற் சென்றுலவும்வேகமுன்னதாய்ப் பொன்மயமானவண்டில் அச்சமச்சக்கத்துக்

ணால் கொடிஞ்சைக்கொடிகள்சிகரங் குடைமுதலிய அலங்காரத்தைப்பெற்றதே
ரணிகள்தொனித்தோடவும் இவ்விதச்சவுரியவன்மைபெற்றசதுரங்கப்படைக
ளும்நெருங்கிமூன்றுகோடியோசனைப்பரப்பில் நாற்றிசையினும்விரிந்துசெ
ல்கின்றதுவாயிற் றூசிப்படையானது பொன்மயமாய்ச்சகல வளங்களையும்
பெற்றஅளகாபுரியைச்சேர்ந்ததுஇதன்மத்தியிற் பஞ்சபூதங்களினும் மிகுத்த
வலிபெற்றதாய் ஆயிரங்கிரணங்களைப்படைத்தசூரியனைநிகர்ச்செல்லும்இரதத்
தினுஞ்சிறப்புடையதாய் அவனிலும்பிரகாசம்பெற்றதாய்த்திரிகாலங்களையுங்
கணித்தோடும் பேருணர்வைப்படைத்ததாய்ப் பரப்பினால் அஷ்டதிக்குகளையு
ம் மறைப்பதாய் எக்காலத்தும் எவ்விதத்திலும் அழிவில்லாததாய்மேருபர்வ
தத்துக்குமாறாகத்தோற்று முருவினதாய் நினைப்போதில் அண்டங்களின்
எல்லைமுற்றினும் உலவிவருங் கடியவேகமுள்ளதாய் ரதிகன் கருத்தின்படிக்
கோடுவதாய் அழிவற்ற கோடிகுதிரைகளைப்பூண்டதாய்நாசமுறாதபலசாரதிக
ளிருந்துசெலுத்தப்பட்டதாய்அளவிறந்ததேவப்படைகளேமுதலானஅஸ்திர
சஸ்திரங்களைப்பரித்ததாய் சத்திராதிகள்தேர்களின்மீதோடித்துகள்படுத்தும்
வலிபெற்றதாய் இடிகளின்முழக்கமும் அடங்கும்படியான மணிகளின்சத்
தங்களைக் கிடைத்ததாய்ப் பூமியைப்போன்றபரப்புள்ளதாய் இதுவன்றியும்
மற்றுமுள்ளசிறப்புகளனைத்தையும் படைத்ததாய்ப் பார்பதிபாகனை பரம
சிவமுண்டாக்கிக்கொடுக்கும் பெருமைதங்கிய இந்திரஞாலத்தின்மீது பர்வ
தத்தின்கண்தோன்றுஞ் சிங்கராசனை நிகர்த்துச் சூரபன்மன் ஆரோகணித்து
வெண்சாமரை ஆலவட்டங் குடைமுதலான ராசசின்னங்களைப் பல்லாயிர
ம் ராட்சதவீரர்தாங்கிவர அவுணவீரர்புகழ்ந்துபோற்ற நடக்கும்போதுபதி
னாயிரம் யாளிக்கூட்டங்களையும் வேகமாய்த் தாண்டிப்பாயும் பதினாயிரம்
புரவிகளையும் பருத்தபுயங்களையுடைய பதினாயிரம் பூதங்களையும் அணிவகு
ப்பாய்ப்பூட்டிப் பொன்மயமாய்வானத்தையளாவிப் பரந்திருக்கும் உன்னத
முள்ள தேரின்மீது சிங்கமுகாசுரனேறியும் மனோவேகத்தினும் வாயுவேகத்
தினும் மேலிட்டுச்செல்வதாய்ச் சுழிசுத்தங்களைப்பெற்ற பதினாயிரங்குதிரை
களைப்பூட்டி பொன்மலையினையொத்து மண்ணினெங்குமூடி யிருக்கும்
பெருமைபெற்றதேரின்மீதுமதயானைபோன்றதாருகன்வீற்றிருந்தவனாய்இவ்
விருவீரரும்புயங்களைப்போலச் சூரன்பக்கங்களிற்றொடர்ந்துவரவுஞ்சேனைத்
தலைவர் சொர்ணமயமாய் ரத்தினகாந்திகளைவீசுந் தேர்களி லேறினவர்களாய்
அணிகளின்மத்திமத்தியிற் காவல்கொண்டு போகவும் மற்றசேனைவீரர்கள்
நீலகிரியையொத்தமதயானைவெள்ளங்களின்மீதினுஞ் சவரிகளிருமருங்கினும்
வரிசைப்படத்தொங்கக் கடிவாளமுதலிய முகச்சின்னங்கள் பிரகாசிக்கக்கால்
களிற் பொற்றண்டைசத்திக்க அலைகளைப்போலத்தாவிப்பாயும்பலநிறக்குதி
ரை யணிகளினும் ஆரோகணித்து அரசனைத்துதித்து இருபாரிசங்களினும்

வரிசைவரிசையாகத் தொடர்ந்துநடக்கவும் பதினெண்வகைப்பட்டதாய் வலி
பெற்றிருக்கும் வில் வாள் வேல் சக்கரங் கதைமுதலானபடைகளைத்தாங்கி
னவர்களாய் ஆலகாலத்தையொத்த கடினமனதைப் பெற்றவர்களாயிராநின்ற
தானவச்சேனைகள் சத்தசாகரங்களும் பெருகினாற்போல அடர்ந்துபடர்ந்து
யிடிகளும் ஒடுங்கி யொளிக்கும்படியாகச் சிங்கநாதங்கள் அட்டகாசங்களைச்
செய்து சவுரியங்களைப்பேசிக்கொண்டு தங்கள்தங்கள் தலைவரைச் சூழ்ந்து
பூமியதிரச்செல்லவும் இத்தன்மைய ரதகசதுரகபதாதிகளாகிய சதுரங்கச்
சேனைப் பெருக்குகளானவை நிலமெங்கும் நிறைந்து ஆரவாரங்களைச்செய்து
போக நடுப்பிறதேசத்தில் மதயானையைப்போலச் சூரபன்மன் நடக்கும்
போது வீரங்களைவசனிக்குந் தானவர் ஆர்ப்பும் பொன்னுருளைகளைப்பெற்ற
தேர்கள் கெற்சரத்தொனிகளைச்செய்தோடுஞ்சத்தமும் அவைகளிற் பிணித்த
குதிரைப்பந்திகளின்கனைப்பும் யானைக்கூட்டங்கள் மதவெறிகொண்டு வீறிடு
ந்தழனியும் ராட்சதர்பாதங்களிற்கட்டிய வீரகண்டைகளின்சத்தமும் பதி
னெண்மேளவாத்தியங்கள் கணகணென்றதிருமோசையும் ஏகமாய்க்கடையுக
அகிர்சியைப்போலப் புவனங்களைத்திலுஞ்செவிடுபட முழங்கவுஞ்சேனை
கள் அடர்ந்துநடக்குந்தறுவாயிற் சிங்கம்போன்றவீரம்பெற்ற அவுணவீரர்
கள் கரங்களிற்பற்றிய குரூரமானபடைவகைக ளொன்றுடனொன் றுராயும்
போது சிதறும் அனற்பொறியானது வேகமாயோங்கிப்பரந்து எமது கற்
தனான சிவபிரானெரித்ததிரிபுரங்களைப்போலப் பற்வதங்களும் புவனங்களு
ங் கரிந்தும்பொரிந்துந் துகள்படவும் மதயானையினையொத்த ராட்சதவெ
ள்ளங்களும் ரதகசதுரகங்களும்புவியெங்கும்பரந்து செல்வதினாலெழுந்த
தூளிபடலமானது பரந்து வானத்தைமூடியதறுவாயில் அவர்கள்கொடுமைச்
காற்றாது சூரியனோடுவதைநீங்கி அத்துகட்பெருக்கின் மறைந்துபயமொழி
ந்திருக்கவும் அச்சேனை நடக்கும் அதிர்ச்சியினாற் பூமண்டலமெங்குந்தத்தளி
க்கவும் ஆதிசேஷனுயிர பெணமகுடங்களும் நெரிந்துங்கழுத்துகளொடிந்
து வாடவும் அஷ்டமாநாகங்கள் திகைத்தேங்கவும் நிலைபெற்றிருக்கும்
வானங் கம்பிதப்படவுந் திசைகளெட்டும்நடுங்கவும் மேருவேமுதலானகுல
கிரிகள் நுறுங்கவுஞ் சத்தசாகரங்களும் அலைகளோய்ந்தடங்கவுங் கொடிய
வெப்பத்தையுடைய வடவாமுகாக்கினியினது வெப்பமாறிப் பதுங்கவும்
இவ்விதவுற்பாதம் விளையத்தக்கதாக நடக்குஞ்சேனைகளுடன் சூரபன்மன்
குபேரன்பதியைவளைந்துகொண்டதை அதறிந்து வாயுவேகத்தினுமேவிட்
டோடி இயக்கர்பெருமான்வாழும் பொன்மயமான பட்டினத்தைச்சேர்ந்து
சபாமண்டபத்தில் அரசுசெய்திருக்குங் குபேரனைத் தெரிசித்துவணங்கிப்
போற்றி இறைவனே சூரபன்மனென்னும் வீராதிவீரன் தன்தம்பியர்களும்
அளவற்ற சேனைவெள்ளங்களுடனும் வந்து நமது பதியைவளைந்துகொ

ண்டான் இனிசும்மாயிருப்பதழகல்ல சற்றுந்தாழ்க்காமற் றேவரீர் படைகளுடன் வெளிப்பட்டுச் சண்டைக் கெத்தனப்படாவிடின்மீறி யிந்நகரத்திற் பிறவேசித்துச் சின்னபின்னப்படவாட்டுவார்களென்று விண்ணப்பஞ்செய்யக் குபேரன் நடுக்குற்றுவருந்தினவனாய்ச் செயசாலிகளாகிய அவுணவீரனை நாம்வெல்வதரிது திரிநேத்திரதாரியானசிவநாதன் பூரணகடாட்சம்பெற்றுச் சிறந்தவரங்களையுங்கிடைத்திருக்கின்றனர் ஆதலாற்சீக்கிரமாயெதிர்கொண்டு ஆசீர்வதித்து நன்மொழிகளைப்பேசிச் சிநேகங்கொள்வது தகுதியென்றெண்ணிச் சிங்காதனத்தைவிட்டு விரைந்தெழுந்து புஷ்பகவிமானத்திலேறித் தன்னினமாகிய இயக்கருடனெதிர்கொண்டு சூரனைக்கண்டுசேவித்துப்போற்றி அஷ்டலட்சுமி விலாசம் பொருந்தி ராசசக்கிரேஸ்பரனாகவாழக்கடவையென்று பல ஆசிகளைச்சொல்லிஎன்சுற்றமுதலானவர்களுடன் என்னையும் உமதடிமையாகக்கொண்டு ரட்சிக்கவேண்டுவதுன்கடனென வேண்டுவதற் கிரங்கிக் குபேரனைபயப்படவேண்டாம் நம்மவனாயிவடத்திலிருப்பாயென்றருளிச்செய்ததைக் கண்ட அவுணப்படைகள் மேகங்கள்வெருவியோட ஆர்த்துச் சிங்கநாதங்கள்செய்தனர் அக்காலத்திற் சூரன் துணைவருடன் அதிகசந்தோஷத்தினையடைந்து களித்திருக்குமுன்னிலையில் ராட்சதவீரர்மீறி அளகாபுரியிற்புகுந்து நவரத்தினவகைகளையும் நிதிக்குவைகளையும் விமானசேகரங்களையும் வலிபெற்றபடைவிதங்களையுந் தேர் மதயானை குதிரை வகைகளையுங் கொள்ளைகொண்டு மீண்டதறுவாயில் அந்நகரத்திற்குடிகொண்டிருந்த லட்சுமியானவள் பலவளங்களையும் யிழந்து வறுமையுற்று வெம்கி விலகியதைப் போன்றும் மங்கிலியமிழந்தகன்னியைநிகர்த்தும் அளகையானது பொலிவழிந்துவிளங்கியது பின்பு சூரபன்மன் குபேரன் தன்மனதுக்கினியதொண்டனென்றெண்ணிப் பதிக்குப்போகச்சிலவுகொடுத்தனுப்பியபின்பு நால்வகைச்சேனைப்பெருக்கினுடன் பலயாகர் செலுத்தும் இந்திரஞாலத்தேரின்மீது கெம்பீரமாய்வீற்றிருந்து அப்பதியைக்கடந்தபோது வழிபறித்தலைக்குங்கள்ளரைப்போலராட்சதப்படைகள் தனங்களைச் சூறைகொண்டழித்துப் போனதைப் பஞ்சப்பட்டகுபேரன்கண்டுவெம்கிச் சிறப்பற்றுவிளங்கும் அளகையைச் சேர்ந்திருந்தான் சூரனும் அவ்விடத்தை நீங்கி திசைகளுக்கு அந்தமாகிய வடகிழக்கெல்லையைச்சேர்ந்து காளகண்டமூர்த்தியினது வடிவம் பெற்ற ஈசானமூர்த்தியிருப்பதென்றறிந்து அவ்விடத்தைக் கடந்து ராட்சதராசனானவன் மிகுந்தகோபத்துடன் தன்சேனைகள்சூழ்ந்துவரக் கிழக்குத்திசையைநோக்கிவருஞ்சேதியை இந்திரன்தெரிந்து திகிற்பட்டு தன்பதியைவிட்டு மேலுலகிலோடியொளித்தான் அத்தறுவாயில் அப்பதியிற்புகுந்து தன்பகைவனைக்காணாது பொங்கித் தன்சேனைகளால் அப்பட்டினத்தை கொள்ளையிடுவித்துந் துவம்சம்பண்ணி அதைக்கடந்து தென்கிழக்கையடை

யுஞ்சேனையைத் தூதராலறிந்த அக்கினிதேவன் வடவாமுகாக்கினியைப்போற் பொங்கிச் சற்வாயுதபாணியாய்ச் சிங்கத்தையொத்தவீரம்பெற்ற தன்சேனைகள்பதினாயிரகோடியர் வில் வாள் வேல் சூலமாதியான படைகளைக்கொண்டு வீரங்களைப்பேசிச்சூழ்ந்துவரத் தன்பதியைவிட்டுவெளிவந்ததுவாயிலவ்படைகளுஞ் சூரன்சேனைகளும் ஒருவரையொருவர்சீறிப்பார்த்து வடவனலுங் காட்டழலும்போலக்கோபித்தெதிர்த்து பலபடைகளைச் சோனைமாரியைப் போலச்சொரிந்து சண்டைகொடுக்குமுன்னிலையில் ராட்சதப்படைகளுக்காற்றாமல் அக்கினிதேவன்சேனைகள் சின்னபின்னப்பட் டோடிப்போயினர் இதனை அக்கினிதேவன் கண்டு மனம்பொறாமற் கோபித்துச்சற்வசங்காரகாலத்திற் சராசரப் பிரபஞ்சங்களனைத்தையுஞ் சாம்பலாக்கவல்ல கொடுமைபெற்ற தனது உருவைக்கொண்டு பாதகனான சூரபன்மன் சேனைமுற்றும் இத்தினமே பெருங்காற்றிற்பட்ட பூளைப்புஷ்பத்தைப்போல வாட்டி அதம்பண்ணுவேனெனச் சபதம்பேசிப் பெரும்புறக்கடலையொத் தெங்கும் அடர்ந்திருக்கின்ற ராட்சதசயின்னியங்கள்மீது பலமுகமாய்ப்பரவிச் சடசடத்ததொனிகளுடன் கொளுத்திப் பொடிபடுத்துஞ் சேவகத்திறத்தைத்தாருகன்கண்டு திருப்பாற்கடலிலுதித்த ஆலகாலவிஷத்தை நிகர்த்துப்பொங்கி ஒப்பற்றதேரை அவன்முனையிற்செலுத்தக் கட்டளையிட்டமாத்திரத்திற் சாரதியானவன் குதிரைகளையதட்டி வாயுவேகத்திலும் மேலிட்டுக்கொண்டு போய் எதிரில்நிறுத்தியபோது கண்களில் அக்கினிப்பொறிகள்பறக்கமீசை துடிக்கப் புருவம்நெற்றியிலேறக்கோபித்து மகமேருவையொத்த தன் வில்லையெடுத்துவளைத்து நாணேறிட்டு அண்டங்களதிரக்குணத்தொனிகொண்டு நல்லகாரியந் தலைகீழாய்விழுகின்ற நமதுசத்துருவையும் மற்றதேவர்களேமுதலானசகலரையும் இன்னிமிஷத்தில்முடித்து வெற்றிபெறக்கடவேனென்று வீரம்பேசி வண்டினங்கள் றீங்காரத்தொனிசெய்து தேன்களையுண்ணுஞ் சிறப்பைப்பெற்ற கொன்றைமாலையையணிந்த சடாமண்டலதாரியாகிய சிவபிரான் தனக்கனுக்கிரகஞ்செய்த பாசுபதாஸ்திரத்தையெடுத்து மந்திரபூர்வகமாய் திவ்வியமலர்களினால்அருச்சித்துத் தூபதீபமுதலானவிதிகளைநடாத்திப்போற்றிப் பிறையோகிக்க எத்தனப்படுவதை அக்கினி தேவன்கண்டு மனநடுக்குற்றுப் படைகளுக்குஅரசாயிருக்கும் இந்தபாணத்தைச்செலுத்துவானாயின் இவ்வுலகமேமுதலான புவனங்களைச் சாம்பலாக்கிப்போடுவதல்லாமல் என்னையுங் கொளுத்திக்கொல்லும் இதுவன்றியும் பிரமன்முதலானசிறந்ததேவரை நிமைப்போதிற் பொடிபடுத்திப்போடுமே யிதற்கென்னசெய்வேனென்றுவாடி ஒருநினைவுகொண்டு சீக்கிரத்திற்றனது திட்சண்ணியத்தையடக்கி வீறாப்பையொழித்து சரீரம்நடுங்கவொடுங்கிமுகவாட்டத்துடன் கரங்களைக்கூப்பிவணங்கிப் புயவலிக்கொருவனானசூரன்

சமீபத்தில்வந்து வீராதிவீரனே கேட்டருள்க சகலபுவனசராசரங்களையும் படைத்துக்காத்துக் கடையிற்றகித்துத்தானேதானாய்விளங்கும் எமதுசற்த ன்படையினை அடியேன்மீதுதண்டமுயற்சிகொண்டனை அப்படிக்குச்செய் வையாயில் என்னுடன்போகாது அண்டரண்டங்களிலிருக்கும் பிராணிகள் வலியும் வீரமும் ஆவியும் அதன்முன்தாபரித்துநிற்கப்படுவதோ ஒர்ராச னைகோபிக்கவேண்டாம் இப்பாணமானது பெற்றபெருமையை யாவரா லும்புகழப்படாது அதையொருகாலஞ் செலுத்துவையேயாயின் உலகங்கள் அனைத்தும் அழிந்துபோவதுமல்லாமல் அச்சிறந்தபடையரசுக்கும் பழிவந் துநேரும் ஆதலால் அடியேன் பிழையினைப்பொறுத்தருள வேண்டுமெ னப் பலவாகப்போற்றிநிற்கின்ற அக்கினிதேவனிடத்தில் இரக்கமுற்றுக் காளகண்டமூர்த்தியினது நாமம்பெற்ற அப்பாணத்தைச் செலுத்துவதையுங் கோபத்தினையுமொழிந்து மகிழ்ந்தவனாய்த் தன்படைவீரர்சோபாக்கினிமே விட்டு அடியும்அடியும் கொல்லும்கொல்லும் இவன்மிகவுங்கொடியன்நம துசேனைகளைச்சுட்டெரித்தான்ஒடிப்போவதன்முன்பிடியும்குத்துங்குத்தும் வெட்டும்வெட்டுமென்று மேல்விழுகின்றவனைத் தாருகாசூரன் விலக்கி அக்கி னிதேவனே உன்பிராணனைத்தந்தோம் நமதேவலைச்செய்துகொண்டுயிவ்வி டத்திலிருக்கக்கடவை இனியுன்னூரைப்போய்ச் சேருமெனக் கட்டளையிடு முன்னிலையில் ராட்சதசேனைகள்மீறி அவன்பதியிற்புகுந்து பலசெம்பட வர் ஒருகுளத்திலிறங்கிகலக்கி அதிலிருக்கும் மச்சவகைகளனைத்தையும்வாரி வாரிவெளியிற்குவிப்பதைப்போல அப்பதியிலிருந்த வளங்களையெல்லாங் கொள்ளைகொண்டுமீண்டனர். இதனை அக்கினிதேவன்கண்டுவெம்பி மனவா ட்டத்துடன்தன்னூரைசேர்ந்துதப்பிப்பிழைத்தோமென்னுங்களிப்புந்தன் பதியழிந்ததினாலுண்டாகியக்லேசமும்மனதைவாட்டப்பதுங்கியிருந்தான் இச்செயத்தையறிந்த சூரபன்மன் தம்பியைக்கொண்டாடி விவேகசாலியான பாகர்தலைவனைப்பார்த்து நமதுதேரைத் தென்றிசையிற் செலுத்தக்கடவா யென்று கட்டளையிட்டவுடன் பலிங்கனென்னும்பேரையுடையசாரதித்தலை வன்கரங்களைக்கூப்பிச் சுவாமி எமனிடநகரத்தில்நிமைப்போதிற்சேர்ப்பன் தேவரீர்கண்டு களிப்பீரென்று விண்ணப்பஞ்செய்து பாகனையெச்சரித்துக் குதிரைகளையதட்டி ஆயிரங்கிரணசமூகங்களையுடையசூரியனும் நாணும்படி மனோவேகத்தினும் மேலிடச்செலுத்தி ஆர்ப்பரித்தான் அக்காலத்திற் பெரு ம்புறக்கடலையொத்து நடக்கும் ராட்சதவீரர் சிங்கநாதங்களின்சத்தமும் மதயானைகள்வீறிடுமொலியும் புரவிகள்கனைப்பிரைச்சையும்பதினெண்வாத்தி யங்களின்முழக்குடன்கலந்து பிரளயகால அதிர்ச்சியைப்போலத்தோற்றவும் இந்நால்வகைச்சேனைகள் நடக்கும்போது எழுந்ததூளிபடலம்சனதுபர சலித்தசாகரங்களையுந் தூர்த்துத்திடர்செய்யவும் பலநிறக்கொடிகள் வானை

மூடிச் சூரியப்பிரகாசத்தைமறைத்திருளாக்கவும் வெண்பட்டுக்குடைகள்சந்திரனைப்போலவிளங்கி அவ்விருளைநீக்கி வெளிச்சத்தைத்தரவும் இவ்விதஆரவாரங்களுடன்செல்லும்போது தூசிப்படையானது தென்பதியைச்சேர்ந்ததைக்கண்ட தூதனொருவன் அதிசீக்கிரமத்திலோடிச் சயமண்டபத்தில்வீற்றிருந்து அரசுசெலுத்துந் தனதுஇறைவனைச்சேவித்துச் சுவாமீ காசிபனுக்குதித்த சூரனிடகொடியசேனைவெள்ளமானது நமதுபதியைச்சூழ்ந்துகொண்டது பார்க்கப்படவில்லை என்னமோஅனற்தகாலம் நேர்ந்ததாகக்காணுகின்றது இதற்குவேண்டும்எத்தனங்களை விரைவில்யோசிப்பதுஉத்தமமென்று சொல்லக்கேட்டவுடன் கோடையிடியைக்கேட்டசற்பத்தைப்போல எமராசன்நடுக்குற்று ஏங்கியிரங்கி இனியென்னசெய்வோமென நினைந்து விவேகசாலியாதலாற் குபேரனும் அக்கினிதேவனும் வணங்கிப்போற்றித் தங்கள்பதிகளையும் உயிரினையும்பெற்றுத் தப்பினரெனக்கேள்விப்பட்டேன் அவ்வாறே நானுஞ்செய்வது அழகெனநிச்சயித்துச் சீக்கிரமாய்த்தன்கடாவாகனத்தைத்தருவித்து அதின்மீதேறிச் சிலபடைத்தலைவர் சூழ்ந்துவரப்போய் நிமைப்போதிற் சூரபன்மனையெதிர்ந்து ராசாதிராசனே ராசபரமேஸ்பரனே ஆயிரத்தெட்டண்டங்களுக்கதிபனே வீராதிவீரனேயென்று பலவாகப்புகழ்ந்துவணங்கிக் கரங்களைநீட்டி தேவரீர் துணைவருடன் சுகசீவியாகச் சகலசெல்வங்களையும் அநுபவித்துச் செயசாலியாயிருப்பீரென்று ஆசீர்வதித்துநிற்கின்ற எமன்செய்கைகளை சூரன்பார்த்துமனமகிழ்ந்து நல்லகாரியம் இதுமுதல் நமதேவல்களைச்சிரசாகவகித்துநடத்தி உன்சேனைகளுடன் பழையபடிக்கு இந்தநகரத்திலிருப்பாயெனச்சிலவுகொடுத்து அனுப்பிவிட்டு மேல்நடக்கும்போது அவுணப்படைவீரர் அந்நகரத்திற்புகுந்து மேகங்கள்சமுத்திரத்தில்விழுந்துஅதின்சலத்தையுறுஞ்சுமாறுபோலக் கறுத்தகிரோதத்தையுடையராட்சதர் நகர்முற்றினும்பாவிச் சகலவளங்களையுஞ்சூறைகொண்டு திரும்பியசெய்தியைச்சூரன்கண்டுகளித்து எமன்பெருவலிகுறைந்து அடிமைப்பட்டுத் துதித்துப்போனதைநினைந்து அதிகசந்தோஷத்தைப்பெற்றவனாய்த் தன்சேனைகளுடன் மேற்குத்திசையை நோக்கிவருவதை அத்திசைக்காவலனான நிருதிகேள்விப்பட்டு மனந்திடுக்கிட்டுவருந்திச் சூரனுடன்சண்டைகொடுக்க நமக்குவலியில்லை அல்லதுஎதிர்த்தாலும் அபசெயமும் பழியும்பெறுவதல்லது வேறில்லை ஆதலால் அவனைக்கலந்து உறவாடி தப்பித்துக்கொள்வதுஅழகென நிச்சயித்துக்கொண்டு அதிசீக்கிரமாய்ச் சிலகாணிக்கைகளைமுந்தியனுப்பித் தானுஞ்சேனைகளுடன் பின்றொடர்ந்துபோய்ச் சூரனைக்கண்டு பற்பலவாழ்த்துகளெடுத்துப்புகழ்ந்து பாதங்களிற்பணிந்து ஓ ராசாதிராசனே அடியேன்புறம்பல்லத் தேவரீர் சுதந்றமாகும் ஆதலால் என்மீது கடாட்சம்வைத்து ஆளவேண்டுமென்றுவின்

ணப்பஞ்செய்து பக்கத்தில்வருகின்ற தாருகாசூரனையும்வணங்கிப்போற்று
கின்றதறுவாயில் அவனிடத்திற்பரிவாய் இதுமுதல் நம்மிடமனிதனாய்இவ்
விடத்திலிருந்து பணிவிடைகளைச்செய்துவருவாயென்று சிலவுகொடுத்தனு
ப்பி அப்பால்வருணன்பதியைச்சேர்ந்து அவனாற்பூசிக்கப்பெற்றும் வாயுவின்
நகரத்துக்குப்போய் அவனைஅடிமைகொண்டுஞ் சமுத்திரராசனைத்தன்மனி
தனாக்கியும் பெரும்புறக்கடலைச்சூழ்ந்த இருட்பூமியிற்சேர்ந்து அவ்விட
ங்களிலிருப்பவர் அனைவரும்வணங்கிப்போற்றஆதரித்துநிறுத்தியும்இவர்கள்
புரங்களைக்கொள்ளைகொண்டும் இவ்வாறு அஷ்டதிசைகள் தீபாந்திரங்கள்
முற்றினுந்தன்செயத்தைநாட்டியபின்பு சத்தபாதலங்களினுந் தன்சயி
னியங்களுடன்போய் அத்தலங்களில் வாசஞ்செய்கின்ற தானவரைத்தன்
வயப்படுத்தி அவர்கள்பதிகளை யழித்துங் குறையிடுவித்து வெற்றிகொண்
டுங் கடையில் ஆதிசேஷன்வாழும் உலகிற்போகின்றதறுவாயில் அவன்ரௌத்
திராகாரமாகக்கோபித்து விஷங்களைக்கக்கவல்ல கொடியசர்ப்பசேனைகளு
டனே எதுத்துச் சிலநேரம் அரியசண்டைகளைச்செய்து நிறுவகிக்கமாட்
டாதவனாய்ச் சூரனைச்சேவித்து அடியேன்பிழையினைப்பொறுத்தருளவேண்
டுமென்றுபுகழக்கிருபையுற்று அவன்கோறிக்கைப்படிக்கு அந்நகரத்தில்
ஒருதினந்தங்கித் திவ்வியபோசனவிருந்துடன் அவனிடத்திலிருந்த அமுத
த்தைப் பலவத்காரமாகவெடுத்துத் தம்பியருடன் பொசித்துக்களித்தவனாய்
மற்றபிலங்களினுஞ்சென்று அப்பதிகளிலிருப்பவர் எதிர்கொண்டு பூசித்து
வரவழைத்திட்டவிருந்துகளைச் சவுக்கியமாகச்சாப்பிட்டு அவர்களைத்தன்மனி
தராக்கிக்கடந்து தான் போனவிடங்களனைத்திலுந் தன்செயத்தைநாட்டித்
தன்படைகளுடன் பூமியின்கண்வந்து சமுத்திரஞ்சூழ்ந்ததீவுகளிலிராநின்ற
தானவர்முதலானவர்களைச்செயங்கொண்டுஅவர்களாற் பூசிக்கப்பெற்றுத்தன்
னவர்களாக்கியபின் சேஷசயனத்தில் மகாவிஷ்ணுபள்ளிக்கொண்டிருக்குந்
திருப்பாற்கடலைச்சேர்ந்ததறுவாயிற் செயசாலியானசூரபன்மன் சேனைவீரர்
அதிக்கிறமித்து நமதுவற்கத்தவரைவஞ்சகஞ்செய்துகொன்றசத்துருவானவ
ன் இக்கடலினிடத்திலிருப்பான் அவனைக்கண்டுபிடித்துக்கசக்கிப்பிழிவோ
மென நிச்சயித்தவர்களாய்ப் பூர்வத்தில் ராட்சதர்கள் திரண்டுமந்தரத்தை
நாட்டிக்கடைந்ததைப்போலவே ஆர்ப்பரித்து வேகங்கொண்டு அக்கடல்
முற்றினும்பரவிக் கலக்கிவருமுன்னிலையில் உண்டாகியகுமுறலும் ராட்ச
தர்கூக்குரலினோசையும் ஏகமாய்க் கடையுக ஒலியினும் மேலிட்டு முழங்
குவதைக் கண்ணனையிருபாரிசங்களினும்வீற்றிருந்துபாதங்களைத் தடவிகொ
ண்டிருக்கும் ஸ்ரீதேவி பூதேவிகேட்டமாத்திரத்தில் இதுவென்ன அனர்த்த
மாயிருக்குதென்று கைகளைப்பிசைந்துகொண்டு மனங்கலங்கச்சரீரந்தடு
ங்கி வியர்த்துப் பெருமூச்செறிந்து வாடியேங்கி ஓபிராணநாயகனேயெ

ன்றலதி நீலகிரியைப்போலப்பரந்ததாய்க்கவுஸ்துவாபரணமுந் திருத்துழா
ய்மாலையும் புரளும்மேகவண்ணனை திருமால்மார்பின்மீது விழுந்தழுவி
க்கொண்டகாலத்தில் அறிதுயில்நீங்கிச் செந்தாமரைபோன்ற கண்களைவிழி
த்துத் திருத்தேவியர்கிலேசத்தையும் ராட்சதர் பேரொலியையும் அறிந்து
பயப்படாதீர்களென்று அப்பெண்களை ஆதரித்துத்தேற்றிஓங்காரித்துச் சே
ஷசயனத்தைவிட்டெழுந்து கடையுகத்திற்சகலபுவன சராசரங்களையும் நிமை
ப்போதிற்சாம்பலாக்குங் கொடுமையையுடைய வடவாமுகாக்கினியும் வெ
ட்கமடங்கிப்பயந்தொடுங்கக்கோபித்து விழிகளில் அக்கினிபொறிகள்சித
றச்சீறிச் சற்றும் எண்ணமற்று நம்மிடபேரிலும் பாதகரானராட்சதர்சண்
டைகொடுக்கவும் வந்ததைப்போற்காணுகின்றது நல்லகாரியம் அவர்கள்செ
யவுச்சாகங்களையும் புயவலிகளையும் நிமைப்போதில் அறிகிறேனென்றுபொ
ங்கி ஆசானுபாகுவாய்ப்பொற்கடகங்களணிந்து தாமரைமலரை நிகர்த்து
விளங்குங்கரங்களைக்கோடையிடியைப்போலத்தட்டித் தீயெழநகைத்தவரா
ய்த் தமதுவாகனத்தைத் திருவுளத்தில்நினைந்தமாத்திரத்தில் வலியும்வேகமு
ம்பெற்ற கருடனானவன் அண்டகடாகங்களதிரப்பறந்துவந்து தனதிறைவ
னைச்சேவித்துநின்றவுடன் அவனழகிய தோளின்மீதுசிங்கத்தைப்போலத்
தாவிவீற்றிருந்து சந்திரனையொத்து விளங்குஞ்சங்கஞ் சூரியனைநிகர்த்
துச் சொலிக்குஞ்சக்கரம் மேருவையொத்தகெதை மின்னலைப்பழித்தவாள்
உவமையற்றகோதண்டம் இவைகளாகிய பஞ்சாயுதபாணியாய் ராட்சதச்சே
னைப்பெருக்கினெதிரிற்போய்வலியவில்லினைவட்டாகாரமாகவளைத்து நாணே
ற்றிப் பாதகர்செருக்கும் வலியும் அழிந்துதத்தளிக்கக் குணத்தொனிகொ
ண்டு கார்காலமேகத்தினைப்போன்று சரமாரிகளைச்சொரிந்து சின்னபின்ன
ப்படக் கண்டிக்கும்போது சூரனிட சேனாசமுத்திரங்கலங்கி அழிபடுந்
தறுவாயிற் றேரணிகளினது உருளை அச்சு மச்சு குத்துக்கால் கொடுங்கை
முதலானவைகள் வெவ்வேறாய்ப் பின்னப்பட்டுக்குவிந்தும் மதயானைக்கூட்
டங்கள் பனையைப்போன்றவையுந் துதிக்கைவேறு பிறையையொத்ததந்தங்
கள்வேறு மத்தகம்வேறு உரலினை நிகர்த்தகால்கள்வேறு வேறாகக்கண்டிக்க
ப்பட்டிறைந்து மலைகளாகச்சேர்ந்துங் குதிரைப்பந்திகள் சவரியினைப்போ
ன்றவையும் பிடரிமயிரைவாய்ந்த கழுத்தற்றுங் கடிவாளம் பொடிபட்டும்
அலைகளைப்போற்றாவுங் கால்களறுபட்டுஞ் சாமரையைப்போன்றவையும் வா
ல்கள்தெறிபட்டும் இவ்விதமாகச் சுறுவளிக்காற்றினிடத்தகப்பட்ட மேகத்
தைப்போலச் சின்னபின்னப்பட்டும் மாளுமுன்னிலையில் ராட்சதவீரர் வட
வாமுகாக்கினியைப்போலக் கொக்கரித்தெதிர்ந்து விற்களைவளைத்து சரமாரி
யைத்தூவியுஞ் சக்கரந் தோமரம் பிண்டிபாலங் கெதை கப்பணமே முத
லான படைகளைப்போன்றனந்தமாகச் செலுத்தியும் வீரங்களைப்பேசியும்பெ

ருமின்றதறுவாயிற் கேசவன்சரங்களினாற் சிரங்கள்வெட்டுண்டுபந்துகளைப் போலிறைந்தும் வரைகளையொத்த தோள்கள்சரிந்தும் மார்புபிளந்தும் வயறபீறுண்டு குடல்களிறைந்துங் கால்களற்றும் இப்படிக்குச் சதுரங்கச்சேனைகளுஞ் சின்னபின்னப்படக் கண்டித்ததறுவாயில் இரத்தவெள்ளமானது பெருகி பாற்கடல் செக்கர்வானத்தைப்போற்காட்டவும் பிணமலைகளோங்கிச் சூரியன் தேரைத்தடைசெய்யவும் அப்பொறையைத் தாங்கமாட்டாமற் பூமிதேவிகுழிபட்டுவாடவும் பலகவந்தங்களாடவுங் காக்கைகழுகு பருந்து கூளிமுதலிய பலபட்சிசாலங்கள் களித்துக்கூடவுந் தப்பிப்பிழைத்தராட்சதரோடவும் இவ்வாறு யிரதங்கள்பொடிபட்டும் யானைகள் கண்டிக்கப்பட்டும் புரவிகள்மாண்டும்ராட்சதவீரர் அரிக்கிடையாகமறிந்துஞ் சூரபன்மனிடநால்வகைச்சயின்னியங்களுஞ் சிதைபட்டழிந்தபோது பூதபசாசவகைகள் திணங்களைத்திறுத்தியாக வுண்டு வெறிகொண்டு உதிரப்பெருக்கில் முழுகியெழுந்து கூத்தாடவும் இப்பாடுபட்டவேளையிற் கோடிசூரியப்பிறகாசமாய்விளங்குஞ்சக்கரதரனான விஷ்ணு பள்ளிகொண்டிருக்கும் க்ஷீராப்தியினதுதோற்றஞ் சிறிதுங்காணாமல் எங்கும் யிரத்தமயமாய்ச் சிவந்து விளங்கியது எப்படிக்கிருந்ததென்றால் கடையுகத்திற் பரமசிவத்தினது நெத்திவிழியினின்றும்பெருகிச் சகலத்தையுந் தகித்துப்பரந்த தீயைப்போற் காட்டியது இப்படிக்குக்காளமேகவண்ணனான கேசவன்கருடன்மீதெழுந்தருளிப் பூமியைச்சூழ்ந்தகருங்கடலைப்போல நெருங்கியராட்சதவெள்ளங்களை வளைந்துச் சுறுவளியைநிகர்த்துச் சுழன்று சுழன்று யெங்குந்தானாய்ஒருவருந்தப்பிப் போகாதபடிக்குப் பலபாணவருஷிங்களைச்செலுத்தித்தேவர்கொண்டாடிஆற்பரிக்கஅகோரஉயித்தியத்தைச்செய்துவருந்தறுவாயில்ராட்சதப்படைகளில் மாண்டதுபோக மற்றவர்தாபரித்து நிற்கமாட்டாதவர்களாய்ப் பலதிக்கிலும் யிறைந்துபின்னிடுவதை வீராதிவீரனான தாருகாசூரன்கண்டு உறுத்துப் பார்த்து நீங்கள் ஒன்றுக்கும் அஞ்சவேண்டுவதில்லை நிமைப்போதில் நமது சத்துருவைவாட்டுவேன் நில்லும் நில்லுமெனச்சைகயமைத்து வடவாமுகாக்கினியைப்போற்சீறி மகம்மேருவையொத்த வில்லைக்கரத்திற்கொண்டுயிடியையொத்துக்கடகடென்றுடும் வேகமுடையதேரைத்துரத்திக் கணப்போதிற்சமர்த்தலையில்வந்து கூடினவனாப்பூர்வத்தில் விண்ணைமண்ணுடன் அளந்த திருப்பாதங்களையுடையசெந்தாமரைக்கண்ணனைவளைந்துகொண்டு தனுசைவளைத்து நாணேற்றி அண்டங்களதிரக்குணத்தொனிகொண்டு கருங்கடலின்மீதுசோனைமாரிசொரிவதைப்போலக் கேசவன் உருத்தெரியாமற் சரவருஷிங்களைச்சொரிந்துத் திசைகளதிரச் சிங்கநாதங்கள்செய்தகாலத்தில் விஷ்ணுவானவர் கோபித்துக் கூரியவேலாயுதத்தினைப்போன்ற குறூரமாகிய பாணங்களை ஒன்றனந்தகோடியாகப்பிரயோகித்துக் கொடியனான தாருகன்

ஏறிவந்ததேரையுருத்தெரியாமற் றகளகண்டு மேலும் அவன்றேகத்தினையும் மறைத்ததறுவாயிற் சலனமற்ற சூரனுக்கிளையவீரன் சற்றும்பயப்படாமல் ஆலகாலத்தைப்போற் பொங்கிச் சிங்கத்தையொப்ப மற்றொருதேரிற்பாய்ந்து விற்நாணியை வட்டாகாரமாயிழுக்கிக் கணப்போதிற் கூரமாகிய ஆயிரம்பாணங்களைப்பூட்டிச்செலுத்தி வாசுதேவன் சரீரத்தினைமூடிமேலும் அத்தொகைச்சரங்களைக் கருடன்மீதிலுந்தூவ அவையதிவேகமாய்வந்து முகஞ்சிரம் மார்புமுதலானவிடங்களிற் சுறுக்கெனத்தைத்து உதிரப்பிறவாகத்தைப்பெருக்கித்தோங்குகின்றது எப்படிக்குக்காட்டியதென்றால் சற்பக்கூட்டங்கள்நமது பகைவனைவளைந்துகொல்ல யிது நல்லதருணமென்றெண்ணிச் சூழ்ந்துகவ்வியதையொத்தது அக்காயத்தினாற்கருடன்மனந்தளர்ந்து வலியற்றுச்சோர்வதைமாடன்கண்டு சீறி அளவிறந்த ரூபங்களைக்கொண்டு அப்பாதகனை நாலுமூலைகளிலும் வளைந்துகொண்டு கொடியபோரைச்செய்யும்போது தாருகனுந் தன்தாய்போதித்த மோகனமந்திரத்தை யுச்சரித்துத் தானும் அவ்வாறே பற்பலவடிவெடுத்து எங்குமுலவிநான்குதிசைபரியந்தம் லட்சுமிகாந்தனுடன் அகோர யுத்தங்களைச்செய்துவருவதைப் பிரமன் கண்டு கேசவனே யிப்பாடுபடுவானாயின் இவ்வசுரேந்திரன்முன்னின்று யாவர்சண்டைகொடுக்கவல்லவரென்று அதிசெயித்துப் பார்த்திருக்கும்போது மாயன் தன்கரவேகவன்மையினால் வலிக்கொப்பற்றதாருகன் யேவிய பாணங்களைக்கண்டித்துமீளவுங் கொடியசரங்களைத்தூண்டி அவன்கரத்திற் பற்றிய வில்லினைக்கண்டித்துத் தேரையுங் குதிரைகள்பாகனுடன் அதம்பண்ணியதறுவாயில் யிச்செயத்தையறிந்ததேவேந்திரன் மனங்களித்துப்புயங்கள் பூரிக்க அளவற்றசந்தோஷத்தினைக்கொண்டான் இவ்வாறு தன் தேர் முதலானதுகள் சின்னப்பட்டமாத்திரத்திற் சூரனுக்கிளையவீரன் றவுத்திராகாரமாகச்சோபித்து மந்தரகிரியினையொத்தவயிரத்தண்டமொன்றினைக்கரத்திற்பற்றித் தேரைவிட்டுக்குதித்துச் சக்கிராகாரமாகச்சுழற்றித் தேவர்கள்பயந்துதலையிறங்கி கிலேசிக்கவும் அண்டங்கள்குலுங்கி யடுக்கழியவும்ஆர்ப்பரித்து லருக்கொண்டு விஷ்ணுவின்மீது பாய்ந்துவருவதைக்கண்டவுடன் சாரங்கபெண்ணுந் தமதுவில்லிற் கூரியபாணங்களைப்பூட்டி யிடைவிடாது தூண்ட அவைஅக்கினியுடன் புகைகளைவீசிமேலிட்டுவரத் தாருகன்சீறித் தன்கதையினால்மோதிப்பொடிசெய்து சிங்கத்தினையொத்துத்தாவியபோதுமாதவன் நெருங்கிவிட்டான் யினிஅசாரிசஞ் செய்யலாகாதென்றெண்ணித் தமதுதிருக்கரத்தில்விளங்குஞ் சக்கரத்தினைச்சுழற்றிப்பிறையோகிக்க நிமைகொட்டி மூவன்முன்னம் பிறபஞ்சங்களனைத்தையுஞ்சாம்பலாக்கியழிக்கும்வெற்றிபெற்ற அப்படையானது தாருகாசூரனை நெருங்குமுன்னிலையிற் பரமசிவத்தின் அருட்டிறத்தின் பெருமையினால் அதன்வேகமுங் கொடுமையுமடங்கிப் போன

ணியைப்போல ராட்சதராசன் கழுத்தில்விழுந்து அசைவற்றுவிளங்கியது கேட்டீர்களோ சவுனகாதிரிஷிகளே சகலரும் போற்றிப்பணியும் நேமிப்படையானது தாருகன்கழுத்தணியாக நின்றுவிட்டதாற் றவத்தினுஞ்சிறந்த பொருளொன்றுமில்லை யிதனைக்கண்டவிஷ்ணுவானவர் அற்புதமடைந்து பரமசிவமளித்த வரத்தின்பெருமைகளை நினைந்து இனி யிவனைச்செயிக்க நம்மாற்கூடாது ஆதலாற் றந்திரஞ்செய்து தப்பித்துக்கொள்வது காரியமென்றெண்ணிச் சமீபத்தில்வந்து சபாசு தாருகாசூரனே வீரனென்பது உனக்கே தகும் வலியினும் உனக்குமேலானவர்களெவருமில்லை யெனப்புகழ்ந்து யிதனைச்சொல்லுவார்சிருஷ்டிகர்த்தனான நான்முகன்பெற்ற ததீசியென்னும் ரிஷிபுங்கவனையுங் கொடியபோரைச்செய்யவல்ல அவுணவீரரையுந்தூக்கிப்பார்க்குமிடத்தில் உன்சவுரியத்துக்கு யெவ்விதத்திலும் ஒப்பெடுத்துப் பேசப்படாது ஆறுற்றக்கன்மகத்தையழித்த செயசாலியாய் வீரவெண்டயமணிந்த பாதாரவிந்தங்களையுடைய அகோரவீரபத்திரனையே சரியாகக்கூறிக்கவேண்டும் அல்லாமலும் பலதிசையிலுஞ் செயம்பெற்று வலிதாய்விளங்குஞ் சக்கரப்படையானது உனக்குக்கழுத்தணியாகநிற்குமாயிற்செயமும் உன்னுதல்லதுவேறுமுண்டோமேலும் உனதுவீரமே யிப்படிக்கிருக்குமாயின் அதோ நிற்கின்ற உன்தமையன்மார் புசபெலபராக்கிரமப்பெருமைகளை யாவராற்றுதிக்குமுடியும் இஃதன்றியும் பற்பலகாலம் அரியதவங்களைச்செய்து சிவபிரானிடத்தில் இவ்விதச்சிறந்தபேற்றை நீங்கள்பெற்றதைப்போல உங்கள் மரபிலும் மற்ற எவர்களிலாவது கிடைத்து வாழ்ந்தவருமுண்டோ இனி உங்களை வெல்லத்தக்கவர் யாவரிருக்கின்றார்கள் இதுமுதல் நீங்கள் நமக்கு நெருங்கியசுற்றமாகநினைந்தோமென்றும் பற்பலமங்களகரமாகிய ஆசீர்வாதங்களையுஞ்செய்து விடைபெற்று விஷ்ணுவானவர்தமதிடத்துக்குப்போனபின்பு இவையனைத்தையுங்கண்டராட்சதச்சேனைகள் செயவுச்சாகங்களைக்கொண்டாடி விண்ணகம் அதிர ஆற்பரித்தார்கள் இதனாற் றேவர் திடுக்கிட்டுமனம்வாடி வருந்தி திரோகமெங்கும்வியர்க்கச் செற்றவனையொத்தும் வானத்தில்நிற்கவும் பயந்து திசைகெட்டோடினார்கள் இவ்வாறு கேசவன் புகழ்ந்துபோனபின்பு வெற்றிமாலையணிந்ததாருகன் வேறொருதேரிலேறித் தன்முன்னவன் அருகில்வந்து நடந்தசேதிகளைச்சொல்லக்கேட்டுச் சூரபன்மன் மகிழ்ந்தவனாய்த் தம்பியைமார்பிணிறுகச்சேர்ந்தணைத்துத் திரோகம்பூரிக்க மகிழ்ந்து சேனைகளுடன் திருப்பாற்கடலைக்கடந்து சக்கிரவாளகிரி பரியந்தம்போய் அத்தலங்களிலிருப்பவரைத் தன்வயப்படுத்தி அவ்விடங்களிலெங்கும் உலவிப்பார்த்து பின்பு இருண்டவானத்திற்சென்று தங்கள்கதிகளில் முறைபிறழாமல் நடந்து தினத்தைவிளக்குஞ் சூரியசந்திரர் முதலான நவக்கிரகங்களும் மற்றவரும் எதிர்க்கொண்டு வாழிவாழியெனப்புகழ்ந்துகொண்டாட அத்